
மெய்ப்பொருள்
காண்பதறிவு



முச்சி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
திருக்குறள் மாநாடு - 2011

சிறப்பு மலர்

முப்பால்

திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலர்

தொகுப்பாசிரியர்கள்

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

செல்வி சற்சொரூபவதி நாதன்

திரு.ப.க.மகாதேவா

மலர்க்குழு

திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா

திருமதி வசந்தி தயாபரன்

திரு. தி. ஞானசேகரன்

திரு. சி. பாஸ்க்கரா



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

22, 23, 24 - ஜூலை, 2011

"முப்பால்"

திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலர்

2011

வெளியீடு

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

இல.7, 57வது ஒழுங்கை,

கொழும்பு - 06.

தொலைபேசி இல. 2363759

அட்டைப் படம்

ஆசிப் புஹாரி

கணினி வடிவமைப்பு

திருமதி சத்தியசோதி குணசீலன்

அச்சுப் பதிவு

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடட்

கொழும்பு - 13.

விலை : ரூபா.500.00

ISBN No. 978-955-8564-17-2



திருக்குறள் மாநாட்டுக் கீதம்

வள்ளுவனைப் போற்றியின்று விழாவெடுப்போமே - அவன்
வாழ்வுநெறி தனையெடுத்து ஓதிடுவோமே
தெள்ளுதமிழ்த் திருக்குறளைத் தேர்ந்தறிவோமே - அறம்
தவறிடாத பெருவாழ்வின் வெற்றிகொள்வோமே
(வள்ளுவனைப்...)

ஆயிரத்து முன்னூற்று முப்பதுகுறளில் - வாழ்வின்
அறநெறியைச் சொல்லிவைத்தான் வள்ளுவப்பெருமான்
தூயநெறி யாகுமவை செகந்தளைக்கவே - எந்தத்
தேசத்திற்கும் பொருந்துமுயர் போதமாகுமே
(வள்ளுவனைப்...)

வேறு

இனமதகுல தேசங்கடந் தெலார்க்கும்பொதுவென - குறளை
இயற்றிவைத்த வள்ளுவனை இதயங்கொள்ளுவோம்
அனைத்துலகும் அறியும்வழி அறிந்துசெய்குவோம் - குறள்
அவனிக்குப்பொது வாகுமெனும் அறம்புகட்டுவோம்
(வள்ளுவனைப்...)

வேறு

அறம்பொருளின்பம்.....
அறம்பொருளின்பம்.....
குறள் ஓதிடும் போதம் - நிறை
வாழ்வின் ஆதாரம் - தமிழ்த்
தாய்க்குப் பூவாரம் - அது
மொழிக்கும் வேராகும்
(வள்ளுவனைப்...)

பாடலாக்கம் :- ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
துணைத் தலைவர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

சங்கத் தமிழ் வாழ்த்து

வாழியஎம் தமிழ்ச்சங்கம் வளர்ந்தெழுக தமிழ்மொழியே
ஆழிசூழும் இலங்கைதனில் அழகுதுறை நகர்கொழும்பில்
ஏழிசைபோல் தமிழ்மொழியும் இசைகொண்டு வாழியவே
இயலிசை நாடகமோ டின்கலைபலவும் இசைந்தொலிக்க

அழகொழுகும் வனப்புகளும் இளமையொடு இனிமைதரப்
பழகுதமிழ் பயின்றமுதம் பொழிந்துநிதம் பொலிந்திடவே
பல்லோரும் பணியாற்றப் பரிந்தேற்றி வளம்பாய்ச்சித்
தொல்லுலகில் புகழ்மணக்கத் தொழுதேத்தும் தமிழணங்கே

முச்சங்க முழுப்பணியை முழுவுலகும் முழங்கவைக்கும்
எம்சங்கம் தமிழ்ச்சங்கம் என்றென்றும் வாழியவே
சங்கொடுதாமரைஏடும் சிறந்திடுமெம் இலச்சினையே
மங்கலநல் அறிவாய்மெய்ப் பொருள்கண்டு வளருதியே

கவியாக்கம் :
"பன்மொழிப்புலவர்" த.கனகரத்தினம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
ஆட்சிக்குழு உறுப்பினர் 2011

திரு.மு.கதிர்காமநாதன்	தலைவர்
திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்	பொதுச் செயலாளர்
திரு.செல்லத்துரை திருச்செல்வன்	நிதிச் செயலாளர்
பேராசிரியர் சபா ஜெயராசா	துணைத் தலைவர்
செல்வி சற்சொரூபவதி நாதன்	துணைத் தலைவர்
திரு.ச.இலகுப்பிள்ளை	துணைத் தலைவர்
கலாநிதி வ.மகேஸ்வரன்	துணைத் தலைவர்
வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்	துணைத் தலைவர்
திரு.ந.கணேசலிங்கம்	துணைத் தலைவர்
திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி	துணைச் செயலாளர்
திரு.சி.பாஸ்க்கரா	துணைநிதிச் செயலாளர்
திரு.ப.கந்தசாமி மகாதேவா	உறுப்பாண்மைக்குழுச் செயலாளர்
திரு.மா.சடாட்சரன்	நிலையமைப்புக்குழுச் செயலாளர்
திரு.மா.கணபதிப்பிள்ளை	கல்விக்குழுச் செயலாளர்
வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன்	நூலகக்குழுச் செயலாளர்
திரு.எஸ்.எழில்வேந்தன்	இலக்கியக்குழுச் செயலாளர்
திரு.ஆ.குகமூர்த்தி	பரிசில்நிதியச் செயலாளர்
திரு.க.இரகுபரன்	பதிப்புத்துறைச் செயலாளர்
வைத்திய கலாநிதி சி.அனுஷ்யந்தன்	சமூகமேம்பாட்டுக்குழுச் செயலாளர்
திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா	சட்டக்குழுச் செயலாளர்

ஆட்சிக்குழு உறுப்பினர்

திரு.உடப்பூர் வீரசொக்கன்	திரு பொ.சந்திரலிங்கம்
திருமதி வசந்தி தயாபரன்	திரு.க.சுந்தரமூர்த்தி
திரு.இ.சிறிஸ்கந்தராசா	திருமதி.ப.சந்திரபவானி
திரு.சி.கந்தசாமி	திரு.சி.சிவலோகநாதன்
திருமதி பத்மா சோமகாந்தன்	திரு.க.க.உதயகுமார்
திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்	திரு.க.மகாதேவா
திரு.க.ஞானசேகரம்	திரு.வி.கந்தசாமி
திரு.அ.பற்குணன்	திரு.க.நீலகண்டன்
திருமதி றஜனி சந்திரலிங்கம்	சைவப்புலவர்.சு.செல்லத்துரை
திருமதி அ.புவனேஸ்வரி	

உபகுழு விபரம்

உறுப்பாண்மைக்குழு

திரு.ப.கந்தசாமி மகாதேவா (செயலாளர்)

திரு.ச.இலகுப்பிள்ளை
திரு.சி.கந்தசாமி
திருமதி றஜனி சந்திரலிங்கம்
திரு.சி.சிவலோகநாதன்
திரு.இ.சிறிஸ்கந்தராசா
திரு.அ.பற்குணன்
திரு.எஸ்.பாஸ்க்கரா

நிலையமைப்பு

திரு.மா.சடாட்சரன் (செயலாளர்)

திரு.ஆ.குகமூர்த்தி
திரு.க.ஞானசேகரம்
திரு.க.சுந்தரமூர்த்தி
திரு.எஸ்.பாஸ்க்கரா
திரு.ச.இலகுப்பிள்ளை
திருமதி அ.புவனேஸ்வரி
திரு.சி.சிவலோகநாதன்
திரு.அ.பற்குணன்
திரு.க.மகாதேவா

கல்விக்குழு

திரு.மா.கணபதிப்பிள்ளை (செயலாளர்) பேராசிரியர் சபா ஜெயராசா

கலாநிதி வ.மகேஸ்வரன்
திரு.க.இரகுபரன்
வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன்
திருமதி வசந்தி தயாபரன
திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
செல்வி சற்சொரூபவதி நாதன்
திருமதி ப.சந்திரபவானி
திரு.க.க.உதயகுமார்
திருமதி பத்மா சோமகாந்தன்

நூலகக்குழு

வைத்தியகலாநிதி தி.ஞானசேகரம் (செயலாளர்)

திரு.ப.க.மகாதேவா
வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
திருமதி பத்மா சோமகாந்தன்
திரு.க.இரகுபரன்
பேராசிரியர் சபா ஜெயராசா
திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
திரு.எஸ்.பாஸ்க்கரா

இலக்கியக்குழு

திரு.எஸ்.எழில்வேந்தன் (செயலாளர்)

திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்
வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
பேராசிரியர் சபா ஜெயராசா
திரு.சி.கந்தசாமி
திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா
திருமதி வசந்தி தயாபரன்

பரிசில் நிதியம்

திரு.ஆ.குகமூர்த்தி (செயலாளர்)

திருமதி வசந்தி தயாபரன்
திரு.சி.கந்தசாமி
திருமதி ப.சந்திரபவானி
திரு.ச.இலகுப்பிள்ளை
சைவப்புலவர் சு.செல்லத்துரை
திரு.சி.சிவலோகநாதன்

பதிப்புத்துறை விற்பனைக்குழு

திரு.க.இரகுபரன் (செயலாளர்)

சைவப்புலவர் சு.செல்லத்துரை
வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
திருமதி வசந்த தயாபரன்
திரு.சி.கந்தசாமி
பேராசிரியர் சபா ஜெயராசா
கலாநிதி வ.மகேஸ்வரன்
செல்வி சற்சொரூபவதி நாதன்
திரு.எஸ்.பாஸ்க்கரா
திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி

சமூகமேம்பாட்டுக்குழு

வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன்(செயலாளர்)

திரு.சி.சிவலோகநாதன்
திரு.எஸ்.பாஸ்க்கரா
திரு.மா.கணபதிப்பிள்ளை
வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
திருமதி வசந்தி தயாபரன்
திரு.ஆ.குகமூர்த்தி
திரு.ப.க.மகாதேவா
வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன்
திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா
செல்வி சற்சொரூபவதி நாதன்

சட்டக்குழு

திருமதி சுகந்தி ராஜகுலேந்திரா (செயலாளர்)

திரு. கந்தையா நீலகண்டன்
திரு. டபுள்யு. எஸ். செந்தில்நாதன்



முப்பால் திருக்குறள் மாநாட்டுச் சிறப்புமலர்

வாழ்த்துச் செய்தி



திருக்குறள் உலகப் பொது நூல். மனித வாழ்வியல் காட்டும் பெருமைக்குரிய நூல். உலக அரங்கிலே நன்கு அறியப்பட்ட தமிழ் நூல்.

தமிழ் இன்னும் எவ்வளவு காலம் வாழும் என்று யாராவது கேட்டால் திருக்குறள் உள்ள வரை வாழும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தமிழர்களாகிய நாம் உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்பதற்கென, தமிழில் எழுந்த எல்லா நூல்களிலும் முன்னிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டிய நூல் திருக்குறள்.

திருக்குறளுக்கு விழா எடுத்தலும் மலர் வெளியிடலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு பெருமை தரும் நிகழ்வுகள். இதனால் தமிழர்களாகிய நாம் மேலும் ஒரு படி உயர்ந்து நிற்கின்றோம். கடந்த பத்து ஆண்டுகளாக விழா எடுக்காத மனக்குறை இன்று தீர்ந்துள்ளது.

வள்ளுவரின் கருத்துக்களை இவ்விழாக்கள் மூலம் அடிக்கடி நினைவு கூர்தலும், இளைய தலைமுறையினருக்கு அவற்றை அறிமுகம் செய்தலும் அக்கருத்துக்களை உலகத்தோர் நன்குணர்ந்து வாழப் பழக்குதலும் வேண்டும்.

இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து "அறிவோர்ஒன்று கூடல்" என்னும் பெயரில் நடைபெறும் நிகழ்ச்சி "திருக்குறள் போதனையும் தெளிவும்" என்ற தொனிப் பொருளில் தான் தொடங்கி வகுப்புக்களாக நடாத்தப்பட்டது. பின்னர் அறிஞர்களின் உரைகளாகத் தொடர்கின்றது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கால்கோள் 1924ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திருக்குறள் பயிற்சிக் கழகம் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கழகமே பின்பு கொழும்புத் தமிழ்ச் சங்கமாக முகிழ்த்தெழுந்தது.

எழுபதாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில், இவ்வாண்டு குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்கிறது. திருக்குறள் விழா 'முப்பால்' மலர் வெளியீடு, விருந்தினர் விடுதித் திறப்பு விழா என்பன நிகழ்ந்துள்ள இவ்வேளையில், சங்கத்தின் நுழைவாயிலில் அலங்காரவளைவும் அமைக்கவுள்ளோம் என்ற மகிழ்வும் எம்முள் மேலிடுகிறது. அந்த உளப்பூரிப்போடு 'முப்பால்' மலருக்கான இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குகிறேன்.

மு.கதிர்காமநாதன்,
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.



பொங்கும் மகிழ்ச்சியில் பூரிக்கிறார் பொதுச் செயலாளர்!



பத்து நீண்ட நெடும் ஆண்டுகளுக்குப் பிறகு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மூன்று தினங்கள் திருக்குறள் மாநாடும், மலர் வெளியீடும்! இருக்காதா மகிழ்ச்சி பின்னே?

கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே பிரதி புதன் தோறும் 'அறிவோர்ஒன்று கூடல்' நிகழ்ச்சி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையில் 'இலக்கியக்களம்' நிகழ்ச்சி, பிரதி பௌர்ணமி தினங்களிலே ஆளுமையுடைய 'அற்றைத்திங்கள்' நிகழ்ச்சி, ஒவ்வொரு சனிக்கிழமை காலை வேளைகளிலே 'பச்சிளம் சிறார்களை மகிழ்விக்க சிறுவர்கதை நேரம்' நிகழ்ச்சி, ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலே காலை வேளைகளிலே மக்களுக்குப் பயன்தரும் வைத்தியகலாநிதிகள் பங்குபற்றும் ஆரோக்கியக்கருத்தரங்கு இன்னோரன்ன அருமையான நிகழ்ச்சிகளும் அவ்வப்போது கலை நிகழ்ச்சிகள், கவியரங்குகள், ஈழத்து, தமிழகத்து பெரியோர், அறிஞர்களின் சொற்பொழிவுகள் என்பன ஒழுங்கே நடைபெற்றுவருகின்றன.

இவற்றுக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல பத்தாண்டுகளுக்குப் பிறகு சங்கத்திலே திருக்குறள் மாநாடு - ஈழத்து, தமிழகத்து அறிஞர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகிறார்கள்.

மேலும் மணிமகுடத்தில் வைரம் பதித்ததுபோல 200 பக்கங்கள் கொண்ட மாநாட்டு மலர்!

எனவே, மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது!

கொழும்புத் தமிழ்ச் சங்கமே கூடி அழகிய, அருமையான தேர் ஒன்றை இழுக்கிறது! தமிழ் பேசும் மக்களே அனைவரும் திரண்டு வாருங்கள்!

அண்மையிற் தான் நாங்கள் விருத்தினர் தங்கும் ஐந்து அறைகளை கொடைவள்ளல்களின் பெரும் உதவியுடன் திறந்து வைத்தோம்!

மீண்டும் ஒரு பெருவிழா!

வெற்றி விழாவாக்குவோம்!

மாநாட்டின் வெற்றி வாகைக்கும், மலரின் வெளியீட்டு வெற்றிக்கும் உதவி புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

உளமார்ந்த நன்றிகள்.

ஆ. இரகுபதி பாலஶ்ரீதரன்,
பொதுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.



கல்விக் குழுச் செயலாளரின் கருத்து



தமிழ் மொழியின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்றான "திருக்குறள்" நூலின் கருத்துக்கள் எமது இளம் பரம்பரையை சென்றடை வதனூடாக நல்லொழுக்கமும், நல்விழுமியப் பண்புகளும், நியமங்களும், மரபுகளும், சம்பிரதாயங்களும் முறையாகப் பேணப்படும். அதனால் ஆரோக்கிய முள்ளதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது தமிழ் ஆய்வாளர்களின் கருத்து.

எமது முன்னோர்கள் "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்றனர். நாலாடியார் என்ற நூலின் பாக்களும், கருத்துக்களும், திருக்குறள் என்ற இரண்டு வரிக் குறள்களும், கருத்துக்களும் சொல்லை வளம்படுத்தும். மனிதனை நேர்வழி நடக்கச் செய்யும் என நம்பினார்கள். சொல்லுறுதியாய் இருப்பவனின் "செயல்" உறுதியாக இருக்கும். ஆகவே இளம்பிள்ளைகளை திருக்குறளை படிக்கச் செய்து அதன் படி வாழப்பழக்கிவிட்டோமெனில் எம் மூதாதையர் கட்டி வளர்த்த பெருமை மிகு நாகரிகத்தையும், பண்பாட்டையும் நாம் தொடர்ந்து காப்பாற்றுபவர்களாக இருப்போம்.

"சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை" என்பார் கவியரசர் கண்ணதாசன். வார்த்தைகள் சொல்லப்படும் போது அதன் பெறுமதியில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும் ஆனால் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கும் அனைத்துச் சொற்களுமே ஆழமான கருத்துக்களை கொண்டுள்ளவை. மிகப் பெறுமதி மிக்கவை. சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் திருக்குறளுக்கு ஈடாக வேறொரு நூலை கூறமுடியாது.

இத்தகைய எல்லாச் சிறப்பையும் கொண்ட திருக்குறளைக் கற்பதால் முழுஆளுமை கொண்ட மனிதர்கள் உருவாகுவார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் விழா எடுத்து சிறப்பித்த பெருமை எமது தமிழ்ச்சங்கத்தின் முந்நாள் தலைவர் அமரர் கா.பொ. இரத்தினம் அவர்களையே சாரும். அவர் தமிழ் மறைக்கழகம் என்ற பெயரில் ஆண்டுதோறும் விழா எடுத்து கிராமப்புற, நகரப்புற மாணவர்களுக்கெல்லாம் திருக்குறளினூடாக தமிழின்பால் ஈர்ப்பை ஏற்படுத்தினார். 1979வது ஆண்டு 19வது திருக்குறள் மாநாட்டை நெடுந்தீவில் நடாத்தி அங்கு திருவள்ளுவருக்கு சிலை அமைத்து



கொண்டாடிய கொண்டாட்டங்கள் என்நினைவில் நிற்கின்றன. அவரது திருக்குறள் போட்டிகளினால் நான் கற்ற திருக்குறள்கள் இன்றும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. அன்றைய அதிபர் இரா. சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் யூன் மாதம் 9ம், 10ம் திகதிகளில் நடந்த திருக்குறள் போட்டி நிகழ்வுகள் என்னை இன்றும் திருக்குறளைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றன. இவ்வாறே பண்டிதர் கா.பொ. சென்றஇடமெல்லாம் திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் மகிமை சேர்ப்பார்.

யுத்தசூழல், பண்டிதர் கா.பொ. நோய்வாய்ப்பட்டு இருந்த காரணங்களினால் அப்புனித பணியை யாரும் முன்னெடுக்காது விட்டனர். கொழும்புத் தமிழ்ச்சங்கம் 2000ஆம் ஆண்டு தனது முதலாவது திருக்குறள் மாநாட்டை நடாத்தியதுடன் அதன் பொருட்டு ஒரு சிறப்பு மலரையும் வெளியிட்டு அப்பணியில் பங்குகொள்ள ஆர்வம் காட்டியது. பின்னர் தவிர்க்க முடியாத காரணங்களினால் தொடர்ந்து நடாத்தமுடியாமல் போனது. ஒவ்வொரு ஆண்டும் அத்தகையதொரு விழாவை நடத்தவேண்டும் என்பதில் சங்க உறுப்பினர்கள் ஆர்வம் காட்டிக் கொண்டே இருந்தனர். இவ்வாண்டு ஆட்சிக்குழுவினர் அப்பணியை செவ்வனே செய்ய முற்பட்டனர். அவர்கள் அகில இலங்கை மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே திருக்குறள் பேச்சு, கட்டுரை, மனனம், வினாவிடைப் போட்டிகளை பாலர்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என்ற வகையில் நடாத்தினர். எமக்கு கிடைத்த விண்ணப்பங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் போட்டிகள் நடாத்தப்பட்டு நாடு பரந்த அடிப்படையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இன்று பரிசளிக்கப்படுகின்றது.

பரிசளித்தல், சான்றிதழ் வழங்கல் என்பவற்றுக்கப்பால் எமது பிள்ளைகள் ஆகக்குறைந்தது திருக்குறளின் சில அதிகாரங்களைப் பாடமாக்கியுள்ளனர், விளங்கிவைத்துள்ளனர் என்பதைத் தமிழ்ச்சங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகின்றோம். இப்பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க கொழும்புத் தமிழ்ச்சங்கம் உறுதிபூண்டுள்ளது. பண்புடைக் குழந்தைகளை உருவாக்குவதில் சங்கம் அயராது பாடுபடும் என்ற உறுதிமொழியை தங்களுக்குத் தெரிவிப்பதுடன் பெற்றோர்கள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள், பொதுசனத்தொடர்புச் சாதனங்கள் என்ற சகல தரப்பினர்களும் ஒத்த குறிக்கோளுடன் இயங்கினால் நாம் எதிர்பார்க்கின்ற குறிக்கோளை அடைய முடியும் என்ற அசைக்க முடியாத சிந்தனையை ஞாபகமூட்ட விருப்புகின்றேன்.



இதைப் போலவே தொல்காப்பியம், ஔவையாரின் நல்வழி, மூதுரை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், ஐம்பெருங்காப்பியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள், ஏனையபழந்தமிழ் நூல்களின் பண்புசார் கருத்துக்களை எம் குழந்தைகளின் உள்ளங்களில் பாடத்திட்டங்க ளினூடாகவும், கண்ணுக்குப் புலப்படாத மறைக்கலைத் திட்டங்களாலும், புகுத்திவிடுவதால் தாய் மொழியில் ஆளுமையுள்ள பிள்ளைகளை உருவாக்கலாம். அப்பணி இறைபணியிலும் மேலானது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நான் கல்விக்குழுச் செயலாளராக இருக்கும் இக் காலத்தில் இத்தகையதொரு விழா எடுக்க முடிந்தமைக்கான சகல செயற்பாடுகளிலும் உறுதுணை புரிந்த தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட்ட ஆட்சிக்குழு உறுப்பினர்கள், நடுவர்களாகக் கலந்து கொண்ட பெருமக்கள் யாழ்ப்பாணப்பிராந்தியத்தில் சிறப்பாக இப்போட்டிகளை நடாத்தித் தந்த வேம்படி மகளீர் கல்லூரி அதிபர் திருமதி. பொன்னம்பலம் அவர்கள், அங்கு நடுவர்களாகக் கடமையாற்றியோர் யூலை மாதம் 22, 23, 24ம் திகதிகளில் விழா சிறப்புற சகல விடங்களிலும் ஒத்தாசையாக நின்று செயற்படும் பேராளர்கள், சான்றோர்கள், கொடைவள்ளல்கள், இம்மலர் சிறப்புற உழைக்கும் மலர்க்குழுவினர் யாவர்க்கும் என் பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

நன்றி !

அன்புடன்,

மா. கணபதிப்பிள்ளை

கல்விக்குழுச் செயலாளர்.



நிதிச் செயலாளர் நெஞ்சிலிருந்து...



முப்பால் எனப் போற்றப்படும் திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் உன்னத போதத்தை உலக மக்களுக்குப் போதிக்கும் பொதுமறையாகும். இஃது ஏழு சீர்களில் ஒன்றேமுக்கால் அடிகளில் வாழ்வியல் தத்துவங்களை முற்றாகப் பேசும் மாபெரும் பொக்கிஷமாகும்.

மனித வாழ்வு சீர்கெட்டுப் போகாத சீரியபாதையில் வழிநடத்தவல்ல வள்ளுவம், இன்று மக்களால் மறக்கப்பட்டுப் போகும் ஒன்றாக ஆகிப்போனது இதனைத் தவிர்க்க எமது கொழும்புத் தமிழ்ச்சங்கம் இளைய தலைமுறையிடையே அதன் மேன்மையை உணர்த்த மாநாடுகளையும், திருக்குறள் தொடர்சொற்பொழிவுகளையும் நடாத்தி வருகின்றது.

இவ்வாண்டில் நடைபெறும் இம்மாநாடு சங்கம் நடத்தும் இரண்டாவது மாநாடாகும். மாணவர்களிடையே, திருக்குறள் மனனப்போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவற்றை நடத்தி இம்மாநாட்டில் பரிசில்களும் வழங்குகின்றது. திருக்குறள் ஆய்வரங்குகளும், கலைநிகழ்ச்சிகளும் இம்மாநாட்டின் சிறப்பம்சங்களாகும்.

இலங்கை, இந்திய அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவுகளும் "முப்பால்" என்னும் இந்த மாநாட்டுச் சிறப்புமலரும் மேலும் இம்மாநாட்டிற்குப் பெருமை சேர்ப்பனவாகும். மாநாடு வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

செல்வ திருச்செல்வன்

முப்பால் ஒரு குறிப்பு

இரண்டாயிரமாம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் முதன்முறையாக திருக்குறள் மாநாடு ஒன்றை நடத்தியது. வெற்றிகரமாக நடைபெற்ற இம்மாநாட்டின் நினைவாகச் சங்கம் ஒரு சிறப்பு மலரையும் வெளியிட்டது. அவ்வாறே பதினோராண்டுகளின் பின் இவ்வருடமும் வள்ளுவத்தின் பெருமை கூற நாமொரு விழா வெடுக்கின்றோம்.

சிறப்புச் சொற்பொழிவுகள், கலைநிகழ்வுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளோடு சிறப்புற நடத்த முனைவு கொண்டுள்ள இம்மாநாட்டின் மற்றுமொரு அம்சமாக இம்முறையும் ஒரு மாநாட்டுச் சிறப்பு மலரையும் வெளியிட முடிவு கொண்டோம். முன்போலவே இம்மாநாட்டு மலருக்கும் புத்திஜீவிகளிடமிருந்து பெறப்பெற்ற புதிய ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அறம் பொருள் இன்பங் கூறிக் காலத்தாலழியாத நித்தியங்கொண்ட செந்நாப்போதனின் முப்பால் நூலின் ஆழ்ந்த பொருள் விளம்பும் இதிலுள்ள ஆக்கங்கள் அனைத்தும் மனிதகுலத்திற்கு வழிகாட்ட வல்லன என்பது யதார்த்தமாகும். இம்மலரில் ஆய்வுக் கட்டுரைகளும், கவிதைகளும், தமிழ் சங்கம் சார்ந்த தகவல்களும் கோக்கப்பெற்றுள்ளன.

கட்டுரை, கவிதைகளை உவந்தளித்த சான்றோருக்கும், மலருக்கான அட்டை வடிவமைப்பைச் செய்தளித்த ஆசிப் புஹாரி அவர்களுக்கும். அழகுற அசிட்டளித்த "யுனி ஆர்ட்ஸ்" நிறுவன முகாமையாளர் திரு. பொன். விமலேந்திரன் அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளை இதன் வாயிலாகச் சமர்ப்பிக்கின்றோம். தவிரவும் இவ்விழாவினை நடாத்த சங்கத் தலைவர் அவர்களின் தூண்டுதலும், செயலாளர், பொருளாளருடன் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் காரணமாக அமைந்தது. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

நன்றி !

மலர்க்குழு சார்பாக
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

உள்ளே...

1. **திருவள்ளுவரும் கருத்து வினைப்பாடும் - ஒரு மறு வாசிப்பு** 01
   பேராசிரியர் சபா ஜெயராசா
2. **திருக்குறளில் இரு தாய்மார்** 07
   கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
3. **வள்ளுவ நெறியும் பரிமேலழகர் உரைத்திறனும்** 09
   கம்பவாரிதி இ.ஜெயராஜ்
4. **வள்ளுவர் கண்ட சங்க இலக்கியம்** 15
   புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன்
5. **முப்பால்** 20
   ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
6. **ஐந்தவித்தான் யார்?** 22
   க.இரகுபரன்
7. **திருக்குறள் ஓர் ஆன்மீக நூலா?** 26
   தமிழ்மணி அகளங்கன்
8. **வள்ளுவரைச் சந்தித்த வன்னிமகன்** 37
   ப.க.மகாதேவா
9. **சிங்கள பாளி இலக்கியங்களிலே திருக்குறளின் செல்வாக்கு** 39
   பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம்
10. **முதல் சீலைடை வெண்பா** 44
    சிவராசசிங்கம் கந்தசாமி
11. **திருவள்ளுவ மாலை - அதன் சாராம்சம் குறித்து ஓர் உசாவல்** 45
    கலாநிதி வ.மகேஸ்வரன்
12. **திருக்குறளில் காதல்** 53
    செல்வி சற்சொரூபவதி நாதன்
13. **உலக மக்களின் செம்மை வாழ்வுக்கான நெறிமுறைகளை வின்டுரைக்கும் உலகப் பொதுமறை திருக்குறளே** 55
    கலாநிதி க.நாகேஸ்வரன்
14. **எல்லா உயிரும் இன்புற்றிருக்க நாம் என்ன செய்யலாம்.' - வள்ளுவர் காட்டும் வழி** 62
    கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை



15. வள்ளுவத்தில் விலங்கியல் 65
திருமதி வசந்தா வைத்தியநாதன்
16. இந்நூற்கு இணையாகும் எந்நூல் 70
கவிஞர் கிண்ணியா ஏ.எம்.எம்.அலி
17. திருக்குறள் கூறும் அறம் 72
பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்
18. திருவள்ளுவர் காட்டும் சட்ட நெறி 76
திரு. கந்தையா நீலகண்டன்
19. நீத்தார் பெருமை - தொடர்பில் ஒரு பார்வை
வள்ளுவம் காட்டும் செயற்கரிய செயல் : நீத்தல் 81
எம்.எஸ்.ஸ்ரீதயாளன்
20. திருவள்ளுவரின் மொழி ஆளுமைத்திறன் 84
பத்மா சோமகாந்தன்
21. திருக்குறளும் இசையும் 88
கலாநிதி மீரா வில்லவராயர்
22. திருவள்ளுவர் காட்டும் அறிவுடைமை: ஒரு பார்வை 90
தம்பு சிவசுப்பிரமணியம்
23. திருக்குறள் தொடாதது ஒன்றுமில்லை, தொட்டது எண்ணிலடங்கா.
குறளைப் பாராட்டாத புலவருமில்லை. 95
இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு எம்.ஏ
24. வள்ளுவக் கருத்தும் காட்சியும் 98
சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா
23. திருக்குறளும் வாழ்வியலும் 104
கலாநிதி சி.செல்வரஞ்சிதம்
25. ஒழுங்கு தப்பினால் ஓராயிரம் சிக்கல்கள் 111
ஏ.ஜே.ஞானேந்திரன்
26. திருக்குறளின் முதல் அதிகாரத்தில் முதல்வன் ஒருவனே 114
திருமதி.சி.ஞானசூரியம்
27. மலரினும் மெல்லிது காமம் 121
திருமதி உமா வைத்திலிங்கம்
28. கவிஞர் வள்ளுவர் - அழகியல் பார்வையில் திருக்குறள் 125
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்



29. வள்ளுவமும் வாழ்வும் 132
கே.வி.குணசேகரம்
30. வான்புகழ் கொண்ட தமிழ்நாடு 136
திருமதி நவம் வெள்ளைச்சாமி
31. திருக்குறளில் புதைபொருள்கள் 139
முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்
32. அன்பின் ஐந்திணை 144
டாக்டர்.மு.வரதராசனார்
33. வள்ளுவத்தின் இறைக்கொள்கை 149
எஸ்.இராமகிருஷ்ணன்
34. திருக்குறளில் நவரசங்கள் 156
பண்டிதர் வித்துவான் க.குகதாசன்
35. திருவள்ளுவர் வகுத்த சமுதாய மறுமலர்ச்சி 170
கு.ச.ஆனந்தன்
36. திரு.வி.க.பார்வையில் திருக்குறள் 184
37. நடைமுறை அறங்கள் 189
வ.சு.மாணிக்கம்
38. திருக்குறளின் இறுதிக் குறள் எது? ஏன்? 194
இரா.முத்துகுமாரசாமி
39. கலைஞரின் பார்வையில் குறள் நான்கு 198
40. அமைச்சினால் உயர்ந்த அரசன் 203
41. பூமி இன்னும் வாழ்வதெல்லாம் 208
செல்வி ஸ்ரீ. பெருமாள்
42. திருக்குறள் மாநாடு 2011 – வாழ்த்து 209
பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம்
43. போட்டி முடிவுகள் 210





கொழும்புத் தமிழ்ச் சங்கம்
திருக்குறள் மாநாடு 2011

இடம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் - சங்கரப்பிள்ளை மண்டபம்

காலம்

22, 23, 24, ஜூலை 2011

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

மு. கதிர்காமநாதன்	ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்	மா. கணபதிப்பிள்ளை
தலைவர்	பொதுச் செயலாளர்	கல்விக்குழுச் செயலாளர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

இல 7, 57 வது ஒழுங்கை கொழும்பு -06

தொலைபேசி: 011 2363759 தொலைநகல்: 011 2361381

மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com

இணையத்தளம்: www.colombotamilsangam.com

பண்டிதர் கா.பொ.இரத்தினம் அரங்கு

காலம் : 22.07.2011 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி

ஊர்வலம் (4.00 மணி - 6.00 மணி)

மங்கல விளக்கேற்றல் - திரு.இரரஜதுரை இரட்னேஸ்வரன்
பணிப்பாளர், பிள்ளையார் இன்.
திருமதி அமுதினி இரட்னேஸ்வரன்

தமிழ்வாழ்த்து - திரு.அருணந்தி ஆரூரன்

வரவேற்புரை - திரு.ஆ.இரகுபதி பாலஸுந்தரன்
பொதுச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்

தலைமையுரை - திரு.மு.கதிர்காமநாதன்
தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்

தொடக்கவுரை - திரு.மா.கணபதிப்பிள்ளை
கல்விக்குழுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

சிறப்புச் சொற்பொழிவு - "திருக்குறளில் இறைநெறி"
பேராசிரியர் அரங்க ராமலிங்கம்,
சென்னைப் பல்கலைக்கழகம்

மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியீடு - வெளியீட்டுரை:
வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

முகம் பிரதி பெறுபவர் - திருமதி ஜெயந்தி வினோதன்

சிறப்புப் பிரதிகள் வழங்கல்

கலைநிகழ்ச்சி - "திருக்குறட் பரதம்"
நாட்டிய கலாநிதி மாணவிகள்,
நடன அமைப்பு -
கலாசூரி ஸ்ரீமதி வாககி ஜெகதீஸ்வரன்

நன்றியுரை - திரு.செல்வ திருச்செல்வன்
நிதிச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

சங்கீதம்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் அரங்கு

காலம் : 23.07.2011 சனிக்கிழமை காலை 9.30 மணி

மங்கல விளக்கேற்றல் - திரு.எஸ்.திருஞானசம்பந்தர்
முன்னைநாள் வதிவிடப் பிரதிநிதி - ஐ.நா.

தமிழ்வாழ்த்து - திருமதி ஹேமவதி கபிலதாஸ்
திருமதி நீதிமதி யோகராஜன்

வரவேற்புரை - திரு.ந.கனேசலிங்கம்
துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்

தலைமையுரை - திரு.கந்தையா நீலகண்டன்

தொடக்கவுரை - திரு.க.அரசரட்ணம்
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

பேச்சு - செல்வி ராஜமாணிக்கம் தனுசா
பதுளை / தொட்டுலாகலை தமிழ் கனிஸ்ட வித்தியாலயம்
(எஸ் பிரிவு - பெகடு கோட்டியில் முதற்றரிக் பெற்ற மாணவி)

சிறப்புச் சொற்பொழிவு - "வள்ளுவர் காட்டும் வாழ்வியல்"
முனைவர் சீர்காழி வி.ராமதாஸ், தமிழ்நாடு.

ஆய்வரங்கு

"பலமுக நோக்கில் திருக்குறள்"
தலைவர்- பேராசிரியர் சி. தில்லைநாதன்

- கல்வியியல் நோக்கு - திரு.சி.ரி.இராஜேந்திரா
  திறந்த பல்கலைக்கழகம்.
- அரசியல் நோக்கு - கலாநிதி துரை மனோகரன்
  பேராதனைப் பல்கலைக்கழகம்.
- ஒப்பியல் நோக்கு - பேராசிரியர் செ.யோகராசா
  கிழக்குப் பல்கலைக்கழகம்.
- பெண்ணிய நோக்கு - கலாநிதி வ. மகேஸ்வரன்
  பேராதனைப் பல்கலைக்கழகம்.
- கருக்கியல் நோக்கு - திரு.ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நன்றியுரை - திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
துணைச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

சங்கீதம்

முத்தமிழ் முனிவர் விபுலாந்த அடிகள் அரங்கு

காலம் : 23.07.2011 சனிக்கிழமை மாலை 5.00 மணி

மங்கல விளக்கேற்றல் - திரு.கிருஷ்ணபிள்ளை சக்திதாசன்
திருமதி யமுனாராணி சக்திதாசன்

தமிழ்வாழ்த்து - திருமதி சொர்ணலதா பிரதாபன்

வரவேற்புரை - திரு.ஆ.குகநேர்த்தி
பரிசில் நிதியச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

தலைமையுரை - பேராசிரியர் சபா ஜெயராசா

தொடக்கவுரை - சைவப்புலவர் கு. செல்லத்துரை

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு

பேச்சு - செல்வி சாமந்தி நகுலகுமார்,
கினி / திருவையாறு மகாவித்தியாலயம்.
(மத்திய பிரிவு - பேச்சுப் போட்டியில்
முதற்பரிசு பெற்ற மாணவி)

சிறப்புச் சொற்பொழிவு - "திருக்குறளில் சித்தர் நெறி"
பேராசிரியர் அரங்க இராமலிங்கம்
சென்னைப் பல்கலைக்கழகம்.

கலைநிகழ்ச்சி - "செம்மொழி நடனம்"
சைவமங்கையர் வித்தியாலய மாணவிகள்
நடன அமைப்பு :
திருமதி கீதாஞ்சலி சுதர்சன்

நன்றியுரை - திரு.அ.பற்குணன்
ஆட்சிக்குழு உறுப்பினர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

சங்கீதம்

பேராசிரியர் எம்.எம்.உவைஸ் அரங்கு

காலம் : 24.07.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

மங்கல விளக்கேற்றல் - திரு.ஆறுமுகம் லோகேஸ்வரன்
தொழிலதிபர்
திருமதி ரஜனி லோகேஸ்வரன்

தமிழ்வாழ்த்து - திருமதி நிலானி கோபிசங்கர்

வரவேற்புரை - வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன்
நூலகக் குழுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

தலைமையுரை - பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

தொடக்கவுரை - செல்வி சற்சொருபவதி நாதன்
துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

பேச்சு - செல்வி அபிராமி நகுலகுமார்
கினி / திருவையாறு மகாவித்தியாலயம்.
(கீழ்ப் பிரிவு - பேச்சுப் போட்டியில்
முதற்பரிசு பெற்ற மாணவி)

ஆய்வரங்கு

"வழிவழி வள்ளுவர்"

தலைவர் - பேராசிரியர் அ.சண்முகதாஸ்

- "வள்ளுவத்தில் எண்" - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
- "திருக்குறள் பலவகையும் அதன் வாசிப்பும்" நவீனகோட்பாடுகளை அறிமுகப்படுத்தல் ஓர் உசாவல் - பேராசிரியர் சி.மௌனகுரு
- "திருக்குறளைக் கையாளல்" சமகாலம் நூற்றாண்டு அரசியற் சூழலை முன்நிறுத்தி... - பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு
- "அகத்திணை மரபில் காமத்துப்பால்" - கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
- "பாயிர மரபில் திருக்குறட் பாயிரம்" - திரு.க.இராஜபுத்திரன்

நன்றியுரை - திருமதி வசந்தி தயாபரன்
ஆட்சிக்குழு உறுப்பினர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

சங்கீதம்

தமிழறிஞர் தி.த.கனகசுந்தரம் அரங்கு

செம்மையாளர் வாண்மதுரை

காலம் : 24.07.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி

மங்கல விளக்கேற்றல்	- திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை திருமதி சந்திராதேவி கணபதிப்பிள்ளை
தமிழ்வாழ்த்து	- திரு.தீ.கருணாகரன்
வரவேற்புரை	- திரு.ப.க.மகாதேவா உறுப்புரிமைச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்
தலைமையுரை	- திரு.மு.கதிர்காமநாதன்
தொடக்கவுரை	- திருமதி பத்மா சோமகாந்தன் ஆட்சிக்குழு உறுப்பினர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்
சிறப்புச் சொற்பொழிவு	- "திருக்குறள் - சில புதிய பார்வைகள்" பேராசிரியர் அரங்க இராமலிங்கம், சென்னைப் பல்கலைக்கழகம்.
பேச்சு	- செல்வன் அஜன் பாலகுமார், கொழும்பு 7 றோயல் கல்லூரி (மேற் பிரிவு - பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெற்ற மாணவன்)

பட்டிமண்டபம்


வெள்ளுவர் மொழியும் வெயிலுறுத்துவது.

இல்லறச் சிறப்பையே!	துறவறமையே!	ஒழுங்கின் வலியையே!
ஸ்ரீ. பிரசாந்தன்	ச.லலீசன்	கு. பாலசண்முகன்

நடுவர் - கம்பவாரிதி இ.ஜெயராஜ்

நன்றியுரை	- திரு.சி.பாஸ்கரா துணை நிதிச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்
சங்கீதம்	

கூகையைப் அச்சுப்பதிப்பும் புளி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டட், கொழும்பு 13. தொலைபேசி: 2330165



திருவள்ளுவரும் கருத்து வினைப்பாடும் ஒரு மறு வாசிப்பு

பேராசிரியர் சபா ஜெயராசா

கருத்தியலும் கருத்து வினைப் பாடும் சமூக இருப்பிலிருந்து மேலெழு கின்றன. சமூக இயல்பின் வழி எழும் அடுக்கமைவை மேலும் வலிதாக்கும் கருத்தியலும் அவற்றை உருமாற்றம் செய்யும் கருத்தியலும் ஒரே சமூகத் தளத்திலே தோற்றம் பெறுதல் தவிர்க்க முடியாத நிலவரமாகின்றது. குறிப்பட்ட கருத்தியலைச் சார்ந்து நிற்போர் தமக் கென உருவாக்கிக் கொள்ளும் மொழிக் கட்டமைப்பும் அதனை எடுத்தாளும் செயற்பாடும் "கருத்து வினைப்பாடு" (DISCOURSE) என அழைக்கப் படும். நூலியங்கள் (TEXTS) கருத்து வினைப்பாடுகளைத் தாங்கி நிற் கின்றன. சமூகவியல்பு, சமூக நிறு வனங்கள், நூலியங்கள், அவை விரித்துரைக்கும் அறம் முதலியவற்றுக் கிடையே ஆழ்ந்து செறிந்த தொடர்புகள் காணப்படுகின்றன. திருக்குறளை விளங்குதல், விளக்குதல், மறு வாசிப்புக்கு உட்படுத்துதல் முதலாம் அறிகைச் செயற்பாடுகளை மேற் கொள்ளும்பொழுது "கருத்து வினைப் பாடு" என்ற எண்ணக்கரு பல நிலை களிலும் துணை நிற்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

நூலியங்களின் கருத்து வினைப் பாட்டின் உள்ளடக்கத்தில் அறவியல் இடம் பெறுகின்றது. அது மெய்யியலின் தேடற் பொருளாக இருந்து வந்துள்ளது. கிரேக்கக் கல்வி மரபிலிருந்து முகிழ்த் தெழுந்த எண்ணக்கருவாக அறவியல் (ETHICS) அமைந்தது. முழுமை யான வாழ்க்கைத் தொகுதியின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் மனித வினைப்பாடுகளையும் அனுபவங் களையும் அடியொற்றி அறக்கருத்துக் கள் தோற்றம் பெறுகின்றன. வாழ்வின் பெறுமானங்கள் பற்றிய விஞ்ஞான மாகவும் அது அமைகின்றது. எது நல்லது எது தீயது எது உயர்ந்தது எது தாழ்ந்தது எது தலையானது எது கீழானது போன்ற சமூக நியமங்களின் விஞ்ஞானமாக (NORMATIVE SCIENCE) அறவியல் அமைகின்றது.

சமூக இருப்பிலிருந்தே அறக்கருத் துக்கள் தோன்றுகின்றன. அவை சமூகத்தின் இயல்பைக் காட்டும் சுட்டி களாகவும் குறி காட்டிகளாகவும் அமை கின்றன. சமூகத்தை நெறிப்படுத்தும் ஆட்சி முறைமையின் கருத்தியல் ஆயுதமாக அவை உருவாக்கப்படு கின்றன.



இந்து அறவியலிலே சத்துவம், ராஜசம், தாமசம் என்ற முக்குணாங்கள் வலியுறுத்தப்படுகின்றன. அக்குணாங்களின் ஆற்றுகை வருணப் பாகுபாட்டுடன் இணைந்த ஒழுக்க நெறிகள் என்ற வலியுறுத்தல் உண்டு. மாறாக ஒழுக்கம் என்பது பிறப்பினால் தீர்மானிக்கப்படுதல் இல்லை என்ற மனுஸ்மிருதியின் கருத்தும் சமூக இயல்பை ஒட்டியும் மறுதலித்தும் நிற்கும் அறிகை வீச்சுகளாகவுள்ளன. அறமுரைக்கும் செயற்பாட்டைப் புலவர்களும், ஆய்வறிவாளரும் முன்னெடுத்த வேளை ஆட்சி அதிகாரத்தின் மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு நிற்றலும் முரண்படுதலும் என்ற கோலங்களை அறிவு வரலாற்றிலே கண்டுகொள்ள முடியும்.

அறிவுக்கும் மேலாதிக்க வன்முறைக்குமுள்ள தொடர்பை மேலைப்புல அறிவாய்வியலை அடியொற்றி மிசேல் பூக்கோ விளக்கினார். தமிழ் மரபில் அதனை விளக்க வந்த ராஜ் கௌதமனின் சுட்டல் வருமாறு (ராஜ் கௌதமன், (1997) "அறம் / அதிகாரம்" கோவை விடியல் பதிப்பகம், பக்:13)

"நாகரிகம் என்பது வன்முறையால் விளைந்தது. உடல்களையும் உணர்வுகளையும் கட்டுப்பாடான வகைகளால் அமுக்கியதால் ஏற்பட்டது உண்மைப் பண்பாடு..."

அறமும் ஒழுக்கமும் வன்முறையின் வெளிப்பாடாகின்றன. சமூகக்கட்டமைப்பின் தளராத உறுதிக்கு அறக்கோட்பாடுகள் வலிமை சேர்க்கின்றன.

தமிழகத்து தொன்மையான குலக்குழு வாழ்க்கையின் இயல்பு உணவு தேடுக்கம், பாலூக்கம் முதலாம் இயல்பூக்கங்கள் தழுவி வளர்ந்தது. அந்நிலையில் இயல்பூக்க வழியாக அறவியல் கட்டுமை (CONSTRUCT) செய்யப்பட்டது. அகவொழுக்கம் புற வொழுக்கம் ஆகியவை பால் இயல்பூக்கம் தழுவி எழுந்தன. பால் நடத்தை தழுவி அகமும் வன்நடத்தை இயல்பூக்கம் (AGGRESSIVE INSTINCT) தழுவிப் புறமும் எழுந்தன. அத்தகைய ஒரு சமூக அமைப்பின் அடுத்த படிநிலை வளர்ச்சியாகவும் அதிலிருந்து அதிகார நிலையில் மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட வளர்ச்சியாகவும் வேந்தர் மரபு அல்லது அரச மரபு தோற்றம் பெற்றது. அதாவது குலக்குழு நிலையிலிருந்து குறுநில அரசும் பெருநில அரசும் படிமலர்ச்சி கொண்டன. அவ்வாறான ஓர் அரசியல் எழுபுலத்திலேதான் திருக்குறள் தோற்றம் பெற்றது. முன்னைய சமூக அமைப்பை "பாணர் மரபு" என்றும் வளர்ச்சியின் எழு நிலையில் அமைந்த அமைப்பைப் "புலவர் மரபு" என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு. வரன்முறை சாராக் கல்வியின் செயல் வழியாகப் பாணர் தோற்றம் பெற்றனர். வரன் முறையான கல்வியின் வழியாகப் புலவர் உருவாக்கம் பெற்றனர்.



அரசின் வளர்ச்சியானது கல்விச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலின் வளர்ச்சியாகும்.

சமூக மாற்றங்களினூடே அறிவுக்கையளிப்புத் தொடர்ந்த வண்ணமிருக்கும். தலைமுறை தலைமுறையாக அறிவு கையளிப்புச் செய்யப்படும் நிலையில் முன்னைய மரபுகளும் பனுவல்களும் நீடித்து நிலைக்கும். அகம் புறம் ஆகிய மரபுகள் தொடர்ந்தும் நீடித்து வந்தமை தமிழகத்து அறிவுக்கையளிப்பின் தொடர்ச்சியைப் புலப்படுத்தும், இயற்கையை மானிடப்படுத்தலும், மனிதரை இயற்கை மயப்படுத்தலும் என்ற தருக்கத்தின் வழியாக அகவொழுக்கமும் புறவொழுக்கமும் நீடித்தன.

தமிழர் வாழ்வியலை உணர்த்தும் தருக்கங்களாக அறம், பொருள், இன்பம் ஆகியவை எடுத்தாளப்பட, அவற்றுடன் தொடர்புடைய இலக்கியக் கோட்பாடாக அகமரபும், புறம் சார் மரபும் அமைந்தன. (மோகனராசுகு. (1981) திருக்குறளில் மரபுகள், சென்னைப் பல்கலைக் கழகம்) அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வியற் கோட்பாடு தனிச் சொத்துரிமை, அரச முறைமை, வரன்முறையான கல்வி ஏற்பாடு ஆகியவற்றுடன் இணைந்த தோற்றப்பாடாயிற்று. அறிவை வரன் முறைப்படுத்துகையில் முன்னர் கூறிய வற்றை வழிமுறைப்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெறும்.

அத்தகைய பின்புலத்தில் வடபுலத்திலே "திரிவர்க்கம்" என்ற கருத்தியலும் தமிழ்மரபிலே "முப்பால்" என்ற எண்ணக் கருவும் வளர்ச்சி பெற்றன. வரன்முறையான கல்வி வழி வந்த தொல்காப்பியர் "அந்நிலை மருங்கின் அறமுதலாகியமும் முதற் பொருட்கு முரிய வென்ப" (தொல் - 1363) என்று முப்பால் வகுப்பைக் குறித்துரைத்தார்.

ஒரு புறம் அரச அதிகாரத்துக்குட்பட்ட ஒழுக்க வரன்முறைகளை வலியுறுத்த வேண்டிய தேவையும், மறுபுறம் மேலாதிக்க அதிகார முறைமையை மறுதலித்து அடிநிலைச் சமூகத்தின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய அறிவார்ந்த கடமையும் என்ற முனைவுப்பாடுகள் வள்ளுவரிடத்துக் காணப்படுகின்றன. அத்தகைய நிலைக்கு ஆய்வறிவாளர் உட்படுதல் "முனை வாக்கம்" (POLARISATION) என்று குறிப்பிடப்படும். வரன்முறையான அரச மேலாதிக்கத்தோடு தோற்றம் பெற்ற இந்தத் துருவப்பாடு பிறபண்பாடுகளிலும் காணப்பெற்ற ஓர் அறிகைத் தோற்றப்பாடாகும்.

கிரேக்கப் பண்பாட்டிலே சோக்கிரதீஸ், பிளேட்டோ முதலாம் ஆய்வறிவாளரிடத்தும் இந்த முனை வாக்கம் காணப்பட்டது. ஒரு முனைவில் அரச



மேலாதிக்கத்தை அங்கீகரித்தலும், மறுபுறம் ஆதிக்க முறைமையைக் கட்டுப்படுத்து வதற்கான ஆக்கங்களை முன்வைத் தலும் என்ற நிலைகள் கிரேக்கத்திலே காணப்பட்டன. ஆய்வறி வாளர்களே ஆட்சியாளராக வேண்டும் என்ற முன் மொழிவை பிளேட்டோ தாம் எழுதிய "சட்டங்கள்" என்ற நூலிலே ஓங்கி ஒலித்தார்.

வேட்டுவச் சமூகம் ஆயர்சமூகம் என்பவை நிலைபெயர்ந்து பயிர் செய் சமூகமும் வர்த்தகமும் வளர்ச்சி யடைய மனிதருக்குரிய அடிப்படைத் தேவை களைக் காட்டிலும் மிகையான உணவு மற்றும் பண்டங்களின் உற்பத்தி உருவானது. அவற்றை அடியொற்றி, தனியுரிமையும் சுரண்டலும் வளர்ந்தன. அதன் வழி அதிகாரமும் பெற்றோரின் சுரண்டல், நீடித்துச் செல்ல சமூக நீதியையும் அதன் அறிகை வடிவாகிய அறத்தையும் உரைக்க வேண்டிய தேவை எழுந்தது. செல்வப் பங்கீட்டில் நிகழ்ந்த சமநிலைப் பிறழ்வினை அரச அமைப்பினால் நீக்க முடியாத நிலையில் அரசியலும் உயர் நிலையான வலுவும் வடிவும் பற்றிய கருத்தாக்கங்களை ஆய்வறி வாளர் முன்னெடுத்தனர். அந்த வகையிலே "ஊழ்" என்ற எண்ணக் கரு தோற்றம் பெற்றது. அரசியலும் மேலான பொருளாக ஊழ் வலியுறுத் தப்பட்டது.

செல்வத்தைச் சரியான முறையிலே பாதீடு செய்து பகிர்ந்தளித்தல் கடவுளின் செயல் என்பது தொன்மங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய முறை யிலே பங்கீட்டை மேற்கொண்ட கடவுளர் "பால்வரை தெய்வங்கள்" என அழைக்கப்பட்டனர். கிரேக்கமரபில் 'மீரி' என்பதும் வேதங்களில் 'பகர்' (BHAGA) என்பதும் பகிர்ந்தளிக்கும் இறைமை கொண்ட தெய்வங்களாக அமைகின்றன. பிறழ்வு குன்றாத பகிர்ந் தளிப்பை நிலைநிறுத்தவும் வலியுறுத்தவும் ஊழ்வினை என்ற கோட்பாடு உருவாக்கம் பெற்றது. (இராம கிருஷ்ணன், எஸ் (1990) திருக்குறள் - ஒரு சமுதாயப் பார்வை, சென்னை என்.சி.பி.எச்)

அக்கருத்தை அடியொற்றியே திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்தும் அறன் வலியுறுத்தலும் மேலெழு கின்றன. பகுத்துண்டு பல்லுயிரோம்பும் இலட்சிய அரசு பற்றிய கருத்தியலே திருக்குறளில் மேலோங்கி நிற்கின்றது. எண்ண முதல்வாதம் அல்லது கருத்து முதல் (IDEALISM) என்ற இலட்சியப் பாங்கின் விரிவினை அங்கே கண்டுகொள்ள முடியும். கருத்துக்களே அனைத்துக்கும் மூலப்பொருளாயும் நித்தியப் பொருளாயும் நிற்கும் என்ற ஆதர்ஸ நோக்கும் கருத்து முதல் வாதத்தின் தளமாக அமைகின்றது.

எடுத்துக்காட்டாக, செங்கோன்மை என்ற கருத்து முதன்மை செய்யப் படுதலைப் பின்வரும் குறளிலே காணலாம்.



அந்தணர் நூற்கு மறத்திற்கு - மாதியாய்
நின்றது மன்னவன் கோல்
(குறள் 543)

ஆதியாய் என்பது அனைத்துக்கும் முந்திய தோற்றத்தைக் குறித்தது. ஆதியாய் என்பதற்குக் 'காரணமாய்' என்று பொருளுரைத்தல் தகாது.

ஒருபுறம் அரசின் மாட்சியைக் கூறவந்த வள்ளுவர் மறுபுறம் கொடுங் கோன்மையை இடித்துரைத்தல் மேலாதிக்க ஏற்பையும் மறுதலிப் பையும் சமகால வீச்சில் ஈடேற்றும் முனைவுப் பாட்டினைக் காட்டுகின்றது. தமது காலத்துத் தோற்றப்பாடுகளை அறிகை நிலையிலே செப்பமாக விளக்கிய வள்ளுவர் தமது மனச் சான்றையும் வெளியிடத்தவறவில்லை.

அரச அதிகார முறைமையும் அதனோடிணைந்த சமூக அடுக்க மைவும், "சமூகக் கட்டுப்பாடுகள்" என்ற நடத்தைக் கருவியைத் தோற்று வித்தும் வலுவூட்டியும் வந்தன. மேலாதிக்கத்தையும் அதிகாரத்தை யும் தக்கவைப்பதற்கு அவை உளவியல் நிலையிலும், சமூக நிலை யிலும் பலம் மிக்க கருவிகளாகின்றன. உள்ளத் தைப் பணிவுள்ளமாகவும், உடலைப் பணிவுடலாகவும் (DOCILE BODY) அவை மாற்றியமைக் கின்றன. கட்டுப்பாடுகள் தர்மம் என்றும் அரச நீதியென்றும், அதற்கும் மேலாக இறைவனால் அருளப்பட்டவை யென்றும் இந்திய அறமரபிலே விளக்கப்பட்டது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்றவாறு அரசரையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருதல் வள்ளு வத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. பிளவுண்ட சமூகத்தினை உயர் நிலையிலே கட்டுப்பாட்டினை மொழி யும் வள்ளுவம் சாதாரண மனிதருக் குரிய கட்டுப்பாடுகளையும் மொழிதல் "இருதள" ஆக்கத்தைப் புலப்படுத்து கின்றது. மேலாதிக்கத்தின் இயல்பை ஆழ்ந்து தரிசித்த வள்ளுவர் அதனை நிராகரிக்கும் கருத்துவினைப்பாட்டை முன்னெடுத்து "இருவேறு உலகத்தின்" இயல்பு பற்றிய எண்ணக்கருவை முன்வைத்தார். (குறள், 374)

அதேவேளை கட்டுப்பாடுகளைத் திருக்குறள் பல்வேறு எண்ணக் கருக்களாற் சுட்டுகின்றது. சில எடுத்துக் காட்டுக்கள் வருமாறு:

(அ) பழி அஞ்சல் - (44)
(ஆ) தற்காத்தல் - (56)
(இ) நிறைகாத்தல் - (57)
(ஈ) ஒட்ட ஒழுகல் - (140)
(உ) கொண்டொழுகல் - (974)

இவ்வாறாகக் கட்டுப்பாடுகளைப் பெருந் தளத்தில் விளக்கும் குறள் சமூக அந்தஸ்து நிலைக்கேற்றவாறு



மாறுபடும் நடப்பியலையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இல்லறத் தார்க்கு, துறவறத்தார்க்கு, அமைச் சர்க்கு, அரசர்க்கு என்ற அந்தஸ்து நிலையிலே கட்டுப்பாடுகள் வேறுபடு கின்றன. பெருந்தளத்துக்கட்டுப்பாடுகள், அனைவருக்கும் பொதுவானவை. நுண்ணியதளக் கட்டுப்பாடுகள் சமூக அந்தஸ்துக்கு உரியவை. நேரடி வன்முறையை மனித மனங்கள் தழுவி இயல்பான கட்டுப்பாடுகளாக மாற்றுத வதற்கு அவை துணை நிற்கின்றன.

கட்டுப்பாடுகள் மேலும் நீட்சி அடையும் பொழுது அறம்/மறம் என்பவற்றை அடியொற்றி நல்லோர், தீயோர் என்று மனிதரை அடையாளப் படுத்தும் வகைமையும் தோற்றம் பெறுகின்றது.

தாம் வாழ்ந்த சமூகத்தின் இயல்பையும், அச்சமூகத்தின் மேலோங்கிய கருத்தியலையும் நேர் விளக்கமாகக் காட்டும் புறவய அறிகை வள்ளுவரிடத்து மேலோங்கியுள்ளது. சமூக மேலாதிக்க வடிவத்தை கருத்து வினைப்பாட்டுக்கு உட்படுத்திய தொல் சீர் ஆக்கங்களிலே திருக்குறள் தனித்துவமானது.

நோக்கியவை:

ஆய்வு நூல்கள்:

இராமகிருஷ்ணன், எஸ் (1990) திருக்குறள் - ஒரு சமுதாயப் பார்வை, சென்னை, என்.சி.பி.எச்.

மோகனராசு, கு(1981) திருக்குறளில் மரபுகள், சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம்

மூலநூல்:

திருக்குறள் - பரிமேலழகர் உரை, சென்னை பழனியப்பா பிரதர்ஸ்

ஆங்கில ஆய்வுநூல்கள்:

FOCAULT, MICHEL, (1974) THE ARCEOLOGY OF KNOWLEDGE,

TAISTOCK KARL MARX (1970) COLLECTED WORKS, MOSCOW. PROGRESS PUBLISHERS.

GLENN WARD (2003) POST MODERNISM, MCGRAW - HALL.

✸✸

குறள் பற்றிக் கேட்ட அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோடு)
உருத்தகு நற்பலகை ஒக்க-இருக்க
உருத்திர சன்மர் எனஉரைத்து வானில்
ஒருக்கஓ என்றதுஓர் சொல்





திருக்குறளில் இரு தாய்மார்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

செம்மொழியாம் தமிழ்மொழியிலே தோன்றிய இலக்கியங்களில் திருக்குறள் தனிச்சிறப்புடைய பனுவல் ஆகும். 1330 குறட்பாக்களிலே பன்னி உரைக்கப்பட்ட கருத்துகள் எக்காலத்திற்கும் உரியனவாக உள்ளன. இது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று சிறப்பான வாழ்வியல் தளங்களை மனிதர்க்கு நன்கு விளக்கும் ஒரு தொகுப்பாகும். இப்பனுவலை இயற்றிய வள்ளுவர் காலத்தின் தேவையை உணர்ந்து நன்கு செயற்பட்டுள்ளார். ஈரடி வெண்பா அமைப்பில் கருத்துகளை உள்ளுறுத்திய அவரது நுண்மாண் நுழைபுலம் எல்லோரும் தெளிவாய் அறிய வேண்டியது.

திருக்குறள் பற்றிய தெளிவும் விளக்கமும் கடந்த காலங்களில் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளன. பல உரைவிளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. எனினும் தற்காலத்தில் குறளின் பொருளில் புதுமை காணப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஈரடிகளிலே கூறப்பட்ட கருத்து காலத்திற்கேற்ற வகையில் துலக்கப்பட வேண்டியுளது. உரையாசிரியர் கூறிய விளக்கங்களுக்கு மேலாக, தொழில்நுட்ப ஆற்றலோடு வளரும் இளந்தலைமுறையினர் உள்ளத்திலே பதியும் வண்ணம் கவினுரைகள் தேவைப்படுகின்றன. மனப்பதிவை விட்டுக் கணினிப் பதிவில் ஆழ்ந்திருப்போரையும் கவரக்கூடிய ஆழமான ஒரு பொருள் விளக்கம் இன்று இன்றியமையாதது.

அந்த வகையில் ஒரு குறள் வெண்பாவின் கருத்தாழத்தைப் புலப்படுத்திக் காட்டுவதே இச்சிறிய எழுத்துருவின் நோக்கமாகும். அறத்துப்பால் என்னும் பிரிவில் அமைந்துள்ள அன்புடைமை என்னும் அதிகாரத்தில் ஒரு குறள் எடுத்துக்காட்டாக விளக்கப் படவுள்ளது.

அன்பீனும் ஆர்வ முடைமை -
அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.
(குறள்:74)

இக்குறளுக்குப் பொதுவாக வரும் மாறு ஒரு தெளிவுரை தரப்பட்டுள்ளது.

"அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் பண்பை நல்கும்.

அஃது எல்லோரிடத்திலும் நட்பு எனப்படும் அளவு கடந்த சிறப்பையும் தரும்."

ஆனால் வள்ளுவர் குறள் வெண்பாவிலே பயன்படுத்திய சொற்களின் ஆழமான பொருள், மேற்காட்டிய தெளிவுரையில் நன்கு புலப்படுத்தப்படவில்லை. குறளின் அமைப்பு சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் கொண்டது. வள்ளுவர் இக்குறளில் பயன்படுத்தியுள்ள சொற்களின்



கட்டமைப்பு மிகவும் சிறப்பாக உள்ளது. கூறவந்த கருத்தைக் கற்போர் மனதிலே நன்கு பதிய வைப்பதற்கு ஏற்ற சொற்களை வள்ளுவர் தெரிவு செய்துள்ளார். அவர் பயன்படுத்தியுள்ள 'ஈனும்' என்னும் சொல் இரு விடயங்களை இணைத்துக் காட்டும் சிறப்புச் சொல்லாக இருமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒரு குணவியல்பிலிருந்து இன்னொரு குணவியல்பு தோன்றும் முறைமையை வெகு நுட்பமாக 'ஈனும்' என்னும் சொல்லின் மூலம் விளக்கியுள்ளார்.

'அன்பு' என்னும் தாய் ஆர்வம் என்னும் குழந்தையை ஈன்றெடுக்கின்றாள். ஆர்வம் தாயாகி நட்பு என்னும் குழந்தையை ஈன்றெடுக்கின்றாள். அன்பும் ஆர்வமும் நட்பு என்னும் சிறப்பான குணவியல்பை உருவாக்கும் என்ற கருத்தை விளக்க வந்த வள்ளுவர் அதனை எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் விளக்கியுள்ளார். ஒன்றிலிருந்து இன்னொன்று உருவாகி வருவதை எல்லோரும் அறிவர். அதே போலவே மனித விழுமியங்களும் ஒன்றிலிருந்து இன்னொன்று தோன்றி வளர்வதையே வள்ளுவர் கூறியுள்ளார்.


இவ்வாறு இருதாயர்களின் பண்பு நிலையாகக் கருத்தை எடுத்துரைக்கும் பாங்கு பண்டைத் தமிழிலக்கியமான புறநானூற்றுப் பாடல் ஒன்றினை ஒட்டியுள்ளது. 'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே' எனப் புற நானூற்றுப் பாடலில் பயன்படுத்தப்பட்ட பெண்மொழியமைப்பையே வள்ளுவரும் எடுத்தாண்டுள்ளார். இக்குறளில் 'ஈனும்' என்ற சொல் இத்தகைய நிலையில் சிறப்பாக அமைந்துள்ளது.

அன்பு, ஆர்வம், நட்பு என்னும் மூன்று குணவியல்புகளும் ஒருவரிடத்தில் எவ்வாறு இணையும் என்பதை வள்ளுவர் விளக்கும்போது தாய்மைப் பேற்றின் நிலையாக வைத்து விளக்கியுள்ளமை தனித்துவமாகவுள்ளது. 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில் 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயைக்' காட்டியுள்ளார். அங்கு உலகியல் நிலையில் விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால் இங்கு உருவக நிலையில் விளக்கம் கூறப்பட்டுள்ளது. ஒரு தலைமுறைக் கையளிப்புப்போல மனித குணங்களை அவற்றின் தோற்ற நிலையை வள்ளுவர் தெளிவாக இக்குறளில் விளக்கியுள்ளார்.

உலகத்து மக்களின் உள்ளத்தில் அன்பு என்னும்குணம் நிலை பெற்றிருக்குமாயின் அது நட்பு என்னும் இணைப்பை ஏற்படுத்தும். இந்த இணைப்பு நிலை இயற்கையாக அமைய வேண்டும். அதனை எடுத்து உரைக்கவே வள்ளுவர் 'ஈனும்' என்னும் இயற்கையான செயற்பாட்டின் முலம் இதனை விளக்க முனைந்துள்ளார். மூன்று தலைமுறைகளின் தொடர்பால் மனித வாழ்வு இணைந்திருப்பது போல அன்பு, ஆர்வம், நட்பு என்னும் மூன்று குணவியல்புகளும் மனிதனில் இணைந்திருக்கவேண்டும் என்பதே இக்குறளின் ஆழ்ந்த பொருளாகும்.

✱✱





உ

சிவமயம்

வள்ளுவ நெறியும் பரிமேலழகர் உரைத்திறனும்

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

உலகின் உய்வுக்காக உதித்த நூல் திருக்குறள்.
அந்தரத்தில் இயங்கும் இவ்வுலகின் நிலைத்தல் தன்மை,
யாராலும் உறுதிப்படுத்த முடியாதவொன்று.
ஆயிரமாய் விரிந்த அண்டங்கள் நிறைந்த பால் வெளியில்,
அவ்வண்டங்களின் ஒழுங்கமைந்த இயக்கமே,
அவற்றின் நிலைத்தல் தன்மைக்குக் காரணம் ஆகின்றது.
அவ்வண்டங்கள் இயங்கும் ஒழுங்கு சற்றேனும் மாறுபடுமேல்.....
அடுத்த வினாடியே அவை ஒன்றுடன் ஒன்று மோதி சிதைந்து அழிவுறும்.
ஒன்றுடன் ஒன்று மோதி சிதைவுறாத அவ்வொழுங்கு அமைந்தது எங்ஙனம்?.
அவ்வொழுங்கு காரியமாயின் அக் காரியத்தின் காரணமாக இருப்பது யாது?
அறிவற்ற சடப்பொருட்களாய் இருக்கும் இவ்வண்டங்களில் காணப்படும்
அவ்வொழுங்கமைப்பு,
அவற்றினாலேயே விளைதல் சாத்தியம் அன்றாம்.
பின் அச்சடப்பொருட்களின் ஒழுங்கு நிலைக்குக் காரணம் யாது?
அறிவுலகத்தை ஆட்டிப்படைக்கும் கேள்வி இது.

✷✷ ✷✷ ✷✷

இக் கேள்விக்கு விடை காணப் புகுந்த மெய்ஞ்ஞானிகள்,
அவ்வொழுங்கின் காரணத்தை **"இறை"** என்றனர்.
விஞ்ஞானிகளோ அவ்வொழுங்கின் காரணத்தை **"இயற்கை"** என்றனர்.
மெய்ஞ்ஞானிகள் கண்ட **"இறைப் பொருள்"**,
மனம், வாக்குக்கு அப்பாற்பட்டு,
அறிவாராய்ச்சியைக் கடந்து **"ஒத்துக்கொள்ளப்படும்"** ஒன்றாகவே அமைந்தது.
விஞ்ஞானிகள் கண்ட அவ் **"இயற்கையும்"**,
அதேபோல் கேள்விகளுக்கும், விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டு,
சிந்தனை கடந்து **"ஒத்துக்கொள்ளப்படும்"** ஒன்றாகவே ஆயிற்று.
மொத்தத்தில் மெய்ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும் வேறு வேறு பெயர்களிட்டு
அழைக்கப்பட்ட போதிலும்,



அவ்விருவர் பார்வையிலும் இயற்கை ஒழுங்கின் அடிப்படை அறிவைக் கடந்ததேயாம்!
காரணம் அறிவாராய்ச்சிக்கு உட்பட மறுத்தாலும்,
காரியமாகி காணப்படும் ஒழுங்கே இவ்வுலகின் நிலைத்தற் தன்மைக்கு அடிப்படை.
அங்ஙனமாய், இவ்வுலகில் இயல்பாயமைந்து தொடரும் ஒழுங்கினையே,
ஒழுக்கம் என்றனர் நம் ஆன்றோர்.

✷✷ ✷✷ ✷✷

இவ்வண்ட இயக்கத்தில் மாத்திரமன்றி,
இவ்வுலகில் அமைந்த அத்தனை பொருட்களின் இயக்கத்திலும்....
இயல்பாய் அமைந்த இவ்வகையான ஓர் ஒழுங்குண்டு.
அவ்வொழுங்கே அவ்வப் பொருட்களின் ஒழுக்கமாம்.
அவ்வொழுக்கத்துக்கு உட்படும் வரை அப்பொருள்கள்,
இவ்வண்டங்கள் நிலைக்குமாற்போல் இயல்பாய் நிலைத்தலும்,
அவ்வொழுக்கம் மாறுபடும் போது,
அதன் காரணமாகவே அப் பொருள்கள் சிதைவுற்று அழிவடைவதும் கண்கூடு.
இவ்வுலகப் பொருட்கள் அறிவுப்பொருள், அறிவில்பொருள் என இருவகைப்படும்.
அறிவற்ற சடப் பொருட்கள், இயற்கை ஒழுங்கினை மீறக் காரணமில்லை.
ஓரறிவிலிருந்து ஆறறிவு வரை விருத்தி பெற்ற உயிர்ப் பொருட்களுள்,
ஐந்து அறிவு வரை மட்டுமே ஆற்றல் பெற்ற ஜீவராசிகள்,
மனம் எனும் சூக்குமக் கருவி வளர்ச்சியுறாமையால்,
தாமாய்ச் சிந்தித்து இயங்கும் தன்மையை பெரும்பாலும் பெறுவதில்லை.
ஆதலால் அவையும் அவ்வொழுங்கினை மீறுதல் இல்லையாம்.
மனம் எனும் சூக்குமக்கருவியின் இயக்கத்தை முழுமையாய்ப் பெற்று,
சிந்திக்கும் திறன் கொண்ட மனிதனே,
இயற்கையை அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையையும்,
மாறுபட்டு திரியும் இயல்பினையும் பெறுகிறான்.
சிந்தித்ததால் பெற்ற சீரிய தெளிவு அவனது ஒழுக்கமாக,
புலன் வயப்பட்டு அச்சிந்தனையில் ஏற்படும் ஐயமும், திரிபும் அவனது
ஒழுங்கின்மையானது.
இதனால் ஒழுக்கம், ஒழுக்கவீனம் எனும் இவையிரண்டும்,
மனித வர்க்கத்துக்கேயுரிய இயல்புகளாயின.
அக்காரணத்தால்,
தம் இயல்பால் தாமே உயர்தலும், தாழ்தலும் மனித வரலாறாயிற்று.

✷✷ ✷✷ ✷✷



இவ் வரலாற்றை ஊன்றிக் கவனித்த நம் ஆன்றோர்கள்,
உயர்தல், தாழ்தல் ஆகியவற்றின் காரணம் ஆராய்ந்து,
உயர்வுக்குக் காரணமாகிய ஒழுக்கங்களையும்,
தாழ்வுக்குக் காரணமாகிய ஒழுக்கமீறல்களையும்,
தம் நுண்ணறிவால் கண்டு கொண்டனர்.
அவ்வொழுக்கங்களே மனித வாழ்வின் இயல்பு என அறிந்து,
அதனையே வாழ்வியல் **அறம்** என விதித்து,
அதனைக் கடைப்பிடிக்க வலியுறுத்தினர்.
ஒழுக்கமீறல்கள் இயல்பு நிலையின் மாறுபட்டு அழிவுக்குக் காரணமாதல் அறிந்து,
அவற்றை **மறம்** என வகுத்துக் கண்டித்தனர்.
மொத்தத்தில் அவ்வான்றோர்களால்.
விதித்தன செய்தலும்,
விலக்கியன ஒழித்தலுமே,
இன்று நாம் பேணும் அறங்களாம்.

✹✹ ✹✹ ✹✹

இயற்கையைத் தெளிவுற ஆராய்ந்து,
பலவாய் விரிந்த அறக்கூறுகளை தொகுத்தும், வகுத்தும்,
இவ்வுலகு உய்யவும், நம்மினம் உய்யவும் தெளிவுறத் தந்தனர்
திருவள்ளுவப்பெருந்தகை.
அவர் தந்த திருக்குறள் தெய்வக்குரலாய்,
அந் நூல் உருப்பெற்ற காலந்தொட்டு நம்மினத்தை நெறிப்படுத்தி வருகின்றது.
இன்று வரை திருக்குறளுக்கு ஒப்பான ஒரு நூல்தானும் உலகெங்கும்
தோன்றவில்லை.
வள்ளுவன் வகுத்த பாதை,
தமிழர் தம் வாழ்வுக்கன்றி தமிழ்ப்புலவர் தம் நூலுக்கும் வரம்பாயிற்று.
தமிழ்ப் புலவர்களுக்குள் வள்ளுவ வரம்பைக் கடந்த, வல்லவர் எவருமிலர்.
உலகின் எப்பகுதியில் வாழ்வோர்க்கும் பொருந்தும் வண்ணம்,
வள்ளுவன் வகுத்த அறநெறி ஓர் அற்புதமாம்.
அவ் அற்புதத்தை இவ்வவனிக்கு அளிக்க நம்மினம் தவறிவிட்டது.
வள்ளுவத்தை வெறும் மொழி நூலாக்கி முடக்கி விட்டோம்.
உலகனைத்தும் உள்ளடக்கும் அதன் பொருள்திறத்தை.
நாம் உணரவுமில்லை, உலகிற்கு உணர்த்தவுமில்லை.
இவ்வொரு நூல் கொண்டே இவ்வுலகின் அறிவுத்தலைமை ஏற்கும் தகுதியை,
நம் தமிழினம் கொள்ளலாம்.
துரதிஷ்ட வசமாய் நாம் இவ்வுண்மை அறிந்திலேம்.

✹✹ ✹✹ ✹✹



எனினும்,
தமிழுலகில் காலத்திற்குக் காலம்,
தம் நுண்ணறிவால்,
வள்ளுவக் கடலுள் மூழ்கி முத்தெடுக்க முயன்றோர் பலர் தோன்றவே செய்தனர்.
அங்ஙனமாய் முயன்றோரின் அறிவு மிக விரிந்தது.
விரிவும், நுண்மையும் கொண்ட அவ்வறிவுடைப் பெரியோர்கள்
பொருட் தெளிவில் வள்ளுவனின் அறிவு நிலையை அண்மித்த உயர்வு
பெற்றிருந்தும்.
தாம் ஒரு தனி நூற்செய்ய விரும்பினாரிலர்.
அறம் பற்றித் தாம் பெற்றிருந்த விடயத்தறிவோடு.
வள்ளுவனின் நூலுட் புகுந்து,
குறளிலுள்ள ஒவ்வோர் சொல்லிலும், எழுத்திலும்,
அறத்தின் தெளிவு கண்டு அதை வெளிப்படுத்த அவர்கள் முயன்றனர்.
அதுமட்டுமன்றி வள்ளுவன் தன் அதிகாரவைப்பு முறையிலும் அறத்தின் ஆறு
கண்டு அதிசயித்தனர்.
சொல்லினூடு பொருள் தேடும் நம் போன்றோருக்கு வெளிப்படாத பல விடயங்கள்,
பொருட்தெளிவோடு சொல்லுட் புகுந்த அவர்கட்கு புரிந்தது.
அங்ஙனமாய் ஆன்ற தம்மறிவு முழுவதையும் வள்ளுவத்தினுள் செலுத்தி
வாழ் நாள் முழுவதும் அவ்வொரு நூலையே முதல் நூலாகக் கொண்டு,
வள்ளுவத்துக்கு உரை செய்து,
உண்மை உணர்த்தி நின்றோர் பலர்.
தமிழுலகில் மிகப் பலரால் உரை செய்யப்பட்ட புகழும் திருக்குறளுக்கே உரியதாம்.
அங்ஙனமாய் உரை கண்டோரில் முதலிடம் நம் பரிமேலழகருக்கே.

** ** **

இஃது பரிமேலழகருக்குத் தமிழ்தம் அறிவுலகு தந்த தனித் தகுதி.
தமிழர் கற்க வேண்டிய உயர்தர அறிவு நூல்கள் ஆறினை உமாபதி சிவாச்சாரியார்
வகுத்தனர்.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளு பரிமேலழகன் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

உமாபதியார் வகுத்த இவ்வாறு நூல்களுள்,
பரிமேலழகர் உரை தவிர்ந்த ஏனை ஐந்தும் முதல் நூல்களாம்.



அம்முதல் நூல் வரிசையில்,
பரிமேலழகர் செய்த உரை நூலும் இணைக்கப்பட்ட ஒன்றே,
அவர்தம் உரையின் தரத்துக்கு ஒரு சான்றாம்.

✸✸ ✸✸ ✸✸

இன்றைய நம் அறிவுலகம்,
பரிமேலழகர் காட்டும் பொருளை அறியும் திறன் அற்றதோடு மட்டுமன்றி,
அவர் மொழிநடை அறியும், பயிற்சிதானும் அற்றதானது.
ஆதலால் இன்றைய இளைய தலைமுறை,
பரிமேலழகர் துணையோடு வள்ளுவத்துட் புகும் வாய்ப்பற்று நிற்கிறது.
இது தொடருமேல்,
நம் இளைய தலைமுறை மதிப்பிடமுடியாத தலைமுறைச் சொத்தை இழந்து போகும்.
வள்ளுவரோடும், பரிமேலழகரோடும் நம் இளைய தலைமுறையை நட்புறச் செய்வார் யார்?
தக்கார் பலர் இருந்தும் இக் காரியம் செய்யத்தவறியமை நம் தவக்குறைவே!

✸✸ ✸✸ ✸✸

பரிமேலழகர் வட நூல் மரபு பற்றி உரை செய்தனர் என்றும்,
அவ்வுரை தமிழ் மரபுக்கு பொருந்தாது என்றும்,
மொழிப் பற்றால் சிலர் உரைப்பர்.
அது பற்றிச் சில வார்த்தைகள்.
உணர்வு சாராமல் சிந்தித்தலே அறிவின் இலட்சணமாம்.
உலக வரலாற்றை நோக்க,
காலத்துக்குக் காலம் குறித்த சில மொழிகள்,
அறிவின் மொழிகளாய் திகழ்ந்தமை விளங்கும்.
இன்று ஆங்கிலம் அறிவுமொழியாய் விளங்குமாற் போல்,
ஒரு காலத்தில் வடமொழி அறிவுமொழியாகத் திகழ்ந்தது.
இன்று ஆங்கிலக்கலப்பு பிற மொழிகளில் தவிர்க்க முடியாமற் போனது போல்,
அன்று வட மொழி ஆயிற்றாம்.
அன்று இருந்த அவ்வியல்பு நிலை பின்வந்த அரசியல் சூழல்களால் சிதைவுற,
பேதங்கள் உருவாகின.
இன்றைய சூழலில் அறிவுடமை ஆங்கில மொழிக்காக.....
நலிவுற்ற, வடமொழியை எதிர்ப்பார் பலராயினர்.
தமிழின் தனித்துவம் பேண விளைந்த அவர்கள்,

உணர்வு மிகுதியால்,
வடமொழிக் கலப்பினை முற்றாய்க் களைய விளைகின்றனர்.

✸✸ ✸✸ ✸✸


நடுநிலையாகச் சிந்திக்க அச்செயலின் பொருத்தப்பாடின்மை புலனாகும்.
உணர்வு சார்ந்து, தமிழிலிருந்து முற்றாய் வடமொழியைப் பிரிக்க,
தமிழ்மொழி பல அறிவுச் செய்திகளை இழக்கும் நிலை ஏற்படும்.
அங்ஙனமாயின் ஆங்கிலமொழிக் கலப்பையும் ஏற்றல் பொருத்தமோ ? எனின்,
அது பொருந்தாது.
தத்துவங்களாலும், சமயங்களாலும், பண்பாட்டாலும், கலாசாரத்தினாலும்,
வடமொழி பெரும்பாலும் தமிழோடு இனமானது.
ஆங்கிலமோ அற்றன்று.
அது மேற்சொன்ன அனைத்தாலும் வேறுபட்டு நிற்பது.
அதனால் ஆங்கில மொழிக்கலப்பு,
விழுமியங்கள் நிறைந்த தமிழர்தம் வாழ்வியலைச் சிதைக்குமாம்.
எனவே ஆங்கில மொழிக்கலப்பை தவிர்த்தலும், தள்ளலும் அவசியம்.

✸✸ ✸✸ ✸✸

பரிமேலழகர், தன் காலச் சூழல்பற்றி,
சில வடமொழிக் கொள்கைகளை ஏற்று உரை செய்தனர்.
அது காலத்தின் தேவை. அறிவுலகத்தேவையுமாம்.
அவ்வடமொழிக் கொள்கைகள் மனிதகுல மேம்பாடு நோக்கி அமைக்கப்பட்டவை.
உலகளாவிய வள்ளுவர்தம் அறநூலுக்கு,
உரை செய்யப் புகுந்த பரிமேலழகர்,
மொழி மாறுபடினும் அறிவு நோக்கி,
அவ்வடமொழிக் கொள்கையை ஏற்று உரை செய்தனர்.
அங்ஙனம் செய்யத் தவறின்,
குறளினை முற்றாய் விளங்குதல் கடினமாம்.
அஃதுணரின்,
மொழிப் பற்றை நீக்கி,
பரிமேலழகரின்படி வள்ளுவத்தை அறியும் அவசியம் புலனாகும்.
அவ் அவசியம் நோக்கி பரிமேலழகரைப் பின்பற்றியே,
நாம் குறள் நூலுட் புகவேண்டும் என்பது திண்ணம்.

✸✸ ✸✸ ✸✸





வள்ளுவர் கண்ட சங்க இலக்கியம்

புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன் ;

திருக்குறள் 'உலகம் ஒருகுலம்' என உயிர்ப்பாய் ஒலிக்கிறது. அது மனித சமுதாயம் முழுமைக்கும் பொது வான அறநெறிகளைக் கூறுகிறது. பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் போற்று கிறார். திருக்குறள் "ஓதற்கெளிது உணர்தற்கு அரிது". குறள் வெண்பா முதல் அடி நான்கு சீரும் இரண்டாம் அடி மூன்று சீரும் உடையதாய் அமைந்துள்ளது. தமிழ் பண்பாட்டின் சாரமாக இருக்கும் திருக்குறள் அகரத்தில் 'அகரமுதல்' எனத் தொடங்கி 'முயங்கப்பெறின்' என னகரத்தில் நிறைவுறுகிறது. பன்மொழிப் புலமை பெற்று பலநூல் களையும் கற்றுத் தேர்ந்தவர் வான்புகழ் வள்ளுவர். அவர் கற்று உணர்ந்த சீரிய அறநெறிக் கருத்துக்கள் பல திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. உலக இலக்கியங் களிலேயே உயர்இடம் பெற்றுள்ள செம்மொழிச் சங்க இலக்கியக் கருத்துக்கள் திருக்குறளில் பேரிடம் பெற்றுள்ளன. சங்க இலக்கிய விழுமிய உயர் கருத்துக்களை திருக்குறளில் பொலிவு பெறச் செய்த வள்ளுவர் மக்கள் ஒழுக்கத்தை நலிவு பெறச் செய்து தீய பழக்க வழக்கங்களை அழித்து ஒழிக்கவும் தீவிரமாகச் செயற்பட்டார்.

அன்பும் அறனும் வாயிலாக பண்பும் பயனும் பெற்று உலகமக்கள் உயர்நெறி வாழ வழிகாட்டியவர் வள்ளுவப் பெருந்தகை. பொய்யா மொழிப் புலவரின் மெய்ம்மைக் கருத்துக்களை மக்கள் உணர்ந்து பயன் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனார், கம்பராழ்வார் கனிவான காவியங்களைப் படைத் துள்ளனர்.

வள்ளுவப் பெருந்தகை 'வானளவு' உயர்ந்து கடலளவு பரந்து, சர்வதேச மெலாம்அன்பு பூண்ட சீரிய பெரிய நாகரிகப் பண்பாட்டு செம்மொழிச் சங்க இலக்கிய இன்பக் கடலில் மூழ்கி எடுத்த, அறக் கருத்துக்களாகிய முத்துக்களை திருக் குறளில் அழகாகக் கோர்த்துள்ளார். திருக்குறள் முத்துச்சரத்தில் இருந்து எடுத்த முத்துக்களாம் சில அறக்கருத்துக்களை ஈண்டு காணலாம். அவற்றை முழுமையாக விரிக்கின் பெருகும்.

ஒரு பானைசோற்றுக்கு ஒரு சோறுபதம் அல்லவா?

"பசி இல்லாகுக பிணிசேண் நீங்குக
வேந்து பகை தணிக"

- ஐங்குறுநூறு

உறுபசியு மோவாப் பிணியுஞ்
செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு

- திருக்குறள்



"ஐதே காமம்" - குறுந்தொகை

மலரினும் மெல்லிது காமம்
- திருக்குறள்

"நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நந்நயத்
தருளி" - நற்றிணை

நீரின் றமையா துலகெனின்
யார்யார்க்கும்
வானின் றமையா தொழுங்கு
- திருக்குறள்

"முந்தை யிருந்து நட்டோர்
கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்"
- நற்றினை

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர்
நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்
- திருக்குறள்

"அறத்தாறு அன்றென மொழிந்த
தொன்றுபடு" - அகநானூறு

அறத்தா றிதுவென வேண்டா...
- திருக்குறள்

"அஞ்சுவ தஞ்சா அறனிலி
யல்லன்என்
நெஞ்சும் பிணிக்கொண் டவன்"
- கலித்தொகை

அஞ்சுவ தஞ்சாமை பேதமை;
அஞ்சுவது
தஞ்ச லறிவார் தொழில்.
- திருக்குறள்

"ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்
தனளே"
- புறநானூறு

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் -
தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.
- திருக்குறள்

"இல்லது நோக்கி இனிவரவு
கூறாமுன்
அல்லது வெஃகி வினைசெய்வார்"
- பரியாடல்

இலனென்னு மெவ்வ முரையாமை
ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.
- திருக்குறள்

சங்க காலச் சமுதாயத்தைச் செம்மைப்படுத்திய உயர் விழுமியங்களை திருக்குறளாம் உலக இலக்கியத்தில் உயர்வாகப் பேணிய வள்ளுவர் சங்க காலச் சமுதாயத்தைச் சீரழித்த சிறுமைகளைக் கண்டு பொங்கி எழுந்தார். ஒருத்திக்கு ஒருவன் என வாழ்ந்த சமுதாயத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கையில் தளர்ச்சி ஏற்பட்டது. அக்காலத்தில் மகளிரில் ஒரு பகுதியினர் பரத்தையர் சமூகமாக வாழ்ந்தனர். ஒழுக்கமிலா ஆடவர் பரத்தையரிடம் போய் வருவதை சங்க கால அமைப்பு எதிர்க்கவில்லை. மேலும் ஐந்திணை மரபின் மருதத் திணையில் ஆடவர் பரத்தை உறவைப் பாடல்களாகவும் இடம்பெறச் செய்தனர். 'பிறனில் விழையாமை', 'வரைவின் மகளிர்' அதிகாரங்களில் வள்ளுவர் பரத்தையர் உறவைப் புரட்சிகரமாக எதிர்த்தார்.



பிறன்மனை நோக்காத பேராண்மை
சான்றோர்க்
கறனென்றோ ஆன்ற வொழுக்கு.

வள்ளுவர் பிறன் மனை நோக்காப் பேராண்மையை போற்றியும்

பொருட்பெண்டிர் மொய்ம்மை
முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று

பொருட்பெண்டிரிடம் செல்வோரின் இழிவைத் தூற்றியும் ஒழுக்க நெறியை வலியுறுத்துகிறார். மேலும் 'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திரு நீக்கப்பட்டார் தொடர்பு' பரத்தையர் உறவும் கள்ளும் சூதும் மேற்கொண்ட வரை செல்வம் நல்கும் திருமகளும் உறவு கொள்ளாது நீங்கி விடுவாள்.

உட்கப் படாஅ ரொளியிழப்ப -
ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

உண்ணற்க கள்ளை யுணிலுண்க
சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

கள் உண்பவரின் பரிதாப நிலை யைச் சுட்டி, கள் உண்ணாமையை வள்ளுவர் வலியுறுத்துகிறார். பழைய காலத்தில் கள்குடித்தல் அரசன் அரண்மனை முதல் புலவர்களின் இல்லம் வரை பரந்திருந்தது.

அதியமான் நெடுமான் அஞ்சி இறந்த பின் அவன் பிரிவைத் தாங்காது புலம்பும் ஔவையார்.

"சிறியகட் பெறினே யெமக்கீயு
மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்
மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலந்தன்
மன்னே
என்பொடு தடியடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே..."
- புறநானூறு 235

அரசரும் புலவர்களும் கள் அருந்தி புலால் உண்டு பாடல் பாடி மகிழ்ந்ததை ஔவையார் பாடலும் வேறு பல சங்க இலக்கியப் பாடல்களும் சான்று பகர்கின்றன. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் கொண்ட சான் றோரைக் காண விழைந்த வள்ளுவர் புலால் மறுத்தலையும் கொல்லாமை யையும் வலியுறுத்துகிறார்.

தன்னூன் பெருக்கற்குத்
தான்பிறி தூனுண்பான்

எங்ஙனம் ஆளும் அருள். எனப் புலால் மறுத்தலையும் "அறவினை யாதெனில் கொல்லாமை கோறல் பிறவினை எல்லாம் தரும்" எனக் கொல்லாமையையும் கூறி மக்கள் அற வாழ்க்கையை மேற்கொள்ள நெறிப் படுத்துகிறார்.

இரவலர்கள் புரவலர்களிடம் சென்று ஆடியும் பாடியும் தமது கலைத்திறம் காட்டி பரிசில் பெறுவது சங்க காலத்தில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. சிறு பாணாற்றுப் படை, பெரும் பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை குறிஞ்சிப் பாட்டு சங்க இலக்கியங்களில் பரிசில் பெற்ற புலவர் பரிசில்பெறாத வறிய புலவரைத் தாம் பரிசில் பெற்ற



வள்ளலிடம் சென்று பொருட்கள் பெற ஆற்றுப்படுத்துகின்றனர். கொடுப்பாரும் இல்லாத கொள்வாரும் இல்லாத உலகத்தைக் காண விரும்பிய வள்ளுவப் பெருந்தகை இரத்தல் வாழ்க்கையை இல்லாது ஒழிக்கத் துடித்தார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகு இயற்றி யான்" என உலகைப் படைத்தவரையே வள்ளுவர் சீறுகிறார்.

"ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்" கோமாதாவாகப் போற்றும் குலமாதா பசுவிற்காகவும் இரத்தல் இழிவானது என வள்ளுவர் கூறி இரத்தலை இல்லாது செய்யச் சுடுசொற்களால் சாடுகிறார்.

வள்ளுவர் வாய் மொழியை நடை முறைப்படுத்த, மக்களின் நன்னெஞ் சங்களில் திருக்குறளை ஒன்றாகப் பதிக்க, இளங்கோ அடிகள் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைப் படைத் தார். சீத்தலைச் சாத்ததனார் தூய அறநெறி காட்டும் மணிமேகலையை உருவாக்கினார். கல்வியிற் சிறந்த கம்பன் கம்பராமாயணத்தை வள்ளுவர் கருவூலமாகச் செய்தார்.

இளங்கோ அடிகள் பெண்ணடிமை விலங்கை நீக்கவும், பரத்தையர் சமூகத்தை ஒழிக்கவும் கண்ணகி, மாதவி என்ற இரு பெண்கள் வாயி லாகத் தமது முத்தமிழ் காப்பியமாம் சிலப்பதிகாரத்தை வள்ளுவர் குறள் நெறி நின்று இயக்கியுள்ளார்.

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலை"

வள்ளுவர் வாய்மொழியை நிறுவ தம் காப்பியத் தலைவியாகிய கண்ணகியை தமிழ் நாடு எங்கும் கால்நடையாகவே வலம் வரச் செய்தார். பூம்புகாரில் மென்மையான அறக்கற்புடையவளாயும் மதுரையில் பாண்டிய அரசனையே எதிர்த்து வழக்காடும் மறக்கற்புடைய வீரமங் கையாகவும் வஞ்சிமாநகரில் உரை சால் பத்தினியாகவும் கண்ணகி நடந்து செல்கிறாள். இளங்கோவின் காப்பிய நாயகி கற்புக்கடன் பூண்ட பொற்புடைத் தெய்வமாய் ஒரு மாமணியாய் உலகிற்கோங்கிய திரு மாமணியாய் சுடர்விடுகிறாள். சேற்றிலே முளைத்த செந்தாமரை போல பரத்தையர் குலத்திலே உதித்த இளங்கோ கண்ட மாதவி, தம்குல பரத்தையர் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கி குலமாதர் கற்பு நெறியிலும் மேலான சமய நெறி வாழ்க்கையை மேற் கொண்டாள். பொய்யா மொழிப் புலவர் மகளிர், நிறைகாக்கும் பெருந்தக்க பெண்ணாக வாழவேண்டும். சமு தாயத்தில் பரத்தையர் குலம் இல்லாது ஒழிக்க வேண்டும் என, வாயினால் கூறியதை அறநெறி நின்ற சான்றோராகிய இளங்கோ அடிகள் சிலப்பதிகாரக்காப்பியம் மூலம் செயற் படுத்தினார். சமுதாயத்தை சீரழிக்கும் பரத்தையர் குலத்தை வேரோடு கிள்ள இரட்டைக் காப்பி யங்களில் ஒன்றான




மணி மேகலையைச் சீத்தலைச் சாத்தனார் இயக்கிச் செல்கிறார். சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுண்டபின் துறவற வாழ்க்கையை மேற்கொண்ட மாதவி மகள் மணிமேகலையைத் தம் காப்பிய நாயகியாக்கி பௌத்த சமயத்தை பரவச் செய்கிறார். இளம் வயதினளான மணிமேகலை உலக அறங்களைப் பல இடங்களிலும் சென்று கற்றுத் தேர்ந்து சமுதாயத்தின் பூத்த பொய்மைகளை அழிக்கிறாள். பௌத்த சமயத்தின் உயர் பீடத்தில் நின்ற அப்பரத்தையர் குலத்தோன்றல் பேரின்பத்திற்கு வழிகாட்டுகிறது. வள்ளுவர் குறிக்கோளை மணி மேகலை வாயிலாக புரட்சிகரமாகச் சாத்தனார் நிறைவு செய்கிறார்.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய கம்பராமாயண இலக்கியத்தை திரு வள்ளுவரின் குறள்கள் பல இலங்கச் செய்கின்றன. ஒரு சொல், ஒருவில் ஒரு இல் எனப் போற்றப்படும் கம்ப காவியத்தின் தெய்வீகத் தலைவன் இராமர் ஏகபத்தினி விரதராக வாழ்ந்தார். ஒருவன் ஒருத்தியுடனும் ஒருத்தி ஒருவனுடனும் வாழ்வதை காதல் வாழ்க்கை என வள்ளுவர் கூறுவதை இராமரும் சீதையும் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினர். திருக்குறளில் காணப்படும் உயிர் போன்ற உண்மைகள் வாழ்க்கையின் அடிப்படையாகவும் பொதுவாகவும் காணப்படுகின்றன. காலம் மாறினா லும் உண்மைகள் மாறுவதில்லை. திருக்குறள் பெட்டகம் எக்காலமும் நிறைவு தரும் உண்மை உயர் கருத்துக்கள் நிறைந்தது. காலத்திற்குக் காலம் தோன்றும் சான்றோர்களும் அறிஞர்களும் காப்பியங்களையும் நூல்களையும் திருக்குறள் மூலமாகக் கொண்டு ஆயிரக் கணக்கில் படைத்து வருகின்றனர்.

மனித வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் வாயிலாகத் திருவள்ளுவர் வரை யறுத்துக் கூறுகிறார். வாழ்க்கை நெறியின் உடலாகப் பொருளையும், உயிராக அறத்தையும், உணர்வாக இன்பத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்து தேர்ந்து கூறியுள்ளார். திருக்குறளில் அறத்தின் மலர்ச்சி, பொருளின் பூரிப்பு, இன்பத்தின் ஏற்றம் படிப்போர்க்கு நிறைவைக் கொடுக் கிறது. திருக்குறள் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற எந்தக் குறிப்புகளும் இன்றி சாதி சமய இன மொழி நாடு கடந்த பொதுமை அறத்தைப் பாடுகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகம் ஒரு குலமாக வாழ வழிப் படுத்திய நல்லிசைப் புலவர் கணியன் பூங்குன்றனார் கருத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

✸✸





முப்பால்

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

எண்சீர் விருத்தம்

வள்ளுவனார் எழுதிவைத்தார் முப்பால் நூலை
வாழ்க்கைக்கு வேண்டுவன: வழிக்கொண்டாலோ
எள்ளளவும் வாழ்வில்வழி தவற மாட்டோம்
ஏற்புடைத்தாம் இகவாழ்வில் அனைத்துப் பேர்க்கும்
தெள்ளுதமிழ்ச் சொற்கோத்துக் குறள்வெண் பாவில்
சொல்லியவை சொலற்கரிய தத்து வங்கள்
அள்ளஅள்ளக் குறையாத ஞானப் பேழை
அறமுரைக்கத் தமிழிலது போல உண்டோ!

ஒருமுறைவாய் செப்பிடிலோ சிலைமேற் சொல்போல்
உறைந்துவிடும் வாகாக ஈர டிக்குள்
கருத்தள்ளிக் குறுக்கியொரு குவைக்குள் பேராழ்
கடலடைத்து வைத்ததனைப் பாங்கி னோடு
மறுத்தொருசொல் வாய்விளம்பா வாறே வெல்லும்
வார்த்தைகளுக் குயிரூட்டி விளம்பிப் போந்தார்
திருத்தொண்டாம் வள்ளுவனார் மனுக்கு லத்தோர்
தேர்ந்தறிந்து வாழவழி சொல்லும் நூலே

தனிமனித உரிமையின்ப வாழ்வு அஃதின்
துணையாக விளங்குவது பொருளி யல்தான்
அனைத்துக்கும் அடிப்படையாம் அறத்தின் வாழ்வு
அறவாழ்வால் எஞ்சுவதே இன்ப மாகும்
தனந்தேடல் அறவழியி லிருத்தல் வேண்டும்
தூயவின்பம் துய்க்கவழி அஃதொன் றேயாம்
எனுமுயர்ந்த நோக்குணர்ந்தே மனுக்கு லத்தோர்
ஏற்றுவாழும் போதமுரை முப்பால் செய்தார்



சொல்லாத தொன்றில்லை செந்நாப் போதன்
சீரான வாழ்வியலைச் செப்பும் நூலை
தொல்லுலகில் அறந்தழைக்கத் தந்தான் அஃதைச்
சிறப்பாகப் பன்னாமம் கொண்ட ழைப்பர்
ஒல்லுமவை யத்தனையும் திருக்கு றட்கு
ஒவ்வொன்றும் "பொதுமறை"யின் உயர்வே கூறும்
சொல்வார்கள் "பொய்யாமொழி" "தெய்வ நூல்"போல்
"தமிழ்மறை"யென் றின்னும்பல் பெயர்கள் கொண்டே

மனிதருக்குத் தெய்வவுரை வேத மாகும்
மனிதருக்கு மனிதருரை போத மாகும்
தனிமனிதப் போதனையே புத்தர் வாக்குத்
திருக்குறளும் அவ்வாறாம் வேறும் உண்டாம்
அணையாத தீபமென ஊழி மட்டும்
அகிலத்தில் நிலைத்திருக்கும் அவைக்கீ டுண்டோ
மனமொன்றிக் கற்றறிந்தே வாழ்வில் கொண்டால்
மனுவாழ்வு வெற்றிபெறும் மிகையில் கூற்றே

குறள் வெண்பா

அண்ட மனைத்தும் அணுவுள் பொதித்தவகை
கொண்ட தமிழாம் குறள்.

வெண்பா


ஊழி வருமட்டும் ஓர்ந்தறிந்தே மானுடத்தோர்
வாழும் வழிகூறும் வாழ்க்கைநெறி – தோள்பற்றிப்
பாதம் பதிக்கப் பழக்குவபோல் வாழ்வியலை
ஓதிவைத்தார் வள்ளுவனார் ஓம்பு.

கட்டளைக் கலித்துறை

அறம்பொருள் இன்பம் அமைந்தமுப் பாலும் அடியிரண்டுள்
திறம்பட வெண்டளை தப்பாக் குறளாய்க் கடல்புசித்த
குறுமுனி யென்னக் கவிசெய் தனனே கவிப்பெருமான்
அறிந்தது பற்றி அமைத்திடில் வாழ்வு அறவழியே.

✷✷





ஐந்தவித்தான் யார்?

க. இரகுபரன்,
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

திருக்குறளின் 'கடவுள் வாழ்த்தில்' அமைந்துள்ள ஒரு குறளுக்கு, பரிமேலழகர் வகுத்த உரை தொடர்பாக எழும் ஐயப்பாடு குறித்து உசாவுவதாக இக்கட்டுரை அமைகிறது.

வள்ளுவர் எந்தச் சமயத்தவர் என்ற கேள்விக்கு இன்றளவும் தெளிவான விடை இல்லை. தன்னை இன்ன சமயத்தவன் என்று இனங் காட்டுவதில் வள்ளுவர் அதிகம் அக்கறை காட்டாமை அல்லது அவர் சமயங் கடந்த நிலையில் நின்றமை அதற்கான பிரதான காரணமாதல் கூடும்.

எது எவ்வாறாயினும் வள்ளுவரைத் தங்கள் சமயத்தவராக உரிமை பாராட்டுவதில் பல்வேறு சமயத்தவர்களும் முனைப்புக் காட்டியிருக்கிறார்கள்; உரையாசிரியர்கள் தாம்தாம் சார்ந்த சமயபரமாக திருக்குறளுக்கு வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அவ்வகையில், திருக்குறளுக்கு உரை கண்டவர்களுள் தலை சிறந்தவராக மதிக்கப்பெறும் பரிமேலழகர், வைதீக சமய சார்பாகவே உரை செய்தார். ஆனால்,

பொறிவாயில் ஐந்தவித்தான்
பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்ற குறளுக்கு பரிமேலழகர் எழுதிய உரை அவர் சார்ந்த வைதீக சமயத்தின் கடவுட்கோட்பாட்டுக்குப் பொருந்துவதா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அவ்வுரை வருமாறு:

"பொறிவாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்துவாவினையும் அறுத்தானது; **பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்** - மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார்; **நீடு வாழ்வார்** - பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார் என்ற வாறு.

புலன்கள் ஐந்தாகலான் அவற்றின் கண் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தானாற் சொல்லப் பட்டமையின் ஆண்டை ஆறனுருவு செய்யுட் கிழமைக்கண் வந்தது; கபிலரது பாட்டு என்பது போல.

இவை நான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவர் என்பது கூறப்பட்டது."

இவ்வுரையில் **பொறிவாயில் ஐந்தவித்தான்** என்ற தொடருக்கு



பரிமேலழகர் **பொறிகளை வழியாக வுடைய ஐந்து அவாவினையும் அறுத்தான்** என்று உரை வகுப்பது சமணம், பௌத்தம் ஆகிய அவைதீக நெறிகளுக்குப் பொருத்துவதாகலாம்; ஏனெனில் அவைதீக தத்துவங்களான சமண பௌத்தத்தில் கடவுளைப் பற்றிக் கூறவில்லை; பந்தங்களினின்றும் விடுபட்டு முத்திநிலை அடைந்த உயிரே கடவுள் என்பது சமணக் கோட்பாடு. ஆனால் வைதீக நெறிகளுக்கு இது பொருந்துவதாகாது. ஏனெனில் வைதீகக் கோட்பாட்டின்படி இறைவன் அவா வினை அறுத்தவன் அல்லன்; அவன் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன். இறைவன் அவாவினைச் செயற்கையாக அறுத்தவன் அல்லன்.

திருக்குறள் 'கடவுள் வாழ்த்தில்' ஒன்பதாவதாய் அமையும்,

கோளில் பொறியில் குணமிலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

என்னும் குறளில் வள்ளுவர், கடவுளை 'எண்குணத்தான்' என்றார். அக்குறளின் உரையில் எண்குணங்கள் எவை என விளக்கமுற்பட்ட பரிமேலழகர்,

"எண்குணங்களாவன; தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்று முணர்தல், **இயல்பாகவே பாசங்களினீங்குதல்,** பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்ப முடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது."

என்கிறார். ஆகையால் **பொறிவாயில் ஐந்தவித்தான்** என்பதற்கு **பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவினையும் அறுத்தான்** என்று பொருள் கொண்டு ஐந்தவித்தலாகிய காரியத்தைக் கடவுள்மேல் ஏற்றுவது வைதீக பரமாக உரை எழுத முற்பட்ட பரிமேலழகருக்குப் பொருந்துவதாகாது. இதை உணர்ந்தே திருக்குறள் பரிமேலழகர் உரைக்குக் குறிப்புரை எழுதிய வை.மு.சடகோப ராமானுஜாசார்ய ஸ்வாமிகள் 'ஐந்தவித்தான்' என்பது 'இயற்கையைச் சொன்னது' என்ற குறிப்பெழுதினார்.

இவ்விடத்தில் தொல்காப்பியர் தரும்,
"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்"
"செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்"
என்னும் இலக்கணக் குறிப்புகளும் கருதத்தக்கன.

இவ்வாறான நிலையில் **பொறி வாயில் ஐந்தவித்தான்** என்ற தொடருக்கு வைதீக பரமாகப் பொருள் கொள்ள முடியாதா என்ற கேள்வி பிறக்கிறது. மேற்படி குறளுக்கு ஏனைய உரையாசிரியர்கள் எழுதிய உரைகளுள் பொருத்தமான விளக்கத்தைக் கண்டு கொள்ள முடியுமா என்று ஆராய்வது உசிதமானது. அவ்வுரைகள் வருமாறு:

மணக்குடவர் :- மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு, சுவை, ஒளி,



நாற்றம், ஓசை என்னும் ஐந்தின் கண்ணும் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினானது பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றாரன்றே நெடிது வாழ்வார் எ-று.

இது, சாவில்லையென்றது.

பரிதியார் :- சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்கிற பொறியை வழியாக வுடையவற்றிற்கு மனசைப் போக்காமல் காக்கவல்லார் இகபரம் இரண்டிலும் நெறிநின்று அநேககாலம் வாழ்வர் என்றவாறு.

காலிங்கர் :- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்புலன் களை நுகர்தற்கு வழிக்கருவியாகிய மெய் வாய் கண் மூக்கு செவி என்கிற ஐம்பொறிகளையும் அகத்தடக்கி இறைவனது உபதேச முறைமை யாகின்ற நல்லொழுக்கத்தின்கண் வழிப்பட்டு நின்றவர் முத்தராவர் என்றவாறு.

தாமத்தர் :- உடம்பு, வாய், கண், காது, மூக்கு என்று சொல்லப்பட்ட ஐந்து பொறிகளை வழியாக உடைய ஐந்து ஆசைகளையும் அறுத்தவன் சொன்ன குற்றமில்லாத நேர் நெறியிலே, வழுவாமல் நடந்தவர்கள், ஒரு காலமும் அழிவில்லாமல் இருக்கின்ற மோட்சத்திலே எக்காலமும் வாழ்வார்கள்.

நச்சர் :- ஐம்பொறிகளின் வழியாக நுகரப்படும் ஐம்புலன்களையும் வென்றானது பொய் நீங்கிய ஒழுக்க நெறியில் நின்றார், இகத்திலும் பரத்திலும் நெடுங்காலம் வாழ்வர்.

தருமர் :- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்புலன் கொள்ளுதற்கு வழிக்கருவியாய மெய், வாய், கண், மூக்கு, செவி என்கின்ற ஐம்பொறிகளையும் அகத்தடக்கிய இறைவனது உபதேச முறைமையா கின்ற நல்லொழுக்கத்தின் கண் வழிப் பட்டு நின்றவர் முத்தராய் நெடுங்காலம் வாழ்வர்.

மேற்படி உரைகளுள் காலிங் கருடைய உரை பரிமேலழகருடைய உரையிலுள்ள முரண்பாட்டினின்றும் விடுபட்டதாகவும் வைதீக மரபுக்குப் பொருந்துவதாகவும் உள்ளதை அவதானிக்க முடிகிறது. அவ்வுரையில் பொறிவாயில் ஐந்தினையும் அடக்குத லாகிய காரியம் இறைவனுடையதாய் அல்லாமல் அடியாருடையதாகக் குறிப்பிடப்படுகின்றமை கருதத்தக்கது. அதாவது ஒருவன் ஐம்பொறிகளையும் அடக்கி நல்லொழுக்க நெறியின் கண் நின்றால் முத்திப்பேற்றினை அடைய லாம் என்னும் உண்மையை உரைப் பதாக அமைகிறது. ஆனால் இக்கருத்து மேற்படி குறளின் தொடரமைப்புக்கு (வாக்கிய அமைப்புக்கு) ஏற்றதாக உள்ளதா - இலக்கண ரீதியாக ஏற்புடையதாய் உள்ளதா என்ற கேள்வி பிறக்கிறது.

பரிமேலழகர் 'ஐந்தவித்தான்' என்ற சொல்லின் இறுதியில் உள்ள 'ஆன்' என்பதை ஆண்பால் விகுதியாகக் கொண்டே தம்முடைய உரையை வகுத்தார் என்பது வெளிப்படை. ஆகையால் இலக்கண ரீதியாக எந்தச்



சிக்கலும் பரிமேலழகர் உரையில் இல்லை. ஆனால், காலிங்கர் 'ஐந்தவித்தான்' என்பதிலுள்ள 'ஆன்' என்ற உறுப்பை எவ்வாறு கொண்டார் என்பதை அறிந்து கொள்வதற்கு எத்தகைய இலக்கணக் குறிப்பையும் அவர் தரவில்லை. ஆகையால் அவருடைய உரையை இலக்கண ரீதியாக ஏற்புடையதாகக் கொள்வதற்கு உரிய வழிவகையை நாமே கண்டறிய வேண்டியுள்ளது. அவ்வகையில், 'ஐந்தவித்தான்' என்பதிலுள்ள 'ஆன்' பொருளற்ற அசைச்சொல் என்று அமைதி காணலாம். அல்லது 'ஆன்' மூன்றாம் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் உருபு என்று கொள்ளலாம். 'ஐந்தவித்தல்' என்னும் தொழிற்பெயர் செய்யுள் விகாரம் உற்றது எனலாம். வள்ளுவர் ஆன், ஆல் உருபுகளை உடனிகழ்ச்சிப் பொருளில் பல இடத்தும் கையாண்டுள்ளார். உதாரணங்கள் சில:

அறத்தான் வருவதே யின்பமற்
றெல்லாம்
புறத்த; புகழு மில.

(அறத்தான் வருவதே இன்பம் - **அறத்தோடு** வருவதே இன்பம்)

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத்
தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

(இன்சொலால் ஈத்தளிக்க வல்லார் - **இனிய சொல்லுடனே** ஈதலைச் செய்து அளிக்கவல்லார்)

ஆகவே 'பொறிவாயில் ஐந்தினை அவித்து இறைவனால் அருளப்பட்டதான மெய்ந்நெறியில் நின்றால் முத்தி அடையலாம்' அல்லது 'பொறிவாயில் ஐந்தினை அவித்தலோடு இறைவனால் அருளப்பட்டதான மெய்ந்நெறியிலும் நின்றால் முத்தியடையலாம்' என்று மேற்படி குறளுக்கு உரை கொள்வதே பரிமேலழகர் சார்ந்த வைதீக மரபுக்குப் பொருந்துவதாகும்.

ஐந்தவித்தலாகிய தொழில் கடவுளுக்கு உரியதல்ல; கடவுளை அடைய முயலும் அடியார்களுக்கே உரியது. வள்ளுவர் கருத்தும் இதுவே என்பதற்கு 'நீத்தார் பெருமை' கூறும்,


ஐந்தவித்தான் ஆற்றல்
அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

என்னும் குறளே பொருத்தமான கரி (சான்று).

✷✷

நாமகள்

நாடா முதல்நான் மறைநான் முகன்நாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன் - கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதுஎன் வாக்கு



திருக்குறள் ஓர் ஆன்மீக நூலா?

தமிழ்மணி அகளங்கன்

இன்று உயர்தனிச் செம்மொழி யாகப் போற்றப்படுகின்ற எமது தாய் மொழியாம் தமிழ் மொழியில், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட இலக்கியங்கள் இன்றும் உயிர்ப் போடு விளங்குவதைப் பார்த்து இறும்பூதெய்துகிறோம்.

எமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் இலக்கிய நூல்களாகிய பாட்டு நூல்கள் பத்தும், தொகை நூல்கள் எட்டும் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தன என்று இன்று பரவலாகச் சில தமிழறிஞர்கள் கருதுகிறார்கள்.

திருக்குறளையும் கிறிஸ்துவுக்கு முந்திய நூலாகத் தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். திருவள்ளுவர் ஆண்டைக் கிறிஸ்துவுக்கு முந்திய தாகக் கொண்டாடவும் தொடங்கிவிட்டனர்.

எமது, சங்க இலக்கிய நூல்களாகிய பழைய நூல்களிலே அகம், புறம் என்ற இரண்டு பாடு பொருள்கள் முக்கியத் துவம் பெற்றாலும், ஆன்மீகம் புறக் கணிக்கப்படவில்லை. இருப்பினும் புறத்திணைக்குள்ளே தான் ஆன்மீகம் அடக்கப்பட்டது.

பத்துப் பாட்டு நூல்களுள் தலையாய நூலாகவும், முதல் நூலாக வும் விளங்கும் திருமுருகாற்றுப் படையை புறத்திணைக்குள் புகுத்திப் பார்த்ததை விட தனியாக ஆன்மீகத்திணை என்ற ஒரு புதிய பாகுபாட்டிற்குள் அடக்கியிருக்கலாமோ என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

எட்டுத் தொகை நூல்களில் பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றில் கடவுளர் கள் சார்ந்த சில பாடல் இடம் பெற்றி ருப்பினும் அவை ஆன்மீகம் சார்ந்த வையாக கருதப்படுவதில்லை. கருதப் பட வேண்டியவையாகவும் அவை இல்லை.

திருக்குறளையும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுக்குள் அடக்கியதைத் தவிர்த்து ஆன்மீகத்திற்குள் அடக்கியி ருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல் களுள் தலையாய நூலாக விளங்கு கின்ற திருக்குறளை, அறநூல்களில் ஒன்றாகத் தனிப்பிரிவுக்குள் அடக்கு வதை விட ஆன்மீகத்துக்குள் அடக்கு வது மிகவும் பொருத்தமானது போல் தெரிகிறது.

தேவை கருதி அல்லது நோக்கம் கருதி நூல்களை மறுவாசிப்புச் செய்யும் பொழுது இத்தகைய சிந்தனைகள் எழுவது இயற்கையே.

திருக்குறளின் அதிகார வைப்பு முறையைச் சீர் செய்ய வேண்டும் என்றும் திருக்குறட்பாக்களை அதிகாரம் மாற்றி மீள் ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும் கவியரசு



கண்ணதாசன் குறிப்பிட்டமை சரியான சிந்தனை தானோ என்று எண்ணிப் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

ஆன்மீகம் - உலகியல்:

ஆன்மீக நூல்கள், உலகியல் நூல்கள் என்று நூல்களைப் பாகுபடுத்தும் போது, உலகியல் நூல்களாகச் சொல்லப்பட்ட சில நூல்கள் ஆன்மீக நூல்களாக உணரப்படுவதிலும் உண்மை இல்லாமலில்லை. திருக்கோவையாரை எந்த வகைக்குள்ளும் பொருத்திப் பார்க்கலாம் அல்லவா.

அறநூல்கள் உலகியல் நூல்களா ஆன்மீக நூல்களா என்று வாதிட முயன்றால் முடிவில்லாமல் தொடரும். அறத்தின் நோக்கம் உலகியலும் தான், ஆன்மீகமும் தான், என்று முடிவு வழங்கினாலும் அறத்தின் இறுதி இலக்கு ஆன்மீகமே என்பதை உணராமல் இருக்க முடியவில்லை.

"தமிழிலக்கியம் பெருமளவுக்கு சமய இலக்கியங்களை அல்லது ஆன்மீக இலக்கியங்களையே கொண்டுள்ளது" என்ற கூற்று பெரும் பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சமயம் சாராத அல்லது ஆன்மீகம் சாராத இலக்கியங்கள் தமிழில் போற்றப்படுவது குறைவு என்றே கூறலாம். ஏனெனில் படைப்பாளிகள் பெருமளவுக்குச் சமயம் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். படைப்பாளிகளை ஊக்குவிப்பவர்களும் பெரும் பாலும் சமயம் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். படைப்புக்களை அறிமுகம் செய்து பரப்பியவர்களும் பெரும்பாலும் சமயம் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள்.

சமயம் தான் சமூகத்தை ஒழுங்கு படுத்துவதில் தலையாய பாத்திரத்தை வகித்தது. "அரசனுக்கு மதம் தேவையில்லை. ஆனால் மக்களை அடக்கி ஆள்வதற்கு அரசுக்கு மதம் தேவைப் படுகிறது" என்ற மாக்கிய வல்லியின் அரசியல் தத்துவம் முடியாட்சிக் காலத்தில் முக்கிய தத்துவமாக விளங்கியது.

எனவே மன்னர்கள், பெரும்பான்மை மக்கள் கடைப்பிடித்த சமயத்தை தாங்களும் கடைப்பிடித்து, தாம் கடைப்பிடித்த சமயத்தை வளர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள்.

இஸ்லாமிய மொகலாய மன்னனான அக்பர், தனது இராச்சியத்தில் இருந்த பெரும்பான்மை இந்துக்களைத் திருப்திப்படுத்துவதற் காகத் தன் சமயத்துக்கு மாறான இந்து சமயச் சார்பான காரியங்களை செய்திருக்கிறான். இஸ்லாமிய மதவாதிகள் அவனது போக்கைக் கண்டித்த போது இந்து இஸ்லாம் கலப்புச் சமயமாக "தீன் இலாகி" என்ற கோட்பாட்டோடு ஒரு புதுச்சமயத்தையே உருவாக்க முனைந்தான். சீக்கியர்களை ஆதரித்தான். தான் மொகலாயன் (அந்நியன்) இல்லை இந்தியன் என்று முழங்கினான். தன் அரண்மனையிலேயே தனது இந்து மனைவியாகிய ஜோதிபாய் விக்கிரக வழிபாடுசெய்ய அனுமதியளித்தான் என்பதெல்லாம் பிற்கால வரலாறுகள்.



இந்துவாகிய பல்லவமன்னன் மக்கள் சமணத்துக்கு மாறியபோது தானும் சமணத்துக்கு மாறினான். சிம்மவிஷ்ணு என்ற அவனது பெயர் அவனை இந்துவாக காட்டியது. அவனது மகன் மகேந்திர பல்லவன் சமணத்திலிருந்து சைவத்துக்கு இந்துவாக மாறினான். ஏனெனில் மக்கள் சமணத்திலிருந்து சைவத் துக்கு மீள அவன் சமணனாக இருந்து ஆட்சிசெய்ய முடியாது. திருநாவுக்கரசர் காலத்தில் மகேந்திர பல்லவன் சைவனாக மாறினான் என்பது வரலாறு. அவன் மகன் நரசிம்ம பல்லவன் பெயரளவில் மட்டுமன்றி இந்துவாகவே வாழ்ந்தான்.

இத்தகைய மாற்றங்களைக் கூன்பாண்டியன் என்று அழைக் கப்பட்ட நின்றசீர் நெடுமாறனோடும் பொருத்திப் பார்க்கலாம். மன்னர்கள் தமது சமய நம்பிக்கைக்கு மேலாக, மக்களின் சமய நம்பிக்கைக்கு மதிப் பளித்து வளர்க்கவேண்டிய தேவைக் கும் உள்ளானார்கள்.

வெறும் உலகியல் நூல்கள் ஒரு அறிவு மட்டத்தின்மேல் பயன்பாடற்ற வையாக மாறிப்போக, ஆன்மீக நூல்களோ அறிவின் எல்லைவரை ஈடுகொடுக்கும் நூல்களாக விளங்கின. ஆன்மீக நூல்களில் உலகியல் பெரிதும் பேசப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

உலக இன்பங்களையும், இயற்கை அழகுகளையும், கலை நயங்களையும் வெறுத்த சமயங்கள் கூட, தமது இலக்கி யங்களில் அவற்றை எல்லாம் அழகாகச் சொல்லியே இருக்கின்றன. குறிப்பாக சமண, பௌத்த இலக்கியங் களான சிலப்பதிகாரம், சீவகசிந்தா மணி, மணிமேகலை முதலான ஐம்பெருங் காப்பியங்களில் உலகியல் பெரும் பங்கு வகித்திருப்பதை மறுக்க முடியாது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர் நிலையை அடைய வலி யுறுத்திய இந்து சமயம் உலகியலைப் போற்றியதில் வியப்பில்லை. துறவுச் சமயங்களே கலையையும், இயற்கை யையும் போகங்களையும் விபரித்து வர்ணித்துள்ளன என்பது தான் வியப்பானது.

"வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்" என்று உலகியலை வெறுத்துச் சைவசமய குரவர்களில் ஒருவரான சுந்தரர் தேவாரம் பாடினாலும், அவரது பாடல்களிலே உலகியல் போற்றப்பட்டி ருப்பதை காணலாம்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய இன்னொரு சமய குரவரான சம்பந்தரின் பாடல்கள், இயற்கையை இயன்ற அளவு அற்புதமாகக் காட்டி, உலகியலை ஏற்றுக் கொண்டிருக் கின்றன. அப்பரும் கூட இயற்கையிலே இறைவனைக் கண்டு காட்டியவர்தான்.

சமண, பௌத்த சமயங்கள் அறத்தின் மூலம்தான் பிறவாத நிலையை அடையலாம் என்று



வலியுறுத்துவதாக எடுத்துக்கொண்டால் கூட அற நூல்கள் ஆன்மீக நூல்கள் தானே. அந்தவகையில் பார்த்தால் அறநூல்களுக்குள்ளே தலையாய நூலான திருக்குறளை ஏன் ஆன்மீக நூல் என்று கருதக்கூடாது.

ஆன்மாவை உயர் நிலைக்குக் கொண்டுசெல்வது தானே ஆன்மீகம். அறம் அப்பணியைச் செய்யுமாயின் அறம் ஆன்மீகம் என்ற பெயரால் அழைக்கப்படலாம்.

சமய நூல்களாக அல்லது ஆன்மீக நூல்களாக அங்கீகரிக்கப்பட்டவற்றில் எப்படி உலகியல் போற்றப்பட்டுள்ளது என்பதைப் பார்த்துவிட்டு திருக்குறள் அறம் என்ற அளவில் மட்டுமன்றி முன்னோர் கருதிய ஆன்மீகம் என்ற அளவிலும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பார்ப்போம்.

கம்பராமாயணம்

கம்பராமாயணம் ஒரு சமயநூல் அல்லது ஆன்மீகநூல் என்று குறிப்பிடுவதில் தவறேதும் இருக்கமுடியாது. ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பலர் கம்பராமாயணத்தைப் படிக்கிறார்கள். ஆனால் அதேவேளை இலக்கிய நுகர்ச்சிக்காகவும் உலகியல் அறிவுபெறுவதற்காகவும் கூட கம்பராமாயணத்தைப் படித்தவர்கள் பலர்.

கம்பராமாயணத்தைப் படிப்பதால் உண்டாகக் கூடிய பயன் என்ன என்று கேட்டால் இன்று பலரும் பலவிதமாகச் சொல்லக்கூடும். கம்பராமாயணத்தைப் படிப்பதால் உண்டாகும் பயன் என்ன என்பதை நூற்பயன் என்ற பகுதியில் கம்பன் பின்வருமாறு கூறுகிறான்.

நாடிய பொருள்கை கூடும்.
ஞானமும் புகழு முண்டாம்.
வீடியல் வழிய காக்கும் வேரியங்
கமலை நோக்கும்.
நீரிய வரக்கர் சேனை நீறுபட்
டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி
கூறு வோர்க்கே
(க.கஉ.நூற்பயன்)

அழிவில்லாத இராட்சத சேனை, சாம்பராய் அழிந்து போக வெற்றி வாகை சூடிய, வில்லை ஏந்திய இராம பிரானது தோளாற்றலைப் பாராட்டி எடுத்துச் சொல்பவர்கட்கு, அவர்கள் விரும்பிய சகல விதமான பொருள்களும் கைவசமாகும். மனத்தெளி வாகிய ஞானமும் புகழும் உண்டாகும். அவர்களை, மோட்சத்தை அடைவதற் குரிய வழியை உண்டாக்குகின்ற நறுமணமுள்ள அழகிய தாமரை மலரில் வாழும் இலக்குமியும் திரு அருட்பார்வை புரிவாள்.

நூற்பயனில், இராமாயணத்தைப் படிப்பதனால் அல்லது இராமனது தோளாற்றலை மற்றவர்க்குப் புகழ்ந்து கூறுவதனால் விரும்பிய சகலவிதமான பொருள்களும் வந்து சேரும் என்பதே முதலில் சொல்லப்பட்டதாகும். கருதிய பொருள் கைவசமாவது உலகியலே ஆகும். அத்தோடு புகழ் சேரும் என்பதும் உலகியலே, ஞானம் உண்டாகும் என்பது ஆன்மீக முதற்படி எனத்தக்கது.



எனவே கம்பராமாயணமாகிய ஆன்மீக நூலைப்படிப்பதால் உலகியல் இன்பங்கள் யாவும் கிட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் ஆன்மீகநூல் உலகியல் இன்பங்களையும் தர வல்லது என்று பொருள்.

கந்தபுராணம்

கச்சியப்ப சிவாச்சாரியார் பாடி யருளிய கந்தபுராணம் ஓர் ஆன்மீக நூலே. இப்புராணத்தைப் படிப்பவர் களுக்கு என்னென்ன கிடைக்கும் என்று கச்சியப்ப சிவாச்சாரியாரே நூற்பயன் என்றபகுதியில் பின்வரு மாறு கூறியிருக்கிறார்.

இந்திர ராகிப் பார்மே லின்பமுற்
றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதிஅதனிற்சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக்
காதலித் தோது வோரோ.

(கந்.நூற்பயன்.ச)

முடிவில்லாத அசுரர்களது வலிமை கெடும்படி கோபித்து அழித்த, சிவந்த வேலாயுதத்தைத் தரித்த கந்தசுவாமி யினது இந்தப் புராணத்தை விரும்பிப் படிப்பவர்கள் இந்திர சம்பத்தை உடைய வர்களாய் இப்பூவுலகத்திற் சுகானுப வத்தைப் பெற்று நன்றாக வாழ்ந்தி ருந்து மனத்தில் நினைத்த கருமங்கள் நிறைவேறப்பெற்றுத் தேகாந்தத்தில் சிவபதத்தில் புகுவர்.

இந்த நூற்பயனில், இதனைப் படிப்போர் இந்திரப் பெருவளம் எய்தி, எல்லா இன்பங்களையும் குறைவில் லாமல் அனுபவித்து, மனதில் நினைத்தவை யாவும் நிறைவேறப் பெற்று நன்றாக வாழ்ந்திருந்து... எனச் சொல்லப்பட்டுள்ளதால் ஆன்மீக நூலாகிய கந்த புராணம் உலகியலை எவ்வாறு சிறப்பித்துள்ளது என்பதனை உணர முடிகிறதல்லவா.

தமிழின் மிகப்பெரும் மாக்கதை களாகிய வைணவக் கம்பராமாயணத் திலும், சைவக் கந்த புராணத்திலும் நூற்பயன் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. உரைகாரர் இன்னும் விளக்கி, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பயனையும் தரவல்ல நூல்கள் என்பர். அது பெருங்காப்பிய இலக்கணமாகிய "நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி" என்பதற் கிணங்க விளக்கப்படுவதாகக் கொள் ளலாம்.

பெரியபுராணம்

கம்பராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகியவற்றை அந்தந்த நூலாசிரியர்கள் "மாக்கதை" என்றே குறிப்பிடுகிறார்கள். கம்பன்

நடையின் நின்றுயர் நாயகன்
தோற்றத்தின்
இடை நிகழ்ந்தஇவ் விராமாவ
தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தோமறு
மாக்கதை



சடையன் வெண்ணெய்
நல்லூர் வயிற்
தந்ததே.

(கம்.அவை.கக)

இராமாவதாரம் என்பதுதான் கம்பன் தனது இராமாயணத்திற்கு இட்ட பெயர். **இராமாவ தாரப்பேர்த் தொடைநிரம்பிய தோம்று மாக்கதை** என்கிறான் தனது இராமாயணத்தை இருப்பினும் வான்மீகி இட்ட இராமா யணம் என்ற பெயர் கம்பன் பெயரோடு பொருந்தி கம்பராமாயணமாயிற்று.

கச்சியப்ப சிவாச்சாரியார் தனது நூலுக்குக் கந்தபுராணம் என்றே பெயரிட்டார். அப்பெயராலேயே இப் புராணம் இப்பொழுதும் வழங்கப்படு கிறது.

தோற்றம் ஈறின்றித் தோற்றிய
சூர்ப்பகைக்
கேற்ற காதைக் கெவன்பெய

ரென்றிடின்
ஆற்றும் ஐம்பலத் தாறுசென்

மேலையோர்
போற்று கந்த புராணம்
தென்பதே

(கந்.அவை -17)

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தின் அவையடக்கப்பாடல்களின் முதற் பாடலில் கந்த புராணத்தை **மாக்கதை** என்றே குறிப்பிடுகிறார்.

இறைநிலை மெழுதுமுன்
இளைய
பாலகன்
முறைவரை வேனென முயல்வ
தொக்குமால்
அறுமுகம் உடையவோ ரமலன்
மாக்கதை
சிறியதோர் அறிவினேன் செப்ப
நின்றதே.

(கந்.அவை-01)

பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம் என்ற பெயரில் தனது நூலைப் பாடினாலும் தனது நூலை **மாக்கதை** என்றே குறிப்பிடுகின்றார்.

எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச்
செய்யுளாய்
நடக்கும் ஐந்துடைத் தாழ்செவி
நீள்முடித்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி
நீள்முடிக்
கடக் களிற்றைக் கருத்துள்
இருத்துவாம்

(பெரிய.வாழ்-03)

பெரியபுராணத்திற்கு நூலாசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இதனையும் இந்நூலைப் படிப்பதால் பெறும் பயனையும் சேக்கிழார் சுவாமிகள் நூற்பெயர் என்ற பகுதியில் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.



இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல
கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புறஇருள் போக்குகின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும்
திருத்தொண்டர் புராணம் என்ப
(பெரிய நூற்)

தான் செய்த நூலின் பெயர் திருத் தொண்டர்புராணம் என்றும், தனது நூலின் பயன்பாடு அகஇருளை நீக்குதல் என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வுலகத்துத் தொன்று தொட்டு புற இருள் அகஇருள் என இருவகை இருள்கள் உண்டு. அவற்றில் புற இருளைப் போக்குவது சூரியன். மனிதரின் உள்ளத்தில் பொருந்தி இருக்கும். அகஇருளைப் போக்குவது திருத்தொண்டர் புராணம் என சூரியனோடு தமது நூலை ஒப்பிட்டுப் பாடுகிறார் சேக்கிழார்.

கந்தபுராணத்தில் போல **"சிவகதி அதனிற் சேர்வர்"** என்று சொல்லாமல், கம்பராமாயணத்தில் போல **"வீடியல் வழியதாக்கும்"** என்றும் சொல்லாமல் அகஇருளைப் போக்கும் நூல் என்றே சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார்.

பெரிய புராண நூற்பயனில் உலகியற் பயன் எதுவும் சொல்லப்பட வில்லை. ஆன்மீகப் பயன் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. ஏனைய புராணங்களைவிட பெரியபுரணம் வித்தியாசமாகவே நூற் பயன்பாடு சொல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

திருவிளையாடற் புராணம்

சிவபெருமான் மதுரையில் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல் களையும் பெரும்பற்றப் புலியூர் நம்பியும், பரஞ்சோதி முனிவரும் திரு விளையாடற் புராணம் என்ற பெயரில் பாடியுள்ளனர். வடமொழி ஆலாசிய மான்மியம் என்ற நூலையே தமிழில் திருவிளையாடற் புராணம் என்ற பெயரில் பாடினர் என்பது வரலாறு.

இரு திருவிளையாடற் புராணங் களிலும் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணமே சிறந்த தென்பதால் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்தில் நூற் பயன்பற்றிய பாடலைப் பார்ப்போம்.

திங்களணி திருவால வாயெம்
அண்ணல்
திருவிளையாட் டிவைஅன்பு செய்து
கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ
மோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர்,
பகையை வெல்வார்.
மங்கலநன் மணம் பெறுவர்.
பிணிவந் தெய்தார்.
வாழ்நாளும் நனிபெறுவர். வானா
டெய்திப்
புங்கவராய் அங்குள்ள போகம்
மூழ்கிப்



புண்ணியராய்ச் சிவனடிக்கீழ்
நண்ணி வாழ்வார்.
(திருவிளை.புரா 03)

திருவிளையாடற் புராணத்தை அன்போடு கேட்போர் பெருஞ் செல்வங்களான சங்கநிதி பதுமநிதி ஆகிய இருநிதிகளையும் பெறுவர். நல்ல பிள்ளைகளைப்பெறுவர். பகையை வெல்வர். நல்ல மணப்பேறடைவர். நோய் பொருந்தாது. நீண்ட ஆயுளைப் பெறுவர். என உலகியற் பயன்களைக் கூறி விட்டு, வானுலகெய்த்தித் தேவர்களாய் அங்குள்ள போகங்களில் மூழ்கிப் பின் சிவனடிக்கீழ் சென்று சேர்ந்து வாழ்வர் என்கிறார் பரஞ்சோதி முனிவர்.

திருவிளையாடற் புராணத்தைக் கேட்போரின் பயன்பாடு பெருமளவிற்கு உலகியற் பயன்பாடாகவே காணப்படுகின்றது. அதனால் இதை உலகியல் நூல் என்று கூறமுடியுமா? இதனை ஆன்மீக நூலாகவே தான் சைவர்கள் கொள்கின்றனர்.

திருவாதவூரடிகள் புராணம்

கடவுள் மாமுனிவர் அருளிச் செய்த திருவாதவூரடிகள் புராணம் மாணிக்க வாசக சுவாமிகளின் வரலாற்றைச் சொல்லுகின்ற புராண நூல். இது ஒரு ஆன்மீக நூல் என்பதில் ஐயமில்லை. இந்த நூலில் பாயிரம் என்ற பகுதியில் நூற்பயன் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

இந்தவள நற்கதை இயம்பினர்,
நயந்தே
சிந்தையில் நினைப்பவர்
செவிப்புலம்நிறைப்போர்
புந்திமகி ழப்புவி புரப்பர்உடல்
விட்டால்
அந்தஉல கந்தனில் அரன்
சபையில் வாழ்வார்.
(திருவாத.பாயி.07)

இந்த வளம்மிக்க நல்ல கதையினைச் சொன்னவர்களும், அன்போடு மனத்தில் நினைப்பவர்களும், கேட்பவர்களும் இம்மையில் மனம்மகிழப் பூமியைப் பாதுகாப்பர். தேக நீக்கத்தின் பின் அந்தச் சிவலோகத்தில் சிவ சந்நிதியிலே வாழ்வர்.

திருவிளையாடற் புராணத்தின் பயன்பாடும்' முதலில் இப்பூமியில் இப் பிறவியில் போகங்களை அனுபவித்தலாகவே இருக்கிறது.

இந்த வகையில் சில முக்கியமான ஆன்மீக நூல்களின் பயன்பாடு பற்றிப் பார்த்தோம் வில்லிபாரதத்தில் நூற் பயன்பாடு சொல்லப்படவில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி என்பவற்றிலும் நூற்பயன்பாடு சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் நூற் பயன்பாடு

திருவள்ளுவர் தமது திருக்குறளில் நூற்பயன் என்று தனியாக அதிகாரம் வகுக்கவில்லை. இருப்பினும் முதலாவது அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குறளில்



கற்றதனால் ஆய பயனென் கொல்
வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.
(குறள்.02)

என்று குறிப்பிடுகிறார். இக்குறளிற்கு டாக்டர் மு.வரதராசனார் பின்வருமாறு உரை எழுதியிருக்கிறார். "தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வி யினால் ஆகிய பயன் என்ன?

கற்றதனால் என்ற சொல் இறந்த காலத்தைக் குறித்தது. நூல்களை இதுவரையில் கற்றதனால் உண்டாகிய பயன் என்று கொண்டாலும் அல்லது திருக்குறளைக் கற்று முடித்தபின் இக்கேள்வியைக் கற்றவரிடம் கேட்டுப் பார்த்ததாகக் கொண்டாலும் கல்வியின் பயன் கடவுளை வணங்குதல் என்றே பொருள்தரும்.

"கற்றதனால் ஆய பயன்" என வள்ளுவர் தொடங்குவதனால் இதை நூற்பயன் என்ற வகையில் கொள்ள லாம். வள்ளுவரின் இக்குறட்படி எந்த நூலைப் படித்தாலும் அதனால் உண்டாகின்ற உச்சப்பயன்பாடு அல்லது இறுதிப் பயன்பாடு ஆன்மீகமே என்பது உணரப்படுகிறது.

இருப்பினும், ஆன்மீகப் பயன் பாடில்லாத வெறும் உலகியல் நூல்கள் இருந்ததையும், மக்கள் அவற்றைப் படித்துப் பொழுதை வீணாக்கியதையு ம் வள்ளுவர் அறிந்திருக்காமல் இல்லை.

கல்வி என்ற அதிகாரத்தின் முதற் குறளில் நல்ல நூல்கள், அல்லது கற்க வேண்டிய நூல்கள் என்ற பாகுபாட்டை வள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (குறள்-391)

"கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும்." என்பது இக்குறளுக்கு **டாக்டர் மு.வரதரா சனாரின்** உரை.

கற்பவை என்பதற்கு கற்கத் தகுந்த நூல்கள் என்றுதான் யாவரும் பொருள் கொள்கின்றனர். இதிலிருந்து கற்கத்த காத நூல்கள் இருந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. நாலடியார் என்ற நூலில் கல்வி என்ற அதிகாரத் தில் பலவகை நூல்கள் இருப்பதையும் பலவகைக் கல்வி இருப்பதையும் பின்வரும் பாடல் மூலம் காண முடிகிறது.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல -
தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே,
நீர்ஒழியப்
பாலுண் குருகின் தெரிந்து
(நாலடியார்)

"கல்வியின் பரப்புக்கு எல்லையில்லை. கற்பவரின் வாழ்நாள் எல்லையோ



சிறிது. அச்சிறு வாழ் நாளிலும் நுட்பமாக நினைத்துப் பார்த்தால் தோன்றும் நோய்களும் பல உள. ஆதலால் கலந்த பாலில் நீரை நீக்கிப் பாலை மட்டும் உண்ணும் அன்னம் போலத் தெளிவாக ஆராய்ந்து சாரம் மிக்க நூல்களை மட்டுமே சான்றோர் கற்பர்" என இப்பாடலுக்கு உரை வகுத்துள்ளார் முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்.

நீர் கலந்த பால்போல, ஆன்மீக நூல் களோடு வெறும் உலகியல் நூல்களும் கலந்துள்ளன. நீரை விலக்கிப் பாலை உண்ணும் அன்னம்போல உலகியல் நூல்களை விலக்கி ஆன்மீக நூல் களைக் கற்றுப் பயன் பெறவேண்டும் என்பது இவரது கருத்து.

எனவே **கற்பவை** என்று வள்ளுவர் குறிப்பிடும் நூல்களும், **தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே** என்பதில் நாலடியார் குறிப்பிடும் நூல்களும் ஒரே வகையான நூல்களே என்பது புலப்படுகிறது.

இந்த நூல்களைக் கசடறக் கற்றபின் கற்றபடி ஒழுகவேண்டும், 'அதற்குத் தகநிற்க வேண்டும்' என்ற தொடரில் வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார் என்பதைக் "கற்றதனால் ஆய பயன் என்கொல்" என்ற குறளில் வள்ளுவர் விளக்கியிருக்கிறார். வாலறிவன் நற்றாள் தொழுதலே கற்றபின் அதற்குத் தக நிற்றலாகும்.

இந்த வகையில் மட்டுமின்றி மெய் உணர்தல் என்ற அதிகாரத்தில் அறிவின் பயன்பாடு பற்றித் தனியாகப் பின்வருமாறு சொல்கிறார்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு.

(குறள்-358)

"பிறவித் துன்பத்திற்குக் காரண மான அறியாமை நீங்குமாறு முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரண மான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு" என டாக்டர் மு.வரதரா சனார் இக்குறளுக்கு உரை வகுத் துள்ளார்.

இங்கு அறிவு என்பதை அதிகாரத் தலைப்புக்கு ஏற்ப மெய்யுணர்தல் என்று குறிப்பிட்டாலும் அறிவின் பயன்பாடு செம்பொருள் காண்பதே. பிறப்பு என்னும், அறியாமையினால் வரும் துன்பத்தைப் போக்கும் செம் பொருளாகிய இறைவனைக் காண்பதே அறிவு என்பது கருதத்தக்கது.

திருக்குறளில் 70 அதிகாரங்கள் பொருட்பால். 25 அதிகாரங்கள் இன்பத்துப் பால், அறத்துப்பால் 38 அதிகாரங்கள் மட்டுமே. அறத்துப் பாலிலும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, அன்புடமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறனில் விழையாமை, என்ற வரிசையில் இல்லற இயல் உலகியலையே பேசுகிறது. துறவற வியலும் நிலையாமை, துறவு, மெய் யுணர்தல், ஊழ் தவிர்ந்த ஏனையவை அறத்தை வலியுறுத்து வன வாகவே இருக்கின்றன.



வள்ளுவர் உலகியலைச் சொன்னாலும், அறத்தை வலியுறுத்தினாலும் அவருள்ளம் ஆன்மீகத்திலேயே நிற்கிறது. உலகில் ஒழுக்கம் சரியாக இருந்தால் தான் ஆன்மீகம் தழைக்கும். உலகியல் ஒழுக்கத்திற்கு அறம் அவசியம். அறத்தை உணர்ந்து உலகியலில் ஈடுபட்டால் ஆன்மீகம் சிறக்கும் என்பது பொதுவான கருத்து. வள்ளுவரும் இதனை மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

"உலகத்தில் வாழவேண்டிய அற நெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்" என்று இக்குறளுக்கு டாக்டர் மு.வரதராசனார் உரை வகுத்துள்ளார்.

உலக வாழ்வை அறவாழ்வாக வாழ்ந்தால், அறத்தோடு பொருந்த உலகியலை அனுபவித்து வாழ்ந்தால், ஆன்ம ஈடேற்றம் கிட்டும் என்பதே வள்ளுவரின் கருத்தாகும்.

வள்ளுவர் சமணரா, பௌத்தரா, இந்துவா என்ற சர்ச்சைகளுக்கு அப்பால் வள்ளுவர் ஆன்மீகவாதியாக இருந்திருக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

அவர் திருக்குறளில் கூறிய கருத்துக்களுக்கேற்ற வாழ்க்கையை வாழ்ந்தால், கற்றபடி நின்றால் இறையருள் கிடைக்கும். தூய அறிவினனாகிய கடவுளது நல்ல பாதங்களை வழிபடச் செய்வதே திருவள்ளுவர் பாடிய திருக்குறளின் பயன்பாடு என்பதால் திருக்குறள் **ஓர் ஆன்மீக நூல்** என்று குறிப்பிடுவதில் தவறேதும் நிகழாது.

எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்ற பொதுவான ஆன்மீக நூலாகத் திருக்குறளை ஏற்றுக்கொள்வதில் எந்தச் சங்கடமும் இல்லை.

✹✹

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீசிந்தாமணி விநாயகர் கலாசார/அன்னதான மண்டபத் திறப்பு விழாச்சிறப்பு மலர். **நன்றி: சிந்தாமணி**


இறையனார்

என்றும் புலராது யாணர்நாள் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க்-குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்

உக்கிரப் பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த-நூல்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துகநல் நெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி





வள்ளுவரைச் சந்தித்த வன்னிமகன்

– **ப.க.மகாதேவா**

ஆயிரத்து முன்னூற்று முப்பது நற்குறள்கள்
வாயினிக்கப் பாடிவைத்த வள்ளுவரே - நீயிருந்தால்
நாமிருக்கும் நாடுதனைப் பாடி நகைத்திருப்பீர்
பூமிப் புதுமையிதா மென்று.

அறம்பொருள் இன்பமொடு வீடும் இணைந்தே
திறம்படக் கைகூடும் என்றீர் - மறம்வீழும்
மாறாத காதல் மிகமனித நேயமுறின்
மீறாது நான்விளம்புஞ் சொல்.

அறத்தால் வருவதே இன்பமென நின்றோம்
புறத்த புகழுமில வாகி - வெறுத்திட்டோம்
வீடிழந்தோம் நாடிழந்தோம் வேறு மிழந்தோம்
வாடுகின்றோம் வள்ளுவரே வீண்.

ஒன்றிரண் டல்லவோ ராயிரம் தாண்டுவதாய்
நன்றாய்க் குறள்செய்தேன் நாடுய்ய - இன்றல்ல
ஈராயி ரத்தோடு நாற்பத்தோ ராண்டுமுன்
பாரா திருந்தால்யார் பழி.

கல்வி கசடறக் கற்றோம் கடல்தாண்டி
செல்வதற் கென்றாநீர் செப்பினீர் - வல்வினையாய்
வாழ்விடங்கள் விட்டு வயிற்றுப் பசியோடு
தாழ்வுற்று நின்றோம் தவித்து.

அன்புடையார் என்றும் பிறர்க்குரியர் என்றுரைத்தீர்
முன்சொன்ன முற்றும் சரியய்யா - பின்பொருநாள்
பிள்ளையைக் காக்கப் பிரயத்த னஞ்செய்ய
கொள்ளைபோம் அன்னை யுயிர்.

காதலர் சந்திப்பில் காலால் படங்கீறல்
ஆதியில் இருந்ததெனச் சொல்லிவைத்தீர் - ஈதால்
படங்கீறக் காலெடுக்கப் பாதிக்கால் துண்டாய்க்
கிடங்கினுள் வீழ்ந்திட்டாள் கேள்.



இனிய வுளவாக இன்னாத கூறல்
புனித மிலவென்றே சொன்னீர் - தனிமரமாய்
நீயிருக்கக் கூடாரம் ஏற்பீர் எனவுரைப்பின்
போயிருக்க வேண்டாளே பெண்.

நீரின் றமையா துலகமுண்மை என்றாலும்
யார்கேட்டார் நீரின்று நாட்டின்கண் - போரோய்ந்து
ஓராண்டு முற்றிற்றென் றொப்பாரி சொல்லவோ
காரிருண்டு கொட்டியது வான்.

சமன்தூக்கிச் சீர்செய்தல் சாலச் சிறப்பாம்
எமன்கையில் ஈந்திடவோ நீதி - அமைவாய்
எடுத்தவக் காரியம் இனிதே முடிப்போம்
கொடுத்ததைப் பெற்றமைதி கொள்.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல் இலனாகி
ஆட்சிசெய அந்நா டுயர்வுற்று - மீட்சிபெறும்
ஒன்றியுரை யாடி உளமறிந்து வாழ்ந்திட்டால்
நன்றே நலங்கொள்ளும் நாடு.


அருளொடும் அன்பொடும் வந்துறும் செல்வம்
பெருகிடும் இன்னும் பலவாய் - வருஞ்செல்வம்
நாட்டில் நிறைவுகொள நாமும் மகிழ்ந்தேநம்
வீட்டிலின்பம் காண்போம் விரைந்து.

கண்ணொடு கண்நோக்கின் வாய்ச்சொற்கள் தம்மிடத்தே
என்ன பயனும் இலவென்றீர் - விண்ணளாவி
வீடுவரும் செல்லிடப் பேசி யழைப்பின்று
நாடிவந்து சேதிசொல்லும் நன்று.

ஆரடித்து நீயழுதாய் என்றுநான் கேட்கின்றேன்
நீரெடுத்த சொற்களினா லென்றுரைத்து - மாரடித்து
மாண்டதுவாய் இல்லை வரலாற்றில் எம்மினத்தோர்
மீண்டெழுவார் மேதினியில் மெய்.

✹✹





சிங்கள பாளி இலக்கியங்களிலே திருக்குறளின் செல்வாக்கு

கலாபூஷணம், பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம்
பி.ஏ(இலண்டன்) கல்வி டிப்பிளோமா.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - எனப் பாரதியாரும் போற்றிப் புகழும் இலக்கிய நூல் திருக்குறள். இது பழைமையும் செழுமையும் நிறைந்தது. அறம், பொருள், இன்பம் என்பவற்றை அழகாக விளக்கும் அறநூலாகவும் விளங்குகின்றது. திருக்குறளைத் தந்தவர் (கி.மு 31) தெய்வத் திரு வள்ளுவர். 1330 அருங்குறட் பாக்களையும் 133 அதிகாரங்களில் அமைத்த சிறப்பை அறிஞர் உலகம் பாராட்டுகிறது; வியக்கிறது!

தெய்வத் திருவள்ளுவரின் குறளுக்குக் கிடைத்த புகழைத் திருவள்ளுவமாலை விளக்கி நிற்கிறது. இவற்றிற்கு மேலாக வெளிநாட்டறிஞர் களும் குறளின் பெருமையை நாவாரப் புகழ்ந்துள்ளனர். அவர்களின் ஆய்வு களும் பிறமொழிகளில் நிகழ்ந்துள்ள மொழிபெயர்ப்புகளும் குறளின் மகிமையை உலகுக்கு எடுத்து விளக்குகின்றன.

இந்திய மொழிகள் (9) ஆசிய மொழிகள் (5) ஐரோப்பிய மொழிகள் (10) என்றவாறு பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகவும் திருக்குறள் விளங்குகிறது. ஆண்டு வாரியாகப் பார்க்கினும் 1730 இல் இலத்தீன் மொழியில் முதலில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டது. அதனைச் செய்தவர் பெஸ்கி கொன்ஸ்ரன்ரைனஸ் (Beschius Constantinus) என்பராவர். இதனை யடுத்து 1803இல் ஜேர்மன் மொழியில் லீப்ஸிக் (Leipzig) என்பவர் செய்திருக்கிறார். இந்திய அறிஞர் வ.வே.சு ஐயர் (1961) ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார். இது சிறப்பான மொழிபெயர்ப்பு எனப் பலராலும் பாராட்டப்படுகிறது.

திருவள்ளுவர் ஆண்டைக் கைக் கொண்டு தமிழ்ச் சங்கமும் 2031ஆம் ஆண்டில் (கி.பி.2000) திருக்குறள் மாநாட்டை நடத்தியது; நினைவு மலரையும் வெளியிட்டது. அதன்பின் இவ் வாண்டும் திருக்குறள் மாநாட்டை நடத்துகிறது. அறிவோர் ஒன்றுகூடல் களில் திருக்குறள் விரிவாக அலசி ஆராயப்பட்டும் வருகிறது.

திருக்குறள் எழுந்த காலகட்டத்தை யும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அக்காலத்தில் சைவம், பௌத்தம், வைணவம், சமணம் ஆகிய மதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அக்கால கட்டத்திலே சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஏற்ற அறநீதிகளைப் புகட்டவே திரு வள்ளுவர் திருக்குறளைப் பாடினார். இதனாற்றான் போலும் எல்லாச்



சமயங்களும் கூறும் அறநீதிகள் திருக்குறளிலே காணப்படுகின்றன. ஒப்பீட்டு முறையில் பொதுவான அறநீதிகள் பிறமொழி இலக்கியங் களிலே காணப்படுகின்றன. எனினும், காலத்தோடு ஒப்பிடும்போது திருக் குறளின் செல்வாக்கே மேலோங்கி நிற்கின்றது. எமது நாட்டிலே சிங்கள மொழி இலக்கியத்தில் திருக்குறளின் செல்வாக்கு நிறைய உண்டு.

புத்தர் பகவானால் பாளி மொழியில் செய்யப்பட்ட **அறவழிநூல் தம்மபதம்** என்பதாகும். இத்தம்மபதம் திருக்குறளி லும் பார்க்கக் காலத்தால் முந்தியது. (கி.மு. 5ஆம் நூற்றாண்டு). தம்மபதம் என்பது **அறவழியாகும்**. தம்மபதமும் உலக இலக்கியத்திலே சிறந்த நூலாகக் கொள்ளப்படுவதொன்றாகும். தம்ம பதம் என்ற நூலில் திருக்குறளில் வரும் அதிகாரங்கள் போன்ற அதிகாரங் களும் வருகின்றன. அவா அறுத்தல், மடியின்மை, வெகுளாமை, தீவினை யச்சம் போன்ற அதிகாரங் களைக் குறிப்பிடலாம். தம்மபதத்தில் மொத்த மாக 26 அதிகாரங்கள் உள. இது பாளிமொழியில் 423 பாசுரங்களைக் கொண்டது. இது புத்த சமயத்தவரின் பாராயண நூலாகவும் பிரமாண நூலாகவும் அமைகிறது. முதற்கண் மனத்தைப் பற்றித் தம்ம பதத்திலுள்ள மனஇயலில் வரும் பாசுரம் ஒன்றைப் பார்ப்போம்.

மனோ புவ்பங்கமா தம்மா
Mano pubbangama dhamma
மனோ ஸெட்டா மனோ மயா
Mano Settha Manomaya
மனஸா சே பதுட்டேன
Manasa ce padutthena
பாசதி வா கரோதி வா
Bhasati va karoti va
ததோ நங் துக்கம் அன்வேதி
Tato nan dukkham anveti
சக்கங் வா வஹதோ பதங்
Cakkan va vahato padan
(யமக வக்க - 1)

இப்பாசுரத்தில் மனத்தினது இயல்பை அழகாக எடுத்துக் கூறுகிறார். மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தியில்லாவிட்டால் ஏற்படும் தீமை யையும் விளக்குகிறார். துக்கம் தொடர் வதற்கு நல்லதோர் உவமானத்தையும் கையாள்கிறார். 'துக்கம் அன்வேதி' அதாவது துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும். எவ்வாறெனின் 'சக்கங்வா வஹதோ அன்வேதி' - வண்டிச் சக்கரம் மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வது போல என்று நல்லதோர் உவமானத்தை - கருத்தாழத்தோடு காட்டுகின்றார். இனி, பாசுரத்தின் முழுக்கருத்தினையும் பார்க்கலாம்.

சித்தத்தின் நிலைகளுக்கு எல்லாம் மனமே முன்னோடி. அவை மனத்தி லிருந்து உண்டானவை. மனமே எல்லாவற்றிற்கும் மேலாக நிற்கிறது. தீய எண்ணத்தோடு ஒருவன் பேசினா லென்ன செயல்புரிந்தாலென்ன, வண்டிச் சக்கரம் மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வதுபோலத் துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்.



இனி மனத்தைப் பற்றித் திரு வள்ளுவர் கூறும் கருத்தினைப் பார்போம்.

மனத்துக்கண் மாசில னாதல் - அனைத்தறன்;
ஆகுல நீர பிற.
(அறன்வலியுறுத்தல் - 4)

இக்குறட் பாவில், ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க அறம் அவ்வளவே. மனத் தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை; அவை அறச் செயல்கள் ஆகமட்டா எனத் திரு வள்ளுவர் கூறுகிறார். 'மனசா சேபதுட்டேன பாசதி என்று தம்மப தத்தில் வரும் கருத்து திருக்குறளில் மனத்துக் கண் மாசு (இஸன் ஆதல்) என அழகாகக் கூறப்பட்டிருக்கிறது.

தூய மனத்தோடு ஒருவன் பேச வேண்டும்; செயல் புரிய வேண்டும். அப்போதுதான் சுகமும் நிழல்போல தொடரும் என்கிறது தம்மபதம். எனவே, தீய வழியிற் செல்லும் உள்ளத்தைத் திருத்துதல் எமது கடமை திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்யவேண்டும் என்கிறார் அப்பரும்.

பகைமையைப் பகையால் வெல்ல முடியாது. அன்பினாலே தான் பகை யையும் வெல்லலாம். இதனைத் தம்ம பதம் பாளிமொழியிற் பின்வருமாறு கூறுகிறது:

நஹி வேரேன வேரானி
Naho verena verani
சம்மன்தி இத்த குதாசனங்
Samman dha kudacana
அவேரேனா ச சம்மன்தி
Averena Ca Sammanti
ஏச தம்மோ சனாந்தனோ
Esa dhammo Sanantano

இப்பாசுரத்தில் புத்தபகவான் இன் சொல்லையும் அன்பினையுமே அருளு கின்றார்: இப்பாசுரத்தின் கருத்தினைப் பார்ப்போம்.

எக்காலத்தும் பகைமை பகைமை யால் தணிவதில்லை. அன்பினாலே தான் அது தணியும். இதுவே காலங்கடந்த கோட்பாடு - சனாதன தருமம் என்கிறார்.

இதனைத் தெய்வத் திருவள்ளுவர் பின்வருமாறு திருக்குறளில் கூறுகிறார்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
(இனியவை கூறல் - 100)

இக்குறட்பாவில் இன்சொல்லின் இனிமையை விளக்குகிறார். இன் சொல்லின் எதிர்ச்சொல் வன்சொல். இதனை விளக்க, கனிகள் இருக்கும் போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது என்று திருவள்ளுவர் உவமானமுங் காட்டி நயமாகக் கூறுகிறார். வன்சொல் வழங்குவதாற் பயனில்லை என்பது அவர்கருத்து. இன்சொல் வழங்குக என்றே அறிவுரை கூறுகிறார்.

சிங்கள மொழியிலும் சிறந்த இலக்கியங்கள் உள. நீதிநெறிகளை



உரைக்கும் இலக்கியங்களும் உள. அவையெல்லாம் திருக்குறளின் காலத்துக்கு மிகவும் பிற்பட்டவை. கண்டிக்காலம் (18ஆம் நூற்றாண்டு) என வழங்கப்படும் காலத்தில் "உலோகோ பகாறய" எனும் நீதிநூல் செய்யப்பட்டது. இதிலே திருக்குறள், மூதுரை நீதிநூற் கருத்துக்களை நிறையக் காணலாம். அழகிய வண்ண முகவெட்டி எனும் சிங்களப் புலவரும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவரும் 'சுபாஷித' என்ற நீதிநூலை இயற்றியிருக்கிறார். அவர் ஔவையாரின் மூதுரை, நல்வழி என்ற நீதிநூல் களையும் நீதி வெண்பா, நாலடியார் என்ற நீதிநூல் களையும் தழுவியே சிங்களத்தில் பாடியிருக்கிறார்.

இனி, றணஸ்கல்ல தேரர் செய்த 'உலோகோ பகாறய' என்னும் நீதிநூலில் திருக்குறட் கருத்துக்கள் மலிந்து காணப்படுவதைப் பார்ப்போம். 'இனிய உளவாக... என்ற திருக்குறட் பாவின் கருத்து அமைந்த சிங்களப் பாடல் ஒன்று வருமாறு:

'அமயுறு வதன்கெற - தத குறீறு பஸ்
தென துதனயோ
விலிகும் பல தமா - நிறய பல
பதின்னத் யுறுவன்'
(உலேகோபகரறய - 182)

இவ்வாறு - அமயுறுவதன் - இன் சொல் இனிது, தத குறிறு பஸ் - வன் சொல் கொடிது என்றுதான் உலோகோ பகாறய என்ற நூலும் கூறுகிறது. வள்ளுவரைப் போன்று நல்ல பழம், காய் என்பவற்றையும் உவமைகாட்டி விளக்குகிறார்.

அந்தணர் என்போர் யார்? என்பதைத் திருக்குறள் அழகாக விளக்குகின்றது. நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திலே அக்குறள் வருகின்றது. பிறப்பால் எவரும் உயர்ந்தவராவதில்லை. அவரவர் செய்கையாலேயே ஒருவர் உயர்ந்தவராக மதிக்கப்படுகிறார். அந்தணர் என்போர் யாவர்? அழகிய தண்ணளியை உடையவர்களே அந்தணராவர். அவர்களே அறவோர்; மேலான ஒருவரையே அந்தணர் என்கிறோம். இக்கருத்தைத் தெய்வத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

அந்தண ரென்போர் அறவோர்மற்
றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்
(நீத்தார் பெருமை - 30)

உயிர்கள் எல்லாவற்றிலும் செம்மை யான அருளை மேற்கொண்டு ஒழுகு பவரே அந்தணர் என்கிறார் வள்ளுவர். இக்கருத்தினையே தம்மபதம் என்னும் அறவழிநூலும் பின்வருமாறு கூறு கிறது

நச அஹங் பிராக்மணாங் புறூமி
Na Cahan Brahmanam Brumi
யோனியங் மத்தி சம்பவங்
Yonijan matti Sambhavan]
போவாதி நாம ஸோ ஹோதி
Bhovadi nama so hoti
சசே ஹோதி சகிஞ்சனோ



Sace hoti Sakincano
அகிஞ்சனங் அனாதானங்
akincanan anadanan
தம் அஹங் புறூமி பிராக்மணங்
tam ahan brumi Brahmanam
(பிராக்மணவக்க - 396)

இப்பாசுரத்தின் பொருளையும் நோக்குமிடத்தில் திருக்குறட் கருத்தும் தெளிவாகும்.

பிராமண யோனியிற் பிறந்தவன் பிராமணத் தாய் வயிற்றில் உதித்தவன் என்பதால் மாத்திரம் ஒருவனை நான் அந்தணன் என்று கூறமாட்டேன். அவன் களங்கமுடையவனானால் போவாதி - பேச்சளவில் மாத்திரம் அந்தணன் என்பேன். களங்கமற்ற பற்றில்லாதவனையே அந்தணன் என்பேன், என்கிறார் புத்தர் பகவான். இக்கருத்தினையே 'வசல சுத்தவிலும்' அவர் அழுத்திக் கூறுகிறார்.

"ந ஜக்ச வஸலோ ஹோதி
ந ஜக்ச ஹோதி பிராக்மணோ
கம்மேன வஸலோ ஹோதி
கம்மேன ஹோதி பிராக்மணோ"

பிறப்பால் ஒருவன் பிராக்மணோ ந ஹோதி' பிராமணன் - அந்தணன் ஆவதில்லை. 'கம்மேன' - செயலாலேயே ஒருவன் பிராமணன் - அந்தணன் ஆகிறான்.

துறவுபற்றித் தம்மபதம் கூறும் கருத்தும் திருக்குறள் கூறும் கருத்தும் ஒத்ததன்மை கொண்டிருக்கின்றன.

தலையை முண்டிதம் செய்வதாலோ தாடியை வளர்த்தலாலோ சடை வளர்த்தலாலோ - சடை முடியை நீட்டிக் கொள்வதாலோ எவரும் துறவியாவ தில்லை. உள்ளத் துறவே உயர்ந்த துறவு. இதனைத் தம்மபதம் பின்வரு மாறு கூறும்.

ந முண்டகேன சமணோ
Na munda kena Samano
அப்பதோ அலிகம் பணங்
Abbato alikam Bhanan
இச்சா - லோப - ஸமாபன்னோ
Iccha - Lobha Samapanno
சமணோ கிம் பவிஸ்ஸதி
Samano Kim Bhavissati
(தம்மட்ட வக்க - 264)


புலனடக்கமின்றிப் பொய் பேசித் திரிபவன் இச்சை லோபம் என்ற குணங்கள் நிறைந்தவன் எவ்வாறு தன்னைச் சமணன் என்று கூறுவது. இக்கருத்தினைத் திருக்குறள் பின்வரு மாறு கூறுகிறது.

மழித்தலும் நீட்டலும் வேண்டா
உலகம்
பழித்த தொழித்து விடின்.
(குறள் - 280)

இவ்வாறு திருக்குறளின் செல்வாக்கு சிங்கள பாளி இலக்கியங்களில் பரந்து கிடக்கின்றது. அவற்றை ஒப்பு நோக்கி நயங்கண்டு இரசிப்போமாக.

✹✹





‘முதல்’
சிலேடை வெண்பா

சிவராசசிங்கம் கந்தசாமி

முதலே முதலாய் முதலில் முதலும்
முதலின் முதலை முதலாய் - முதலி
முழுதும் முகர்ந்து முடிந்த முடிவை
முதல்வன் முடித்த குறள்.

எழுத்தே எழுத்து எழுத்தே எழுவாய்
எழுத்தால் எழுதிய ஏழே - எழுத்தாய்
அவனாய் அவளாய் அதுவாய் உலகு
சிவனாய் எழுதுங் குறள்.

ஏழேழ் உலகையும் ஏழால் எழுதியெம்
ஊழைத் தெரித்துப்பின் உண்மை - வழிகூறி
வீடும் நெறியறிந்து வீட்டை யடையநாம்
நாடும் பனுவற் குறள்.


அகரம் அரும்பி னகரம் திரும்பி
பகரும் படையல் பரமன் - சிகரம்
வரையும் விரையும் வினையும் கரையும்
உரையி னதுவே குறள்.

மறைக்கும் மறையை மறைக்க மறையாய்
மறக்கா மறவன் மனத்தில் - இறைக்க
இறைத்தான் ஒருவன் இறைவன் அவனே
முறையே முகரும் குறள்.

தமிழன் தரணி தலைகொள் முறையில்
அழிழ்தை எடுத்தே அடுப்பில் - உமிழ்த்தி
கொடுத்த குரவன் குவலம் திகைக்க
மிடுக்காய் மிளிரும் குறள்.



திருவள்ளுவ மாலை - அதன் சாராம்சம் குறித்து ஓர் உசாவல்



கலாநிதி வ.மகேஸ்வரன்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

திருக்குறள் என்ற நூல் தமிழ் கூறு நல்லுலகில் மிகவும் ஏற்புடைமை பெற்ற ஒன்றாகும். காலங்களையும் கருத்துகளையும் சமய நெறியினையும் கடந்த பொதுமைநூல் என்பதுதான் அதனது இன்றைய அடையாளமாகும். இந்நூலின் தமிழ்ச் சூழல் ஏற்புடைமை என்பது இருவழிகளில் நிகழ்ந்துள்ளது. ஒன்று திருக்குறள் தமிழ்நூல்கள் யாவற்றுள்ளும் தலைமை நூல் என்பதும்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

என்ற பாரதியின் கூற்று இக்கருத்து நிலைப்பட்டது. மற்றையது, வள்ளுவன் திருவள்ளுவன் ஆகியதும், இன்று அவன் ஐயன் திருவள்ளுவன் ஆனதும் தமிழகத்தில் தமிழின் அடையாளமாக அவரது படிமம் நிலைபேறாக்கம் பெற்றதுமாகும். இவ்விரு ஏற்புடைமைக்கும் அடிப்படையான முன் வரலாறு ஒன்று இதற்குண்டு. அந்த முன் வரலாற்றில் திருவள்ளுவ மாலை என்ற தொகுப்புப் பாடல்களின் வகிபாகம் பற்றியே இக்கட்டுரையின் மையப்பொருள் அமைந்துள்ளது.

திருக்குறள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். ஆயின் அது சமணசமயம் சார்ந்த நூல் என்பதும், அவ்வாறான நூல்கள் எழுந்த காலம் "இருண்ட காலம்" என்று கட்டமைக்கப்பட்டதும், சைவத் தமிழ் இலக்கியக் கருத்தாடலை இறையனார் களவியல் உரைகாரர் வழிமொழிந்ததையும் இவ்விடத்தின் கருத்திற் கொள்வதும் அவசியமாகின்றது. இவ்வாறான இறுக்கமான ஒரு சூழலிலிருந்து 'திருக்குறள்' விடுபட்டு தமிழன் அடையாளமாக மாறியது பற்றி நோக்குவதற்கு திருவள்ளுவ மாலை பெரிதும் உதவுகின்றது.

திருவள்ளுவ மாலை என்பது திருக்குறளின் சிறப்புகளையும் அதன் அமைப்பு முறைகளையும் கூறுகின்ற 53 வெண்பாக்களினதும் இரு குறள் வெண்பாக்களினதும் தொகுப்பாகும். இத்தொகுப்பில் அசரீரி, நாமகள், பாடியதாகக் கூறப்படும் இருபாடல்களைத் தவிர – சங்கப் புலவரான இறையனார் முதல் ஔவையார் வரை பலரது பாடல்கள் அடங்கியுள்ளன. எனினும் கல்லாடர், சீத்தலைச் சாத்தன், பரதப்பாடிய பெருந்தேவனார்,



குலபதிநாயனார், இடைக்காடர் ஆகிய இடைக்காலப் புலவர்கள் பாடிய பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

திருவள்ளுவர் திருக்குறளைப் பாண்டியன் அவையில் அரங்கேற்றம் செய்யும்போது, சங்கப் பலகையில் இருந்த புலவர்கள் வள்ளுவரின் குலம் குறித்து நகைத்தனர் எனவும் உடனே சங்கப் பலகை குறளளவு சுருங்கிய தால் புலவர்கள் அனைவரும் பொற்றாமரைக் குளத்துள் வீழ்ந்தனர் எனவும் உடனே தவறுணர்ந்து நூல்நயம் கேட்டு வியந்து ஆளுக்கொரு வெண்பா பாடினர். அவ்வெண்பாக் களின் தொகுப்பே 'திருவள்ளுவ மாலை' எனும் ஒரு கதை தமிழ்ச் சூழலில் நிலவியது.[1] இது இடைக் காலத்துக்கேயுரிய தெய்வத்தன்மை யுடன் கூறப்பட்டிருப்பினும் சில உண்மைகளையும் கொண்டுள்ளது. ஒரு இலக்கிய நூலுக்கு இருந்த எதிர்ப்பும் (இது பல நிலைகளில் ஏற்படலாம்) ஆயின், அந்நூலின் இலக்கியத் திறன் எதிர்ப்புகளை வென்று நிலைபெற்று நிற்கும் என்ற கருத்தாக்கத்தையும் இச்சம்பவம் விளக்குகின்றது.

இந்த மாலை பற்றித் தமிழ்ச் சூழலில் பல கருத்துக்கள் நிலவிவந்துள்ளன.

"டி.வி சதாசிவ பண்டாரத்தார், வ.உ.சிதம்பரப்பிள்ளை முதலி யோர் இப்பாடல்கள் பிற்காலப் புலவர் களால் இயற்றப்பட்டவை என்கின்றனர். எம்.சீனிவாச ஐயங்கார் இப்பாடல்கள் அனைத் தையும் ஒருவரே கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இயற்றி இருக்க வேண்டும் என்கிறார். ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் சங்ககாலப் புலவர்களால் பாடப்பட்டு ஒன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டு திருவள்ளுவ மாலை எனப் பெயரிடப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இக்கருத்துக்களுக்குப் புறம்பாக திருக்குறள் நூல்பதிப்புகள் பல இதுவரை வெளிவந்தபோதும் அப் பாதிப்புகளின் இறுதியிலேயே இது இடம்பெற்றிருப்பதால் இது பாயிரத்துக் குரிய தகுதியுடையதல்ல என்றும் குறிப்பிடுவர். மேலும் திருக்குறளுக்கு உரை எழுதிய பண்டைய உரை யாசிரியர்கள் பதின்மரில் ஐவருடைய உரைகள் அச்சேறி உள்ளன. அவற்றுள் யாரும் இப்பகுதிக்கு உரை எழுதவில்லை. இது சங்ககாலத்தில் தோன்றியது எனின் இப்பாடல்கள் வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ள மையால் அக்கருத்தும் உடன்பாடாகத் தோன்றவில்லை.

இடைக்காலத்தில் தோன்றிய மீட்பியக்கத்தின் விளைவாக உரைகாரர்கள் உருவானது போல திருவள்ளுவ மாலையும் அந்த மீட்பிய கத்தின் விளைவே எனக் கருதலாம். இந்த நூற்றா ண்டின் தொடக்கத்தில் தமிழ் மறு மலர்ச்சி இயக்கத்தினர் திருக்குறளைப் பரப்புவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி யினைத் திருவள்ளுவ மாலையிலும் காணமுடிகிறது என்பார் பஞ்சாங்கம்.



இனி திருவள்ளுவ மாலையில் இடம்பெற்றுள்ள பாடல்களை வகைப் படுத்தும் போது, அவை பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுவதனை அவதானிக்கலாம். திருக்குறளின் யாப்பு, அதன் இயல்வைப்புமுறை, அது நாற்பொருள் பயக்கும் தன்மை, அதன் பயன், அதன் பொதுமைத் தன்மை, அது வேதத்துக்குச் சமமாக வைத்து, எண்ணப்படல், அதன் சிறப்பு எனப் பல்வேறு கோணங்களில் திருக்குறள் நோக்கப்பட்டதை அவதானிக்கலாம். இதற்கும் மேலாக அது விமர்சன முறைமைகளிலும் நோக்கப்பட்டதை அவதானிக்கலாம். தொகுத்துக் கூறின் திருக்குறளின் உருவம், உள்ளடக்கம், பயன், சிறப்பு முதலான விடயங்களை இப்பாடல்கள் வெளிப்படுத்தின எனலாம்.

திருக்குறளின் பா நலம் பற்றிப் பேசும்போது, எழுத்து, அசை, சீர், அடி, சொல், பொருள், யாப்பு என்பவை வழுவின்றி இதுவரை எவராலும் செய்யப்படவில்லை என்றும். திரு வள்ளுவரது இன்குறள் வெண்பாவே எல்லாக் குணங்களும் நிறைந்தது என்பது நச்சுமனார் பாடல் (தி.மாலை – 45) இதுபோல பல பாடல்கள் அமைந்துள்ளன. எனினும், 'திருக்குறள்' என்ற பெயரை திரு வள்ளுவமாலை பாடிய புலவர்கள் பெரிதும் பயன்படுத்தவில்லை. முப்பால் என்ற பெயரையே அதிகமாகக் கையாண்டுள்ளனர். சுமார் பன்னிரு பாடல்களில் முப்பால் என்ற பெயர் இடம்பெறுகின்றது. ஏனையவற்றில் இன்குறள்வெண்பா என்ற சொற் தொடர் பல இடங்களில் இடம்பெற் றுள்ளது. வள்ளுவர் வாய்மொழி, வள்ளுவர் தந்துரைத்தநான்மறை, வள்ளுவர் வெள்ளைக்குறட்பா, வள்ளுவர் மொழிந்த பொய்யாமொழி, முதுமொழி, வள்ளுவர் வாயுறை, வள்ளுவர் முப்பாநூல், என்றும் பல்வேறாக இதன் பெயர் குறிப்பிடப்படு கின்றது.

திருக்குறளின் இயல்வைப்பு முறைபற்றியும் இதில் விஸ்தாரமாகப் பேசப்படுகின்றது. இதில் ஆயிரத்து முன்னூற்றி முப்பது அருங்குறள் உண்டு (16) இது பாயிரம் நான்கு, அறம் முப்பத்து மூன்று, ஊழ் ஒன்று, பொருள் எழுபது, காமம் இருப்பத் தைந்து என சிறுமேதாவியார் பாடல் கூறும் (20), இனி பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என அறப்பாலின் உட்பிரிவுகள் நான்கு; அரசு, அமைச்சு, கூழ், படை, நட்பு, ஒழிபு எனப் பொருட்பாலின் உட்பிரிவுகள் ஏழு; ஆண்பாற் கூற்று, பெண்பால் கூற்று, அவ்விரு பால்கூற்று எனக் காமத்துப் பாலின் உட்பிரிவுகள் மூன்று; இவையாவும் அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய நாற்பொருளையும் விளக்கும் என்பது தொடித்தலை விழுத் தண்டினார், பாடல் (22) ஆகும். இதேபோல எறிச்சலூர் மலாடனார் (15) காரிக்கண்ணனார் (28) போக்கியார் (26) மோசிகீரனார் (27) மதுரைப் பெரு மருதனார் (37) பாடல்கள் அதிகார வைப்புத் தொடர்பான பாடல்களாக அமைந்துள்ளன.



திருக்குறள் நாற்பொருளையும் பயப்பது என்ற எண்ணக்கருவை அநேக பாடல்கள் வற்புறுத்துகின்றன.

அறம் பொருள் இன்பம் வீடென்னும்
இந்நான்கும்
திறம் தெரிந்து செப்பிய தேவு
என்றும் (8),

இன்பம் பொருள் அறம் வீடென்னும்
இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழி
நூல்
என்றும் (33) குறிப்பிடுவதனைப் பதச்சோறாக இங்கே சுட்டலாம்.

இந்நூலின் பயன் யாது என்போர்க்கும் திருவள்ளுவமாலை விடை தருகின்றது.

இம்மை மறுமை இரண்டும் -
எழுமைக்கும்
செம்மை நெறியில் தெளிவு பெற –
மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதி வழங்க
வள்ளுவனார்
பாடினார், இன்குறள் வெண்பா

என்பது இழிகட் பெருங் கண்ணனார் கருத்து (40) இது மக்களுக்கு ஆவனவற்றையும், ஆகாதவற்றையும் அறிவுடையார் எடுத்துச் சொல்வதற்காக ஆக்கப்பட்டது என்பது சத்தனாரது கூற்று (41) சுக்கிரன், வியாழன், சூரியன், சந்திரன் ஆகிய கோள்கள் உலகின் புற இருளை நீக்கும் அதுபோல் இன்குறள் உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளி என்று மதுரைப் பாலாசிரியனார் குறிப்பிடுகின்றார்.

மேற்குறித்தனவற்றைத் தவிர திருக்குறளின் சிறப்புப் பற்றி பலபட விபரிக்கப்படுகின்றது.

எல்லாப் பொருளும் இதன்பால் -
உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்
(மதுரைத் தமிழ்நாகன்-29)

பூவிற்கு தாமரை, பொன்னுக்கு சம்புதனம், பசுக்களுள் காமதேனு, யானைக்குள் ஐராவதம், தேவர்க்குள் திருமால், இதுபோல பாவிற்குள் வள்ளுவன் வெண்பா சிறந்தது.
கவிசாகரப் பெருந்தேவனார் (36)

திருக்குறளை ஒருவரது வாயாலே கேட்டாலே தமிழில் புலமை நிரம்பியவராகலாம்.
நத்தத்தனார் (16)

ஓதுதற்கு எளிதாகி, உணர்தற்கு அரிதாகி வேதப் பொருளாய் விளங்கி உள்ளுந்தோறும் உள்ளம் உருக்குவது
- (மாங்குடிமருதனார் 24)

சிந்தைக்கினியது, செவிக்கினியது, வாய்க்கு இனியது, இருவினைக்கும் மா மருந்து என்கிறது
கவுணியனார் பாடல் (51)

இனி திருவள்ளுவமாலை குறளையும் வேதத்தையும் ஒருசேர ஒப்பிடுவதைப் பல பாடல்களால் அறியலாம். நாமகள் என்ற பெயரில் பாடப்பட்ட பாடல்



ஒன்று (2) நாமகளே ஆதியில் நான்முகன் வாயில் வேதமாக நின்றாள். இடையில் ஐந்தாம் வேதமான பாரதத்தைக் கூறினாள். அதன்பின் வள்ளுவன் வாயால் வேதமாகிய திருக்குறள் சொல்லப் பட்டது என்று குறிப்பிடுகின்றது. வேதங்கள், மா பாரதம், குறள் மூன்றையும் ஒரு சேர நோக்குகின்ற தேவையின் அடிப்படை யில் இப்பாடல் அமைந்திருப்பதைக் காணலாம். அதுவும் நாமகள் கூற்றாக அமைந்தமையும் அத்தேவைக்கான தொன்மச் சான்றாதாரமாக அமைந் ததை நோக்கலாம். வேதம் தந்த நான்முகன்தான் வள்ளுவனாய் வந்து குறள் செய்தார் என்பது உக்கிரப் பெருவழுதியார் பாடல் (4).

கோதமனார் பாடல் (15) வேதத்தின் எழுதாமறைத் தன்மையையும் குறள் ஏட்டிலெழுதி மறைக்கப்படாதிருந்தது என்ற கருத்தையும் தெரிவிக்கின்றது. அதாவது, வேதத்தைவிட திருக்குறள் எழுதப்படுவதால் அது வலிமை குன்றாது சிறந்து விளங்குகிறது என்பது அதன் பொருளாகவும் அமைகின்றது. செய்யாமொழிக்கும் பொய்யா மொழிக் கும் பொருள் ஒன்றே ஆயின் செய்யா மொழியை ஓதுபவர் அந்தணர். பொய்யா மொழியை அனைவரும் ஓதுதற்குரியர் என்று அதன் ஜனரஞ்சகத் தன்மையை வெள்ளி வீதியார் (23) பாடல் ஒப்பிடுகின்றது.

வேதப் பொருளையே வள்ளுவன் தமிழில் தந்தார். எனவே குறளில் நினைப்பவர் நினைக்கும் பொருள்கள் எல்லாம் உண்டு என்பது செயலூர் கொடுங்கண்ணரது பாடல் (42). இதற்கும் மேலாக ஆரியத்தையும், தமிழையும், வேதத்தையும் குறளை யும், சமன் செய்கிறது. வண்ணக்கஞ் சாத்தனார் பாடல் (43)

ஆரியமும் செந்தமிழும் -
ஆராய்ந்திதனின் இது
சீரிய தொன்றைச் செப்பரிதால் -
ஆரியம்
வேதம் உடைத்து தமிழ் -
திருவள்ளுவனார்
ஏது குறட்பா உடைத்து.

என்று அது சமப்படுத்திப் பேசு கின்றது. திருக்குறளுக்கான அகண்ட பாரத அங்கீகாரத்தை வழங்குவதும் திருக்குறளின் மேன்மையூடாகத் தமிழின் மேன்மையையும் உயர்த்திப் பிடிக்கும் கூற்றாக இப்பாடலை இனங்காண முடிகின்றது.

பாரதம் பாடிய பெருந்தேவனாரது பாடல் (30) மனுஸ்மிருதி , மாபாரதம், இராமகதை ஆகியவற்றுக்கும் மேலாகத் திருக்குறளை விதந்து பேசுகிறது.

எப்பொருளும் யாரும் இயல்பின் -
அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்
- முப்பாற்குப்
பாரதம் சீராமகதை மனுப்பண்டை-
மறை
நேர்வன மற்றில்லை நிகர்.

எனக் குறிப்பிடுகின்றது. திருக்குற ளுக்கு ஒப்பானவை இவை தவிர வேறெதும் இல்லை என்பதும், பாரதம் முதலிய நூல்களே இதற்கு ஒப்பாகா என்பதும் , இருவேறுபட்டதான உரை



களால் இது சிறப்பித்துக் கூறப்படு கின்றது. எது எவ்வாறெனினும், (ஒப்பிட்டாலும் வேறுபடுத்தினாலும்) இங்கே குறளுக்கான அகில பாரத நூல் அந்தஸ்த்தை நிலை நிறுத்துவதே பெருந்தேவனாரது கருத்து என எண்ண இடமுண்டு.

திருக்குறள் சமயங்கடந்த நூல் என்ற விடயத்தையும் அவை தெளி வாகக் குறப்பிடுகின்றன.

அறுவகை மதத்தோரும் ஒரு -
மதத்துள் கூறுவதை
மறுத்துத் தம்மதம் நிலைநாட்ட -
முயல்வார்.
ஒன்று என்றால் வேறு என்பர் வேறு
என்றால்
அன்று என்பர் – ஆயின்
வள்ளுவரது
முப்பால் மொழிந்த மொழியை
அனைவரும்
நன்று – என ஏற்றுக் கொள்வர்
என்கிறது கல்லாடர் பாடல் (9)

திருக்குறளை ஓதியுணர்ந் தோர் நான்குவேதம், பாரதம், இதன் வழிப்பட்ட அறுவகைச்சமயம் கூறும் பொருள்கள் யாவற்றையும் ஓதி உணர்ந்தோராவார்.

என களத்தூர் கிழார் பாடல் (44) குறிப்பிடுகின்றது.

பின்நாட்களில் வள்ளுவர் சமயம் பற்றி ஆராய்ந்தவர்கள் வள்ளுவர் சமயங்கடந்தவர் என்ற கூற்றை முன்மொழிவதற்கான ஆதாரங்களாக இப்பாடல்களின் பொருள் அமைந் துள்ளது எனலாம்.

வள்ளுவர் பிறந்த சமயம் பின் பற்றிய சமய அனுட்டானங்கள் என்பன பற்றிக் கருத்து வேறுபாடு காணப்பட்ட போதிலும் வள்ளு வருடைய உள்ளத்தைப்பற்றிக் கருத்து வேற்றுமை ஏற்பட முடி யாது. வள்ளுவர் உலகச் சமயத் தின் புறத் தோற்றத்திலே தம்மைப் பறிகொடுத்து விட வில்லை. சமயவாதிகளின் தருக்கம் அவரை மயக்கி விடவில்லை. சமயத்திலிருந்து வள்ளுவர் ஒதுங்கி விடவும் இல்லை. வள்ளுவர் சமயங்களை நன்கு கற்றிருக்கின்றார். சமய உண்மைக்கான ஊடுருவி நோக்கியுள்ளார். சமய உண்மை வள்ளுவருக்கு விளங்கியிருக்கின்றது. சமய அடிப்படை வள்ளுவருக்குத் தெரிய வந்திருக்கிறது. வள்ளுவர் சமய சமரச நெறியையும் கடந்து எவ்வளவோ ஆழமாகச் சென்று விட்டார்.

என்று பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுவது மனங்கொளத் தக்கது.

திருவள்ளுவமாலையை இன் னோர் தளத்தில் தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றாசிரியர்கள் நோக்குவர். அதாவது, தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் திருவள்ளுவ மாலைக்கும் இடம் அளிப்பர். அது திருக்குறளின் அமைப்பு, பாடுபொருள், முதலானவற்றைக் கூறுவதுடன்



வேதம், பாரதம், முதலான நூல்களுள் ஒப்பீட்டு அடிப்படையிலும் நோக்குகிறது என்பர். அத்துடன், பாராட்டுமுறைத் திறனாய்வு, வியப்பு முறைத் திறனாய்வு ஆகிய அம்சங்கள் திருவள்ளுவ மாலையில் உண்டு என்பர். திருக்குறள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையுடையது என் பதை, கபிலரும், பரணரும் உவமை மூலம் விளக்குவர். தினையளவு சிறுபுல்நீர் பனையின் அளவு சாயலைத் தன்னுள் கொண்டிருப்பது போல் குறள் - விரிந்து பொருள் தருகின்றது.(5) என்றும் திருமால் குறளாய் உலகம் அளந்தது போல் வள்ளுவரும் தம் குறள்வெண்பா அடியால் உலகத்தார் உள்ளுவ எல்லாம் அளந்தார்.(6) என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றார் கள். இந்த வகையிலேதான்,

கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் -

என்ற இடைக்காடர் பாடலையும்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

என்ற ஔவை பாடலையும் வைத்து நோக்கமுடிகின்றது.

மேலே திருவள்ளுவ மாலையில் குறிப்பிட்ட விடயங்களுக்குப் புறம்பாகத் தமிழ்ச் சூழலில் திருக்குறளின் ஏற்புடைமை பற்றியும் இவ்விடத்தில் நோக்குவது அவசியமாகின்றது. திருவள்ளுவ மாலையில் வேதம் மனுஷ்மிருதி பாரதம், இராமகதை ஆகியவற்றுடனேயே திருக்குறள் ஒப்பிடப்பட்டுள்ளது. இந்நூல்கள் தமிழ்ச் சூழலுள் நிலவினவேனும், அவை தமிழ்மொழிமூல நூல்களல்ல. அகில பாரத பெருநீரோட்டத்துள் திருக்குறளையும் நுழைத்து, அதற்கான மேல்நிலை யாக்க அங்கீகாரம் பெறச் செய்வத ற்கான முயற்சி அல்லது திருக்குறளை முன்னிறுத்திய தமிழ் நூல் தலைமைக்கான செயற்பாடு களாக இவற்றைக் கட்டமைக்க முடியும்.

இனித் திருக்குறளைத் தமிழ்ச் சூழலுள் இசைவாக்கம் பெறச் செய்த முயற்சியாகப் பின் நாட்களில் எழுந்த பாடல்களைத் துணைகொண்டு நோக்க முடியும். நல்வழியில் ஔவை யாரால் பாடப்பட்ட

தேவர் குறளும் திருநான்மறை - முடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்றுணர்.

என்ற பாடல் வேதத்தை முதன்மையாகக் கொண்டாலும், தேவாரம், அகத்தியம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் ஆகிய தமிழ்ச் சூழலில் எழுந்த நூல்களுடன் ஒப்பிடுவது – திருக்குறளின் தமிழ் மயப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது. சாமிநாத தேசிகர் – தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவை யார், மூன்றும் எல்லாம் உடைத்து என்கிறார்.

பல்காற் பழகினும் தெரியா உளவேல் தொல்காப்பியம், திரு வள்ளுவர் கோவையார் மூன்றிலும் முழாங்கும்

என்று அவர் குறிப்பிடுகின்றார். உமாபதி சிவச்சாரியாரால் பாடப்பட்ட தாகக் குறிப்பிடப்படும் ஒரு பாடல் தமிழ் நூல்கள் பலவற்றுடன் திருக்குறளை ஒப்பிடுகின்றது.

வள்ளுவர் சீர்அன்பர் மொழிவாசகம்
தொல்காப்பியமே
தெள்ளு பரிமேலழகன் செய்த
உரை – ஒள்ளிய சீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி
ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்

என அதில் குறிப்பிடப்படுகின்றது. இதிலும், வேதம் பற்றிய கூற்று இல்லையென்பதும். தமிழ்ச் சூழலில் எழுந்த பிரதானமான நூல்கள் (பல வகையின) இடம்பெற்றிருப்பதனை யும் அவதானிக்கலாம். இது திருக் குறளுக்கான தமிழ்ச் சூழல் ஏற்புடை மையின் வெளிப்பாடு எனலாம்.

நிறைவாக – திருக்குறள் என்பது தமிழின் அடையாளமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அது தோன்றிய சூழல், அதன் மதம் முதலான கருத் தாடல்கள் பற்றிப் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தபோதும், நல்ல நூல் ஒன்று அதன் சிறப்பால் காலங்களை வென்று நிற்கும் என்ற கருத்துக்கு ஏற்ப, தடைகளைத் தாண்டி, அது தலையாய நூல்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதைத் திருவள்ளுவ மாலை விளக்கி நிற்க, அதன் அருட்டுணர் வாலும், திருக்குறளின் சமூக இசை வாக்கத் தன்மையாலும், தமிழின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப் பட்டதைப் பின்னைய பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதும் தெளிவாகின்றது.

அடிக்குறிப்புகள்


1. பஞ்சாங்கம், க. (1996) தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அகரம், கும்ப கோணம், ப.41.
2. மேலது, ப.41.
3. தமிழ்த்துறை ஆசிரியர்கள் (1979) திருக்குறள் சிந்தனை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ப.64.
4. மேலது, ப.64.
5. பஞ்சாங்கம்,க. மு.கு.நூ., ப.41.
6. வேலுப்பிள்ளை,ஆ (1999) தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஸ்ரீ லங்கா புத்தகசாலை, ப.43.
7. பஞ்சாங்கம்,க. மு.கு.நூ. ப.42.

ஆதார உசாத்துணை

திருக்குறள்- ஆராய்ச்சிப் பதிப்பு பதிப்பாசிரியர் – ஜகந்நாதன், கி.வா. (2003 இரண்டாம் பதிப்பு, இராமகிருஷ்ண வித்தியாலயம், கோயம்புத்தூர்.

✸✸





திருக்குறளில் காதல்

கலாபூஷணம், தொடர்பியல் வித்தகர்
செல்வி சற்சொரூபவதி நாதன் பி.எஸ்.சி

தனக்கு ஏற்படும் இன்பத்தைக் கண்டு களித்தல், தனக்கு ஏற்படும் துன்பத்தைக் காண வருந்துதல் ஆகியன எந்த உயிருக்கும் பொதுவான தன்மைகள். பிற உயிரின் இன்பத்தை உணர்ந்து மகிழ்தல், பிற உயிர் படும் துன்பத்தை உணர்ந்து கலங்குதல் ஆகியவை மக்களுக்கு உள்ள சிறப்புத் தன்மைகளாகும். மற்றோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் போற்றாவிட்டால் அறிவால் பயனில்லை என்பது திருவள்ளுவர் கருத்து. இந்தச் சிறந்த பண்பு காதல் வாழ்க்கையில் சிறந்து விளங்குகிறது. ஒத்த அன்பும், பண்பும் அறிவும் வாய்ந்த காதலர் இருவர் வாழும் வாழ்க்கையில் ஒருவர் அனுபவிக்கும் துன்பம் அத்தனையையும் மற்றவரும் அனுபவிக்கின்றார். இந்தச் சிறப்புக் காரணமாகவே திருவள்ளுவர் காதல் வாழ்க்கையை கலைச் சுவையுடன் விளக்கியுள்ளார்.

அறம், பொருள், இன்பம் என நூற் பகுதிகளை அமைத்த திருவள்ளுவர் இன்பம் பற்றிய காமத்துப்பாலை இயற்றும் போது, கலையுள்ளம் படைத்த கவி ஞராக விளங்கியுள்ளார். அறத்துப் பாலையும் பொருட்பாலையும் கற்கும் போது குறளாசிரியர் உரைப்பவராகவும் கற்பவர் கேட்பவராகவும் இருத்தலைக் காண்கிறோம். திரு வள்ளுவர் ஒரு ஆசிரியராக அமர்ந்து எமக்கு அறிவுரை வழங்கியதைக் கண்டோம். இந்தப் பொது முறைக்கு மாறாகவும் சில குறள்கள் உண்டு.

காமத்துப் பாலில் திருவள்ளுவர் பாக்களைத் தாம் கூறும் சொற்களாக அமைக்காமல், காதலர் இருவர் கூறும் கூற்றுக்களாக அமைத்துள்ளார். திருவள்ளுவர் நாடகக் களம் அமைத்து அங்கு காதலன், காதலி, தோழி ஆகிய மூவரையும் பேசவிட்டு, அவர்களைப் பேச வைக்கும் இயக்குனராக விளங்கு கிறார். இதனால் காமத்துப்பால் அற நூல் அல்லது அறிவு நூல் போன் றல்லாது காவியமாக, ஒரு நாடகக் காவியமாக உள்ளது.

பழைய அகப்பொருட் பாக்களுக்கும், திருக்குறளின் அகப்பொருட் பாக்களுக் கும் உள்ள ஒரு வேறுபாடு கருதத்தக்க தாகும். தொல்காப்பியனார், முதல் கரு உரி என வகுத்த முறையிலேயே பழைய அகப்பாட்டுக்களும், நிலமும், பொழுதும் அங்குள்ள புள், மரம் முதலி யனவும் பின்னணியாக விளங்கப் பாடப் பட்டுள்ளன. ஒரு சில பாட்டுக்களே



காதலுணர்வாகிய உரிப் பொருள் மட்டும் பெற்று விளங்குகின்றன. திருக்குறளில் காமத்துப் பாலில் முதற்பொருளும், கருப்பொருளும் இல்லாமல் காதலுணர்வு மட்டுமே புலப்படுத்தப்படுகின்றது.

காமத்துப் பாலில் முதல் ஏழு அதிகாரங்கள் தலைவனும், தலைவியும் திருமணத்தின் முன் ஒருவர் மற்றொருவரிடத்து அன்பு பூண்டு வாழும் வாழ்வைப் பற்றிக் கூறுகின்றன. தலைவன், தலைவியைத் தனியே கண்டு அவளுடைய அழகால் மயங்கி வருந்திக் கூறும் பகுதி 'தகையணங்குறுத்தல்' என்பதாகும். தலைவியின் பார்வையால் உள்ளம் அழிந்து கலங்கும் தலைவன் அவளுடைய கண்களைக் கூற்று என்கிறான்.

குறிப்பறிதல் என்னும் அடுத்த அதிகாரத்தில் தலைவனும் தலைவியும் ஒருவர் மற்றொருவரின் உள்ளக் குறிப்பை நோக்காலும் செயலாலும் அறியும் வகை கூறப்படுகின்றது. இருவரும் கூடி மகிழ்தல் அடுத்த பத்துக் குறள்களில் எடுத்துரைக்கப்படுகின்றது. தலைவியின் அழகு மென்மை முதலிய பண்புகளை தலைவன் புனைந்து கூறும் பகுதி நலம் புனைந்துரைத்தல் என்பதாகும். தலைவன் உணர்ச்சி வசப்பட்டவனாக கூறும் கூற்றுக்களாதலின் அனிச்ச மலர், மதி இவற்றை விளித்துக் கூறுவனவாக நான்கு குறட்பாக்கள் உள்ளன.


காதற் சிறப்புரைத்தல் என்பது அடுத்த அதிகாரம். தலைவன், தலைவி இருவர் கூறுவனவும் இதில் உள்ளன. தலைவியின் உறவு தன் உயிருக்கு வாழ்வு போன்றது என்று தலைவன் கூறுகிறான். எம் காதலர் கண்ணுள் உள்ளார். அதை மறந்து நான் கண் இமைத்தால் அவர் வருந்துவார் என்கிறாள் தலைவி. இது உலகியல் கடந்த கற்பனையாக இருந்த போதிலும், புதுமை குன்றாத கவிதை யின்பம் உள்ளது.

காதல் மிகுதியால் நாணத்தின் எல்லை கடந்த தம் நிலையைத் தலைவனும் தலைவியும் தோழிக்கு எடுத்துரைப்பன நாணுத் துறவு ரைத்தல் என்பதாகும். களவொழுக்கம் பிறரால் அறியப்படுகையில் அவர்கள் தலைவி குறித்து அலர் தூற்றுவர். அலர் தூற்றலை அறிந்து தலைவி வருந்த தலைவனோ மகிழ்கிறான். பெறுதற்கு அரியவளாக இருந்த தலைவியைத் தான் பெற்று விடுவதற்கு இந்த அலர் உதவும் என்று எண்ணியே அவன் மகிழ்கிறான். இவ்வாறு நுண்ணிய உணர்வுகளை எல்லாம் எடுத்துக் கூறும் காவியமாக திருக்குறளில் காதல் பற்றிய பகுதி திகழ்கிறது.

✸✸



"உலக மக்களின் செம்மை வாழ்வுக்கான நெறிமுறைகளை விண்டுரைக்கும் உலகப் பொதுமறை திருக்குறளே"



– கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
M.A.MPhil முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்.

உலகெலாம் பெருமையோடு போற்றப்படும் தமிழ்ப் பண்பாட்டுப் பூங்காவில் பூத்த புகழ்மிக்க நறுமலரே திருக்குறள். தமிழ்மறையாகவும், உலகப் பொது மறையாகவும் திருவள்ளுவரின் திருக்குறள் வான்புகழ் பெற்றுள்ளது. உலக மொழிகள் பலவற்றுள் மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ்த் திருநூல் திருக்குறளேயாகும்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் ஒரு கவிஞர்; புலவர்; அறிஞர்; தமிழ் முனிவர்; தமிழ்ச் சான்றோர். உலகப் பெரும் சிந்தனையாளர். அனைத்துலக மனிதனைப் பாடியவர். புதியதோர் சமுதாயத்தை - உலகை - உருவாக்கத் திட்டமிட்ட புத்துலகச் சிற்பி. மனிதகுலம் மண்ணில் நல்லவண்ணம் வாழ, வழிகாட்டிய மாமனிதர். அவர் ஓர் இலட்சிய வாதி. இல்லையில்லை! அவர் ஓர் நடப்பியல் மெய்ம்மை வாதி.

காலத்தால் கறைபடாத இடத்தால் இன்னலுறாத மொழியால் மொய்ம்பு குறையாத சமயத்தால் சீரழியாத சிறப்புமிகு வாழ்வியல் கருத்துகளை அறத்தை அடிப்படையாகக் கொண்டு வள்ளுவர் வகுத்துக் கொடுத்த வான்மறையே திருக்குறள். அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் - மனிதர் வாழ்வில் உண்டாகும் பிரச்சினைகள் பலவற்றிக்குத் தீர்வுகாண அவர் முயன்றுள்ளார். அவர் தொடாத அறத்துறையோ, அவர் விடைகாண - தீர்விற்கு வழிகாண முயலாத வாழ்க்கைச் சிக்கலோ உலகில் இல்லை எனலாம்.

மனித இயல்பின் அடிப்படைப் பண்புகளையே திருக்குறள் மையமாகக் கொண்டுள்ளது. திருக்குறளிலே தமிழ், தமிழர், தமிழ்நாடு என்னும் குறிப்புகளே இல்லை. மொழி, நாடு, இனம் முதலியவற்றைக் கடந்த நிலையில், எக்காலத்தில் வாழும் மனிதனும் ஏற்றமிகு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழிகாட்டும் வான் பொருளாகத் திருக்குறள் அமைந்துள்ளது. சில சொற்களால் சிறு வடிவினையுடைய குறள் வெண்பா எனும் செய்யுள் வடிவில், தமிழ்ப்பண்பாட்டின் சிறப்பியல்புகளை உலகம் உணர்ந்து போற்றுமாறு திருக்குறள் எடுத்துரைக்கிறது. கருத்துச் செறிவும் கற்பனை வளமும் வாய்த்த நீதி இலக்கியமாகத் திருக்குறள் திகழ்கிறது.

திருக்குறள் எடுத்துரைக்கும் அடிப்படையான கருத்து அறமாகும். பிற கருத்துகள் எல்லாம் அதைச் சுற்றியே சுழல்கின்றன. வாழ்க்கையின் முப் பெரும் பேறுகளை,

பயன்மதிப்புகளைத் திருக்குறள் உலகிற்கு எடுத்தியம்பு கிறது. அவை அறம், பொருள், இன்பம் என்பன. இம்மூன்றையும், அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பெரும் பிரிவுகளாக வகைப் படுத்தித் திருக்குறள் விளக்குகிறது.

முதற்பகுதி, தனிமனிதனுடைய வாழ்க்கை நல்லமுறையில் அமை வதற்குரிய வழிவகைகளை வகுத்து அளிக்கிறது. இவ்வாழ்க்கை இல்லற மாகவோ, துறவறமாகவோ அமைய லாம். இரண்டாவது பகுதியாகிய பொருட்பால், பொருள் ஈட்டுதல், காத்தல், ஈட்டியபொருளைப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், அந்தப் பொருளீட்டும் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசு, அதன் உரிமைகள் கடமைகள் முதலியவற்றை விரித்துரைக்கிறது. வேறு வகையாகச் சொல்லுவதானால் தனி மனிதனுடைய சமுதாய வாழ்க்கை முறையையே, பொருட்பால் கோடி காட்டுகிறது எனலாம்.

முப்பாலின் மூன்றாவது பகுதியாகிய காமத்துப்பால், காதல் வாழ்வின் ஏற்றத் தையும் இயல்பையும் தெளிவுறுத்து கிறது. உளவியல் மனோதத்துவ - பயன் மதிப்புகளை (Psychological Values) காமத்துப்பால் சுட்டிக் காட்டு கிறது. இம்மூவகைப் பயன் மதிப்பு களும் ஒன்றாக இணைந்து இயங்கும் பொழுதே வாழ்வின் முடிவான இலட்சியமாகிய பிறப்பறுத்தல், வீடுபேறு தானே வத்து அமையும் என்பது திருவள்ளுவரின் உள்ளக் கருத்தாகும்.

மனித இயல்புகளையும் நடத்தை களையும் வள்ளுவர் கூர்ந்து கவனித் துள்ளார். வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் அவர் முழுமையாக நோக்கியுள்ளார். மனித வாழ்க் கையின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக அமைவன யாவை என்பதைத் தெய்வப்புலவர் கண்டு அறிந்துள்ளார். அத்துடன் அமையாது. அத்தடைகளை அகற்றுவதற்குரிய வழிவகைகளைப் பற்றியும் தீவிரமாக அவர் சிந்தித்துள்ளார்.

திருவள்ளுவர் கனவுலகில் மிதப்பவர் அல்லர். ஆனால் நடைமுறைக்கு உகந்தவற்றை உள்ளத்தில் தேடியலை யும் அகக்காட்சியாளார். மனித உள்ளத்தின் இயல்பையும் செயற் பாட்டையும் அவர் கூர்ந்து கவனித்த தன் பயனாக உள்ளத் தூய்மையே மாசற்ற மனமே அறவாழ்விற்குத் தேவைப்படும் அடிப்படைப் பண்பு என்பதை அவர் நன்கு தெரிந்து கொண்டார். இதனாலேயே

மனத்துக்கண் மாசில னாதல்
அனைத்தறன்;
ஆகுல நீர பிற. (குறள்:34)

என்று அறிவுறுத்துகிறார். இப்பாடலில் ஒழுக்க மிக்க வாழ்க்கையை மனோதத்துவக் கண்ணோட்டத்தில் அணுகுவதற்கு வள்ளுவர் வழி காட்டுகிறார். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அந்த அணுகல்முறை மனிதனுக்குப் பேருதவி புரியக் கூடியதாகும்.

வள்ளுவரின் சிறப்புமிகு உலகியல் அறிவிற்கு மற்றொரு சான்று காட்ட



லாம். நாகரிகத்தின் நிலைபேற்றிற்கு வாய்மையும், அகிம்சையும் (இன்னா செய்யாமையும்) இன்றியமையாது தேவைப்படுகின்றன. ஆனால் நட்பு நிலையில் இவ்விரண்டும் மிக உயர்ந்த இலட்சியங்களாக வாழ்க்கையில் பின்பற்ற இயலாத இலட்சியங்களாகவே பலரால் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த இலட்சியங்களைக் கடைப்பிடிப் பதில் உண்டாகக் கூடிய இடர்ப்பாடு களை திருவள்ளுவர் நன்குணர்ந் துள்ளார். "பொய் பேசாமல் உலகில் வாழ இயலுமா?" என்னும் வினாவினை அவரே எழுப்பி அதற்குத் தக்க விடைகளைக் காணவும் முயன் றுள்ளார். "குற்றமற்ற நன்மை பயக்கு மானால் பொய்ம்மையும் மெய்யாகும்" எனும் பயன் வழிக் கோட்பாடு (Utilitarianism) நிலையில் வள்ளுவர்,

பொய்ம்மையும் வாய்மை யிடத்த
புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.
(குறள்:292)

என்று அறிவித்துள்ளார். "இது பொருந்துமா! ஓர் அறவோர் இப்படிச் சொல்லலாமா?" எனச் சிலர் வினாவ லாம். உண்மைதான். இப்படிச் சொல்லு வது நமக்கு மலைப்பைத் தருகிறது. மறுக்க இயலவில்லை. ஆனால் மூதறிஞரான திருவள்ளுவர் ஏன் இவ்வாறு கூறியுள்ளார் என்பதை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

யாமெய்யாக் கண்டவற்றுளில்லை,
எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற
(குறள்:300)

ஒன்றாக நல்லது கொல்லாமை;
மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(குறள்:323)

எனவும், அறிவுறுத்தியவரா, இத்தகைய முடிவிற்கு வந்துள்ளார். என்னும் திகைப்பு உண்டாகலாம்.

திருவள்ளுவர் உண்மைபேசு தலை, வெறும் அறிவு ஆராய்ச்சிக் குரிய செயலாக நினைக்கவில்லை. அன்றாட வாழ்வில் பலபேருக்கு உண்டாகும் மாபெரும் சிக்கலாக - பிரச்சினையாக வள்ளுவர் இதனைக் கருதியுள்ளார். எனவேதான், "சில நேரங்களில் சிலவிடயங்களில் பொய்கூட, மெய்யைப் போன்ற பயனைத் தரும்" என்று அவர் கூறுகிறார். ஆனால் "எங்கே! எப் பொழுது! எவ்வாறு!" எனும் வினாக் களை நம் உள்ளத்தில் எழுமாறு செய்துவிடுகிறார். "பொய் பேசுவதால் குற்றமற்ற நன்மை, புரை தீர்ந்த நன்மை உண்டாகுமானால் பொய்யும் மெய்யாகும்" என்று மிகவும் விழிப் பாகவும், எச்சரிக்கையாகவும் உலகி யலில் உண்டாகும் சிக்கலைத் தீர்க்க அவர் வழிகாட்டுகிறார்.

இன்றைய உலகிற்குத் தேவைப் படுவது திருக்குறள்:



அகத்து எழுச்சியை உண்டாக்கும் முறையில், திருக்குறள் அனைத்துலகப் பண்புடையதாக விளங்கு கிறது. நோக்கத்தால் புத்துணர்ச்சி யூட்டும் புதுமைப் பாங்குடையது. ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுக்கு முன்னர் இயற்றப்பட்டது திருக்குறள். ஆயினும் திருவள்ளுவருடைய அறவுரைகள். அமைதியற்ற, போட்டி யும், பொறாமையும் மிகுந்த - விரைவு மிகுந்த இன்றைய இயந்திரத் தொழில் மயப் பண்புடைய வாழ்க்கைக்கும் பொருந்துவதாக உதவுவது - வழிகாட்டு வதாக அமைந்துள்ளமை நம்மைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்துகிறது.

திருவள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி எண்ணற்றன. இவை மனி தனைத் தெளிந்த உள்ளத்தோடு, பெருமிதமாக வாழத் தூண்டுகின்றன. எளிமையில் செம்மையும், வாழ்வில் இனிமையும் காணுமாறு உந்து கின்றன. "வாழ்க்கை இனிமை யானது" என்றும் "வாழ்க்கை துன்ப மயமானது" என்றும் வாழ்க்கையைப் போற்றும் அல்லது தூற்றும் இரு எல்லைகளுக்குத் திருவள்ளுவர் நம்மை அழைத்துச் செல்லவில்லை. "எல்லாம் நன்மைக்கே எனும் எண்ணத்தை எழுப்பும் நடு வழியில் - பொன்னான வழியில் வாழு மாறு நமக்கு வள்ளுவர் வழிகாட்டு கிறார். இந்த நடுவழியே மனநலத் தையும், வாழ்க்கை வளத்தையும் அளிக்கும் என உறுதியாக அவர் நம்புகிறார்.

இன்றைய இருபத்தோராம் நூற் றாண்டு - இக்காலகட்டமானது விண் வெளி ஆராய்ச்சியில் பல சாதனை களைக் கண்டுள்ளது. இக்காலத்தில் மனித சிந்தனையைப் பகுத்தறிவும், அறிவியலும் ஆட்கொண்டுள்ளன; வழிநடத்திச் செல்கின்றன. இத்தகை காலச் சூழலில் தோன்றியுள்ள சிறப்புமிகு சிந்தனையாளர்களின் உள்ளத்தைக் கவரும் ஆற்றலைத் திருக்குறள் பெற்று விளங்குவது விந்தையாகும். அன்பின் அடிப்படை யில் அமையும் வாழ்க்கையையும், தொண்டு நெறிகளையும் நிலைக் களமாகக் கொண்ட திருக்குறளின் சமுதாய வாழ்க்கைத் தத்துவம், மேற்கு நாட்டு அறிஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. ஆல்பேர்ட் சுவைட்கர் (Albert Schweitzer, Indian thought and its Development, P.199) எனும் ஜெர்மனிய நாட்டு அறிஞர், "பணிபுரிவதில் - பிறருக்கு உதவி செய்வதில் - பிறருடைய துன்பத்தைத் துடைப்பதில் - இன்பத்தைக் காணு மாறு தூண்டும் குறட்பாக்கள், மிகச் சிறந்த வையாகும். ஆனால் திருவள்ளுவர் இக்கொள்கையை போதிப்பது வியப் பூட்டுகிறது. திருக்குறளில், உலகப் பற்றும், வாழ்க்கைப் பற்றும் மறுக்கப் படாத ஒரு வாழ்வியல் கொள்கை உரு வாக்கப்பட்டுள்ளமைக்கு இது ஒரு சிறந்த சான்றாகும். அன்பின் அடிப்படையில் மனித குலத்திற்குத் தொண்டாற்றும் தூயநெறி திருவள்ளு வரால் வகுத்தளிக்கப்பட்டு ள்ளமை, இந்தியச் சிந்தனை யாளர்களுள் அவருக்குச் சிறப்புமிக்க தோர் இடத்தைத் தேடிக் கொடுத்துள்ளது" என்று மொழிந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் காவி உடுத் திடாமல், கமண்டலம் எடுத்திடாமல்



துறவுபூண்ட முனிபுங்கவராக வாழ்ந் தவர் யோகர் சுவாமிகள். அவருடைய அமெரிக்கச் சீடரான குரு சுப்பிர முனி (மணி)யா எனும் துறவி, ஹாவாய்த் தீவில் "சைவ சித்தாந்தத் திருமடத்தின்" தலைவராக விளங்குகிறார். அவர் "எல்லாச் சமயங்களும் சந்திப்பதற்குரிய இடமாக, பொது இடமாகப் புனிதக் குறள் இன்று சிறப்புடன் விளங்குகிறது. திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, இன்றைய புத்துலகிற்குரிய பொதுமையான அறநெறியாக அமைந் துள்ளது" என்று உலகின் பல பகுதி களில் முழங்கி வருகிறார். (Master Subramuniya, Holy Kural, Scripture of saivite Hinduism, Saiva Siddhantha Church P.06.)

"முன்னேற்றத்தை நாடுவோராக அவர் அகக்காட்சி தருகிறார். இதனால் மனிதனுடைய நல்வாழ்வை விரும்பும் அன்பராகவும், நண்பராகவும், நல்லா சிரியராகவும், அவர் அன்போடும் பண்போடும் மனித வாழ்க்கை மாண் புற அறவுரைகளை அறிவுறுத்துகிறார்." எனும் அலெக்சாண்டர் பியாதிகோர்ஸ்கி எனும் ருஷ்ய நாட்டு இந்தியப் பண் பாட்டு இயல் (Indo logist) அறிஞரின் கருத்துரை, நடுவுநிலை பிறழாத நல்லறிஞர் ஒருவர் திருவள்ளுவருக்குச் சூட்டியுள்ள புகழ்மாலையாகும். (Introd to Thirukkural Transtation in Russian by Alif Im bragimon)

மனித குலத்தின் அவலங்களையும் துன்பங்களையம், துயரங்களையும், அல்லல்களையும், ஆற்றாமையையும் போக்கவல்லது, நீக்கவல்லது குறைந்த பட்சம் தணிக்கவல்ல மாமருந்து அன்பும் அகிம்சையுமே என்று திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

அன்புற் றமர்ந்த வழக்கென்ப -
வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு.
(குறள்:75)

பொறுத்த லிறப்பினை என்றும்
அதனை
மறத்த லதனினும் நன்று.
(குறள்:152)

அன்புள்ளம் வாய்த்தோர், ஒருவர் தமக்குச் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுவதோடு அமையாது மறந்துவிடவும் வேண்டும் என்று புதியதொரு வழியை வள்ளுவர் காட்டு கிறார். மேலும் பழிக்குப் பழிவாங்கும் செயல், நிலைத்த பயனைத் தராது என்பதை,

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.
(குறள்:156)

என்று தெரிவிக்கின்றார்.

தீமை செய்தவரைத் தண்டிப்பதற் குரிய சிறந்தமுறை ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா! தீமை செய்தவர் கள் தாங்கள் செய்த தீமைக்காக வெட்கப்பட்டுத் தலை குனியுமாறு, தாம் அவர்களுக்கு ஒரு நன்மையைச் செய்வதாகும் எனப் புதுவழியொன்றை வள்ளுவர் காட்டுகிறார்.



இன்னாசெய் தாரை யொறுத்தல்
அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.
(குறள்:314)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

மனிதப் பண்புகள் நிறைந்த சான்றோர்கள், துன்பம் செய்தவருக்கும் இனிய உதவிகளையே செய்வர் என்று கூறி, நம்மை எல்லாம் மாமனிதராக பெருத்தகையாளராக (Super man) வாழுமாறு வள்ளுவர் வேண்டுகிறார்.

இன்னாசெய் தார்க்கு மினியவே
செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.
(குறள்:987)

இவ்வாறு அன்பையும் இன்னா செய்யாமையாகிய அகிம்சையையும் போற்றிப் பின்பற்றுபவனே இவ்வுலகில் மனிதனாக மனிதப் பண்புகள் யாவும் நிறைந்த மனிதனாக சான்றோனாக வாழ இயலும் என்பதைத் தெய்வப் புலவர் ஒல்லும் வகையெல்லாம் ஓயாது அறிவுறுத்துகிறார்.

வான்மறை தந்த வள்ளுவர் வழங்கும் மற்றொரு முக்கியமான நற்செய்தி "செய்கபொருளை" என்ப தாகும். இவ்வுலக வாழ்க்கையில் அமைதியும், இன்பமும் பெறவேண்டு மானால் பொருள் தேவை.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை" (குறள்:247)

என்பதை அனுபவத்தில் கண்ட றிந்தவர் வள்ளுவர் என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது.

ஒருபொருளாக மதிக்கத்தகாத வரையும் மதிப்புடையவராகச் செய்வது அவர்களிடம் குவியும் பொருள். எனவே இத்தகைய பொருளைவிடச் சிறப்புடைய பொருள் (செல்வம்) உலகில் வேறில்லை எனும் கருத்தில்,

பொருளல் லவரைப் பொருளாகச்
செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்
(குறள்:751)

என்று வள்ளுவர் அறிவிக்கிறார். இதனாலேயே "ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும்; அவனுடைய பகை வரின் செருக்கை கெடுக்கவல்ல கூரிய படைக்கருவி (வேல், வாள் போன்றவை) பொருளை விடக் கூர்மையானது வேறொன்றும் இல்லை" என்று முழங்குகிறார்.

செய்க பொருளைச் செறுநர்
செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்
(குறள்:759)

பொருளை ஈட்ட வேண்டும். ஆனால் நல்லவழியில் ஈட்ட வேண்டும் எனும் கருத்தைப் பலவாறு அவர் தெளிவுறுத்தியுள்ளார். எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டதை அப்படியே நம்பாமல்) அப்பொருளின் மெய்யான இயல்புகளைக் காண்பதே அறிவுடைமையாகும்" என்று அறிவிக்கிறார்.

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"
(குறள்:423)



இதைப் போன்றே "எந்தப்பொருள் எந்த வகையாய்ப் பார்ப்பதற்குத் தோன்றினாலும் (அதன் தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல்) அப் பொருளின் உண்மையான இயல்பு களைக் கண்டறிவதே அறிவுடைமை யாகும்" எனும் பொருளில்,

எப்பொரு ளெத்தன்மைத் தாயினும்
அப்பொருள்
மெய்பொருள் காண்ப தறிவு
(குறள்:355)

என்று வள்ளுவர் தெளிவுறுத்து கிறார். இவை இன்றைய உலகிற்கு விளம்பர யுகத்திற்கு மிகவும் இன்றி யாமையாது தேவைப்படும் அறிவுரை யாகும்.

இருபத்தோராம் நூற்றாண்டின் முற்கூறிலே நாம் வாழுகிறோம். நாகரிகத்தின் கொடுமுடியை வாழ்க்கை யின் பல்வேறு துறைகளில் நாம் அடைந்துவிட்டதாக வீம்பு பேசுகிறோம். ஆனால் நாகரிக வளர்ச்சியின் தொடக்க காலத்தில், ஆண் பெண் ஒழுக்கத்தைப் பற்றிக் கொண்ட கருத்தினையே நடை முறையில் இன்றும் போற்றி வரு கிறோம். "ஒருத்திக்கு ஒருவன்" என்பது நாகரிகம் அடையத் தொடங்கிய கால வாழ்க்கையின் சித்தாந்தமாகும். ஆணின் அடக்குமுறைக்கும் கொடு மைக்கும் அடிமைப்பட்ட சமுதாயமாக (Male dominated Society) ஐயாயிரம் ஆண்டுகளாக மனித குலம் இருந்து வருகிறது. ஆனால், "ஒருவனுக்கு ஒருத்தி" எனும் கொள்கை, எங்கோ அத்தி பூத்தாற் போல உலக அறிஞர் ஓரிருவர் அறி வுறுத்தியுள்ளனர். இதனை முதன் முதல் அறிவித்த பெருமை வால் மீகிக்கும், வள்ளுவருக்குமே உரிய தாகும். இன்று வரை இது போற்றப் படும். இலட்சியமாக ஒரு சிலரால் பாராட்டப்படும் கொள்கையாக இருந்து வருகிறதேயொழிய. நடைமுறையில் பின்பற்றப்படும் விதி முறையாக செயல்முறையாக மாற்றப்படவில்லை.

திருவள்ளுவருடைய காமத்துப்பால் காட்டும் காதல் ஓவியத்தை, உலகில் வேறு எந்தக் காதல் காப்பியத்திலும் காண இயலாது. "பெண்தன்மை உடைய மகளிர், தங்கள் கண்களால் உன் அழகினைக் கண்டு அனுபவிக் கின்றனர். எனவே நீ ஒழுக்கம் குன்றியவன் ஆனாய்! ஆகவே தான் உன்னைத் தழுவ விரும்பவில்லை" என்று ஒரு பெண் - மனைவி, காதலி, காதலனிடம் கூறுவதாக,

பெண்ணியலா ரெல்லாருங் -
கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.
(குறள்:1311)


என்பது இடம்பெற்றுள்ளது.

நெஞ்சத்தார் காத லவராக -
வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.
(குறள்:1128)

என்ற குறள் மூலம், காதலன் காதலியின் நெஞ்சிலே இடம்பிடித்திருப்ப தனால் அவள் சூடான பானமெதனை யும் உண்ணுவதாயில்லை. அப்படிச் சூடானவற்றைத் தான் உண்டால் நெஞ்சுளே நீங்காதுறையும் என் காதலருக்கு அச்சுடுபானம் கட்டுவிடுமே என்று அஞ்சுவதாக இருக்குறள் கூறுவது கவனிக்கத்தக்கது.

✸✸





‘எல்லா உயிரும் இன்புற்றிருக்க நாம் என்ன செய்யலாம்.’
- வள்ளுவர் காட்டும் வழி -

கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை

வள்ளுவப் பெருமான் இந்த உலகம் நல்லபடி வாழ வேண்டும்; எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே திருக்குறளைப் படைத்தார். அதனால்தான் உலகினர் எல்லோருமே திருக்குறளைப் போற்றுகின்றனர்.

திருக்குளைப் படிப்பவர்கள் எப்படிப் படிக்க வேண்டும். படித்தபின் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லாமற் சொல்லியுள்ளார். கற்றல் பற்றிச் சொல்லும் போது **கற்க, கசடறக் கற்க, கற்பவை கற்க, கற்றபின் அதற் குத்தக நிற்க** என்று சொல்கின்றார். இதன்மூலம் உலக நன்மை கருதி அவர்தந்த திருக்குறளை நாம் கற்க வேண்டும்; அதை, கசடறக் அதாவது சந்தேக விபரீதம் அறத் தெளிவாகக் கற்க வேண்டும்; அவ்விதம் கற்க வேண்டிய முறையில் நல்லாசிரியரிடம் கற்றபின், அதற்குத்தக, கற்றதற்குத்தக நிற்க வேண்டும்; கற்றபடி வாழ வேண்டும் என நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஏனைய இலக்கியங் களைப் போன்று இலக்கிய இன்பம் பெறுவதற்கும், பேசுவதற்கும், எழுது வதற்கும் மட்டுமல்லாது அதன்படி வாழ் வதற்காகக் கற்க வேண்டும். அதனால் தான் பெரியோர்கள் திருக்குறளை ஒரு வாழ்வியல் நூல் எனக் கூறு கின்றார்கள்.

வள்ளுவர் உலக உயிர்களின் நன்மை கருதித் திருக்குறளைப் படைத்தார் என்னும் போது இதனைப் படிப்போரும், அவர்கள் மூலமாகப் படிப்பறிவில்லா மக்களும் மற்றும் பகுத்தறிவு இல்லாத உயிரினங்களும் நன்மை பெறவேண்டும் என்பதே நோக்கம் எனக் கொள்ளலாம்.

ஆன்மீக வாதிகள்முதல் சோஸலிச வாதிகள்வரை, ஆஸ்திகர் முதல் நாஸ்திகர் வரை, சமய வாதிகள் முதல் அரசியல்வாதிகள் வரை எல் லோருமே **எல்லா உயிரினங்களும் இன்புற்றிருக்க வேண்டுமென்றே** கூறுவர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பாரதியார் **“தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்”** என்பார். திருமூலர் இதையே **“யாவர்க்கும் ஆம் உணும்போதொரு கைப்படி”** என்பார். கந்தபுராணம் **“குறைவிலாது உயிர்கள் வாழ்க”** என்னும். இக்காலச் சினிமாப் பாடல் **“எல்லாரும் எல்லாமும் பெற**



வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலைவேண்டும்" என்கிறது. இப்படி எங்கு பார்த்தாலும் **"எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும்"** என்ற கொள்கை போற்றப்படுவதைக் காண்கின்றோம்.

அப்படியானால், இதில் திருக் குறளைப் படிக்கும் எங்களின் பங்கு என்ன என்று சிந்திக்க வேண்டி யுள்ளது. வள்ளுவர் இதில் எங்களின் பங்கு என்ன என்பதை இரண்டு வகைப்படுத்துகின்றார். ஒன்று செய்தல்' மற்றையது செய்யாமல் விடுதல். எதைச் செய்தல் வேண்டும் எதைச் செய்யாமல் விடவேண்டும் என்ப தையும் அவரே அறுதியிட்டுச் சொல்கின்றார்.

தர்க்க ரீதியாக எங்களைப் பார்த்துக் கேட்கின்றார். நீ அறிவுடையவனா? அறிவீனனா என்பதைப் பின்வரும் அளவு கொண்டு அறிந்து கொள். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை உனக்கு வந்த துன்பமாகக் கருதுவா யானால் நீ அறிவுடையவன். அப்படி யில்லையென்றால் உன் அறிவால் பயனில்லை, நீ அறிவற்றவன்.

அறிவினா னாகுவ துண்டோ - பிறதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.
என்பது குறள்.

ஆகவே பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருத வேண்டும் என்பதன் மூலம் நாம் செய்யவேண்டியது, எமக்கு வந்த துன்பத்தைப் போக்குவது போலப் பிற உயிர்களுக்கு வந்த துன்பத்தையும் போக்க வேண்டும். இதன்மூலம் நாம் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழ வேண்டும் என்பதும் சொல்லப் படுகின்றது.

இதனையே மேலும் விரிவாக்கம் செய்து **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்** வேண்டும் என்கிறார். பசித்துன்பம் தான் உயிர்களுக்கு என்றும் உள்ள கொடியதுன்பம். அதைப் போக்கு வதற்கு நீ செய்யக் கூடியது உன் தோட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்கும் கொடுத்து பல உயிர்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் - நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

என்னும் குறள் மூலம் அறிஞர் கூறிய எல்லா அறங்களிலும் மேலானது **"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்"** என்கின்றார். எனவே நாம் செய்ய வேண்டுவன பிற உயிர்க்கு வரும் துன்பத்தை நமது துன்பம் போல மதித்து அவற்றைக் காத்தல். அதற்காகச் செய்ய வேண்டியது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதையுணர்ந்து அதன்படி செய்து வாழவேண்டும்.

அடுத்து நீ சிலவற்றைச் செய்யாது விடுவதாலும் எல்லா உயிரும் இன் புற்றிருக்க உதவலாம் என்கின்றார். அது உனக்கும் பிற உயிர்க்கும் நன்மை தரும். உன்னில் நீ அன்புடை



யவனானால் தீயது எதையும் செய்யாதே. தீயதைச் செய்தால் உனக்குக் கேடுவரும். உன்னால் பிறர்க்கும் கேடுவரும்.

தன்னைத்தான் காதல னாயின் -
எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

என்பது குறள். எனவே தீயன செய்யாதிருப்பதன் மூலம் பிற உயிர்கள் இன்புற்றிருக்க உதவலாம் என உணர்த்துகின்றார்.

தீயதைச் செய்யாதிருத்தல் மூலம் உயிர்கள் இன்புறுவது மட்டுமல்ல அவையெல்லாம் எம்மைக் கை கூப்பித் தொழும் எனும் உச்ச நிலையையும் காட்டுகின்றார். உலகி லுள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழுவதை யார்தான் விரும்ப மாட்டார்கள். அதற்காக நீ செய்வதல்ல செய்யாமல் விடவேண்டியவை இரண்டு. **ஒன்று பிற உயிர்களைக் கொல்லாமல் விடுதல்; மற்றையது கொன்ற உயிர்களின் புலால் உடம்பை உண்ணாமல் விடுதல்.** இதனை,

கொல்லான் புலாலை -
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

எனும் குறள் மூலம் உணர்த்து கின்றார்.

எனவே உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் இன்புற்று இருக்கவேண்டும் என்று விரும்பும் நாம் பிற உயிர்க்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருதி உதவுதல்,

நமது தேட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்குக் கொடுத்துப் பகுத்துண்டு பல்லுயிர் ஒம்புதல் ஆகியவற்றைச் செய்தும் தீய செயல் களைச் செய்யாமலும் குறிப்பாகக் கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் வாழ்வதன் மூலம் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவ வேண்டும், திருக்குறளைக் கற்று பயன் இதுவாதல் வேண்டும்.

✹✹


கபிலர்

தினையளவு போதாச் சிறுபுல் நீர்கண்ட
பனையளவு காட்டும் படித்தால்-மனையளகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி

பரணர்

மாலும் குறளாய் வளர்ந்துஇரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்-வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல்லாம் அளந்தார் ஓர்ந்து





'வள்ளுவத்தில் விலங்கியல்'

கலாபூஷணம், வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்.

தமிழ்க் கடலை உள்ள பழைய நூல்களை மூவகையாக வரிசைப்படுத் தலாம். அவற்றுள் ஒரு வழக்கு "பாட்டினும் தொகையினும் கீழ்க் கணக்கிலும்" என்று வரிசைப்படுத்து கின்றது. அவை முறையே பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதிணெண் கீழ்க்கணக்கு என்பனவாகும். இம் மூன்றனுள் பதிணெண் கீழ்க் கணக்குத் தொகுப்பினுள் பதினெட்டு அருமையான அறநூல்கள் உள்ளன. அவையாவன (1) நாலடியார் (2) நான் மணிக்கடிகை. (3) இன்னா நாற்பது (4) இனியவை நாற்பது (5) கார் நாற்பது (6) களவழி நாற்பது (7) ஐந்தினை ஐம்பது (8) ஐந்தினை எழுபது (9) திணை மொழி ஐம்பது (10) திணை மாலை நூற்றைம்பது (11) திருக்குறள் (12) திரிகடுகம் (13) சிறுபஞ்ச மூலம் (14) ஆசாரக்கோவை (15) பழமொழி (16) முதுமொழிக் காஞ்சி (17) ஏலாதி (18) கைந்நிலை ஆகும். இவற்றின் ஆசிரியப் பெருமக்கள் முறையே சமண முனிவர்கள், விளம்பி நாகனார், கபிலர், பூதஞ்சேந்தனார், மதுரை கண்ணகன் கூத்தனார், பொய்கையார், மாறன் பொறையானர், மூவாதியார், கண்ணன் சேந்தனார், கணி மேதாவியார், திருவள்ளுவர், நல்லாதனார், காரி யாசான், பெருவாயின் முள்ளியார், முன்றுதையரையனார், கூடலூர்க் கிழார், கணி மேதாவியார், ஆசிரியர் பெயர் தெரியவில்லை பத்துப் பாட்டையும், எட்டுத் தொகையையும் மேற்கணக்கு என்றும், பதினெட்டு நூல்கள் கீழ்க்கணக்கு என்பது பன்னிரு பாட்டியல் கூற்று "கணக்கு" என்றால் நூல் என்பது பொருள்

".....மூத்தோர்கள்
பாடியருள் பத்துப் பாட்டும்
எட்டுத்தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்
(தமிழ் விடுதூது)

மக்களுக்கு வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கை வடமொழி நூல்கள் பலவற்றில் காணலாம். ஆனால் இந்நான்கு உறுதிப் பொருள் களையும் ஒருங்கே வழங்கும் ஒப்பற்ற தமிழ் நூல் "திருக்குறளாகும்." நரிவெரூ உத்தலையார் என்ற புலவர் பெருமகன் திருவள்ளுவ மாலையில்

"இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் முன்பு அறியச் சொன்ன முதுமொழி நூல் - மன்பதைகட்கு உள்ள பரிதென்று அவைவள்



ளுவர்உலகம் கொள்ள மொழிந்தார் குறள்". என்று சுட்டுகின்றார்.

உலகின் மிகச் சிறந்த பொருள் களைப் பட்டியலிட்ட "கவிசாகதப் பெருந்தேவனார்

"பூவிற்கு தாமரையே
பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற்கு அருமுனியா,
ஆனைக்கு அமரரும் பல்
தேவில் திருமால் எனச் சிறந்தது
என்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண்பா"
என்பார்.

இந்நூலுக்குப் பலவகைச் சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் ஒருசில.

குறட்பாவால் ஆன பழைய நூல் இது ஒன்றுதான். தமிழின் முத லெழுத்தாகிய "அ"கரத்தில் தொடங்கி 'ன்' என்பதில் நிறைவுறும் நூல் இது ஒன்றே. பத்து சிறந்த உரை யாசிரியர்கள் வேறெந்த நூலிற்கும் அமைந்ததில்லை. "திருவள்ளுவ மாலை" என்ற பெருமைமிகு தொகுப்பினைப் பெற்றதும் இது ஒன்றே. பிற மொழிகளில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட தனிச் சிறப்புடையது. எல்லா சமயத்தினர்க்கும் உரியது. குறித்த ஒரு சமயம் சுட்டப்படாதது. சிறந்த நீதி நூல் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திற்கு இணை யானது. திருக்குறள் தொடாத துறையே இல்லை எனலாம்.

அறமுறைக்க பலவழி முறை களைக் கையாண்ட பொய்யில் புலவர் "விலங்குகளின் மூலமாகவும், மன்னனுக்கும் மக்களுக்கும் அறம் உரைக்கின்றார். ஒரு சில இடங்களைக் காண்போம்.

யானை - புலி

விலங்குகளுக் குள் ளேயே உருவத்தால் பெரியது - அது மட்டுமல்ல. வலிமையும் உடையது.

புலி - வலிமையானது - கொடுமையானது இந்தப் புலிக்கு யானை அஞ்சும் இயல்பை உடையது.

பரியது கூர்ங்கோட்ட தாயினும் - யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

காரணம் புலி யானையை எப்பொழுதும் முன்னின்று தாக்காது. பின்னாலிருந்து பாய்ந்து மத்தகத்தைப் பிளந்து நிணச் சோற்றை உண்ணும் இயல்புடையது வல்லவர்கள் முன் னின்று தாக்கினால் எதிர்தாக்குதல் தொடுக்கலாம். ஆனால், புலவர்கள், பின்னாலிருந்து முதுகில் குத்தினால் அவர் களைக் கண்டு அஞ்சத் தானே வேண்டும். யானையின் கனவில் புலி வந்தாற் கூட யானை இறந்து விடுமாம். இதை வைத்தே



"சிம்ம சொப்பனம்" என்ற தொடர் உருவாயிற்று ஆண்மையும் பெருமை யும் உடையதாயினும் தமக்குப் பொருந்தாத நிலத்துச் சென்றால். அற்ப நரியும் அதனை வென்று விடும்

காலாழ் களரின் னரியடுங் - கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு.

அரசர் பகைவகைச் சார்தலாகா இடனும் சார்ந்துதிப்படும் இழுக்கையும் கூறுகிறார்.

பழக்கிய யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பதை

வினையான் வினையாக்கிக் - கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

பெரும்பொருள் கொண்டு ஒருவன் ஒரு வினையை ஏற்றால் அச்சமில் லாமல் செய்து முடிக்கலாம் என்பதை குன்றின் மீது நின்று யானைப் போரைக் கண்டு மகிழ்வதற்கு ஒப்பாகக் கூறுகின்றார்.

குன்றேறி யானைப்போர் - கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

சிறிய காரியங்கள் செய்து வெற்றி பெறுவதை விட பெரிய காரியங்களில் ஏற்படும் தோல்வி பெருமை தரத்தக்கது.

கான முயலெய்த வம்பினில் - யானை
பிழைத்தவே லேந்த லினிது.

கைவேல் களிற்றோடு போக்கி - வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

கடாஅக் களிற்றின்மேற் கட்படா - மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

முதலை:-

யானையைக் குறிக்கும் குறள் வரிகளைப் பார்த்தோம் இனி முதலை பற்றிக் குறிப்பிடுகிறார்.

முதலைக்குத் தண்ணீரில்த் தான் வலிமை அதிகம் அதுவே வெல்லும். ஆனால் நீரினின்று வெளிவே வந்தால் வலிமை குறைவான பிறவிலங்கு களும் அதனை வென்று விடும்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற.

எல்லோரும் தம்நிலத்து வலியர்

ஆமை

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து.
இதனால் மெய்யடக்கம் கூறப்பட்டது.

மீன்

சூதில் கூறுகிறார். வெல்லும் தகையவராய் இருப்பினும் சூதினை ஒழியுங்கள் என்கிறார்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை
வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

பிறழும் அழகிய பெண்களின் கண்களுக்குக் கயல் மீன் உவமை.

கலலுண்கண் யானிரப்பத் துஞ்சிற்
கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

மான்

பெண்ணின் கண்ணை மானின் விழிகளுக்கு ஒப்பிடுவர்.

கூற்றமோ கண்ணோ பிணையோ
மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து.

பெண்களின் கண்கள் மருட்சியும், வெருவுதல் நோக்கமும் உடையதா தலால் மானிற்கு இணையாகக் காண்கின்றனர்.

பிணையேர் மடநோக்கு நாணு
முடையாட்
கணியெவனோ வேதில் தந்து.

கவரிமா

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா -
வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்.

ஆடு

ஆட்டுச் சண்டையில் ஆடு மோத வருவதற்கு முன்னால் பின்னாலே கால்வாங்கி முன்னால் பாயும் தன்மை வெற்றி பெறும் பொருட்டே. அதுபோல தான் எடுத்த காரியம் வெற்றிபெறு வதற்கு தாமதித்தல் இழுக்காகாது

ஊக்க முடையா னொடுக்கம்
பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

ஆ:-

மன்னன் தக்கவாறு காவாவிடின் எற்படும் பல தீங்குகளில் ஒன்றுதான் பசுக்கள் பால்சொரிவதைக் குறைப்பது.

ஆபயன் குன்று மறுதொழிலோர் -
நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

இரத்தலின் இழிவைக் கூறவந்த பொய்யாப் புலவர் பசுவிற்கு நீர் கேட்டல் கூட இழிவே என்கின்றார்.

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.



எலி-அரவு:-

நாகம் மூச்சு விட்டாலே எலிக் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

ஒலித்தக்கா லென்னா முவரி -
யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

மன ஒற்றுமையில்லாதவருடன் வாழ்தல் கொடிது.

உடம்பா டிலாதவர் வாழ்க்கை -
குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

சந்திர கிரகணம் இராகு கேது என்னும் பாம்புகள் சந்திரனைத் தீண்டுவதால் உண்டாகிறது என்பது உலக வழக்கம்.

கண்டது மன்னு மொருநா -
ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

புழு

எலும்பில்லாத புழு வெயிலில் இறந்து விடுவதைப்போல அன்பு இல்லாத உயிர்கள் அறத்தினால் வருத்தப்படும்.

என்பி லதனை வெயில்போலக்
காயுமே
அன்பி லதனை அறம்.

விலங்குகளைப் போலவே பறவைகளும் நீதி உகைக்கின்றன.

எப்பொருள் யார்யார்வாய்க் -
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதே
அறிவல்லா?

✹✹


நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறம்முதலா அந்நான்கும்-ஏனோர்க்கு
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉலகு என்ஆற்றும் மற்று

மாமூலனார்

அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும்
வள்ளுவர் என்பான் ஓர்பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடையார்





இந்நூற்கு இணையாகும் ஏந்நூல்

கவிஞர் கிண்ணியா ஏ.எம்.எம்.அலி

தெய்வப் புலவர் திருவள் ளுவரென்னும்
பொய்யாப் புலவர் புவியினுக்குச் - செய்து
அளித்திருக்கும் நீதிநூல் ஆண்டுபல சென்றும்
நிலைத்திருக்கும் நூற்கில்லை நேர்!

முப்பாலா லானநூல் முப்பாலுள் ஒன்றான
அப்பாலுள் ஒன்றே அறத்துப்பால் - அப்பாற்
பொருட்பா லதற்கப்பால் காமத்துப் பாலும்
திருக்குறள் ஈயுந் தினம்

வாழ்வியலைச் செப்பும் வளமான தர்மத்தை;முப்
பாலியலுக் கூடாய்ப் படிப்பிக்கும் - நூலிதனைத்
தாரணியில் மிக்கத் தலைசிறந்த நூலென்றே
ஓரணியில் நின்றுரைப்பார் ஒத்து!

நாடுஇனம் சாதிமதம் பேசுமொழி என்றுவேறு
பாடுஇன்றி நன்நெறியைப் பாரிலுளோர் - கூடெலார்க்கும்
இந்நூல் உரைக்கும் இருவரிப் பாநூற்கு
எந்நூல் இணையாகும் இங்கு?

'நாலடியார்' என்கின்ற நான்குவரிப் பாக்களும்
ஈரடியாற் செய்த எழிற்குறளும் - ஆறடியாய்ச்
சொல்லுக்குச் சேர்க்குஞ் சுவையும்நல் லூட்டமும்
பல்லுக்கு ஆல்,வேல்போற் பார்!

பரந்த பொருள்கொண்டு பாவடிகள் தோறும்
சிறந்த நெறிமுறையைச் செப்பும் - தெளிந்த
மனத்தினராய் மாந்தரெலாம் மண்மிசை வாழக்
குணத்தை வழங்குங் குறள்!



ஆயிரத்து முந்நூற்று முப்பது வத்தனையும்
போயிருந்து வண்டுண்ணும் 'பூத்தேன்தான்' - பாயிரத்தை
இட்டமுடன் கற்றே இதயவறைக் குள்வைக்கும்
பச்சமுடன் நீயும் படி!

அமிழ்தினும் உன்னதம் அக்குறட் பாக்கள்
தமிழ்மணம் வீசுந் தகைசார்த் - மறை
வழங்கும் வாழ்வியற் சீர்மையைச் சொல்லும்
குறட்பெறு மானமோ குன்று!

வள்ளுவனார் வாய்ச்சொல்லில் வாழ்வாங்கு வாழுதற்கு
உள்ளதூவம் நல்ல உயர்கருத்து - சொல்லவரின்
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

பொதுமறை என்னுந் தமிழ்மறை என்றும்
எதுகுறை யேனுமெ இல்லாப் - புதுமறை
ஆகிப் புசரிதனில் அஃது மிளிர்ந்திடும்
சாகா வரமுடன் தான்!

✹✹

கல்லாடர்


ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறுஎனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்-நன்றுஎன
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி

சீத்தலைச் சாத்தனார்

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்-மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.





திருக்குறள் கூறும் அறம்

பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

அறிமுகம்

திருக்குறள் தமிழில் உள்ள அறநூல்களுள் முதன்மைச் சிறப்புடையதாகச் சிறப்புற்று விளங்குகின்றது. இந்நூலின் அமைப்பே அறன் வலியுறுத்தலை வற்புறுத்தும் திருவள்ளுவரின் நோக்கைத் தெளிவாக்குகின்றது. சிறந்ததொரு நீதி இலக்கியமாகக் கருதப்படும் திருக்குறள் காட்டும் அறநெறியின் வழித்தடத்திலேயே பதினெண் கீழ்க்கணக்கு நூலாகவுள்ள பிற அறநூல்கள் எழுந்தன. திருக்குறள், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் கூறும் பொதுமறையாக விளங்குகின்றது. இம் முப்பாலுள் "வீடு" பற்றிய குறிப்பும் உண்டு. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப்பொருள்களையும் விரிவாக 133 அதிகாரங்களாக அமைந்த 1330 குறட்பாக்களில் கூறுகின்றது. அறம் பற்றிய சிந்தனைகளைப் புலப்படுத்துவதே திருக்குறளின் மையக்கருத்தாக விளங்குகின்றது. திருக்குறளில் இடம் பெறும் அறம் பற்றிய கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறம் எனும் சொல்

"அறம்" என்னும் சொல்லின் பொருள் மிக விரிந்ததாகவும், ஆழமானதாகவும், வாழ்க்கையில் நல்நிலைகளையும், நல்லியல்புகளையும் அணைத்துச் செல்வதாகவும் அமைந்துள்ளது. வடமொழியில் "தர்மம்" என்று கூறப்படும் சொல் தமிழில் "அறம்" என்று கூறப்படும். "அறம்" என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்ற பொருள்கள் பெருவழக்காக வழங்கப்பட்டு வருவதோடு ஞானம், கற்பு, அறச் சாலை, இல்லறம், துறவறம் போன்ற சொற்களும் அறத்தைக் குறித்து நிற்பனவாகத் தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. "அறம்" என்பதை ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ பண்டைத் தமிழ்ச் சான்றோர் கருதவில்லை. அதனை அவர்கள் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினர். ஒழுக்கநெறி முறைகளுக்குரிய தொகுப்பாகவே அறம் கொள்ளப்பட்டது. திருக்குறள் வாழ்வியல் அறங்களையும், ஒழுக்க விழுமியங்களையும் புலப்படுத்தும் அறநூலாகத் திகழ்கின்றது.

அறத்தின் அடிப்படை

உள்ளம் தூய்மையாக இருப்பதே அறம் எனப்படும். தூய்மையான



உள்ளம் உடையவனாக இருப்பது அனைத்து அறங்களுக்கும் அடிப்படை என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். இது திருக்குறளில்,

மனத்துக்கண் மாசில னாதல் - அனைத்தறன்
ஆகுல நீர பிற. (குறள்: 34)

எனவரும். மனதில் மாசின்றி அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ் சொல் என்ற இந்நான்கினையும் கடிந்து நடப்பதே அறத்தின் அடிப்படையும் அறத்தின் இயல்பும் ஆகும்.

இதனைத் திருவள்ளுவர்,

அழுக்காறு அவாவெகுளி - இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம். (குறள்: 35)

என மொழிவர்.

அறத்தின் சிறப்பும் பயனும்

திருக்குறளில் உள்ள அறன் வலியுறுத்தல் என்னும் நான்காவது அதிகாரத்தில் அறத்தின் சிறப்புச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. திருக்குறள் முழுவதும் 'அறம்' இழையோடிக் காணப்படுகின்றது. அறம் ஏன் செய்ய வேண்டும்? அறவாழ்வு வாழ்வதால் என்ன பலன் கிடைக்கும்? என்பதற்கான விடைகளைத் திருக்குறள் திரட்டித்தருகின்றது. அறம், வீடு பேற்றையும் தந்து இம்மைக்கும் மறுமைக்கும் துணையாய் நிற்றலால் அதைவிட வேறு ஆக்கம் உயிருக்கு இல்லை. (குறள்:31), அதனை மறப்பதை விடக் கேடு வேறில்லை; ஆதலின் இயன்ற வழிகளில் இடைவிடாமல் முக்கரணத் தாலும் அறம் செய்தல் வேண்டும். (குறள்: 32), மனத்தில் மாசின்றி அறம் செய்தல் வேண்டும். (குறள்:34), பிறகு செய்யலாம் என்று எண்ணாது எப்பொழுதும் அறம் செய்தால் அது உயிர்போகும் காலத்தில் அழியாத துணையாக உதவும். (குறள்:36), அறத்தின் பயன் இது என்று விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. சிவிகையைத் தாங்கிச் செல்பவனுக்கும் அதன் மேல் ஊர்ந்தானுக்கும் இடையேயுள்ள வேற்றுமையினால் நன்கு உணரலாம். (குறள்:37), வீணாகக் காலம் செல்லாமல் அறம் புரிந்தால் உலகில் பிறந்து இறந்து வரும் ஓட்டத்தை அது அடைத்துவிடும். (குறள்:38), அறத்தினால் வருவது தான் இன்பம். அறமின்றி வருவது இன்பம் அன்று (குறள்:39), ஒவ்வொருவனும் செய்ய வேண்டியது அறம். அறமல்லாத செயல் புரிதலால் வரும் பழியினின்றும் ஒழியவேண்டும். (குறள்:40), இன்முகத்தோடு விருந்தினரை உபசரிக்கின்றவர்களது இல்லத்தில் திருமகள் மனம் மகிழ்ந்து உறைவாள் (குறள்:84), விருந்தோம்பல் செய்பவரின் இல் வாழ்வு பருவந்து பாழ்படாது (குறள்:83), இனிய சொல் சொல்பவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் இன்பம் கிடைக்கும் (குறள்:98), தமக்குத் தீங்கு செய்பவனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழ் இருக்கும் (குறள்:156), தீப்பால் பிறருக்குச் செய்தவனை நோய் அடாது. (குறள்: 206), ஒருவன் தன் உள்ளத்திற்கு நேர்மையாகப் பொய் கூறாது ஒழுகுவானாயின்

அவனை உயர்ந்தோர் தம் உள்ளத்தில் என்றும் நினைப்பர். (குறள்: 294), வாய்மையால் மனம் தூய்மை பெறும் (குறள்:298), முற்பகலில் பிறருக்கு இன்னாத வற்றைச் செய்தால் பிற்பகலில் தமக்கு இன்னாதன அவர் செய்யாமலேயே தாமே வரும் (குறள்:319), ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுவானாயின் அவனுக்குக் கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும் (குறள்:203), திருக்குறளில் மேற்கண்டவாறு பல அறவியற் கருத்துக்களின் சிறப்பும் அவற்றிற்கான பயனும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறள் கூறும் அறம் பற்றிய கருத்துக்கள் உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் கூறப்பட்டுள்ளன. இந்த உத்தி தனிக் குறளுக்குள் மட்டு மன்றி அதிகார வைப்பு முறையிலும் அமைந்துள்ளது. தனித் திருக்குறளில் இந்த உத்தி முறைக்கு சான்றாக,

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை - இழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி. (குறள் :137)

என்பதைக் குறிப்பிடலாம். திருக்குறளில் வரும் அன்புடைமை, இனியவை கூறல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் உடன் பாட்டு முறையில் அறவாழ்வுச் சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன. வெஃ காமை, புறங் கூறாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, கள் உண்ணாமை, பயனில சொல்லாமை ஆகிய அதிகாரங்களில் எதிர்மறை யாலும் அறவாழ்வுச் சிந்தனைகள் சுட்டப்பட்டுள்ளன.

"அன்பே அறம்; அறமே அன்பு" என்பது திருக்குறளின் தொனிப் பொருளாகும். திருக்குறளில் அன்புக் கும் அறத்திற்கும் உள்ள பிரிக்க முடியாத தொடர்புகளும் செய்திகளும் அந்நூலின் பல இடங்களில் கூறப் பட்டிருப்பினும் அவற்றை வலியுறுத் தும் வகையில் அன்புடைமை, அறன் வலியுறுத்தல் என்ற தனித்தனி அதிகாரங்களில் முறையே அன்பின் பெருமையும், அறத்தின் மேன்மையும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் கூறும் அறம் தனிமனித நோக்குடையது. சமுதாய நோக்குடையது. சமய நோக்குடையது.

நல்வினைகளாகிய அறச் செயல் களையே எப்பொழுதும் செய்ய வேண்டுமென்பதும், தீவினைகளாகிய மறச் செயல்களைச் செய்யக் கூடாது என்பதும் திருவள்ளுவரின் அடிப்படை யான அறநெறிச் சிந்தனையாகும். இது திருக்குறளில்,

செயற்பால தோரு மறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி.
(குறள் : 40)

என வரும்.



அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கையாகும். (குறள்: 49). அந்த இல்வாழ்க்கைக்கு அன்பும் அறமும் அடிப்படையாக அமைகின்றன. (குறள் 45).

திருக்குறள் அறக்கடவுளை 'அறவாழி அந்தணன்' (குறள்: 8) என்று குறிப்பிடுகின்றது. என்பு இல்லாத உடம்பை வெயில் காய்ந்தாற் போல அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காய்கிறது. (குறள்:77) என்பது வள்ளுவரின் வாய்மொழியாகும். 'அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றாகும்" (சிலப் 20:1) என்ற சிலப்பதிகார வரியும் இங்கே ஒப்பு நோக்கத் தக்கது.

திருவள்ளுவர் அறத்துப்பாலில் தனிமனிதன் நற்குண நற் செய்கையை உடையவனாய், மனைவி மக்களுடன் அன்பு செய்து வாழ்ந்து, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை உணர்ந்து, உள்ளத்துறவு பூண்டு புலன்களை அடக்கி அருளுடைய வனாய் மெய்யுணர்ந்து வீடுபேறு அடைய வேண்டும் என்ற கருத்தை விளக்கமாக மொழிந்துள்ளார்.

முடிவுரை

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது திருக்குறள் கூறும் அறம் பற்றிய சிந்தனைகள் பண்டைத் தமிழரின் அறப் பண்பாட்டைத் தெளிவாகப் புலப்படுத்துவதுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவதற்கும் நிச்சயமாக உதவும் என்று உறுதி யாகக் கூறலாம்.

**

மருத்துவன் தாமோதரனார்

சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன்அளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில் - காந்தி
மலைக்குத்தும் மால்யானை வள்ளுவர் முப்பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு

நாகன் தேவனார்


தாளார் மலர்ப்பொய்கை தாம்குடைவார் தண்ணீரை
வேளாது ஒழிதல் வியப்பன்று - வாளாதாம்
அப்பால் ஒருபாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார்

சிறப்பீனுஞ் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

உ

சிவமயம்



வள்ளுவர் கண்ட சட்ட நெறி : ஒரு கண்ணோட்டம்

- கந்தையா நீலகண்டன்
(சட்டத்தரணி)

எல்லோரும் வழுத்துகின்ற எழில்நிறை தமிழ்மறை

திருக்குறளைத் தமிழ் மறையாகப் போற்றி அதன் தனி மாண்பினைப் பல சான்றோர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். வாழ்வு உயர்ந்திட நல்வழி காட்டிய அந்தத் தமிழ்ப் பொக்கிஷத்தைப் பற்றி எடுத்துரைத்த எமது தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் டாக்டர் கா.பொ.இரத்தினம் அவர்களின் தேன் தமிழ்ச் சொட்டுக்களில்,

"நல்லோர்கள் வகுத்துரைத்த
-நன்னெறிகள் பிறருடைய
நன்மை எண்ணாப்
புல்லோர்கள் தம்மாலே
-புவியோர்க்குப் பயனின்றிப்
போகச் சூதில்
வல்லோர்கள் முயன்றாலும்
- வடுப்படுத்த முடியாத
வழியைக் காட்டல்
எல்லோரும் வழுத்துகின்ற
-எழில்நிறைந்த தமிழ்மறையின்
ஏற்றம் அன்றே"

பண்டிதர் துதித்து உரைத்த வண்ணம் அறத்தின் திறமுரைத்துப் பொல்லாத் தீய இருளினுக்கு விடிவுணர்த்தி வாழ்வு நெறி வகுத்த தமிழ் மறையினை படிக்கும் வேளை வள்ளுவர் பெருமான் நீதி போற்ற உதிர்த்த சட்ட நெறிக் கருத்துக்களையும் காணலாம். அவற்றில் சிலவற்றைத் தொட்டுக் காட்டி வள்ளுவர் கண்ட சட்ட நெறி பற்றிய சில கருத்துக்களை ஈண்டு எடுத்துரைக்கத் துணிந்துள்ளேன்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல்
- அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.
(118)

என நடுவுநிலை நின்று நீதிபேணும் சிறப்பை இருவரிகளில் சிறப்புறச் செப்பிய வள்ளுவர் பெருந்தகை தந்த திருக்குறளில் இன்றைய சட்ட உலகத்தை வியப்பிக்கவல்ல பல சட்ட நெறித் தத்துவங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதனைப் பெருமையுடன் யானும் தமிழ் மகன் என்ற உரிமையுடன் தொட்டுக் காட்டுவதே இந்த ஆக்கத்தின் நோக்கம்.



"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று 'இல்வாழ்க்கை' அத்தியாயத்தில் (குறள்50) எடுத்துக்கூறவந்த வள்ளுவர் பெருமான் ஓர் இல்லத்தரசன் வாழ்வாங்கு வாழ நீதிதவறாது குற்றங்கள் புரியாது நல்லவனாக வாழ்வது எப்படி எனப் பல இடங்களில் அறிவுறுத்தியிருக்கிறான்.

சான்றோராக ஒவ்வொருவரும் வாழவேண்டும் என்பதை வலியுறுத்திய திருமுறை திருக்குறள் என்பதனையும் நாங்கள் உணர வேண்டும்.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை. (656)

பெற்ற தாய்க்குப் பசி பொறுக்காத நிலை ஏற்பட்டாலும் சான்றோர் பழிக்கும் செயல் எதனையும் ஒரு தமிழ் மகன் செய்ய மாட்டான்என சொல்லவந்தஎங்கள் புலவர் பெருமான் எமது வாழ்க்கை நிகழ்வை எப்படி உயர்த்திப் படம் காட்டித் தந்திருக்கிறார் என்பதனையும் ஈண்டு காண்கின்றோம்.

மன்னராட்சிகாலத்தில் வாழ்ந்து பாடிய புலவன் வள்ளுவன்.

"முறைசெய்து காப்பாற்றும்
- மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப்படும்".
(388)

தான் முறைசெய்து பிறர் நலியாமற் காத்தலைச் செய்வது ஓர் அரசனின் கடமை என எடுத்துரைத்தான்.

ஒரு நாட்டில் முறை பேணிய மன்னன் ஆட்சி செய்து மக்கள் போற்றித் துதிக்கும் கடவுளாகத் திகழவேண்டும் என்று மன்னன் நீதி பேணி ஆட்சி செய்யவேண்டிய பொறுப்பைத் தெய்வீகப் புலவன் எடுத்து இடித்துரைக்கும் சிறப்பே தனித்துவமானது. இன்றைய ஜனநாயக ஆட்சியில் ஆட்சிபீடத்தில் ஏறுபவர்கள் என்றும் மறக்கக் கூடாத அறிவுரை இது. அரச நீதி பிழைத்தோர் விரைவில் அழிந்துபோவார் எனச் சிலப்பதிகாரம் கூறியதையும் இன்றைய அரசியல் தலைவர்கள் மறக்கக்கூடாது.

சாட்சியவியல் (EVIDENCE)

இன்றைய நீதி மன்ற முறையில் வழக்கு ஆரம்பமாகின்றது, சாட்சி கூண்டில் ஏற்றப்படுகின்றான் அவனின் சாட்சியம் நெறிப்படுத்தப் படமுன் நீதி மன்றம் அவனுக்குச் சத்தியப் பிரமாணம் செய்வித்து வைக்கின்றது. உண்மை யேயன்றி வேறு எதுவும் புறம்பாகச் சொல்ல மாட்டேன் என்று சத்தியப் பிரமாணம் செய்த சாட்சி தான் ஒரு நீதி மன்றத்தில் சாட்சியம் செய்யமுடியும். உண்மையே இன்றைய சட்ட நெறி வழிநிற்கும் நீதி மன்ற நடை முறையின் அத்திவாரம் கூட.



"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க;
- பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்".
(293)

என எங்கள் ஒவ்வொரு வருக்கும் சத்தியப் பிரமாணம் செய்து வைத்திருக்கிறான் இந்தத் தெய்வப் புலவன். இக் குறளுக்கு பொழிந்துரை தந்த பரிமேலழகர் "ஒருவன் தன் நெஞ்சு அறிவது ஒன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யா தொழிக; பொய்த்தான் ஆயின் அதனை தன் நெஞ்சே அப்பாவத்திற்கு கரியாய் நின்று அதன் பயனாய துன்பத்தை எய்துவிக்கும்" என விளக்கினார்.

குற்றவியல் (CRIMINAL LAW)

எமது சட்டங்கள்யாவும் ஒரு முக்கியமான அடிப்படையில் எழுந்தவை ஒருவன் குற்ற உள்ளத்துடன் ('means rea'/ guilty mind) ஒரு பிழையான செயலைச் செய்யும் போதுதான் அது குற்றமாகின்றது.

தன் மனத்தின் கண் குற்றமுடையவன் அறம் பற்றிப் பேசவே முடியாது எனத் துணிந்த வள்ளுவர் பெருந்தகை பாடினார்:-

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்;
- அனைத்து அறன்
ஆகுல நீர பிற". (34)

வேறு ஒருவருக்குத்தீமை செய்ய வேண்டும் என்ற நோக்குடன் செய்யப்படும் இழிவான செயலை இன்னும் ஈரடிகளில் பின்வருமாறு காட்டியிருக்கிறார் வள்ளுவர் பெருமான்

"எனைத்தானும் எஞ்ஞான்றும்
-யார்க்கும் மனத்தான்ஆம்
மாணா செய் யாமை தலை". (317)

மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதாயினும் செய்யாமை தலையாய அறம். மனத் தூய்மை பேணி தர்மம் வளர்க்கப்பட வேண்டும் என்பது தெய்வப்புலவர் தந்த நீதி.

மற்றவர்களை ஏமாற்றிப் பிழைக்க முயன்று தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கும் கயவர்கள் மலிந்த உலகம் இது என்ற வெறுப்பு எமக்கு ஏற்படும் காலம் இது. வாய்மையைப் போற்றிய எங்கள் மூதாதையர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த புலவன் ஏமாற்றுதல் (CHEATING) என்பது தண்டனைக்குரிய ஒரு குற்றம் என்று ஆங்கிலேயன் குற்றச் சட்டக் கோவையில் சொல்ல எத்தனையோ நூற்றாண்டு களுக்கு முன்பே,

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம்
- பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்". (271)

எனப் பாடிவிட்டான்

'கொல்லாமை' பற்றி வள்ளுவர் எடுத்துரைக்கும் சட்டநெறி எமது சட்டம் வகுக்கும் நெறியிலும் பார்க்க உயர்ந்தது.

"தன்உயிர் நீப்பினும் செய்யற்க,
-தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை".
(327)



என்னுயிரைக்காக்க மற்றானினின் உயிரைப் பறிக்காதே என்ற உயர்ந்த தத்துவத்தைப் போதித்திருக்கிறார் திருக்குறள் தந்த அப் பெருந்தகை. ஆங்கிலேயன் தந்த எமது குற்றச் சட்டக் கோவையோ கொலையை 'MURDER' என்று குற்றமாக்கிவிட்டு ஒருவன் தன்னைக் காப்பாற்ற கொலை செய்வதைத் தவிர்க்க முடியாவிட்டால் தற்காப்பு ('SELF DEFENCE') என குற்றத்திலிருந்து தப்ப இடம் தருகின்றது.

விவாகச் சட்டம்

'பிறன் இல் விழையாமை' பற்றிப் பத்துப் பாட்டுக்களைப் பாடி விட்ட இப்புலவன் இடித்துரைக்கிறான்:-

"பிறன்மனை நோக்காத
- பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு".
(148)

பிறன் மனையை விழைதலை (ADULTERY) சட்டத்திற்கு முரணான குற்றச் செயலாக எமது நீதித்துறை காண்கின்றது. அக்குற்றம் விவாகரத்தில் முடியலாம். சட்டத்தினால் தடுக்கப்படும் செயல்கள் சமூக விரோத நடவடிக்கைகள். செய்யும் படி சொல்லும் விதிப்படி செய்யத் தவறுதல் எப்போதும் குற்றமாகாது. ஆனால் செய்யக்கூடாது என்ற சட்ட நியதியை மீறுதல் குற்றமாகும். அதனையும் தெய்வப் புலவர் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார். :-

"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்".
(466)

தண்டனை

எமது நீதித்துறையை நடைமுறைப் படுத்த சட்டம் தண்டனைகளை வகுத்து இருக்கின்றது.

"குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்".
(549)

குற்றம் செய்தால் தண்டனையைக் குற்றங்கடிதலாக வழங்குவதை வள்ளுவர் பெருமான் நியாயப்படுத்தி இருப்பதை இங்கு காண்கின்றோம்.

மேலும் வள்ளுவர் கூறுகின்றார்:-

"கொலையிற் கொடியாரை
- வேந்துஒறுத்தல், பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்". (550)

'உழவன் களையைக் களைந்து பயிர்களைக் காப்பது போல் கொடியவர்களை ஒறுத்துத்தக்கோரைக் காப்பது கடன்' என இத்திருக் குறளுக்கு பரிமேலழகர் பொழிப்புரை தந்திருக்கிறார். குற்றம் செய்தவர்கள் ஒடுக்கி மீண்டும் குற்றம் இழைக்கப்படாது பொருத்தமான தண்டனையை வழங்க வேண்டிய மன்னனின் பொறுப்பை இக்குறளிலும் காணலாம். :-

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா
- வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து". (561)



அதே சமயம் முறை கடந்து ஓர் அரசு தண்டனை அளிக்கக்கூடாது என்பதனையும் அதனால் அரசின் பலம் நலிவடையும் எனவும் சுட்டிக் காட்டுகின்றது திருக்குறள். :-

"கடுமொழியும் கையிகந்த
- தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"
(567)

அவதூறு /மான நஷ்டம்

"வாய்மை எனப்படுவது யாதெனின்
- யாதொன்றும்
தீமை இலாத சொலல்". (291)

தீங்குவிழைவிக்கும் சொல் மூலம் மற்றவர்களை அவதூறாகப் பேசுதல் குடியியல் உரிமை மீறும் செயலாக மட்டுமல்லாமல் தண்டனைக்குரிய குற்றமாகவும் சமீபகாலம் வரை இருந்தது. ஒருவரை அவதூறு செய்தால் மானநஷ்டம் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை சட்டம் வகுத்துள்ளது.

நீதிபதியின் பொறுப்பு

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நீதிபதி எப்படிச் செயற்பட வேண்டும் என்பதையும் திருக்குறளில் காண்கின்றோம்.:-

"ஓர்ந்து கண்ணோடாது
- இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை".
(541)


தன் குடி மக்கள் குற்றம் செய்தால் அக்குற்றத்தை நாடியாவர் மாட்டும் கண்ணோடாது நடுநிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்கு சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து அவ்வளவிற்றாகச் செய்வஃதே முறை. நடுவு நிற்றல் இறைக்கு இயல்பு என்ற பாணியில் பரிமேலழகர் இக் குறளுக்கு வியாக்கியானம் தந்திருக்கிறார்.

ஜனநாயக அமைப்பில் அரசிறைமையின் ஓர் அங்கம் நீதிமன்றம் என்பதையும் நாங்கள் இங்கு நினைவு கூருதல் பொருந்தும்.

திருவள்ளுவப் பெருந்தகைப் படைத்த திருக்குறள் எனும் ஆழமிகு இலக்கிய சமுத்திரத்தில் தேர்ந்தெடுத்த சில முத்துக்கள் இவை.

✹✹





நீத்தார் பெருமை – தொடர்பில் ஒரு பார்வை

வள்ளுவம் காட்டும் செயற்கரிய செயல் : நீத்தல்
அது உலகை, வாழ்வை நீத்தலல்ல – முற்றுந்துறத்தலே!

"கலாபூஷணம்" "சைவப்புலவர்" எம்.எஸ்.ஸ்ரீதயாளன்
முன்னாள் துணைப்பணிப்பாளர்
இந்து கலாசார அமைச்சு.

திருக்குறளிலே வள்ளுவர் பெருமான் நீத்தார் எனக் குறிப்பிடுவது முற்றுந்துறந்த முனிவர்களையே ஆகும். இம்மை, மறுமை என்னும் இருமைகளின் வகை தெரிந்து உலக நிலையாமையை உணர்ந்தவர்களாக மெய் எது பொய் எது எனக் கண்டு துறவறம் பூண்டவர் களையே "நீத்தார்" என்று புலவர் கருதினார். அறிவெனும் அங்குசத்தால் ஐம்பொறிகளைப் புறஞ்செல்லாது காப்பவர்களையே நீத்தார் என்பார் அவர்.

சாதாரணமாக எம்மோடு வாழ்ந்து, உலகத்துக்கு உபகாரியாய் விளங்கி, உடலை நீத்து, மண்ணுலகை இழிந்து விளங்கிக் கொள்வதைச் சென்றவர் களை நீத்தார் என்று பொது வாக கூறுவதைக் காண்கிறோம். இப்போ தெல்லாம் அஞ்சலி செலுத்தும் போக்கிலே பத்திரிகைகளிலும் நினை வஞ்சலி வெளியீடுகளிலும் கூட இப்பதம் சாதாரணமாகக் கையாளப்படுகிறது. அப்படியானவர்கள் உலக வாழ்க் கையை வாழ்ந்து முடித்து இறப்பை எட்டியவர்களாக இருக்கிறார்களே யன்றி – உலகை விட்டு சென்றவர் களேயன்றி வள்ளுவர் கருதியது போல துறந்தவர்களாக இருந்தவர்களா என்பது சிந்திக்க வேண்டிய தொன்றாகிறது.

அறத்தின் பெருமையைப் பேச வந்த தெய்வப்புலவர், துறந்தார் பெருமையே தொல்புவிப் பெருமை எனக் காட்டு முகத்தான், நீத்தார் என்ற பதத்தினால் முனிவர், அறவோர், துறவோர், அந்தணர் என்பவர்களையே கருதி நின்றமை இவ்வதிகாரத்திலே அவர் பொறித்த 10 குறட்பாக்கள் வாயிலாகவும் தெளிவாக்கப்படுகின்றன.

மேலும், அன்னவர்களைத் திருவள்ளுவர் பெருமான் நிறை மொழி மாந்தர், செயற்கரிய செய்வர், மனத்துக் கண் மாசிலர், குன்றேறி நின்றார் குணமென்னும் என்றும் குறிப்பிட்டுச் செல்லுமிடங்களும் நுனித்து நோக்கத் தக்கன. அறத்தின் காவலராக விளங்கு பவர்களும், ஞாலத்துக்கு மெய் வழி



காட்டுபவர்களுமான அவர்களது வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் அனைத்தும் நிறைமொழியான மந்திரங்கள் என்றும் குண மென்றும் குன்றேறி நின்ற அவர்கள் முனிவர்களே என்றும் விதந்துபேசி நீத்தார் என்பவர்களது செயற்கரிய செயல் பற்றி விஸ்தாரமாகக் குறிக்கிறார் வள்ளுவர். தவமுதிர்ச்சியாலே செயற்கையின் எய்தியோர்களே இவர்களன்றி, இயற்கையின் எய்தியோ ரல்லர். அவர் தம் ஒழுக்கமானது வான் அளவு உயர்ந்தது, சாதாரணமாக எல்லோராலும் சாதிக்க முடியாத அரிய, அற்புதமான சாதனைகளைப் புரிந்தவர்கள் அவர்கள். ஆகவே அவர்களை "ஒழுக்கத்து நீத்தார்" என்பார் குறளாசிரியர்.

வெறுமனே உலக வாழ்வு நாளை இயற்கையாக வாழ்ந்து நீத்த அவர்களை - மரணித்தவர்களில் எனப் பொருள்கொள்வது பொருத்தமானதாகத் தெரியவில்லை. இன்னும் விபரித்துச் சொல்வதானால் அவர்கள், "பிறப்புக்களினின்றும் வீடு பெற்றார்" ஆவர்.

பிறப்பிறப்பின் அளவின்மையை மணிக்கவாசகர் "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்று திருவாசக - சிவபுராணத்திலே கூறுமாப்போல் லாது இங்கு இந்நீத்தார், பொதுவியல்பில் பிறந்து பிறந்து இறந்து இறந்து இளைக்கும் போக்கினின்றும் வேறானவர்கள் என்பதும் உணரற் பாலது; ஆக, நீத்தார் என்பவர் மிக அருமையானவர்கள், வலிமையானவர்கள்.

அவாவினை அவிக்க முடியாதவனாய், அற்பசுகத்துக்காக கௌதமரால் சாபம் பெற்ற தேவேந்திரன் பெற்ற கொடிய சாபத்தையே எமக்கு ஞாபக மூட்டி, "செயற்கரிய செய்வர்" என்ற பதத்தை உறுதிப்படுத்தும் வள்ளுவர், நீத்தார் பெருமையை வலியுறுத்த அந்தத்தேவலோக அதிபதியான இந்திரனையே தம் கூற்றுக்குச் சாட்சியாகக் குறிப்பிடும் இடம் அற்புதமானதன்றோ?

ஐந்தவித்தான் ஆற்றல்
அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

என்பது, வள்ளுவர் நீத்தார் தம் விஞ்சிய ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாகிறது. எனவே, செயற்கு அரியதாவது - ஐந்தவித்தலே; அதனைச் சாதிப்பவரே நீத்தார் என்பது பெறப்படுகிறது.

காலன் கைப்பட்ட அனைவரும் உடலை நீத்தவர்தான் என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை என்பதும் உண்மையே. காலன் கையிலகப்பட்ட எல்லோரையும் "காலமானார்"



என்ற பதத்தினால் நாம் சொல்வதிலும் இருக்கும் அற்புதத்தையும் கூர்ந்து நோக்குவோம். காலம் என்பது ஒரு முறைபோனால் - கழிந்தால் மீண்டும் வராதது; அதுபோல உடலை நீத்த காலனின் கைப்பட்டவர் மீண்டும் வரார் என்ற காரணம் பற்றியே பொதுவாக இறந்தவர்களை, "காலம் ஆனார்" என்று சொல்கிறோம்.

வள்ளுவன் எதைப் பேசினான் என்பதை விட, அவன் பேசாத பொருள் என்னதானிருக்கிறது எனத் தேடுவோமா? அவன் உயரிய சிந்தனைக்கு களங்கமில்லாத வகையில் திருக்குறளுக்கு பரிமேலழகனை ஒத்து நாமும் பொருள் கண்டு மகிழ்வோமா.

அகிலப் புகழ் வாய்ந்த திருக்குறளாம் அறஇலக்கியம் தந்த 1330 குறட்பாக்களில், நீத்தார் பெருமை என்ற மூன்றாம் அதிகாரத்தின் வாயிலாக பத்துக் குறள்களில் குணமென்னும் குன்றேறி நிற்கும் துறவிகளை முதன்மைப்படுத்தும் வள்ளுவர், அவர் பெருமைகளை விரும்பியேற்றிப் புகழ்வதே நூல்களின் துணிவாக இருக்கவேண்டுமென்றும் முதற் குறளிலேயே கூறிவிடுகிறார்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.
என்பதே அம்முதற் குறள்.

இதுவரை இவ்வுலகில் பிறந்து இறந்தவர்களை எவ்வளவு எனக் கணக்கிட்டுச் சொல்ல இயலாததுபோல, பற்றற்ற ஞானிகளின் பெருமையையும் அளவிட்டுக் கூறுதலும் இயலாத காரியம் என்பர் வள்ளுவர்,

"To con ascetic glory here
Is to count the dead upon the sphere."

- The Merit of Ascetics


✸✸

அரிசில் கிழார்

பரந்த பொருள் எல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச் - சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லார்ஆர் வள்ளுவர்அல் லால்

உரனென்னுந் தோட்டியால் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.





திருவள்ளுவரின் மொழி ஆளுமைத்திறன்

பத்மா சோமகாந்தன்

உலகில் வாழும் வேறு எந்த உயிரினத்துக்கும் இல்லாத சில பெருமைகள் சிறந்த கொடுப்பனவுகள் மனிதனுக்கு மட்டுமே உரியன. அவற்றுள் ஒரு சில தான் சிந்தனைத் திறனும் நகைச் சுவையும் உரை யாடும் கலையும் எனலாம். மனிதன் தனது எண்ணங்கள், கருத்துக்கள் விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றைப் பிறருக்கு உணர்த்தவும், பிறருடைய கருத்துக்கள் விருப்பு வெறுப்புக்கள் போன்ற உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் ஊடகமாக விளங்குவது அவர்கள் பேசும் மொழியே ஆகும். எனவே ஒருவர் மற்றொருவருடனான சிறந்த தொடர்பாடலுக்கு மொழி முக்கியமான இயங்கு தளமாக அமைந்துள்ளது என்பது வெள்ளிடை மலை.

இம்மொழியெனும் ஊடகத்தைப் பேசுவோர், எழுதுவோர், நடிப்போர் எனப் பலவாறும் பயன்படுத்துவோர் தத்தமது ஆற்றலுக்கும் அனுபவத்திற் கும் திறனுக்குமேற்ற வகையில் மொழியைக் கையாள்வதால் அவர் களுடைய வெளிப்பாடுகள் காலங் கடந்து, இடம் கடந்து வியாபித்து நிற் கின்றன. அத்தகையதொரு மாபெரும் சக்தியைத் தன்னுள்ளே அடக்கி இன்றுவரை மட்டுமல்ல இன்னும் பல்லாயிரமாண்டுகளுக்குக் கம்பீர மாகத் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய வலிமையும் வனப்பும் கொண்டிலங் குவது வள்ளுவரின் வாய் மொழியான திருக்குறள் என்பதற்கு இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

மொழியின் ஆளுமைத் திறன் பற்றிச் சிந்திக்கப் புகும்போது முதன் முதலில் நம் கண்களையும் கருத்துக் களையும் கௌவி அணைப்பது திருவள்ளுவர் தமிழ்மொழிப் பூங்கா வில் தேர்ந்து கொய்தெடுத்திருக்கும் அழகிய சுகந்தம் வீசும் தேன் சொட்டும் மொட்டவிழா மலர்களான இனிய சொற்களே. ஒரு பூமாலையின் எழிலுக்கும் வனப்பிற்கும் அதனோடு ஒத்திசையக் கூடிய வர்ணங்கள் எத்தனை மெருகூட்டுமோ அதற் கேற்ப, மலர்களின் இதழ்களும் அளவும் எத்தனை பொருத்தமாக வடிவமைப்பில் அமையவேண்டுமோ அததற்கேற்ற வகையில் தெரிவு செய்தல் முதற்படியாக அமைந்தி ருந்தாலும் அதனை ஒழுங்காக அடுக்கித் தொடுத்தாலும் ஒரு கலைத்து வமும் கவித்துவமும் மண்டிக் கிடக்கும். அவை கற்போரின் ஆழ்மனதில் பதிந்திருக்கும் இலக்கிய உணர்வின் சக்தியைத் தட்டி எழுப்புவதாக, மீட்டிக் கொடுப்பதாக அமையும். இதற்கிலக்கான செயற் பாடாக, திருவள்ளுவர் ஆக்கியுள்ள



1330 குறட்பாக்களையுமே குறிப்பிடலா மெனினும், கட்டுரை ஒழுங்கு கருதி முதற்பார்வையிலேயே மனதைக் கவரும் எளிமையான ஓரிரு குறட் பாக்களை மாத்திரம் குறிப்பிட வேண்டிய கட்டாயத்தில்,

செய்தக்க வல்ல செயக்கெடுஞ்
செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

பொய்யாமை பொய்யாமை
யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின்
உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.

வகைக்காக இம்மூன்று குறட் பாக்களையும் எடுத்துக்கொண்டால் வாய்மை என்ற அதிகாரத்திலே 4ஆவதாக வரும் 'செய்தக்க அல்ல' என்ற தொடக்கமுடைய இச்செய்யுள் தமிழ் மொழியைப் புரிந்துகொண்ட சாதாரண கீழ்மட்ட மக்களும் கூட இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் அது அமைந்திருப்பினும், அதாவது எளிமையான இலகுவான சாதாரணமான பேச்சு வாக்கில் பழகு கின்ற சொல்லாடலாக இருக்கும் சிறப்பினை அது சுமந்துள்ள போதும் அதனுடைய கருத் தாழம் பாரதியின் "அக்கினிக்குஞ் சொன்றைக் கண்டேன். அதை ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன். வெந்து தணிந்தது காடு" என்பது போலப் பற்றிப் படர்ந்து அறிவு கொழுத்தக் கூடிய வகையில் அமைந் திருப்பது வள்ளுவரின் சொற்தெரிவு ஆளு மைக்குக் கட்டியங் கூறி நிற்கின்றது. குறிநோக்கி எய்தும் அம்பு போல எந்தக் கருத்தை எந்தப் பொருத்தமான சொல் ஆளுமை செய்யுமோ அதை அந்த இடத்தில் மிகப் பொருத்தப்பாடாக இட்டு கருத்தின் ஆழத்தை விரிவுபடுத்தும் மொழி மெருகேற்றத்தின் வித்தையை வள்ளுவர் கையாண்டிருக்கும் இலாவகத்தை எப்படி வர்ணிப்பது? இலக்கியத்தின் அதிசக்தி வாய்ந்த சொற்தெரிவின் எளிமை, இனிமை, தெளிவு, இறுக்கம் என்பன முன்னிலை வகிக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அடுத்து நாம் மனங்கொள்ள வேண்டியது திருவள்ளுவரின் குறட் பாக்களிலமைந்துள்ள சொல்லடுக்கு முறையும் அமைதியும், இலக்கியத்தின் சக்திவாய்ந்த கருவியான மொழிக் குள்ள குறிப்பான் குறிப்பிடுதல் என்ற இரண்டிலும் குறிப்பான் சொல்லைச் சுட்ட, குறிப்பிடுதல் பொருளைச் சுட்டுவதற்கான தொடர்புகளுடன் மிக நெருக்கமாக இச்சொற்களின் அடுக்கு முறைகள் கருத்துக்கும் கவனிப்புக்கும் மெருகேற்றுகின்றன.

வேண்டுதல் வேண்டாமை இலானடி
சேர்ந்தார்க்கு
(அதிகாரம் 1:4)

செயற்கரிய செய்வர் பெரியர்
(அதிகாரம் 3:6)



பொய்யாமை பொய்யாமை யாற்றின்
(அதிகாரம் 30:6)

என்பன போல அநேகமாக எல்லாக் குறள்களிலுமே சிறப்பாக அமைந் திருக்கும் பண்பு இவற்றைக் கற்பதற் கான கவர்ச்சியையும் ஆர்வத்தையும் தூண்டுவதோடு எந்த மறதிக்கார ருக்கும், அசமந்தப் போக்காளருக்கும் கூட மனதில் இக்குறட்பாக்கள் ஆணி அடித்ததுபோல இலகுவில் பதிந்து விடக் கூடிய வகைகளில் எளிமை வாய்ந்தன வாக சொல்லடுக்கின் அழகும் அமைதி யும் வெகுவாகப் பொருந்தி நிற்கிறது.

எதைக் கூறவேண்டுமெனத் திரு வள்ளுவர் தன் சிந்தனையில் உரூப் போட்டாரோ அதனை வெளிப்படுத் துவதற்கு முன்வந்தபோது அக்கருத்திற் கான சொற்கள் மளமளவென்று பட்டாளமாகப் படையெடுத்து அவருக்குச் சேவகம் செய்ய முன்வந்துவிட்டது போல அவர் நினைப்பிற்கான சொற்கள் வளைந்துகொடுத்து அவரது எண் ணத்தை வெளிக்கொணர்ந்துள்ளன. 'சக்தியின்றேல் சிவமில்லை. சிவமின் றேல் சக்தியில்லை' என்ற இந்துசமயக் கோட்பாட்டின் ஒன்றிணைந்த பொருள் போலவே குறட்பாக்களின் சொற் களுக்கும் பொருட்களுக்குமான தொடர்பு பாலின் சுவைபோல், மலரின் மணம் போல் ஒன்றிணைந்த தன்மை யுடையனவாக இருப்பதும் சுவை யூட்டும் செய்தியாகும்.

பொருளோடிணைந்த கருத்தாழம் மிக்க சொல்லையே நாம் எமது பேச்சிலும் எழுத்திலும் மொழிப்பிர யோகத்திலும் அமைத்துக்கொள்ள வேண்டுமென எமக்கு வழிகாட்ட வந்த வள்ளுவர்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ
லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து"
(அதிகாரம் 65:5)

தமது கருத்தை வெளிப்படுத்தும் ஊடகமாக சொற்களை நாம் பாவிக்கும் போது, நாம் சொல்லும் சொல்லை மீறி அதைவிடப் பொருத்தமாகவும் சிறப் பாகவும் வேறுசொற்கள் அமையா வண்ணம் நன்கு திட்டவட்டமாகப் பலவாறும் யோசித்து ஆராய்ந்தே சொற்களைப் பயன்படுத்த வேண்டு மென 'சொல்லுக்கு' இலக்கணம் வகுத்த வள்ளுவர் அதற்கு இலக்கிய மாகவே தான் ஆக்கிய குறள்களுக் கான சொற்களை வெகு கச்சிதமாகவும் கருத்தமையவும் கவித்துவத்தோடும் பெய்துள்ள பெருமை இந்நூல் முழுதுமே பரவி வைரம் போல் ஒளி வீசுகிறது.

சொல்லின் பொருத்தப்பாடும் அர்த்தமும் சொல்லின் வளமைக்கு உரமூட்டுவது மட்டுமன்றி தேர்ந்து பொறுக்கியெடுத்து சொற்களின் வியாப கத்தினூடாக மேலும் பல கருத்துக்கள் ஊற்றெடுப்பதற்கும் கிளைவிடுவதற்கும் காலாக இச்சொற்கள் மையங்கொண் டுள்ளமை புதுப்புதுக் கருத்தோட்டங்கள் எழுச்சி கொள்ள வழிவகுத்துள்ளன. ஒரு படைப்பாளி சில எண்ணக்கருக்



களை முன்வைக்கலாம். சாதுரியம் மிக்க வாசகன் அக்கருவைத் தொடக்க மாகக் கொண்டு தனது சிந்தனைக் குதிரையில் எந்தளவு வேகத்திலும் சவாரிசெய்யலாம். வரிகளுடனும் வரி களுக் கூடாகவும் வரிகளுக்கு மேலாக வும் வாசிக்கும் வாசகருக்குச் சர்வ சுதந்திரத்தையும் அளிக்கும் வகையி லேயே வள்ளுவரின் வரிகள் அமைந் துள்ளன. காலத்துக்கேற்ற வகையில் கருத்துக்களை மேற்கொள்ளக் கூடிய விரிந்த சிந்தனைப் பரப்பும் இவருடைய சொற்களிலும் சொல்லடுக்குகளிலும் வியாபித்து நிற்கிறது. அது படிப்ப வனுடைய சுதந்திரத்தையும் சிந்தனை விரிவையுமே பொறத்தது. இதனையே ஆங்கிலத்தில் 'Read between the lines' இடைவெளிகளை வாசகனே தனது அறிவுக்குமாற்றலுக்குமேற்ப கொண்ட கருத்துக்களைச் சூழலுக் கமைவாகச் சிந்தித்து கற்பனைசெய்து தீர்மானம் கொள்ளலாம்; புதிய சிந்தனை வீச்சுக்களைக் கண்டறியலாம்.

இதற்கான வெளிகளும் வாய்ப்புக் களும் பாக்கள் பலவற்றிலும் புதைந்து கிடக்கின்றன. யாப்பு அணிக்கமைய எடுத்துக்கொண்ட பொருளுக்கமை வாகக் கருத்துச் சிதறாமல் மிகவும் குறுகலான வடிவத்தில் பாக்களைக் கட்டும் போது, உபயோகிக்கும் சொற் களினூடாக மேலும் பல கருத்துக் களைக் கண்டறியக் கூடியவகை யிலான சொற்களைத் தேர்வுசெய்து பயன்படுத்தும் கலைக்கு மொழித்திறன் மிகுந்த வல்லாளனால் தான் இத்தகைய கட்டமைப்பை எளிதாகக் கையாள முடியும். இந்தச் சொற் சிலம்பம் ஓரிரு குறட்பாக்களில் மட்டுமல்ல, அநேகமான எல்லாக் குறட்பாக்களிலும் விரவியே கிடக்கிறது.


'மாற்றம்' என்ற ஒன்றுதவிர ஏனைய அனைத்துமே மாற்றத்திற் குள்ளாவன' என்பது யாவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. இதற்கமைய வள்ளுவர் தான் வாழ்ந்த காலத்தில் தாம் பெற்ற பட்டறிவுக்கமைய யாத்த குறட்பாக்களின் சொல்லாட்சித் திறன்கள் காலதேசவர்த்தமானத்திற் கேற்பவும் இன்றைய எமது கல்வி கலாசார பண்பாட்டுச் சமய சமூக பொருளாதார தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சிக் கேற்பவும் பொருள் கொள்ளக் கூடிய வகையில் வெகுவாகப் பொருந்தக் கூடியதாக அமைந்திருக்கும் சிறப்பு எண்ணி எண்ணி வியக்கக் கூடிய பெருமை வாய்ந்ததன்றோ!

✸✸

பொன்முடியார்

கான்நின்ற தொங்கலாய் காசிபனார் தந்ததுமுன்
கூநின்று அளந்த குறளென்ப - நூல்முறையான்
வான்நின்று மண்ணின்று அளந்ததே வள்ளுவனார்
தாம்நின்று அளந்த குறள்





திருக்குறளும் இசையும்

கலாநிதி மீரா வில்லவராயர்
பிரதம செயற்றிட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம்

நீதி நூல்களுள் தலையாய நூலாகக் கருதப்படும் திருக்குறள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களுள் முதல் மூன்றையும் பற்றி 1330 குறட்பாக்களால் விளக்குகின்றது. திருவள்ளுவர் அறத்தை 380 குறள்களில் 38 அதிகாரங்களிலும் அரசியல், அமைச்சர் முதலானவர்கள் பற்றியும் குடிமக்களின் பண்புகள் பற்றியும் இரண்டாம் பகுதியில் 700 குறள்களில் 70 அதிகாரங்களிலும் மூன்றாம் பகுதியில் உயர்ந்த காதலரின் காதல் பற்றி 250 குறள்களில் 25 அதிகாரங்களிலும் விளக்கியுள்ளார்.

வெவ்வேறு சமயத்தைச் சார்ந்த வரும் போற்றும் வகையில் நெஞ்சத்தைப் பண்படுத்தும் அன்பு நெறிகளையும் நீதிகளையும் கூறும் திருக்குறள் பல இசைக்கருவிகள் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் விளக்கிக் கூறுகின்றது. இசைக்கருவிகளுள் குழலின் சிறப்புக் கருதி திருக்குறளை உலகிற்கு அளித்த பொய்யா மொழிப் புலவரும் "மக்கட்பேறு" என்னும் அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

குழலினிதி யாழினி தென்பதம் - மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (கு.66)

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள், 'குழலின் வழி நின்றது யாழே' என யாழுக்கு இரண்டாம் இடத்தையே கொடுத்துள்ளார். அவ்வாறே வான்மறை வகுத்த வள்ளுவரும் குழலையே முதன்மையானதாகக் கூறி யாழினை இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வள்ளுவர் 'பொழுது கண்டு இரங்கல்' என்னும் அதிகாரத்தில் ஆயனின் குழலோசை துன்பத்தைத் தருவிக்கும் பொருட்டாக அமைந்துள்ளது என்கிறார்.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.
(கு.1228)

இக்குறளடிகளின் பொருள்: ஆயனுடைய புல்லாங்குழல், நெருப்புப் போல் வருத்தும் மாலைப் பொழுதிற்குத் தூதாகி என்னைக் கொல்லும் படையாகவும் வருகின்றது என்பதாகும்.

பண்டைய இசைக்கருவிகளுள் ஒன்றான யாழினைப் பற்றியும் பின்வருமாறு வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

கணைகொடிதி யாழ்கோடு
செவ்விதாங் கன்னார்
வினைபடு பாலாற் கொளல் (கு.279)



இக்குறளின் வாயிலாக வில்லைப் போன்று யாழ் வளைவாக இருந்த மையை அறிய முடிகின்றது.

தமிழ் மக்களிடையே வழக்கி லிருந்த இன்னுமொரு இசைக்கருவி பறையாகும். மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை பயன் படுத்தப்படும் ஓர் கருவியாகப் பறை விளங்குகின்றது. திருவள்ளுவரும் பறை பற்றி பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்
(கு.1076)

'கயவர், தாம் கேட்டறிந்த மறை பொருளைப் பிறர்க்கு வலியக் கொண்டு போய்ச் சொல்லுவதால் அறையப்படும் பறை போன்றவர்' என்பது இக்குறளின் பொருளாகும்.

இசைக் கருவிகளைப் பற்றிக் குறிப் பிடும் வள்ளுவர் பண்ணைப் பற்றிக் கூறவும் தவறவில்லை. பண் என்பது மூலாதாரம் தொடங்கித் தலையுச்சி வரை செல்லும் காற்றை அடக்கி நாதத்தைச் சுரக் கோர்வைகளால் வகைப்படுத்தப்படலாகும். பண்ணுதல் என்பது வினையாலும் பண்ணெனப் பட்டது. பண் என்பது இராகம். பண் என்னும் பதத்திற்கு பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு பொருளும் உண்டு. இதனையே வள்ளுவரும் தம் குறட்பாவில்

பண்ணென்னாம் பாடற்
கியைபின்றேற் கண்ணென்னாம்
கண்ணோட்ட மில்லாத கண்.
(கு.573)

பாடலின் பொருளுக்கு ஏற்ற முறையில் பண் அமைய வேண்டும். அவ்வாறு பொருத்தமாகவும் சிறப்பா கவும் அமையாத பண்ணினால் எவ்வித பயனும் இல்லை என்கிறார்.

மேலும் புகழ் என்னும் தலைப்பி லான அதிகாரத்தில் 'இசை' என்னும் சொல்லைப் 'புகழ்' என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளார்.

ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.
(கு.231)


'இசைபட வாழ்தல்' என்பதற்கு 'புகழ் உண்டாக வாழ்தல்' என்பது பொரு ளாகும். வள்ளுவர் புகழைக் குறிப் பதற்கு 'இசை' என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பது போற்றுதற் குரியதாகும்.

திருக்குறள் ஒரு இயற்றமிழ் இலக்கியமாயினும் செவ்விசை (Classical Music) பற்றிய குறிப்புக் களைக் கொண்டு விளங்கும் இசை இலக்கியமாகவும் விளங்குவதைக் காண முடிகின்றது. திருவள்ளுவர் குறிப்பிடும் இசைபற்றிய செய்திகளின் வாயிலாக திருவள்ளுவர் ஒர் சிறந்த இசை அறிஞராக இருந்திருக்கிறார் என்பதும் தெரிய வருகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. தனபாண்டியன் து.ஆ - இசைத் தமிழ் வரலாறு (இரண்டாம் பகுதி)
2. பரிமேலழகர் உரை - திருக்குறள்
3. பெருமாள். ஏ.என். - தமிழர் இசை
4. அங்கயற் கண்ணி. இ தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி - 1 மாதவி இரா. (ப.ஆ) - (கட். திருக்குறளில் இசைக்கருவி களின் பங்கு)

✸✸



திருவள்ளுவர் காட்டும் அறிவுடைமை: ஒரு பார்வை

– தம்பு சிவசுப்பிரமணியம் –

மனிதன் அறிவுடையவனாக இருந்தால்தான் அவனது சிந்தனையும் செயலும் வாழ்வியல் வெற்றிக்கு அடித்தளமாக இருக்கும். அந்த வகையில், வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டும் திருக்குறள் என்னும் நூலைத் தந்த திருவள்ளுவர் அதனூடாக அறிவுடைமையின் ஆளுமையைத் தெளிவுபடுத்தியுள்ளார். பொதுவாக நோக்குமிடத்து திருக்குறள், அரசியல், பொருளியல், சமூகவியல், நீதியியல், கல்வியியல், உளவியல், மேலாண்மையியல், ஒழுக்கவியல் போன்ற பல்வேறுபட்ட கருப்பொருட்களை உள்வாங்கியுள்ளமையை அறிய முடிகிறது. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆராயப்பட வேண்டிய பாடுபொருளாகும்.

வாழ்வியல் நெறிகளை வகுத்துக் கூறிநிற்கும் திருக்குறள். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றும் பொய்யா மொழியாக உயர்ந்து நிற்கின்றது. மக்களிடையே அறிவு வேட்கையை உருவாக்குவதற்குரிய அனைத்துத் தளங்களிலும் தன் சிந்தனைக் களத்தை விரிவாக்கியுள்ளமை அவதானத்திற்குரியது. 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'. திருக்குறளில் மிகவும் அதிகமாகக் கையாளப்படும் சொற்பதங்களுள் அறிவும் ஒன்றாகும். திருக்குறள் தோன்றிய அறிவுச் சூழலில், அறக் கருத்துக்களை முன்வைக்க முனைந்த வேளை அவை அறிவின் பாற்பட்ட வையாகவே அமைந்துள்ளமை சிறப்பு.

மேலும் சொல்வதானால், ஒரு பரந்த உலகப் பார்வைக்கு இட்டுச் செல்லும் பொதுமை நெறிபோற்றும் பொது நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது. சமத்துவ நோக்கு, அதிகாரத்துவ எதிர்ப்பு, பன்மைத்துவத்தைப் போற்றும் நெறி, உழைப்பிற்கு முதன்மை தரும் நோக்கு, பொதுமைப் பண்பு, உயர் பண்பாட்டு விழுமியங்களுடன் உலகியலைப் போற்றும் பண்பு, பல அம்சங்களில் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தையும் இயங்கியல் அணுகுமுறையையும் கொண்டிருக்கும் இயல்பு ஆகிய பல்வேறுபட்ட நோக்குகளை. திருக்குறள் கொண்டுள்ளது.

கல்விவேறு, கேள்வி வேறு, அறிவு வேறு. அதனை "உண்மை அறிவுடையராதல்" என்பர் பரிமேலழகர். அவ்வுண்மை அறிவு கல்வியினாலும், கேள்வியினாலும் கூர்மை அடையும். இது,



நுண்ணிய நூல்பல கற்பினும்
மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

என்பதால் தெளிவாகும். திரு வள்ளுவர் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் அறிவைப் பற்றிய வரையறையையும் அதனால் வரும் நன்மைப் பயன்களையும் எடுத்து இயம்பியுள்ளார். அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது இவர்தம் கொள்கையும் நம்பிக்கையுமாகும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

தோண்டத் தோண்ட மணல் இடையே அமைந்துள்ள ஊற்று ஊறும். அதுபோல மாந்தர்க்கு நூல்களைக் கற்கக் கற்க அறிவு ஊறி மேம்படும் என்று கல்வி என்ற அதிகாரத்தில் உள்ள குறள் மூலம் அறிவு எப்படி ஏற்படுகின்றது என்பதை 'நீர் ஊற்று' என்னும் உவமானத்தால் முன்வைக் கின்றார். நூல்களைத் தேடிக் கற்பதால் அறிவை மேம்படுத்திக் கொள்ளலாம் என்கிறார் வள்ளுவர்.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திருக்குறள் உணர்ச்சிக் கொந்தளிப்பின் பாற்பட்ட விவகாரமல்ல. அதன் பொதுமைக் குணாம்சம், சமத்துவக் கருத்தியல், சுரண்டும் வர்க்கங்களைச் சாராது இருப்பதுடன், உழைப்பைப் போற்றும் பண்பு, அதிகாரத்துவ எதிர்ப்பு என்பன காரணமாக இன்றைய யுகத்தின் நடைமுறைக்கான இலக்கியமாக அது எழுச்சி பெற முடிந்துள்ளது. அதிகாரத் துவப் படிமுறை இறக்கச் சமூகமாகத் திகழ்ந்த இடைக்காலத்தில் அதன் உன்னத இலக்கியப் பண்பும் அழகியலும் பொது அறங்களின் சில பொருந்த முடியாமையுங் காரணமாக ஒரு இலக்கியப் பனுவலாக நிலைத்து நீடித்துவர முடிந்தது. இன்றைய ஜனநாயகச் சூழலில் வாழ்வியல் நூலாகவும் திருக்குறள் புதியவடிவம் கொள்ள முடிகிறது" என்று ஆய்வாளர் கலாநிதி ந.இரவீந்திரன் கூறியுள்ள கருத்துக்களையும் நோக்கிப் பார்க்கும் போது ஆய்வறிவின் பண்புகளை அறிந்து கொள்ள முடிகிறது.

ஆய்வு செய்தல் என்பது அறிவின் பாற்பட்ட விடயம் என்பதால் திருக்குறள் அறிவு வளச்சிக்கு எவ்வளவு தூரம் உதவியுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். திருவள்ளுவரின் அறிவுச் சிந்தனை கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் நான்கு அதிகாரங்களுடன் நின்று விடுவதில்லை. பல்வேறு அதிகாரங் களிலும் பயன்தரும் அறிவுசார் சிந்தனை விரிவுபடுத்தப் பெற்றுள்ள மையைக் காணலாம்.

நுண்மா ணுழைபுல மில்லான்
எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.

அதாவது நுண்ணிய அறிவும், மாட்சியும், நுழைந்து பார்க்கும் கூர்த்த

மதியும், இல்லாதவனுடைய தோற்ற மும் அழகும் பயன்தருவன அல்ல. மண்ணால் அழகாகச் செய்யப்பட்ட பொம்மையைப் போன்றவன் அவன் என்று 'கல்லாமை' அதிகாரத்தின் குறள் ஒன்று கூறுகிறது. இங்கு அறிவைத் தேடும் முக்கியத்துவம் உணர்த்தப் பட்டுள்ளது. 'இறைமாட்சி' என்ற அதிகாரத்திலே வள்ளுவர் பின்வரு மாறு கூறுகின்றார்.

தூங்காமை கல்வி துணிவுடைமை
இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு

மண்ணை ஆளும் மன்னவரிடம் என்றும் நீங்காது இருக்கவேண்டியது காலம் தாழ்த்தாது உடனுக்குடன் செயலாற்றும் திறன், அவை அறிதற்கு ஏற்ற சிறந்த கல்வி அறிவு, தன் முடிவு களை நடைமுறைப்படுத்தும் துணிச்சல் என்பன என்று கூறியுள்ளார். சிறந்த மன்னனாக இருப்பவன் அறிவுடைய வனாக இருக்கவேண்டும் என்பதை திருவள்ளுவர் இக்குறள் வாயிலாகவும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆளுவோ ருக்கு இருக்க வேண்டியன மாண் புடை அறிவாற்றலும், நற்குண நற்செய்கைகளுமாம். எந்த நல்ல காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், இந்த இடத்தில் நல்லது கெட்டது எது எது என்று பகுத்தறிந்து பார்க்கும் அறிவு முக்கியமாகக் கொள்ளப் படுகின்றது.

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

உயர்ந்தோர் போற்றும் உயர்ந்த நெறி எதுவோ, அதனை அறிந்து அவ்வழி நிற்பதே அறிவாகும் என்கிறார் வள்ளுவர். அடுத்த குறளில்...

அறிவுடையா ராவ தறிவார்;
அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

இந்தக்குறள் மூலம் இன்னும் ஒருபடி உயரத்தில் அறிவுடையவர் களை வைத்துள்ளர். நல்லறிவு உடையவர் வருங்காலத்தை நன்கு கணித்திருப்பர். அறிவு இல்லாதவர் வருங்காலத்தைச் சரியாகக் கணித்தி ருக்கமாட்டார்கள். அதாவது அறிவுடை யவர்கள் தீர்க்கதரிசனம் மிக்கவர்களாக இருப்பார்கள் என்பதை முன்னிலைப் படுத்தியுள்ளார். இந்த இடத்தில் மகாகவி பாரதியாரின் தீர்க்கதரி சனத்தைப் பற்றிக்குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

இந்தியநாடு சுதந்திரமடைய வேண்டும் என்பதற்காக மக்களைத் தட்டி எழுப்ப உணர்ச்சிக் கவிதை களைப் பாடிவந்த பாரதி தமது தீர்க்க தரிசனம் மிக்க ஆற்றலால் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே...!

"ஆடுவோமே - பள்ளு பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோமென்று
ஆடுவோமே - பள்ளு பாடுவோமே"



என்ற சுதந்திரப்பள்ளு பாடியிருப் பதன் மூலம் "அறிவுடையார் ஆவது அறிவார்" என்ற வள்ளுவரின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

கல்வியியல் செல்நெறியில் காணப் படும் பன்னாட்டு அறிஞர்களின் கருத்துக்களோடும், திருக்குறளின் அறிவுச் சிந்தனைகளை ஒப்பிட்டுக் காண்பது திருக்குறளின் தனிச் சிறப்பைப் புலப்படுத்துவதாக அமை கின்றது. உலகம் இன்று எதிர்நோக்கும் விழுமிய அறிவுக்குரிய அடிப்படைச் சிந்தனைகளின் ஊற்றுக் களமாகத் திருக்குறள் விளங்குவதைக் காண லாம். தமது காலத்து உலக அறிவுத் தளத்தை உட்கிரகித்து, வீறு கொண் டெழுந்த தமிழ் மனத்தால் திருக் குறளைப் படைப்பாக்கம் செய்துள்ளார் வள்ளுவர்.

திருக்குறளின் பன்முக ஆற்றல் இன்று பலராலும் கவனத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பரிமேலழகர் தொடக்கம் பேராசிரியர் க.ப.அறவாணன் வரை பல கல்வியாளர்கள் திருக் குறளுக்கு உரை எழுதியுள்ளார்கள். பலரின் அறிவை மேம்படுத்த திருக்குறள் அறிவுக் களஞ்சியமாக இருந்துள்ளது என்பதை அவர்களின் உரைகள் (திருக்குறளுக்கு) எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருப்பதைக் காணலாம். காளிங்கர், தண்ட பாணி தேசிகர், நாமக்கல் கவிஞர், பரிதியார், பரிப்பெருமாள், பாவாணர், மணக் குடவர், வீரமாமுனிவர், மு.வரதராசன் போன்ற உரையாசிரியர்களைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

திருக்குறள் எந்தவொரு தனிமதப் பரப்புரை நூலாகவும் அமையாது, வாழ்க்கை நெறிமுறை ஒன்றை வகுப் பதில் ஈட்டிய சாதனையை நோக்கும் போது, பல நூறு வருடத்துக்கு முந்திய தமிழ் மக்களின் வாழ்க்கைப் போராட்ட அனுபவச் செழுமைகளை உணர முடிகிறது. மெய்ப்பொருள் காணும் வண்ணம், சரியெனக் கண்டவற்றைப் பல தளங்களிலிருந்தும் பெற்று அன்றைய தமிழ்ச் சூழலில் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் குணாம்சங்கள் வாயிலாகத் திரு வள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார். அறப் போதனைகளை இலக்கியத்தின் பாடு பொருளாகக் கொண்டு, அறநூல் வரிசையில் முதல் நூலாக உருப்பெற்ற திருக்குறள் தனது காலத்துச் சமூகச் சம நிலைமாற்ற அம்சங்களை நன்கு கையாண்டு அறிவை மேம்படுத்தியுள்ளது.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையும் ஒரே அமைப்புக்குள் கொண்டுவந்திருக்கும் ஒரே நூலாகத் திருக்குறள் மட்டுமே விளங்குகின்றது. திருக்குறள் தனியொருவரால் நன்கு திட்டமிடப்பட்டுத் தொடக்கம் முதல் முடிவு வரை தெளிவான முறையில் படைக்கப்பட்டுள்ளது. திருக்குறளின் அடிப்படைப் பண்பாகிய பொதுமை நாட்டமும், உழைப்பின் மீதான மதிப்பும், வாழ்வு நேசிப்பும், புறநிலை யின் இருப்பையும், இயங்கியல் செல்நெறியையும் நுண்மாண் நுழை

புலத்துடன் கண்டறிந்து பொருந்திச் சென்று முன்னேறும் மெய்யறிவைப் பெறுவதற்கு வழிகாட்டும் மாண்பும் திருவள்ளுவர் கொண்டிருந்தமை அவ தானிப்புக்குரியது. திருவள்ளுவரின் பரந்த அறிவுக் கோட்பாடு அவரால் படைக்கப்பட்ட 1330 பாக்களிலும் பரந்திருப்பதைக் கவனிப்புக்குள்ளாக் கும் போது, அறிவுடைமையின் மாண்பு புலனாகின்றது. திருவள்ளுவரின் ஒவ்வொரு குறளும் கருத்தாழம் மிக்கதாக அறிவைப் புகட்டுவன வாகவே அமைந் திருக்கின்றன.

காமத்துப் பால் என்ற பகுதியில் 'நெஞ்சொடு புலத்தல்' என்ற அதிகாரத்தில் புணர்ச்சி இன்பத்தின் வேட்கை கூறப்பட்டாலும், அங்கே சிந்தனைக்குரிய அறிவு உணர்த் தப்பட்டுள்ளது.

இளித்தக்க வின்னா செயினுங் -
களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

மதுவை அருந்துபவர்க்கு அது நன்மை செய்வதில்லை என்றாலும் மதுவை அருந்திப் பழக்கமுடையவர் அந்த மதுவையே மீண்டும் மீண்டும் நாடுவர். அதுபோலவே எனக்குக் காதல் கள்வனாகிய உன்னுடைய மார்பு மீண்டும் மீண்டும் தழுவத் தூண்டுகிறது என்றவாறு இக்குறள் அமைந்திருக்கிறது.


திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேழகரின் உரையை முனைவர் இ. சுந்தரமூர்த்தி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "பரிமேலழகரின் உரை நெறிகளுள் சிறப்பாக குறிப்பிடத் தக்கது அவர்தம் உரையில் காணப் பெறும் இலக்கணச் செய்திகளே யாகும். பொருள் விளக்கத்துக்காக இன்றியாமையாத இடங்களில் எல்லாம் இலக்கணக் குறிப்புகளைத் தம் உரையில் காட்டும் இயல் புடையவர். எனவேதான் பரிமேலழகர் உரையை 'இலக்கண உரை' என்றே போற்றிப் பதிப்பித்தார்கள்" என்கிறார். இதிலிருந்து திருவள்ளுவருடைய புலமை அறிவு, அவரின் குறள்களை ஆய்வுசெய்து உரை எழுதிய அறிஞர் களின் ஆய்வறிவு, உரையாசிரியர் களின் பங்கு இப்படித் தொடரும் கருத்தியல் சார்ந்த அறிவின் வெளிப்பாட்டை மூலமான திருக்குறள் வழங்கி யுள்ளமை அதன் சிறப்பாகும்.

தமிழ் மரபுத் தளத்தில் காலான்றி உறுதியாக நின்ற வண்ணம் உலகம் கண்ட மெய்ப்பொருள்களை உள் வாங்கி ஏற்புடைய மார்க்கத்தில் முன்னேற ஏற்றதான வாழ்க்கை நெறியை வகுத்துத் தருவது திருக் குறள். அந்த வகையிலும் அதன் உள் ளார்ந்த அறிவு பல கருத்தாக்கங்களை தோற்றுவித்து, அதன் வாயிலாக மக்கள் மேம்பாட்டைச் செழுமையுறச் செய்துள்ளது. ஏற்ற மடைய வைத்துள்ளது.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

✸✸





திருக்குறள் தொடாதது ஒன்றுமில்லை, தொட்டது எண்ணிலடங்கா. குறளைப் பாராட்டாத புலவருமில்லை.

கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு எம்.ஏ.
(ஓய்வு நிலை அதிபர்)

"அணுவைத்து ளைத்தேழ்
கடலைப் புகட்டி குறுகத்
தறித்த குறள்" என்றார்.

இதென்ன விபரீதம்! கடுகோ மிகச் சிறியது, அதைத் துளைப்பதே சாத்தியப்படாது, பின் அதனுள் ஏழு கடல் நீரையும் உட்புகுத்துதல் என்பது நடக்கிற காரியமா? நடந்து தான் இருக்கிறது. எப்படி? பாவகைகளி லெல்லாம் மிகச் சிறியது குறட்பா - மேல்வரியில் 4 சீர்; கீழ் வரியில் 3 சீர் - மொத்தமாக 7 ஏழுகடல் என்பது சீர். இந்த ஏழு ஏழு சீர்களும் தான். இவ்வண்ணம் ஒன்றே முக்கால் அடியிலே எத்தனை எத்தனை கருத்துக்கள் அறிவுரைகள், படிப்பினை கள் புகுத்தப்பட்டுள்ளன! அப்பப்பா!

இரப்பது இழிவு என்பதை எத்தனை அழகாக வள்ளுவப் பெருந்தகை கூறி யுள்ளார். மலசல கூடத்தைக் கழுவுவது இழிவான செயல் என்று பலரும் எண்ணலாம். ஆனால் அது இழி வல்ல; ஒருவனிடம் போய் பணத் துக்கோ, உணவுக்கோ இரப்பது தான் இழிவு. அழகான ஒரு உதாரணம்; "இறக்கப்போகும் பசுவுக்கும் ஒரு வாய் நீர் ஊற்றுவதற்குக் கூட, நீர் வேண்டிப் பிறர் கதவைத் தட்டாதே நீ போய் கயிறு எடுத்து வாளி எடுத்து கிணற்றில் நீர் அள்ளிப் பசுவின் வாயில் வார்த்து விடு. அதுதான் சிறப்பு" - செய்ய வேண்டி யதும் கூட. "பிச்சை எடுத்து அறம் செய்யாதே - முயற்சி செய்" இது வள்ளுவம் சொல்வது. இதிலும் ஒரு அடி உயரச் சென்று புறநானூற்றுச் செய்யுள் இரத்தல் பற்றிக் கூறுவதைப் பாருங்கள்!

"ஈ என இரத்தல் இழிந்தன்று
அதனெதிர்
ஈயே னென்னல் அதனினும்
இழிந்தன்றே..."

ஒருவன் பல்லைக் காட்டிப் பிச்சை கேட்கின்றான். இது இழிவு. இதனி னும் இழிவு அவனிடம் "இல்லை" என்று ஒருவன் கூறுவது.

வள்ளுவர் -

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இழிவு" என்று ஒன்றைச் சொல்லப் போந்து எத்தனை உண்மை களை மறைமுகமாகச் சொல்கின்றார் பாருங்கள்.

"பிச்சைபோடு" என்று இரப்பது நாவிற்கு இழிவு; இரப்போம் என எண்ணுவது மனதுக்கு இழிவு, இடும்



பிச்சையைக் கை நீட்டிப் பெறுவது கைக்கு இழிவு, பெற்று உண்பது வாய்க்கும் வயிற்றுக்கும் இழிவு. இந்த வகையில் ஒன்றை ஆரம்பித்து மற்றை யவற்றை மறைமுகமாகக் கூறும் பண்பு வள்ளுவரம்தாம்.

ஓரிடத்தில், படிப்போர்க்கு அறிவுரை கூறுவதோடு எச்சரிக்கையும் செய்கிறார் குறளாசிரியர். எப்படியென்று பாருங்கள்! ஒருவரினதோ, அல்லது ஒரு பொருளினதோ தோற்றத்தைப் பார்த்து மாத்திரம், அவரையோ அதனையோ எடை போடக் கூடாது; தவறாகப் புரிந்து கொள்ள நிறைய வாய்ப்புகள் இங்கு உண்டு. தோற்றத்தைக் கண்டு ஏமாற வேண்டாம். புற அழகைக் கண்டு ஆசைப்பட வேண்டாம். அங்கு ஆபத்தும் இருக்கக் கூடும். கறுப்பாக இருக்கிறது, கோணலாக இருக்கிறது என்று வெறுப்பையும் காட்ட வேண்டாம். அங்கே அதிக நன்மையிருக்கக் கூடும். வள்ளுவர் எம்முன் நிறுத்தும் உவமைகளைப் பாருங்கள். ஒன்று அம்பு மற்றையது யாழ். அம்பின் கூர்மையைக் கண்டு, அதன் பளபளப்பைக் கண்டு ஏமார்ந்து விடாதே. நீ அதை நெஞ்சில் ஏந்தினால் அது உன்னைக் கொன்றே விடும். அதே போன்று கோணலாக, வளைவாக இருக்கும் யாழைப் பார்த்து குறைவாக எடை போட்டுவிடாதே. நீ யாழின் இசையின்பத்தையே இழந்து விடுவாய்! எத்தனை இரத்தினச் சுருக்கமான அறிவுரை!! குறட்பாவைப் பாருங்கள்.

"கணைகொடிதி யாழ்கோடு
செவ்விதாங் கன்னார்
வினைபடு பாலாற் கொளல்.

எத்தனை உயர்ந்த கருத்து! கண்ணுக்கு அழகாயிருக்கிறதென்று நம்பி விடாதோ. அது கொன்றே விடும்; கண்ணுக்கு கோணலாக இருக்கிறதென்று வெறுத்து விடாதே அதனால் இன்பத்தையே இழந்து விடுவாய் நீ - எத்தனை உவமைகள் வள்ளுவம் தருவது! மேலும் சொல்லலாம். கண்ணுக்கு அணி. பூண வள்ளுவரால் தான் முடியும். அதுதான் ஒருவன் தன்னிலும் மெலியவனைப் பாதர்த்து அவன் கஷ்டத்தைப் புரிந்து இரங்கி விடும் கண்ணீர் முத்து"

"கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்"

எம்மிலும் உயர்ந்தோரிடம் யாம் ஒரு உதவி பெறின் யாம் எவ்வண்ணம் அவரை அணுக வேண்டும். "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்..." என்கின்றது வள்ளுவம்; குளிர்கிறதே என்று தீயுள் குதித்து விடவும் முடியாது; சுட்டு விடும் என்று அதி துரமும் போய்விடவும் முடியாது. அப்படிப் போனால் பயனை இழந்து விடுவோம். மேலும் சொல்லலாம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

என்றாகி விட்டதே!



நிறைவாகத் கூறின் திருக்குறளை ஒரு தேசிய நூலாக ஏற்க வேண்டும் என்பது பல அறிஞர்களது கருத்தாகும். ஒரு நாட்டின் தேசிய நூலுக்கு தகுதி சில அமைய வேண்டும். அவையாவன குறிப்பிட்ட நூல், தொன்மை உடைய தாயிருக்க வேண்டும். எளிமை, சுருக்கம், ஓர் இலக்கு உடைமை, உத்திகள் கூறல், பிறர் போற்றுதற் காளாதல், நூலில் வரும் தொடர்கள் மேற்கொள்ளப்படல், மற்றைய நூல் களில் இந்நூலின் மேற்கோள்கள் இடம் பெறல், அதன் அமைப்பு, உரு, பின் பற்றப்படல், குறிப்பிட்ட கருத்துக்கள் பழமொழியாக அமைதல், பலமொழி களில் மொழி பெயர்ப்புப் பெறுதல், பலரால் உரை எழுதப்படல், ஒப்பீட் டாய்வு இடம் பெறல், குறிப்பிட்ட நூலின், குறிப்பிட்ட இனத்துக்கோ மொழிக்கோ இடம் கொடாமை, எல்லாவற்றிற்கும் மேலாக சமயச் சார்பு அற்றிருத்தல்.

மேற்குறிப்பிட்ட சிறப்புக்களில் எது வள்ளுவத்தில் இல்லை? எல்லாமே உள்ளது. எனவே திருக்குறள் தேசிய இலக்கியமாக மிளிரும் தகைமை யையும் உடையது. இரு உதாரணங் களை நோக்குவோம். குறள் நூலில் கடவுள் வாழ்த்தில் குறிப்பிட்ட மதத்திற் குரிய கடவுள் என ஒரு தெய்வம் குறிப்பிடப்படவில்லை. அடுத்து "உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" இக்குறட்பாவின் பொருள் கொண்ட பழமொழி பார்ப்போமா? "அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது" வேறு என்ன வேண்டும். வள்ளுவனதும் வள்ளுவத்தினதும் சிறப்புக்கு!

✹✹

கோதமனார்

ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றி யுரைத்துஏட்டின் புறத்தெழுதார் - ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று


நத்தத்தனார்

ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னுதமிழ்ப் புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்கு லாம்

மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.



கொழும்புத் தமிழ்ச் சங்கம்



வள்ளுவக் கருத்தும் காட்சியும்

சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா

பண்டைய மன்னரின் மாளிகையையும், கோட்டையையும்
சுற்றி அமைக்கப்பட்ட மதில் அரண்போல்
பூவரசங்கதியால்களாலும், மூரிப்ப னைமட்டைகளாலும்
வரிந்து கட்டப்பெற்ற நாற்புற வேலி.
அதன் நடுவே, பொன் தாலிக் கொடி அணிந்திருக்கும்
மானனைய பெண்ணின் வண்ணக் கழுத்துப் போல்
அழகிய கல்வடு.
முற்றத்தில் நிழல்தருமரங்கள்; வேப்பமரம், விளாமரம்,
ஒதியமரம், எனப்பலவகையின.
என்புள்ளவற்றையும் சுட்டெரிக்கும் சூரியன்
வீரியம் பெற்ற பகற் பொழுது.
சிதையில் எரிந்ததும் எரியாததுமான சதையை தின்றே
ஊன் வளர்க்கும் கூகை அதன் முகத்திலிருப்பவை காண்பாரைக்
கலங்கவைக்கும் இரு பெரு விழிகளல்ல முழிகள்.
அது எல்லாப் பறவைகளையும் போல் பறக்கும்
இயல்புடைய புள் தான்.
ஆனால் இராப் போழ்தில் ஏனைய பறவைகளுக்கு
அது ஒரு முள்.
மற்றப் பட்சியி னங்களுக்குமாறான கட்சியிது.
தெற்றெனத் தெரியும் காட்சி மற்றப் பறவைகளுக்கோ
பகலில், ஆனால் இதற்கோ பார்வை இரவில்.
முதல் நாள் இரவு இரைதேடிப்புறப்பட்ட
கூகை அங்கும் இங்கும் அலைந்து உலைந்து
களைத்து முற்றத்தில் நின்ற வேப்பமரத்தில்
தஞ்சம் புகுந்திருந்தது.
வேப்பமரத்தைச் சுற்றி, இனிப்பை
சுற்றி இலையான் மொய்ந்தது போல் காகக் கூட்டம்
மூட்டமிட்டிருந்தது. காகத்தின் கரையும் இரைச்சல்
அந்த வீட்டையே அதிரவைத்துக் கொண்டிருந்தது.
காட்சியற்றிருந்த கூகை காகத்தில் இரைச்சலில்



காதின் உதவியினால் நாலு திசைக்கும் கழுத்தற்ற
தன் சூரன் முகத்தை திருப்பிக் கொண்டிருந்தது.
இரவாக இருந்திருந்தால் அத்தனை காகத்திற்கும்
இறவு வந்திருக்கும். ஆனால் நேரமோ பட்டப்பகல்
மாற்றார் பாசறையை பகை மன்னரின் படை
முற்றுகையிட்டு உடைத்து உயிர் துடைப்பது
போல் காகங்கள் ஒன்றாகவும் பலவாகவும் கூகையைக்
கொத்திக், குத்திக் கிழித்துக் கொண்டுவிட்டன.
கூகை குற்றுயிருமற்று குலையுயிருமற்று குருதிவழிய
மண்ணில் கிடந்தது.
வலியகூகை, மெலிய காக்கையிடம் தோற்றது
ஏன்? காலமும் நேரமும் இதைத் தான் நாளும்
கோளும் செய்வதை நல்லவர் செய்யார் என நாம்
அடிக்கடி கூறிக் கொள்கிறோம்.
இத்தத்துவத்தைத் தான் தமிழருக்கு வாழ்வு நெறி
சொன்ன வள்ளுவன் எச் செயலையும் காலமறிந்து
செய் என்றான். அதனை நாம் இலகுவாக புரிந்து
கொள்ள அவன் எழுத்தால்கொண்டு தீட்டிய
சித்திரக்குறளின் விளக்கம் தான் மேலே காணப்படுவது.
பகல் வெல்லும் கூகையைக் காக்கை
இகல்வெல்லாம் வேந்தர்க்கு வேண்டும் பொழுது.
பொருட்பால், காலம் அறிதல் : குறள் (1)

கண்ணுக்கு எட்டாத தூரத்திலிருந்து பார்க்கையில்
வட்டமாக அமைக்கப்பெற்ற நெட்டைக் கருந்தூண்களின்
மீது வைக்கப்பெற்ற பசுங்குடில் போன்று காட்சியளித்தது
அந்தப் பனங்கூடல்.
கருக்கு வாளேந்தி காசினிகாக்கும் கற்பகதருவின்
கூடலின் நடுவில் ஓலையால் வேய்ந்த மண்குடிசை.
சோலி இல்லாத கந்தையாவின் குடிசையானபடியால்
அதற்கு வேலி இருக்கவில்லை.
கும்பி இருக்கும் வரை கூழ் குடித்துத் தான் ஆக வேண்டும்.
கூழ் குடிக்க ஏழ் கடல் கடப்பாரும் உண்டு.
கடப்பாரை கொண்டு பால் கொண்டு, மோர் கொண்டு,
வாழ்வாரும் உண்டு.
கந்தையாவோ இதில் முண்றாவது அணி.



ஆடு வளர்த்து காலந்தள்ளுவது அவர் செய்பணி.
சூரியன் உதயமாகப்போகிறான் என்பதற்கு நிலம்
வெளித்து கட்டியம் கூறும் பொழுது கந்தையா
பட்டியிலுள்ள ஆடுகளை மேய்ப்பதற்கு புலவுக்கு
சாய்த்துச் செல்வார்.
பகலெல்லாம் ஆடுகளுக்கு மேய்ச்சல் தரைகளைக் காட்டி
விட்டு கருக்கலோடு மீண்டும் பனங்கூடலுக்கு ஓட்டிக்
கொண்டு வருவார்.
மாலையில் மீளும் பொழுது கொக்குச் சத்தகக்கத்தி
ஒரு தோளிலும் மறு தோளில் குளைக்கட்டும் இருக்கும்.
இன்னும் அது போல் ஓட்டிக்கொண்டு வந்த மந்தையை
அலம்பல் சுள்ளிகளினால் ஆன தட்டிமறைப்புப் பட்டிக்குள்
அடைத்து குழைக்கட்டையும் போட்டுவிட்டு கால் முகம்
கழுவ குளத்தடிக்குச் சென்றுவிட்டார்.
பட்டியிலே பெரிதும், சிறிதுமாய், மறியும் கிடாயுமாய்
நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகள், நல்ல இருட்கறுப்பு.
அதிலே இரண்டு கிடாய் ஆடுகள், நல்ல இருட்கறுப்பு நீர் விழுந்தாலும்
நில்லாத 'மொழு மொழு' வென்ற எண்ணெய்வழுக்கு
மேனி, அந்தக் கருக்கயிலும் மேனியில் ஒரு மினுக்கம்,
இரண்டிற்கும் கூரான, சீராக வளைந்த கொம்புகள்.
கொழும்பு பிடிப்பு அதிகப் பட்டதனால் தூரத்திலேயே
நாசியைத் துலைக்கும் மொச்சை மணம்.
குழைக் கட்டைச் சுற்றி இரையைத் தமதாக்கிக் கொள்ள
ஆடுகளுக்குள்ளே போட்டி.
ஒன்றையொன்று முட்டுவதும், ஒதுங்குவதும், கலைக்கொப்பைக்
கடிப்பதுமாக தொடர் நிகழ்வுகள்.
கடாக்கள் இரண்டும் மற்றவற்றை முண்டியடித்துக் கொண்டு
முன்னணிக்கு வந்து விட்டன.
இப்போது அவை இரண்டுக்குமிடையில் ஆரம்பமாகியது அமர்.
வீரத் தொனிப்போடு கூடிய கத்தலுடன் முட்டிக்கொண்டன.
சிறிது போழ்தில் ஒரு கடா சற்றே பின் வாங்கியது போல்
கால்களை பின் வைத்தது.
தோற்றடங்கி விட்டதோ என்று எண்ணி முடிய முன்பு.
உதைப் பந்தாட்ட வீரன் பந்தை ஊன்றி உதைப்பதற்காக
பின்னே சென்று ஓடி வந்து பந்தை சுற்றி தூரத்துக்கு
செலுத்துவது போல் பின் சென்ற அக்கடா



சற்றே எம்பி எழுந்து வேகத்தோடு வலுக்கூட்டி
மற்றக் கடாவை முட்ட.
தோற்று பின் வாங்கிட்டதாக எண்ணி,
விழிப்பற்றிருந்த அக்கடா முனகல் சத்தத்துடன்
மற்ற ஆட்டுக் கூட்டத்துள் ஓடி ஒளித்தது.
இரண்டு காடக்களும் ஓரொத்த வலிமை பெற்றிருந்தன.
ஆனால் ஒன்று தன்னை மேலும் வலிமைப்படுத்த
ஒரு சில அடிகள் பின் சென்றது.
அந்த ஒதுக்கத்தை, பதுக்கத்தை தவறாக மற்றக்கடா
புரிந்து கொண்டதன் விளைவு தான் அதன் தோல்வி.
இந்த உண்மையைத் தான் எமது அன்றாட
வாழ்வில் நாம் 'புலி பதுங்குவது பயந்தல்ல பாய்வதற்கு'
என்று குறிப்பிடுகிறோம்.
இந்தக் கருத்தை விளக்க அகிலத்திற்கு அமிழ் தத்தமிழில்
அருல்குறள் படைத்த பொய்யில் புலவர் வள்ளுவர் தமது
எழுத்தாணியெனும் தூரிகையால் வரைந்த சித்திரக் குறலின்
காட்சி தான் மேலே நீங்கள் காண்பது;
ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந்தகைத்து.

பொருட்பால் - காலம் அறிதல். (6)

அது ஒரு நீண்டசாலை. திணையில் பாலையும்
குறிஞ்சியும் போல் மணலும் கல்லுமாயிருந்தது.
ஆறிடு மேடும் மடுவும் போல் குண்டு குழியுமாய்
காட்சி அளித்தது.
நீண்ட நாட்கள் அரசாரின் கடைக்கண்கூட
அங்கு படவில்லை என்பதற்கு அவை சாட்சியாகின.
தொலைவில் மெல்லென சலங்கை ஒலி. கடக்கு
முடக்கு என்று சத்தமும் சேர அது மாட்டு
வண்டில் என்பது புலனாயிற்று.
சத்தம் நெருங்க, நெருங்க வண்டிலைத் தெளிவாக
பார்க்ககூடியதாயிருந்தது.
வண்டிலின் இரு புறத் தட்டிகளும் புதிய பூச்சோடு
இருந்தன.
சில்லுகளும் வலிமையானவை என்பது அவற்றின்

தோற்றத்திலேயே தெரிந்தது.
வண்டிலின் தட்டியொன்றன் மீது 'வல்லவன்'
என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.
பெயரே வண்டிலின் வலிமைக்கு கட்டியம்
கூறியது.
எப்பாரமானாலும் செப்பமாய், கப்பல் போல்
சேரிடம் சேர்த்திடுவோம் என்று காளைகள்
இரண்டும் சொல்லாமல் சொல்லின.
காலைகள் இரண்டும் பால் வெள்ளை நிறத்தன
மெழுகு அழுத்தியது போன்ற அவற்றின்
உடலும், கம்பீர தோற்றமும் அவற்றிற்கு அணி
சேர்த்தன.
அவற்றின் கூரிய கொம்புகளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த
பொற் கவசமும், கழுத்தைச் சுற்றியிருந்த சலங்கைக் கோவையும்
மேலும் ஒரு வடி அழகைச் சேர்ந்தன.
காளைகளைப் போலவே அதனை ஓட்டி வந்த காளையும்
இருந்தான்.
சுருண்ட கேசத்தைச் சுற்றி ஒரு மிருக்குத் தலைப்பிரகை.
பண்டைக் கிரேக்க வீரனின் சிலையைப் போன்று முறுக்கேறிய
தசைநாருடன் கூடிய உடற்கட்டு.
எச்சுமையையும் அச்ச மின்றி துச்சமாய் காவிடுவேன்
என்ற அசையா உறுதி கொண்ட பார்வை.
கையில் ஒரு தடி. இது தான் வண்டி ஓட்டியின் வடிவம்.
வலிமையின் மொத்தக் கூட்டுத் தான் வண்டில், காலை
வண்டியோட்டி.
பொற்குடத்துக்கு பொட்டிட்டது போல்
அழகிய வலிய அவ்வண்டிலில் ஏற்றப்பட்டிருந்ததும்
ஏற்றமுடைய பொருள் - போற்றுதற்குரிய பொருள்.
அருட் கந்தனின் வாகனமாம் கலாபத்தின் தோகைதான்
வண்டில் தூக்கி வந்த பொருள்
மென்மைக்கு இலக்கணம் மயிலின் இறகு.
இதன் எடைக்கு இலவம் பஞ்சு ஓப்பு.
காளைகள் வலிமையானவையாயிருந்தும் பாரம்
கடும் அபாரம் தான் என்பது அவை கக்கிய நுரையிலிருந்துதெரிந்தது.
வண்டிலின் சில்லுக்கும் தேரின் அசைவுபோல்
உருண்டு கொண்டிருந்தன.



சில அடிகள் தூரம் வண்டில் சென்றிருக்கும்
'படிக்' என்றொரு சத்தம். அச்சாணி முறிந்தற்கு
சான்றாக ஒரு பக்கத்து சில்லு வீதியின் ஒரு புறம் கழன்றோட
வண்டில் சாய்ந்தது.
வண்டியோட்டி காளைகளை அவிழ்த்து
விட்டு வண்டியைச் சரி செய்ய முயன்று
கொண்டிருந்தான்
வலிய இரும்பாலான அச்சாணி,
ஏற்றப்பட்ட சுமையோ மெலிய தோகை.
அச்சாணி நலிந்து நிலை குலைந்ததன் காரணம்
மெலிய தோகையின் தொகை. அதனால் ஏற்பட்ட
மெலிமையின் வலிமை.
துலியாக இருக்கையில் இழிவாகக் கருதுகிறோம்.
விசும்பின் துளி வீழ்ந்தால் பசும்புல் தலை எடுக்கும்
துளி சேர்ந்து ஆழி வெள்ளம் ஆகிவிட்டால்
உசும்பாத மலையும், உசும்பும் - உலகமே அழியும்.
'சிறு துளி பெருவெள்ளம்'

✸✸


முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத்
தெள்ளுதல் அன்றே செயற்பால - வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுணடு எனப்பகர்வார்
எப்பா வலரினும் இல்

ஆசிரியர் நல்லந்துவனார்

சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருள் எல்லாம் - தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினும் இல்

பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.



'திருக்குறளும் வாழ்வியலும்'

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

முகவுரை:

திருவள்ளுவர் இனம், மதம், பண்பாடு என பேதம் இல்லாது எல்லோருக்கும் பொருந்தும் வண்ணம் திருக்குறளை இயற்றியிருக்கிறார். குடும்பம், சமுதாயம், அரசியல், சமயம் எனப் பல்வேறுபட்ட வாழ்வியல் அம்சங்களைத் திருக்குறள் பேசுகின்றது. முக்காலத்திற்கும் உரிய அரிய செய்திகளைத் திருக்குறள் தன்னகத்தே கொண்டுள்ளது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் உடையதே வாழ்வியல். திருவள்ளுவர் வாழ்வியலை இயக்கும் சக்தியாக அறத்தைப் பேசுவதை காணலாம். தனிமனிதன், சமுதாயம், அரசியல், சமயம் என்ற வாழ்வியலை அறம் இயக்குகின்றது. என்ற தத்துவத்தை திருக்குறள் போதிக்க எழுந்தது. இக்கட்டுரை திருக்குறளும் வாழ்வியலும் பற்றியே ஆய்வு செய்கின்றது.

திருக்குறளின் காலம்.

சங்க இலக்கியக் கருத்துக்கள் பலவற்றை திருக்குறளில் காணலாம். எனவே சங்க இலக்கியங்களுக்கு பிற்பட்டதே திருக்குறள் என்ற முடிவிற்கு வரலாம். சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களில் திருக்குறளின் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. திருக்குறள் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கொள்ளலாம்.

காலப்பின்னணி.

சங்க காலத்தில் ஏற்பட்ட இழப்பு, ஏமாற்றம் எப்படியும் வாழலாம் என்ற கொள்கையிருந்தது. அரசியலில் மாற்றம் என்பவற்றை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு சமூகத்திற்கு வாழ்வியல் நெறியைச் சொல்ல வேண்டி ஏற்பட்டது. இதனால் திருவள்ளுவர் இப்பின்னணியில் வேத வாக்காக திருக்குறளை இயற்றினார்.

சமயம்:

மனித இனத்தின் வாழ்வு சமயத்துடன் இணைந்தது. கடவுள் ஒன்று தான் என்பதை வள்ளுவர் திருக்குறளில் காட்டுகின்றார். எல்லாச் சமயங்களும் தத்தம் சமயத்திற்கு உரிய நூலாகவே திருக்குறளை பேசக் காண்கின்றோம். திருவள்ளுவர் காலத்தில் சாதி, சமயம் வேரூன்றியிருந்தது. ஆனால் வள்ளுவர் சாதி, சமயம் கடந்தவராக வாழ்ந்திருக்கின்றார். எங்கும் நிக்கமற நிறைந்த முதலும் முடிவுமற்ற சர்வவியாபியான பரம் பொருளையே அவர் ஏக இறைவனாக வணங்கியிருக்கிறார் என்பதை அறிய முடிகின்றது.



எங்கும் நிறைந்த பரம் பொருளான இறைவனை வணங்கி அவனைச் சரணடைந்து விடுவதால் இறை வனைக் காணவும் பிறப்பு, இறப்பு அற்ற நிலையை அடைய முடியும். என்பதனைத் திருக்குறள் தெளிவு படுத்துகிறது.

உலக சமயங்களின் பொது மறையாகிய திருக்குறள்காட்டும் நெறி மனித குலம் அனைத்திற்குமே பொது நெறியாகும். தத்துவமே சரணாகதித் தத்துவம். இறைவனைச் சரணடை வதன் மூலமே அனைத்தையும் அடைய முடியும் என்னும் தத்துவம். அனைத்தும் அவனுடையதே என்று உணர்ந்து நடக்கும் தத்துவம் அவனாலன்றி எங்கும் எதுவும் எப்பொழுதும் அசையாது என்ற சர்வாதிக்க மயமான சர்வமதத் தத்துவம்

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்று முதல் திருக்குறளிலேயே தனது இறை தத்துவத்தை வலியுறுத்தும் நோக்குடன் உலகில் வழங்கும் எழுத்துக்களெல்லாம் 'அ' என்னும் எழுத்தை முதன்மையாகக் கொண்டு இயங்குவது போன்று உலகின் அனைத்து இயக்கங்களையும் பரம் பொருளின் அம்சமான சூரியன் தலைமை ஏற்று இயக்கி வழிநடத்திச் செல்லுகிறான் என்று சூரியனை வாழ்த் திப்பாடுகிறார். இந்த உண்மையை எந்த சமயமும் ஒதுக்கவோ மறுக்கவோ முடியாது. இன்றைய அறிவியல் உலகமும் ஏற்றுக் கொள்ளும். சமயம் இல்லாமல் வாழ்வு இல்லை என்பதை உணர்ந்து வள்ளுவர் இறை தத்துவம் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

உணவு, மருத்துவம், கல்வி, அரசு, அமைச்சு, குடும்பம், சுற்றம், நட்பு, காதல் என மனித சமதாயத்திற்கு தேவையான அனைத்தையும் நெறிப்படி அமைத்துக் கொண்டு உலக மக்கள் வாழ்ந்தால் இறைவனை நிச்சயம் அடைய முடியும் என்பதனை ஒவ்வொரு குறளும் காட்டுகின்றன.

அரசியல்.

தனி மனிதன், குடும்பம், சமூகம் எனப் பலவகைப்பட்ட முறையில் வாழ்வியல் அம்சங்களை திருக்குறள் போதிக்கின்றது. ஒழுங்குமுறை தவறா மல் குடிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசிற்கு உரியது. திரு வள்ளுவர் திருக்குறளில் பொருட்பால் அரசியலில் இருபத்தைந்து அதிகாரங் களில் அரசியல் பற்றிப் பேசுகின்றார். அரசனுக்குரிய பண்புகளையும் அவனுக்குரிய அறங்களையும் குறிப் பிடுகின்றார். அங்கவியலில் முப்பத் திரண்டு அதிகாரங்களில் அரசியல் பற்றிப் பேசுகின்றார். அரசனுக்குத் துணையாக இருக்கும் அமைச்சர் களின் பண்புகள் பற்றியும் அவர்களுக் குரிய கடமைகள் பற்றியும் குறிப்பிடு கின்றார். ஒழிவியலில் அரசனுக்கும் பொது மக்களுக்கும் உரிய அறங்கள் கூறப்பட்டுள்ளன. ஆளும் திறமை, பொறுமை, கல்வியறிவு, அனுபவம்,



உலகத்தோடு ஒட்டி ஒழுகும் பண்பு என்பவற்றை அடிப்படைத் தகுதியாக மன்னன் பெற்றிருக்க வேண்டும்.

முறைசெய்து காப்பாற்றும் -
மன்னன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

நீதி முறை செய்து குடிகளைக் காக்கும் அரசன் மக்களுக்கு கடவுள் ஆவான். என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

குடிமக்கள் நல்வாழ்வு கருதி ஆட்சி புரியாத அரசன் ஆட்சி அதிகாரத்தி லிருந்து விரட்டியடிக்கப்படுவான். அவனது ஆட்சியால் நாடு நிலைக்காது. இவ்வுண்மைகளை வள்ளுவர் தெளி வாகக் குறிப்பிடுகின்றார். முடிவேந்தர் களுக்கு திருவள்ளுவர் கூறும் அறம் எக்காலத்திற்கும் உரிய குடியாட்சிக்கும் ஏற்றதாக அமைகின்றது.

இல்லற வாழ்வு.

மக்கள் வாழ்வியலே இன்பத்துடன் வாழமுடியும். வாழ முயற்சிக்க வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர் திருக்குறளில் இல்லறம் என்ற ஒரு இயலை அமைத்திருக்கிறார். ஆணும் பெண்ணும் அன்புடன் கருத்தொரு மித்து சேர்ந்து வாழும் வாழ்க்கையே இல்லறம் என்பதாகும். இல்லறத் தார்க்கு உரிய பண்புகளையும் கடமைகளையும் திருவள்ளுவர் குறளில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி அறம் செய்து வாழ்பவனின் இல்வாழ்க்கையே பண்புள்ள பயனுறும் வாழ்க்கையாகும். என திருக்குறள் இல்வாழ்க்கையின் பண்பு பற்றிக் குறிப்பிடுகின்றது. வாழ்க்கைத் துணையானவள் எப்படியான குணங் களை உடையவளாக இருக்க வேண்டும் என வாழ்க்கைத் துணை நலம் பகுதியில் குறிப்பிடுகின்றார். குடும்ப வாழ்க்கையில் துணையாக இருப்பவள் மனைவி. அவள் நல்ல பண்புள்ளவனாகவும் நல்ல செயலைச் செய்பவளாகவும் இருக்க வேண்டும் பிறர் பழிப்புக்கு இடமில்லாது வாழும் இல்வாழ்விற்கு மனைவியே துணை யாக அமையவேணும்.

மனைமாட்சி இல்லாள்கண் -
இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

குடும்ப வாழ்வில் இல்லற வாழ்வு சிறக்க பெண்ணின் கடமையும் பண்பும் கூறப்படுகின்றது. செல்வமும் சிறப்பும் உடையவனாக ஒருவன் இருந்தாலும் மனைவியிடத்தே நற்குணங்கள் இல்லையாயின் அவனுடைய செல்வச் சிறப்புக்களால் அவனுக்கு எத்தகைய இன்பமும் வாழ்க்கையில் இல்லை எனத் திருக்குறள் இல்லற வாழ்வியல் பற்றிப் பேசுகின்றமை எல்லாக் காலத்திற்கும் பொருந்துவதாக அமைகின்றது. மறைந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றம், தன் குடும்பம்



ஆகியோருக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் சிறப்புறச் செய்வது இல்லறம் செய்பவனின் முக்கிய கடமைகளாகும்.

அன்பு.

மனித வாழ்க்கை அன்பு உடைய தாக அமைய வேண்டும். அன்பு தான் எல்லோரையும் இணைத்து வாழ வைக்கும் கருவி. அன்பு இல்லாத வாழ்க்கை உயிரற்ற சடம் போன்றது.

அன்பின் வழிய துயிர்நிலை - அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு

பிற உயிர்கள் மீது அன்பு கொண்டு வாழும் உடம்பே உயி ருள்ளது. என்றும் பிற உயிர்களிடத்து அன்பில்லாதவர்கள் உயிரற்ற உடம்பை உடையவரே என திருக் குறள் வலியுறுத்துகின்றது. அன்பே சிவம் என திருமூலர் குறிப்பிடுவார். அன்புள்ளவர்களிடத்து சிவன் உறை வார். எல்லா உயிர்களிடத்து நாம் அன்பு செலுத்தும் போது இறைவன் மகிழ்வடைகின்றான். பிற உயிர்களை மகிழ வைப்பது நம்மை நாம் மகிழ வைப்பதற்கு ஒப்பாகும். பிறரை துன்புறுத்துவது நம்மை நாம் துன்புறுத்துவதற்கு ஒப்பாகும். இதனையே திருவள்ளுவரும் பக்தி இலக்கியங்களும் போதிக்கின்றன.

அன்பு உடையவர்களின் வாழ்க்கை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் எனவும் அன்பில்லாதார் வாழ்வு தாழ்வு அடையும் என உடன்பாடு, எதிர்மறை வடிவில் திருக்குறள் அன்புடமையை விளக்குகின்றது.

அன்புற் றமர்ந்த வழக்கென்ப - வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு.

என்பி லதனை வெயில்போலக் - காயுமே
அன்பி லதனை அறம்.

எல்லா இன்பங்களையும் அடைந்தவர்களின் சிறந்த வாழ்க்கை என்பது அனைத்து உயிர்கள் மீதும் அவர்கள் அன்பு செலுத்தி இல்லறம் நடத்தியதன் பயனால் அடைந்தது என அன்பின் உயர்வை உடன் பாட்டால் திருவள்ளுவர் விளக்குகிறார். எலும்பு கள் இல்லாத உயிர்களான புழு, பூச்சிகளை வெய்யில் இட்டு எரிப்பது போல் அன்பு செலுத்தாத மனித உயிர் களை அறக்கடவுள் தண்டிப்பார் என்ற உண்மையை திருக்குறள் குறிப்பிடு கின்றது. தனிமனிதன், குடும்பம், சமூகம், அரசியல், வாழ்வியல் அன்புடமை தான் உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் நெறி என்பதை திருக்குறள் காட்டுகின்றது.

கல்வி.

திருவள்ளுவர் கல்வி கற்றலின் பயன் பாட்டினைத் தெளி வாகக் குறிப்பிடுகின்றார்.



கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்கவேண்டியவற்றை ஐயம் திரிபு இல்லாமல் ஆழ்ந்து கற்றுக் கொள்ள வேண்டும் கற்றபின் தான் கற்ற கல்விக்கு ஏற்ப வாழ வேண்டும். என வாழ்வியலில் கல்வியின் அவசியத்தை உணர்த்துகிறார். தாம் கற்றறிந்த சிறந்த நூல்களின் பயனால் தாம் மகிழ்வடை வதோடு தாம் கற்ற கல்வியைக் கற்பித் தலால் உலக மக்களும் இன்புறுவது கண்டு மகிழ்வர். கற்றறிந்த சான்றோர் என கற்றல், கற்பித்தலின் பயனை திருக்குறள் குறிப்பிடுகின்றது. ஆழ்ந்து படிக்கப் படிக்க கற்றவர்களுக்கு அறிவு பெருகி வளரும் அந்த அறிவை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

ஒருவனுக்கு பிச்சை போடு வதை விட அவனைக் கல்விகற்க வைத்து அவனை கல்வியாளாக மாற்றும் பொழுது அவன் பலருக்கு துன்பம் களைபவனாக மாறுவான். கல்வியை எல்லோருக்கும் தங்குதடை யின்றி கொடுக்க வேண்டும். அது அறத்தின் பாற்பட்டது. கல்வியானது தொடர்ந்து வரும் ஏழு பிறப்பிலும் துணைநின்று பாதுகாப்பினையும் மகிழ்ச்சியையும் தரும் என திருக்குறள் குறிப்பிடு கின்றது. கல்வி சிறப்பாக நாட்டில் இருந்தால் வறுமை, துன்பம், அழிவு ஏற்படாது. கல்வியின் அவசியத்தை திருக்குறள் வலியுறுத்தும் முறை சிறந்தது. கல்வியினால் மனித வாழ்வில் உள்ள உயர்வு தாழ்வுகளை அகற்ற முடியும் என்று கூறுகின்றார்.

விருந்தோம்பல்.

விருந்து என்பதற்கு புதுமை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. புதிய வராக ஒருவர் நமது இல்லத்திற்கு வரும் பொழுது அவரை விரும்பி மகிழ்ச்சியோடு உபசரிக்க வேண்டும். விருந்தினர் உள்ளம் நோகும்படி செய்தல் கூடாது.

செல்விருந் தோம்பி வருவிருந்து -
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

தன் இல்லத்திற்கு வந்த விருந் தினரை உபசரித்து மனமகிழ்வோடு வழியனுப்பின் மீண்டும் விருந்தினர் வரமாட்டாரா என்று எதிர்பார்த்துக் காத்திருப்பவன் மேலுலகத்திலுள்ள தேவர்களுக்கு நல் விருந்தினன் ஆவான். செல்வம் இருந்தும் வறுமை யாவது விருந்தினர்களை உபசரிக்காத பேதைமைச் செயலாகும். அகமும் முகமும் மலர்ந்து வரும் விருந்தினர் களை நன்றாக உபசரிப்பவர்களின் வாழ்விலே செல்வம் குறையாது.

எப்பொழுதும் திருமகள் மலர்ச்சி யுடன் இருப்பாள் என்பதைத் திருக் குறள் குறிப்பிடுகின்றது. பெரிய புராணத் தில் பல அடியார்கள் விருந்தினரை உபசரிப்பதையே தொண்டாகப் போற்றி வந்தனர். அவர்கள் வாழ்வில்

அற்புதங் கள் நிறைந்ததைப் பெரிய புராணம் காட்டுகின்றது. விருந்தினர் களை வீட்டின் வெளியே இருத்தி விட்டு தான் மட்டும் தனித்து உண்பது



விரும்பத் தக்கது எனத் திருக்குறள் தனி மனிதனுக்கும் இல்லறத் தானுக்கும் அறத்தைப் போதிக்கின்றது. வாழ்வியலின் நோக்கமே விருந்து ண்டு வாழ்வதே என்பதைத் திருக்குறள் பேசுகின்றது.

புறங்கூறாமை.

ஒருவனைப் பற்றிப் புறம் கூறுதல் என்பது தீய செயலாகும் இதனால் போக விட்டுப் புறம் சொல்லல் ஆகாது என்ற பழமொழி இதனையே கூறுகின்றது. வள்ளுவர் புறங் கூறாமை என ஒரு அதிகாரத்தையே வைத்துள்ளார். பழிச்சொல்லால் ஒருவனைப் புறங்கூறி அவனை எதிரில் கண்ட போது புன்னகை செய்து புகழ்மொழி பேசுதல் அறம் என்ற ஒன்று இல்லையென்று கூறித் தீயவற்றைத் செய்தலினும் தீமையாகும் என்பதைப் பின்வரும் குறள் காட்டுகின்றது.

அறனழீஇ யல்லவை செய்தலிற்
றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

புறங்கூறுதலின் தீமையை திருக் குறள் பேசுகின்றது. ஒருவனிடம் புறம் சொல்லக் கூடிய சிறுமைக் குணம் காணப்பட்டால் அவன் நெஞ்சிலிருந்து அறம் செய்யும் எண்ணம் அறவே இல்லாது போகும் எனக் குறள் குறிப்பிடுகின்றது.

செய்ந் நன்றி அறிதல்.

ஒருவன் செய்ந் நன்றியை ஏழு பிறப்பிலும் மறவாமை வேண்டும்.

என்நன்றி கொன்றார்க்கு -
முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
(குறள் 110)

நன்மை செய்தவர்களை நாளும் நினைக்க வேண்டும். தந்தை, தாய், குரு, இறைவன், உறவினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அன்று அன்று நன்றி சொல்ல வேண்டும். அப்பொழுதே அறக் கடவுள் உதவி புரிவார். பிறர் நமக்குச் செய்த நன்மையைப் போல நாமும் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டும். இந்த எண்ணம் உருவாக வேண்டும். செய்ந்நன்றியின் மறவாமையின் பலனாகும். செய்நன்றி மறவாத பண்பு ஒவ்வொருவரிடமும் இருந்தால் சாதி, மத வேறுபாட்டிற்கு இடமில்லை. வாழ்வில் பேதம் உண்டாகாது.

கொன்றன்ன இன்னா செயினும் -
அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

முன்பு நமக்கு நன்மை செய்தவர் பின்பு நம்மைக் கொல்வதைப் போன்ற தீமையைச் செய்தாராயினும் அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலே அவர் செய்த தீமை மறந்து போகும் என வள்ளுவர் திருக்குறலில் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை.

திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்ப்பு



செய்யப்பட்டுள்ளது. மனித இனத்திற்கு அற வழியை உணர்த்தும் அரிய தமிழ் நூலாக காணப்பட்டமையே மொழி பெயர்க்கப்பட்டமைக்குக் காரண மாகும். மதம், இனம், பண்பாடு கடந்த எல்லோருக்கும் பொதுவான நெறிமுறையைக் கற்பிக்கும் நூல் திருக்குறள். இதனால் உலகப் பொது மறை எனப் போற்றப்படுகின்றது திருக்குறள்.

வள்ளுவர் தன்னை உலகினுக்கே - தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு"

என மகாகவி சுப்பிரமணிய பாரதி யாரின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. திருக்குறளுக்குப் பின் வந்த இலக்கியங் கள் திருக்குறளைபல இடங்களில் எடுத்தாள்வதைக் காணலாம்.

வள்ளுவர் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வழங்குபவர் என சில ஆய்வாளர்கள் குற்றம் சாட்டுவார். பெண்கள், ஆண்கள் பற்றிக் கூறும் பொழுது வள்ளுவர் சங்க காலத்தில் இயற்கையில் நடந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு சில வற்றைப் பேசுகின்றார். காலப் பின்னணியை வைத்துக் கொண்டு தான் இலக்கியத்தை ஆய்வு செய்ய வேணும்.

திருக்குறள் வாழ்வியல் நெறிமுறை களைத் தன்னகத்தே கொண்டது. மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்பிக்கின்ற நூல் திருக் குறள். உலகிலுள்ள நீதி இலக்கியங் களுள் தலை சிறந்த இலக்கியம் திருக்குறள். தனிமனிதன், சமயவாதி, இல்லறத்தான், அரசியல்வாதி, சமூகவாதி, சட்டத்தரணி ஆகியோருக் கெல்லாம் வாழ்வியல் அம்சங்களை வேதவாக்காக திருக்குறள் குறிப்பிடுகின்றது.

**


கீரந்தையார்

தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினால்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர் - எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனம்மகிழத்
தெய்வத் திருவள் ளுவர்

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிரம் நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்துமூன்று ஒன்றூழ் - கூடுபொருள்
எள்ளில் எழுபது இருபதிற்றைந் தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை





ஒழுங்கு தப்பினால் ஓராயிரம் சிக்கல்கள் !!!

ஏ.ஜே.ஞானேந்திரன்

ஒழுங்கு என்பது என்ன?

மனித வாழ்வில் பாதி ஒழுங்குதான் என்கிறார்கள். பலவற்றை ஒழுங்கு செய்வதிலேயே அவனுக்கு பாதி வாழ்நாள் போய்விடுகின்றது. ஒழுங்கு தான் அவன் வாழ்க்கையை நெறிப் படுத்துகின்றது. ஒன்றில் ஒழுங்கீனம் ஆரம்பித்தால் அது சங்கிலித் தொடராக, ஏனைய நிகழ்வுகளையும் பாதிக்க, அவன் வாழ்வு, சேறும் சகதியும் கொண்ட குளம்போல கலங்கி விடுகின்றது.

உணவில் ஒழுங்கு, படிப்பில் ஒழுங்கு, வேலையில் ஒழுங்கு, உடல்நிலையில் ஒழுங்கு, வீட்டில் ஒழுங்கு, வீதி ஒழுங்கு என்று நம்வாழ்வில் எதையெடுத்தாலும், ஓர் ஒழுங்குமுறையைப் பின்னிப் பிணைந்தே வாழ்க்கை நகர்வதை நாம் காண்கின்றோம்.

ஒரு முக்கியமான பணியை ஆரம்பிக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஓர் ஒழுங்கு முறை யின்றி அந்தப் பணியை ஆரம்பித்து நாம் செயற்பட முடியுமா? அப்படிச் செய்தால் அந்தப் பணி ஒழுங்காகச் செய்து முடிக்கப்படுமா?

இல்லவே இல்லை.

பொருள்கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல்

என்று சொல்கிறார் வள்ளுவப் பெருமான். ஒரு செயலைச் செய்யும் போது அது எளிதில் முடிவதற்கு வேண்டிய பொருள், கருவி, காலம், செயல்முறை, இடம் ஆகிய ஐந்தையும் தெளிவாக ஆராய்ந்தே செய்ய வேண்டும் என்பதே இதன் பொருள்.

இங்கே நாம் ஓர் ஒழுங்கைக் கவனிக்க முடிகின்றது. தொடங்கிய செயல் சிரமமின்றி செய்து முடிக்கப்பட வேண்டும். வீணான பொருள் விரயமும் செலவும் தவிர்க்கப்பட வேண்டும். செய்யும் பணிக்கு அவசியப் படும் அனைத்து கருவிகளையும், குறையின்றி கைவசம் வைத்திருக்க வேண்டும். வேலையை இழுத்தடித்து வீண் கால விரயமும் செலவும் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். சரியான இடத்தில், சரியான பணி செய்யப்படுகின்றதா என்பதில் தெளி வாக இருக்க வேண்டும்.

இந்த ஒழுங்குமுறைகளை நாம் கவனித்துக் கொண்டால், தொடங்கிய பணி, திட்டமிட்ட காலத்தில், அனாவசிய



மற்ற செலவுகளைத் தவிர்த்து சிறப்பாக முடிவடைந்து விடும். இரு வரிகளில் வள்ளுவர் பெருமான் எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கின்றார் என்பதைக் கவனித்தீர்களா?

பலருக்கு, ஒழுங்குமுறைகொண்ட ஒரு வாழ்க்கை என்பது மிகச் சிரமமான ஒன்றாக ஆரம்பத்தில் தோன்றுகின்றது. ஆனால் நிஜம் என்னவென்றால் வாழ்க்கையில் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட்டால், அது ஓர் ஆரோக்கிய வாழ்விற்கு அடிகோலும். அதுவே செல்வத்தையும் தேட வழிவகுக்கும். ஒருவரது ஆக்கத் திறனையும் அதிகரிக்கும்.

இந்த ஒழுங்குமுறை ஒருவரது அன்றாட வாழ்விலிருந்து அதிக சாதகமான விடயங்களைத் தேடிக் கொள்ள வழிவகுக்கும் அதேநேரத்தில், அவருக்கு நேரவிரயமும் குறைவதோடு, அதற்காக அவர் செலவிடும் உடற்சக்தியும் குறைக்கப்படுகின்றது.

பொருட்களை அதற்குரிய இடங்களில் ஒழுங்காக தங்கள் தங்கள் வீடுகளில் வைத்துக் கொள்பவர்களுக்கு, அந்தந்தப் பொருட்கள் தேவைப்படும் போது, தேடுதல் என்ற பணி இல்லை. நேரவிரயமில்லை அடகாணோமே என்று அங்கலாய்ப்புக்கு இடமில்லை.

ஓர் ஒழுங்கான வாழ்க்கை முறைக்கு மிக அவசியம் தேவைப்படுவது மனப் பதட்டத்தை அறவே ஒழித்து விடுவதுதான். மனதை அமைதி ஆக்சிரமிப்பது அவசியமாகின்றது. இந்த வேகமான உலகில், நிதானமாக, அமைதியாக நடந்து கொள்வது என்பது நமக்கு மிகப் பெரிய சவால்தான். ஆனால் இது முடியாத ஒன்றல்ல.

எங்கள் உணர்ச்சிகளை எம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள நாம் கற்றுக்கொண்டுவிட்டால், நாம் நம் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள முடியும். தியானத்தில் ஈடுபடுவது இந்த அவசர உலகில் நம் செயற்பாடுகளை, சிந்தித்து நிதானமாக, ஒழுங்காகச் செய்ய உதவுவதோடு, நமது குடும்ப அங்கத்தவர்களுடனான அல்லது நண்பர்களுடனான அணுகுமுறையைச் செப்பனிடவும் கைகொடுக்கின்றது.

நாம் வாழும் இந்த அழகிய நாடான சுவிட்சிலாந்தை சற்றே நோக்குங்கள். நேரந் தவறாமல் எதுவுமே இயங்குவது இங்குள்ள பெருஞ் சிறப்பு. இது எல்லாவற்றிற்குமே ஓர் ஒழுங்கு முறையைக் கொண்டுவந்து சேர்க்கும் நேர்த்தியைக் கவனித்தீர்களா? நேரம் என்பது யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அதனோடு சேர்ந்து நாமும் ஓடும்போதுதான், வாழ்க்கை ஓர் ஒழுங்கை வந்தடைகின்றது.

ஒழுங்கான உணவும், ஒழுங்கான உடற் பயிற்சியும் இருந்தால் ஆரோக்கி



யமான வாழ்வே நம்மைத் தேடிவரும். உடல் ஆரோக்கியமாக இருந்தால் வாழ்வில் மகிழ்ச்சி பெருகும். விரும்பியதை விரும்பிய நேரத்தில் செய்து கொள்ள பண வசதியும் இருக்கும். உடல் ஆரோக்கியமும் ஒத்துழைக்கும்.

சாலை ஒழுங்குகளைச் சற்றே கவனியுங்கள். பாதசாரிகளாக இருந்தாலென்ன, வாகனங்களில் செல்பவர்களாக இருந்தாலென்ன? வீதி ஒழுங்கு முறைகளை நாம் செவ்வனே கடைப்பிடித்தால், அனாவசிய விபத்துக்கள், இரத்தம் சிந்துதல், மரணங்கள் என்று எதுவுமே இல்லை.

திரும்பவும் இங்கே வள்ளுவர் பெருமான் உதவிக்கு வருகின்றார்.

ஒழுக்க முடைமை குடிமை
இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.என்று

இடித்துரைக்கிறார் வள்ளுவர். ஒழுக்கம் உடையவராக இருப்பதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடும் என்கின்றன இந்த இரு வரிகள்.

ஒழுக்கம் எப்படி வருகின்றது? ஒழுங்கு முறை வாழ்வில் இருப்பவருக்கே ஒழுக்கம் என்பதும் வந்து சேர்கின்றது. எங்கு சென்றாலும், நல்லொழுக்கம் என்பது உற்றுக் கவனிக்கப்படுகின்றது. ஒழுங்கில்லாதவன் வாழ்வில் ஒழுக்கத்திற்கு இடமேது? அவன் வாழ்வே சீர்கெட்ட ஒன்றாகத்தான் இருக்கும்.

ஒழுங்கைத் தேடுவோம். வாழ்வில் உயர்வை நாடுவோம்.

✸✸

நல்கூர் வேள்வியார்


உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக்கு அச்சென்ப - இப்பக்கம்
மாதானு பங்கி மறுவுஇல் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற்கு அச்சு

தொடித்தலை விழுத்தண்டினார்

அறம்நான்கு அறிபொருள் ஏழொன்று காமத்
திறம்மூன்று எனப்பகுதி செய்து - பெறல்அறிய
நாலும் மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலும் ஒழிந்த பொருள்



திருக்குறளின் முதல் அதிகாரத்தில் முதல்வன் ஒருவனே



திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம்,
சைவ சித்தாந்த பாலபண்டிதரும்
இளம் சைவப் புலவரும்.

தோற்றமும் உரைச்சிறப்பும்

ஒரு நாட்டின் பண்பாட்டினை உணர்த்துவதே பழந்தமிழ் இலக்கியங்கள். அவற்றிலும் திருவள்ளுவர் பெருமான் அருளிய திருக்குறள் வாழ்வினை நெறிப்படுத்தி வளமார்ந்த நன்நிலைக்கு நம்மை அழைத்துச் செல்வதாகும். இதனை கருத்திற் கொண்டே

"அணுவைத்துளைத்து ஏழ்
கடலைப்புகுத்தி
குறுகத்தறித்த குறள்" என
ஔவையார் சிறப்பித்தார்.

திருவள்ளுவர் வழங்கிய முப்பாலில் மொழிந்துள்ள வற்றாத கருத்துக்கள் மனித சமுதாயத்தைச் சீர் திருத்தும் செம்மை நலம் சான்றனவாம். அறத்துப்பால் வாழ்வு நெறியினையும் பொருட்பால் நாட்டு நடப்பினையும் இன்பத்துப்பால் இனிய வீட்டு வாழ்வினையும் தெற்றென எமக்கு உணர்த்தி காட்டுகின்றன.

தமிழ்மொழிக்கு வரம்பு அமைத்தவர் தொல்காப்பியர் தமிழ் பண்பாட்டிற்கு வேலி அமைத்தவர் திருவள்ளுவர் திருக்குறள் தமிழ்மொழியில் எழுதப்பட்ட முதல் நூல். உலகப் பொதுமறை.

அந்த வகையில் எமது தமிழ் சங்கம் வளமான ஓர் எதிர்காலத்தை வாரி வழங்கும் என்பதில் ஐய்யமில்லை. அதுமட்டும் அல்ல "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலில் தமிழ்மொழி "தனி யுயர் செம்மொழி" என்பதை தக்க எடுத்துக்காட்டுடன் நிலைநாட்டியவர் திருவள்ளுவர் என்பது மறுக்கமுடியாத உண்மையே. வடமொழியை வெல்லும் இலக்கணம் தமிழ்மொழி இலக்கணமாகும். திருக்குறள் எல்லாச் சிறப்பும் இருந்தும் புலவர்களால் மட்டுமே போற்றப்படு கின்றது. சங்கமருவிய காலத்தின் பின் திருவள்ளுவரே ஆட்சி செலுத்துகிறார். சைவம் சமணம் வைணவம் கிறிஸ்தவம் பௌத்தம் முதலியவற்றில் ஆட்சி செலுத்துவதோடு ஐம்பெரும் காப்பியங்களிலும் திருக்குறள் கருத்து எடுத்து காட்டப்படுகின்றது. எந்த சமயத்தையும் சாராமல் சொல்லளவில் விரிந்த நூல் என்றே வரையறை கூறுகிறது. வைதீக ஆரிய கண்ணோட்டத்தோடு பரிமேலழகர் திருக்குறளுக்கு எழுதிய உரையே சிறந்த



தாகும். இதனை நீதி நூல் என்பர். நீதி நூல் மட்டும் அன்று சன்மார்க்கம் பொருட்டு செய்த மெய்யுணர்வு நூலுமாகும். இதில் அடங்காத பொருள் ஒன்றும் இல்லை. எல்லாப்பொருள் களும் இதன் பால் உள என்பார் வள்ளுவமாலை ஆசிரியர்.

சைவசித்தாந்தம் கூறும் முப் பொருள்களும் இலைமறை கனி என இனங்காணலாம். முப்பொருளாவன இறை உயிர் தளை என்பன. இதற்கு உரை கண்டவர் பலர் அவர்களுள் சிறந்தவர் பரிமேலழகர். அவரது நுண்மாண் நுழைபுலத்தை அவர் எழுதியுள்ள குறிப்புக்களில் இருந்து அறியலாம். அதாவது திருக்குறளின் உண்மைத்திறன் தெரிந்து எழுதுவதில் அவருக்கு நிகர் அவரேதான். பொருள் குன்றாமலும் குறித்தது முரண் படாமலும் எக்குறையும் குன்றாம்படி கற்போர் உள்ளம் விரும்பும் வண்ணம் உரை செய்பவர் ஆவார். தமிழ் நூல் கள் முற்காலத்தில் செய்யுள் வடி விலேயே அமைந்திருந்தன. நூல் ஆசிரியர்களே உரை கூறினால் அன்றி அவர்கள் கருத்துக்களை அவர்கள் கருதியபடி உணர்தல் அரிதாகும். நுண்ணறிவும் அறிவுப்பெருக்கமும் உடையவர் ஆயினும் நூலாசிரியர் கருத்து அறிந்து கூறுதல் இயலாத செயலாகும். நூலாசிரியர் தம் நூலுக்கு உரை எழுதும் பழக்கம் உடையவர் அல்லர். எனினும் மாணவர்க்கு தம் நூலின் உண்மை உரையினை உணர்த்திடுவார். இம்முறையிலேயே பண்டு உரைகள் நிலவின. நூலா சிரியர் உளம் அறிந்து உரை வரை பவர் சிலரே. அவர்களுள் பரிமேலழகர் சிறந்தவரே. திருக்குறளின் கருத்துக்கள் எண்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அது பல்வேறு பெயர்களாலும் சிறந்து அழைக்கப்படுகின்றது. திருவள்ளு வரை தத்தம் சமயத்தைச் சார்ந்தவர் என்று உரிமை கொண்டாடினார்கள். அந்த அளவிற்கு சமயங்களைக் கடந்து இனங்களைக் கடந்து மொழிகளைக் கடந்து அனைத்து உலகத்தின் சிறப்பிற்காகவும் மனித வர்க்கத்தின் சிறப்பிற்காகவும் அறக்கருத்துக்களை யும் அறிவு வழிகளையும் எடுத்து உரை செய்யப்பட்ட நூலாகவும் திருக் குறள் மிளிர்கின்றது.

எனவே பரிமேலழகரை மனக்கண் களில் வைத்துப் பூசிப்பதில் தமிழ்ச் சங்கம் பெருமிதம் அடைகிறது. குறள் களுக்கு அமைத்த உரைகளுள் பத்தாவதாக எழுதப்பெற்ற உரையே பரிமேலழகர் உரை அவருக்கு பிறகு தமிழகத்தில் இலக்கணக்காரர்கள் அளவை நூல் வல்லார், நீதிநூல் வல்லார், அரசியல் வல்லார், கவிஞர் கள், உரை ஆசிரியர்கள், இன்பநூல் வல்லார், வீட்டுநூல் வல்லார், சீர் திருத்த வாதிகள் எனப் பலர் வந்து போயினர். புலமைக்குப் பஞ்சம் என்றுமே இருந்த தில்லை. அவர் களால் இயற்றப்பெற்று இன்று கிடைத்துள்ள நூல்களே அவற்றிற்கு சான்றாகும். அவர்கள் அனைவராலும் பரிமேலழகர் உரையே பாராட்டுப் பெற்றுள்ளது. காரணம் அவர் உரை இலக்கணம் தருக்கம் பரப்புடையது நடுநிலை



பிறழாதது. நூலா சிரியர் கருத்தை நன்கு விளக்குவது. பல ஞானநூல்களின் கருத்துக்களை உடையது. எனவே உரைகளுள் சிறந்ததும் சிறப்புமிக்கதும் பரிமேலழகர் உரையே என்பது வெள்ளிடைமலை.

முதல்வன் ஒருவனே
கட்டுரையின் ஈண்டு நோக்கத்தை ஆயும் வண்ணம்

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

அழகர் விளக்கம் கூறுமிடத்து காணப்படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டுதலின் "ஆதிபகவன்" முதற்றே உலகு என உலகின்மேல் வைத்துக் கூறினாரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க என்றார். இவ்விளக்கத்தை பலர் தாயின் பெயர் ஆதி, தந்தையின் பெயர் பகவன். எனவே முதல் தாய் தந்தையை அடிப்படையாகக் கொண்ட முதல்வன் ஒருவனே உலகின் முதற்பொருள் என்று பொதுவாகக் கூறுவர். இதில் பரிமேலழகர் கருத் தினை ஊன்றி உணர்தல் இன்றி யமையாதது. உலகம் ஆதிபகவனை முதலாக உடையது என்ற தொடரில் இருந்து உலகம் உடைய பொருள், 'ஆதிபகவன்' உடமைப்பொருள், என்று புலப்படும். "யான் இறையுடைமை" என்றால் உடமைப் பொருள் ஆகிய யான் தாழ்ந்தவனும், சுதந்திரம் அற்றவனும், ஆவன். அது போலவே இறைவனும் உடமைப்பொருளாய் தாழ்ந்தவனும், சுதந்திரம் அற்றவனும் ஆவான். எனவே உடமைப்பொருள் ஆகிய இறைவனை வேண்டியவாறு ஆளும் தன்மையுடைய பொருள் ஆகிய உலகிற்கு அமையும், இவ்வுலகு இறைவனது உடமைப் பொருள் என்பதும் இறைவன் உலகத்தை தன் விருப்பப்படி நடத்த வல்ல தன் வயத்தன் என்பதும் தோன்றாமல் உலகமே இறைவனை இயக்கும் என்று பொருள்படும். இதனை உணர்ந்து பரிமேலழகர் இறைவனுக்கு முதன்மை தோன்றுமாறு மேற்கண்ட விளக் கத்தால் தெரிவித்தார். இறைவன் ஊனக்கண்களுக்கு புலனாகாதான் ஆதலினால் அவனது உண்மைத் தன்மை கூறின் கண்களுக்கு தெரியும் உலகைச் சுட்டி அல்லது அறிவித்தல் கூடாது. எனவே உலகைக் கூறி அது இறைவனை முதலாக உடையது என உரைத்தார். உலகம் தானே தோன் றாது. தோற்றுவிப்பவன் ஒருவன் உளன் எனக் கூறினார். இதில் இருந்து முதல்வன் ஒருவனே என்பது தெளிவா வதோடு நின்று விடாமல் "முதல் அதிகாரத்தில்" இறைவன் ஒருவனை குறிக்கும் சொற்கள் அனைத்தையும் திருவள்ளுவர் ஆண்பாற்சொற்கள் ஆகவே அமைத்துள்ளதை காணற் பாலது. ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், இறைவன், எண் குணத்தான், தனக்குவமை இல்லாத வன், என்பனவாம். அம்மை வழிபாடு அப்பன் வழிபாட்டிற்குள் அடக்கம் என்பது அவரது உட்கிடை.



ஆதிபகவன் என்ற இத்தொடரை "பகவன்" என்பதை வேதம் (சுவேதா) "பகேசனம்" என்றும் அவை ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு பண்புகளையும் "பகம்" என்ற சொல் குறிக்கும் எனவே இவ்ஆறு பண்பு களையும் உடையவன் "பகவன்" என பெயர் பெறுவான் என கூறுகிறார். இதை ஆறுமுகநாகவலர் ஆதிபகவன் என்பதில் உள்ள ஆதி என்பது இறைவர் தொகுதியை விளக்கவந்த அடைமொழி என்றும் அவ்ஆதிபகவன் சிவபரம்பொருளே என்றும் அதனால் அவரை முன்கூறி நூலை திரு வள்ளுவர் தொடங்கினார் என கூறியுள்ளார்.

எனவே முழுமையாக வள்ளுவர் பெருமான் ஆதிபகவான் முதல்வன் ஒருவன் என ஒருமைப்பெயரால் இறைவனைக் குறித்துள்ளார். இறைவன் ஒருவனே என்பதை மெய்யுணர்வு நூல் அனைத்தும் உறுதி செய்துள்ளன.

கற்றதனால் ஆய பயனென்கொல்?
வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

திருவள்ளுவர் முதல்வன் ஒரு வனே அவனது அறிவை வாலறிவு, வாலாமை அறிவு என இரு கூறுபடுத்தி கூறுகிறார். அதாவது தூய அறிவு, அறியாமையோடு விரவிய அறிவு எனப்பெறும். வாலறிவு பிற விளக்கம் வேண்டாதது. தானே விளங்கி யுணரும். இயற்கை உணர்வு அவ் வுணர்வினை உடையவன் வாலறி வன் ஆகிய முதற்பொருள். வாலாமை யறிவு தானே உணர மாட்டாது. உடம்பு, உடம்பில் உள்ள அக புற கருவிகள், உலகப்பொருட்கள், நூல் கள், உணர்த்துவோர் இவற்றின் உதவியால் விளங்கி உணரும் செயற்கை உணர்வு அவ்வுணர் வினை உடையன உயிர்களே என்று தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது இதன் பொருளை இனம்காணுமிடத்து எல்லா நூல்களையும் கற்றவர்களுக்கு அக்கல்வி அறிவால் ஆயபயன் யாது? அவர் தூய உணர்வினை உடைய வனான நல்ல தாள்களை தொழா ராயின் அறிவு இல்லையாம் என்பது. வால் அறிவு - மாசற்ற அறிவு இதில் கற்றதனால் என்றமையால் உயிர் களின் அறிவு மாசுடையதாய் கல்வி முதலியவற்றால் பெறும் செயற்கை உணர்வினைக்குறிக்கும் முதல்வன் ஒருவன் அவன் அறிவான்மை யுடையது. எனவே உயிர்களின் அறிவு வாலாமை அறிவுடையதாகும். கல்வி முதலியவற்றின் உதவி பெற்று விளங்கும் உயிர்கள் அவ் உதவி முதலியன வேண்டாது விளங்கும் முதல்வன் உதவியை பெறுவதற்கு உரிமை உடையவனாய் அவனை தொழுவதற்கும் உரிய கடமைப்பாடு உடையவனாகும். எனவே கல்வி கற்றற்குப் பயன் கடவுள் அடி தொழுதலாகும்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் எல்லாக் குறள்களையும் பரிமேலழகர் உரையுடன் விரிக்கற் பெருகும்

ஆதலால் சிலவற்றையே எண்ணத்தில் கொள்கின்றேன்.

இருள்சேர் இருவினையுஞ் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

"இறைவன் பொருள்சேர்புகழ்" என்பார். திருவள்ளுவர் இத்தொடருக்கு உரையாசிரியர் தரும் விளக்கம் பொருட்செறிவுடையது. இறைமைக் குணங்கள் இலராயினரை உடையர் எனக் கருதி அறிவிலானார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாதலின் அவை முற்றறுவுமுடைய இறைவன் புகழே "பொருள்சேர் புகழ்" என்பது குறிப்பாகும். முழுமுதற்கடவுளின் குணங்கள் புகழ் அவனுக்கே உரியன. அவை இறைமைக்குணங்கள் எனப்படும். அவனைக்கண்டு அவன் குணங்களைச் சொல்லி சொல்லி புகழவேண்டும். அவனைக்காணல் அவன் உண்மைகளை அளவைகளால் துணிதல் அங்ஙனம் கண்டு அவனுக்குரிய குணங்களைப் புகழ்தல் பொருள்சேர் புகழ்தலாகும் என்றார் உரையாசிரியர். பிறதெய்வங்கள் மேல் இறைமைக் குணங்களை ஏற்றிப் புகழ்தல் பொருள்சேராப்புகழ்தல் ஆகும். அங்ஙனம் புகழ்பவரை அறிவிலார் எனலாம். உலகின் ஒருவனைப் புகழவேண்டின் அவனையும் அவன்பால் புகழவேண்டும். நல்ல குணங்களை ஒருவன் மேல் ஏற்றிப் புகழ்வது அறியாமையாகும் இவ் உண்மையைத்தான் பொருள்சேர் புகழ் என்ற தொடரால் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் அழகர் அவற்றை பலரும் அறிய பகிரங்கப்படுத்தியுள்ளார் நாம் செய்த, செய்யும் நல்வினையும் பிறப்பைத் தரும் அதைத்தான் இருள்சேர் இருவினையும் சேரா மயக்கத்தைப் பற்றிய நல்வினையும் உளவே எனவும் அது சாராது அடுத்த எண்ண அலையாக

பொறிவாயில் ஐந்தவித்தான் - பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

"அவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி" அவித்தானது மெய்யான ஒழுக்கநெறியின் கண் என்பது உரை. ஒழுக்கநெறி ஐந்தவித்ததினால் சொல்லப்படமையால் மெய் உணர்த்துவனவற்றை மெய் என்றார். அவையாவன தம்மிடம் மயக்கமின்மையின் பொருள்களை உள்ளவாறு உணர வல்லராய் காம வெகுளிகள் இன்மையின் அவற்றை இறைவன் ஒருவன் அருளால் உலகத்தார் உறுதி எய்தற் பொருட்டு கூறிய ஆகமங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. "பற்றுக பற்றற்றான் பற்றினை" (350) என்பது நூல். பற்றுக பற்றற்றான் பற்றினை பற்றுக - எல்லாப்பொருள்களையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஒருவன் ஓதிய வீட்டுநெறியை இதுவே நன்றென்று மனதில்கொள்க என்பது தான் உரை. எனவே ஐந்தவித்தான் என்பது இறைவன் ஒருவனைத்தான் குறிப்பிடுகிறார். இயல்பாகவே பாசங்



களினின்று நீங்கி நிற்றலால்த் தான் பற்றற்றுள்ளார் என்றார்.

கோளில் பொறியில் குணமிலவே -
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

இந்தக்குறளில் முதல்வனே ஒருவனே என எவ்வாறு உரை செய்தார் என்பதை நம் பார்வையில் பார்ப்போம்.

"தாளை வணங்காத்தலை குண மிலவே" என்னாது "குணமிலதே" என்று கூறியிருக்க வேண்டும். "தலை" ஒருமை. அதற்கேற்றவண்ணம் முடி வும் "இலதே" என்றிருக்க வேண்டும். அவ்வாறு கூறாது பன்மை யில் "இலவே" எனக் கூறியுள்ளார். எல்லாம் அறிந்தும் அறிவித்தும் விளங்குபவன் இறைவன். ஒருவனே அவன் அருளை அடைவதற்கு உரிமை யுடைய உயிர்கள் பல என்பதை உணர்த்தவே இறைவனை எண் குணத்தான் என ஒருமையாகக் கூறி உயிர்களைக் குறிக்கும் தலை என்னும் "பால்பகா அஃறினை" பெயரை "குணமிலவே" என பன்மை முடிவால் அமைத்துள்ளார். இது இறைவன் ஒருவன் உயிர்கள் பல என்பதை உணர்த்தும் தலை என்பது ஒருமை பன்மை உணர்த்தும் பால்பகா "அஃ றினைப்பெயர்" என பரிமேலழகர் உரை செய்தார்.

அவர் தம் நூலின் ஆரம்பத்தில் கடவுள் வணக்கம் கூறிய பின்னரே தமிழ் நூல்களில் இறை வணக்கம் இடம்பெற்றுள்ளதெனலாம். வள்ளுவர் நாஸ்தீகர் அல்லர். இறை உணர் வையும், இறைவழிபாட்டையும் வற்புறுத்தியவர். இறைவன் நூல் வேதம், ஆகமம் திருக்குறள் வேதம் அதனால் "உத்தரவேதம்" எனப் பேர் பெறுகிறது உத்தரம் - பின்னர் வந்தது. எனவே திருக்குறள் வேதத்தை அனுசரித்த நூல் என்பது கருத்தாகும்.

முதல் அதிகாரத்தில் முதல்வன் ஒருவன் என்பதை இறைமைக் குணங்கள் முலம் வெளிப்படுத்தி உரை செய்துள்ளார். அதாவது ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்த வித்தான், அற ஆழி அந்தணன், எனதிருக்குறளில் எட்டு பிரயோகங்கள் இறைமைக்குணங் களைக் குறிக்கும். அக்குணங்கள் அதேவரிசைப்படி "ஆதிபகவன்" உலகின் தொழிற் பாட்டிற்கு முதல் காரணன் ஆதலில் அது தன்வயமுடைமை, "வாலறிவன்" என்பது இயற்கை உணர்வின் முதல் என்னும் குணத்தைக்குறிக்கும். "மலர்மிசை ஏகினான்" என்பது அன்பால் நினைவாரது உள்ளக்க மலத்தினுள் அவர் நினைந்த வடிவோடு தோன்றி வருவதைக் குறிப்பது ஆதலால் அது "தூய உடம்பினன்" ஆதல் எனும் குணத் தைக்குறிக்கும். வேண்டுதல் வேண்டா மையிலான் என்பது "வராம்பில் இன்பமுடமை" என்னும் குணத்தைக் குறிக்கும். "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்பது "இயல்பாகவே பாசங்

களினின்று நீங்குதல்" என்பதைக் குறிக்கும். "தனக்குவமை இல்லாதவன்" என்பது "முடிவில் ஆற்றல் உடமை" ஆகிய குணத்தைக் குறிக்கும். அற "ஆழி அந்தணன்" என்பது "பேரருள் உடமை" எனும் குணத்தைக்குறிக்கும் இங்ஙனம் "கடவுள் வாழ்த்து" எனும் முதல் அதிகாரத்தில் இறைவனுக்குரிய எட்டுக் குணாங்களும் குறிக்கப்பட்டுள்ள மையைக் காணலாம். இவை அன்றி சத்துவம் இராட்சசம் தாமதம் எனும் மூன்று குணாங்களையும் உடையவன் இறைவன் ஒருவனே என ஞான நூல்கள் நவிலும். திருவள்ளுவர் இறைவன் ஒருவனே என்பதை மெய்யுணர்வு நூல்கள் மூலம் உறுதி செய்கின்றார்.

ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே
ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு - தெய்வம்
தருபவன் ஒருவன் வேண்டும்
ஒளிவற நிறைந்த ஒருவன்
ஒருவன் என்னம் ஒருவன் காண்க
ஒருவன் என்பது ஏத்த நின்ற -
ஒளிர்மதிச்சடையன்

ஏகநாயகனே இமையவற் கரசே எனும் வாசகங்களால் முதல்வன் ஒருவனே என்று உணர முடிகிறது.

முடிவுரை

அந்தவகையில் முடிவாக தெய்வப் புலவர் இயற்றிய ஒரே நூல் திருக்குறள். அதற்கு இணையான நூல் முன்னும் பின்னும் தோன்றவில்லை. இது நீதி நூல் மட்டும் அன்று. சமய உண்மைகளை சாற்றும் தத்துவ நூல். வள்ளுவர் சீர் பரப்பியவர்களுள் ஒருவர். "அறன் அறிந்தோம்", அறன் பொருள் அறிந்தோம்", அன்பின் திறன் அறிந்தோம்", "வீடு தெளிந்தோம்" என பலர் பலவாறு பாராட்டியுள்ளனர். சமய வாதிகள் பலர் தத்தம் சமய உண்மைகளை சாற்றும் நூல் என்பர். இங்ஙனம் பலரும் ஏற்றிப்போற்றிய நூல் திருக்குறள். இது பொது நூல் எனக்கூறி குறள்வழி நின்று உய்வோமாக.


✸✸

வெள்ளி வீதியார்

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே - செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.





மலரினும் மெல்லிது காமம்

திருமதி உமா வைத்திலிங்கம், M.A, M.phil.

காமத்துப்பால் விரசம் நிறைந்தது காமம் என்பது முழுமையாக பாலியல் சம்பந்தமானது காமத்துப்பால் என்னும் பகுதி வயது வந்தவர்களுக்குரியது; பகிரங்கமாகப் படிக்க முடியாதது; குறட்பாக்களை சபையில் பேசமுடியாது; காமத்துப்பால் பற்றிய மாணவர்களின் தப்புக் கணக்கு. இவையெல்லாம் தவறான கருத்துக்கள் என்பது, நான் அனுபவத்தில் கண்டது. **'காமம் என்பது உடல் இச்சையைத் தூண்டும் ஓர் உணர்வு'** (Sexual desire) என்ற கருத்தினால் தான் மேற்குறித்த தவறான கணிப்புக்கள் பரவலாக நிலவி வருகின்றன. இதனை மறுத்து, காமம் என்பது மெல்லிய உணர்வு; ஒத்த இரு உள்ளங்களில் தோன்றும் அன்பின் உச்ச நிலை; அதனால் தோன்றும் இன்ப ஊற்று; எனத் தெளிவாக விளக்குவதே காமத்துப் பால். அது விரசமானதல்ல விசேடமானது. அன்பினால் ஒத்த உள்ளங்களின் இயல்பினை ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உணர்த்துவது, என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

(அ) முப்பெரும் பேறுகள்:-

"இறைவனது அருளாணையினால் பிறந்த ஒழுக்க நெறியே அறம். அறம் ஆன்மாக்களாகிய நமக்கென அருளப்பட்டது. அந்த அறநெறியைப் பற்றிக் கொள்ள வேண்டும்." என்று "குறள்வழி வாழ்வு" நூலின் ஆசிரியர் கூறுகிறார். அக் கூற்றுக்கிணங்க அறம் என்பதை அடிப்படையாகக் கொண்டு அய்யன் வள்ளுவனார் தன்னரிய நூலைப் படைத்துள்ளார். அது அறுசுவைமிக்க படையலாக அமைவதற்குக் காரணம் முப்பாலில் அவர் கண்ட நுட்பங்களேயாகும். அறவழியில் நின்று, பொருள் தேடி, இன்பமாக வாழ்ந்தால், வீடு எம்மைத்தேடி தானாக வரும் என்பதனால் முப்பெரும் பேறுகளை மட்டும் கூறி, வீடு பற்றிய செய்தியைக் கூறாதொழிந்தார். உன்னதமான வாழ்வியல் நுட்பங்களை ஏழு சீர்களில் விதந்தோதி எவராலும் எட்ட முடியாத சிகரத்தைத் தொட்டவர் வள்ளுவர் எனின் அது மிகைக் கூற்றன்று.

(ஆ). காமத்துப்பால்:-

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பெரும் பேறுகளைக் கூறும் போது அதனை தனிமனித வாழ்வில் தொடங்கி சமுதாய வாழ்க்கை வரை கொண்டு செல்கின்றார். அறத்துப்பாலில் தனிமனிதனின் வாழ்க்கையினைத் தொடங்கி இடைவெளி அமைக்கின்றார். பின்னர் பொருட்பாலில் மக்கள் அனைவரும் கூடி வாழும் சமுதாய வாழ்க்கையினைக் குறிப்பிட்டு, விட்டுச்சென்ற இடைவெளியைக் காமத்துப் பாலில் நிறைவு



செய்கின்றார். ஒருவனும் ஒருத்தியும் காதலில் கூடி இன்புறும் இல் வாழ்க்கையை இப்பகுதியில் குறள் வடிவமாக்கியுள்ளார். தனிமனித வாழ்வின் முதற் பகுதியும் முதன்மையான பகுதியுமாக விளங்குவது இல்வாழ்க்கை. அது அன்பின் புலனுகர் இன்பத்தின் அடியாகத் தோன்றுகிறது. அதனைக் களவு, கற்பு என இரு பகுதிகளாகப் பிரித்துப் பேசுகிறார். **'தலையணங்குறுதல்** தொடங்கி **'ஊடல் உவகை'** வரை **இருபத்து ஐந்து** அதிகாரங்களில் இச்செய்திகள் மிக நுட்பமாகக் கூறப்படுகின்றன.

காமம் என்பதன் பொருட் பொதிவை திருவள்ளுவர் வாயிலாக நோக்கும் பொழுது, காமம் + பால் என்ற இருசொற்கள் அத்துச் சாரியைப் பெற்று காமத்துப்பால் என புணர்நிலை அடைகின்றது. காமம் என்பது உள்ளமும் உடலும் ஒத்த உச்சநிலை அன்பு என்றும், பால் என்பது பிரிவு என்றும் பொருள்படுகின்றது. ஆகவே இரு பிரிவினருக்கிடையே (ஆண்-பெண்) ஏற்படும் உளம் ஒத்த அன்பினைப் பேசுவது காமத்துப்பால் எனத் துணியமுடிகின்றது.

(இ). பாலிரண்டின் சங்கமம்:-

ஆண் - பெண் ஆகிய இரு பிரிவினர்க்கிடையே அன்புணர்வு மிகுதியாகும் போது, உடல் உளரீதியாக தோன்றும் மெய்ப்பாடுகள் பற்றிய செய்திகளே இப்பகுதியில் குறிப்பிடப் படுகிறது.. தமிழர் தம் பண்பாட்டு மரபான அகத்திணை மரபு மிக அழகாக இப்பகுதியில் இடம்பெறுகிறது. அன்பின் உச்ச நிலையில் ஊற்றெடுப்பது இன்பம். இவ்வின்பம் இருபாலருக்குமிடையே சங்கமமாகும் போது தோன்றுவதே காமம். ஆகவே காமம் என்பதற்கு வள்ளுவர் அகராதியில் அன்பின் உச்ச நிலையில் தோன்றும் இன்பம் என்பது பொருளாகிறது. இதனால் இதற்கு இன்பத்துப் பால் என்ற பெயரும் வழங்கப்படுகிறது.

பேராசிரியர் ந.சஞ்சீவி அவர்கள் திருக்குறளில் கற்பனைத் திறன் என்னுத் தனது நூலில் குறிப்பிட்டுள்ள செய்தி இக்கருத்துக்கு வலிமை சேர்க்கின்றது.

"காமத்துப்பால் கருத்தினை உணர்த்தும் முறை புதுமையானது கவர்ச்சிமிக்கது கற்பவர் உள்ளத்தைக் களிப்புக்கடலில் ஆழ்த்துவது அறிவுறுத்துவதை விட இன்புறுத்துவதையே தலையாய பண்பாகக் கொண்டு விளங்குவது காமத்துப் பாலில் வள்ளுவர் அறக்கருத்துக்களை தொகை வகைப்படுத்திக் கூறும் ஆசானாகத் திகழவில்லை மெல்லிய காதல் உள்ளத்தையும், தூய உணர்வையும், அன்பின் ஆழத்தையும் நயம் பட விளக்கும் கலைஞனாகத் திகழ்கிறார் இப்பகுதி ஒரு கலைப்பெட்டகமாகத் திகழ்கின்றது. இதனால் அது ஒவ்வொரு தனிமனிதனும் கற்றுத் தேரும் கலைக்களஞ்சியமாக விளங்குகின்றது."

இருவரும் கருத்தொருமித்துக் காதலராகும் போது ஈருடல் ஓருயிர் என்ற நிலையினை எய்துகின்றனர்.



ஒருவர் உள்ளத்தில் மற்றொருவர் குடிபுகுந்து பிரியாதிருக்கும் பேரின்ப நிலையினை அடைகின்றனர் என்பதை வள்ளுவர் வாய்மொழியில் காணலாம்.

"உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு." (1122)

"யாமு முளேங்கொல அவர்
நெஞ்சத் தெந்நெஞ்சத் கோஒ வுளரே யவர்." (1204)

"தந்நெஞ்சத் தெம்மைக்
கடிகொண்டார் நாணார் கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்."
(1205)

இக்குறட்பாக்களில் இருவரும் இதயம் மாறிப்புகும் நிலையினைக் காணலாம்.

(ஈ) ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை :-

அன்பின் உச்சநிலையில் தோன்றும் செயற்பாடுகள் தவிர்க்க முடியாதவை. அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாள் என்ற நிலையில் அன்புடையாரைக் கண்ட மாத்திரத்தில் ஆலிங்கனம் செய்யத் தோன்றுகிறது. அந்த பரவச நிலையானது பல்வேறு செயற்பாடுகளையும், மெய்பாடுகளையும் தோற்றுவிக்கின்றது. அதனை உடல் இச்சை என்று கொச்சைப்படுத்தாது தூய அன்பின் வெளிப்பாடாக உயர்த்திக் காட்டுகிறது காமத்துப்பால்.

"தம்மி லிருந்து தமதுபாத்
துண்டற்றால்
அம்மா வரிவை முயக்கு." (1107)

"வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு." (1108)

இதனை கலித்தொகை ஆசிரியரும் அழகுற அமைத்துக்காட்டுகிறார்.

"இளமையும் காமமும் ஓராங்குப்
பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ
உனை நான்
ஓரோ ஓகை தம்முள் தழீஇ
ஒன்றன் கூராடை உடுப்பவரே
யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே
வாழ்க்கை"

(உ). ஊடல் உவகை:-

தமிழ் இலக்கிய மரபில் ஊடல் என்பது பரத்தமை ஒழுக்கத்தினால் ஏற்படுவது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்து கூறும் வள்ளுவர் ஊடலுக்குப் புதியதொரு காரணம் கற்பித்துக் காட்டுகிறார். இங்கு ஏற்படும் ஊடலுக்கு எதுவுமே காரணமில்லை. அன்புதான் காரணமாகின்றது.

"இல்லை தவறவர்க் காயினு
மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு" (1321)

இதனால்தான் சாதாரண தும்மல் கூட ஊடலுக்குக் காரணமாகின்றது.



"யாரினுங் காதல மென்றேனா
வூடினாள்
யாரினும் யாரினு மென்று"
(1314)

"உள்ளினேனென்றேன்மற்
றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்."
(1316)

"வழுத்தினா டும்மினே னாக
வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று."
(1317)

மலரினும் மெல்லிய காமத்தின் தன்மை அறிந்து அதன் பக்குவம் கெடாமல் நுகர்தல் வேண்டும். அப்போது தான் இன்ப ஊற்று இடை யீடின்றிச் சுரக்கும். இந்த இன்பம் மென்மேலும் சிறக்க ஊடல் அவசியம். இன்ப மிகுதியால் ஏற்படும் பிணக்கம் இணக்கத்திற்கு வழிவகுக்கும். அதாவது ஊடல் பேருவகையினைத் தோற்றுவித்து இருவரையும் முன்னை விட நெருங்கிப் பிணைத்து கூடி மகிழச் செய்கிறது. இதனை ஊடல் உவகை என்னும் இறுதி அதிகாரம் வெளிப் படுத்துகின்றது.

"உணலினு முண்ட தறலினிது
காமம்
புணர்தலி னூட லினிது" (1326)

"ஊடலிற் றோற்றவர் வென்றா
ரதுமன்னும்
கூடலிற் காணப் படும்." (1327)

"ஊடுதல் காமத்திற் கின்ப
மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்." (1330)


முடிவுரை:-

மலரினும் மெல்லிய காமம் உறுதியான உணர்வுகளைத் தோற்று வித்து மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத்தை வெளிக்கொணர்கிறது. ஒருவரை உண்மையாக நேசித்து அவர் துன்பத்தை தன் துன்பமெனக் கருதுவதால் பிறர் துன்பம் உணர்வது காதலின் பயனாக இருக்கின்றது. அன்புக்குப் பணிதல் என்பதை காதல் வாழ்வில் காணமுடிகின்றது. பிறரை அடக்கி ஆள நினைக்கும் உலகில் 'கள்வன் பணி மொழி பெண்மையை உடைக்கும் படையாகின்றது. தம்மை வெறுப்பவர்களை புறக்கணிக்கும் உலகில் புறக்கணித்தவர் மீது அளவிலா அன்பு செலுத்தும் நிலை அன்புடை நெஞ்சிலே தோன்றுகிறது. இதனால் ஏற்படும் அமைதியானது, ஆற்றலைக் கற்பிக்கின்றது. இந்த ஆற்றல் செம்மையான வாழ்க்கைக்கு வழி வகுக்கின்றது.

அன்பு, பண்பு, கருணை, ஈகை, தொண்டு, விட்டுக்கொடுத்தல், தவம், அமைதி, ஆற்றல், தன்னலமின்மை, தியாகம், அறம் என்பன போன்ற தனித்துவமான பண்புகளைக் காதல் வாழ்வு புகட்டுகிறது. இக்கல்வியால் அன்பும் அறனுமுடைய இல்வாழ்க்கை தழைத்து, பண்பும் பயனும் மிக்க சந்ததி உருவாகிறது. ஆகையால் தான் காமத்துப் பால், தாயின் முலைப்பாலாக அமைந்து இவ்வுலகிற்கு ஊட்ட மளிக்கின்றது.

✸✸





கவிஞர் வள்ளுவர் - அழகியல் பார்வையில் திருக்குறள்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
விரிவுரையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

தமிழின் தலைமைப் படைப்புக் களுள் மிக்க சிறப்பு வாய்ந்தது திருக்குறள் என்பதை அனைவரும் ஒப்புவர். உயர்ந்த கருத்துகளை நல்ல முறையில் நிரற்படுத்தி வள்ளுவர் தந்துள்ள இச் சொத்து, மனுக் குலத்தின் பாரிய சாதனைகளுள் ஒன்றாகக் கருதத் தக்கது.

இல்லறத்திற்குத் தேவையான கருத்துகளாகட்டும், துறவறத்திற்குத் தேவையான கருத்துகளாகட்டும், அரசியலிற்குத் தேவையான கருத்து களாகட்டும் இவ்வாறு இன்ன பிற நடவடிக்கைகளுக்குத் தேவையான கருத்துகளாகட்டும் அவை திருக் குறளிலே எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. எடுத்துக் கூறப்பெற்றுள்ளன என்றால், இக் கருத்துகள் ஏதோ போகிற போக்கில் சும்மா குவியலாகச் சொல்லப் பெற்றுள்ளன என்பது கருத்தன்று. இயற்கையையும், அறத்தையும் நன்கு உணர்ந்துகொண்ட ஒருவர், மனிதர் கள்தம் உளவியலையும் அறிந்து கொண்டு, இக் கருத்துகளை வைக்க வேண்டிய ஒழுங்கில் வைத்துத் திருக்குறளாகச் செய்துள் ளார் என்பதே உண்மையாகும்.

இவ்வாறு உயர்ந்த கருத்துகளினை நூல் முழுவதும் நூலாசிரியர் திரு வள்ளுவர் பெய்து வைத்திருப்ப தனால், அவரைச் சிறந்த சிந்தனைச் சிற்பியாகக் கொண்டாடுகின்றது உலகம். எனினும், இச்சிறப்பே அவருக்குக் கிடைக்க வேண்டிய பிற உயர்வுகளுக்குத் தடையாக உள்ளதோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

குறிப்பாக, அவரை ஒரு தலைசிறந்த கவிஞராகப் பலரும் கொள்ளத் தயங்குவதற்கான காரணம், திருக்குறள் ஒரு கருத்துக் களஞ்சியமாக இருப்பதுதான் எனலாம். அற நூல் எழுதிய ஒருவர் கவிஞராக இருக்க முடியாது என்பது அளவுகோல் எதுவுமற்றதொரு வாதம். இது இன்னமும் பலராலே நம்பப்படு கின்றது. இவர்கள் சொல்வதுபோல வள்ளுவர் ஒரு கருத்து மேதை மட்டும்தானா, அல்லது கவிஞருமா என்பது காணப்பட வேண்டியது அவசியமானதாகும். இதற்குத் திருக்குறள் நூலை அழகியல் நோக்கில் பார்ப்பது மிகுந்த பயன் செய்யும் எனலாம்.



பெரிதினிது அழகியல்

வாழ்க்கையின் படப்பிடிப்பைச் சுவாரசியம் குன்றாமல் நடாத்திச் செல்லுவதை அழகியல் மிகவும் வற்புறுத்துகின்றது. இப்படி, சுவாரசியம் குன்றாத நவீன படைப்புகளை அழகியல் உலகம் உச்சிமேல் வைத்து உவக்கின்றது. மேலைத்தேய அழகியல் கோட்பாடுகள் பெரிதும் வலியுறுத்தும் இவ்விடயமானது தமிழ்ப் படைப்புலகத்தைப் பொறுத்தவரை புதிய வரவன்று. இது, என்றோ வள்ளுவரால் படைப்பாக்க நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்றுதான்.

ஒரு விடயத்தை வெறுமனே தட்டையாகச் சொல்லி நகருகின்றவர் அல்லர் வள்ளுவர். சொல்லுகின்ற அறப் போதனை விடயங்களும், அவற்றைச் சொல்லவென அவர் எடுத்துக்கொண்ட குறள் வெண்பா வடிவமும் கருத்துகளை அப்படியே உள்ளவாறு வெளிப்படுத்துகின்ற வாய்ப்பைத்தான் பெரும்பாலும் அவருக்கு வழங்கியுள்ளன. எனினும், இத்தகைய இடர்ப்பாடுகளின் மத்தியிலும் அவர் கருத்துகளை அழகியல் பூர்வமாகவும் வெளிப்படுத்தியுள்ளமைதான் அவரை உன்னத படைப்பாளியாக உயர்த்தி வைத்துள்ளது.

தட்டையான கருத்துப் போதனைகளுக்கான களங்களிலும் அவர் எத்துணை இலாவகமாக, கவித்துவச் சித்திரிப்புகளை நிகழ்த்துகின்றார் என்பதற்குப் பின்வரும் குறள் தக்க எடுத்துக் காட்டாகும்.

"பெரிதினிது பேதையார் கேண்மை
பிரிவின்கண்
பீழை தருவதொன்றில் "

அறிவில்லாதவர்களுடைய நட்பு மிகவும் இனிமையானது, ஏன் என்றால் அது விட்டுப் பிரிந்து செல்கின்ற போது எவ்விதமான துன்பத்தையும் தருவதில்லை என்று இக் குறள் கூறுகின்றது.

உண்மையில், அறிவில்லாத வரான பேதையாருடன் நட்புக் கொள்ளக் கூடாது என்பதைத்தான் இக்குறள் வெளிப்படுத்த முனைந்தது. ஓர் அற நூல் இதனை இவ்வாறே வெளிப்படுத்துவதே போதுமானதாகும். ஆனால், திருக்குறளை அறநூலாக மட்டுமல்லாமல், அழகியல் வசீகரம் நிரம்பிய நற் கவிதை நூலாகவும் படைத்தளித்த வள்ளுவர் இக் குறளின் மையச் செய்தியை அவ்வாறே தட்டையாக வழங்கிவிடவில்லை.

அறிவிலோரைச் சேராதே என்று மற்றைய அற நூல்களைப் போலச் சொல்லாமல், அவற்றுக்கு முரண்படுவது போல "பெரிதினிது பேதையார் கேண்மை" என்று கூறி, முதலில் திகைப்பை ஏற்படுத்துகிறார். வள்ளுவர், இத் திகைப்புத்தான் இப் படைப்பைப் புதிரோடு திரும்பிப் பார்க்கச் செய்கின்றது. ஏன் இப்படிச் சொல்லி யுள்ளார் என்ற



வினா, படைப்பின் மீதான எதிர் பார்ப்பை மேலும் அதிகரிக்கின்ற து.

இவ்வாறு அதிகரிக்கும் வாச கரின் எதிர்பார்ப்புணர்ச்சிக்கு தொடர்ந்து வரும் மெல்லிய நகைச்சுவையானது தக்க தீனியிடுகின்றது. முரண் சுவையில் பயணிக்கத் தொடங்கிய குறள் நகைச்சுவையில் வாசகர்கள் அனைவரையும் கைப்பற்றி விடு கின்றது. இந்த அழகியல்தான் அறப் போதனையாக அமைந்திருக்க வேண்டியதை, நல்ல கவிதையாக உருமாற்றி விடுகிறது.

தேர்ந்தெண்ணிச் சொல்லல்

ஒரு செய்தியைச் சொல்லுகின்ற இடமும், அச் செய்தியைச் சொல்லு கின்ற விதமும் படைப்பில் மிக முக்கிய மானவை. சாதாரணமான ஓரிடத்தில் சொல்லப்படுகின்ற போது பெரிதும் வாசர்களின் கவனத்தை ஈர்க்காத செய்தியொன்று, அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடுள்ள பகுதியில் வைத்துச் சொல்லப்படுகின்றபோது நன்றாக நுகரப்படுகின்றது. மனிதர்களுடைய மனங்களை நன்கறிந்தவரான வள்ளுவருக்கு இந்த உண்மை தெரியாததன்று.

வாசகரின் நாட்டம் இயல்பாகவே செல்லக் கூடிய பகுதி காமத்துப் பால் எனலாம். இப்பாலின் இடங்கள் சில வற்றில் வள்ளுவரால் உவமைகளாக அறங்களே அமைக்கப்பட்டமை நோக்கம் கருதியதே எனலாம்.. அறங் களை நேரடியாகச் சொன்ன சந்தர்ப் பங்கள் போக, இந்த இடங்களிலும் அறங்களைச் சிறிய அளவிலேனும் கூறினால் அவை இலகுவில் பதியும் எனக் கருதியே அவர் எடுத்துக் காட்டுகள் சொல்வதுபோல அறங் களைச் சொல்லிவிடுகிறார்.

அதாவது, அறஞ் சொல்வதைப் பிரதானமாகக் கொண்ட நூலில், இந்த, காமத்துப்பாலில் அறம் இன் னொன்றுக்கு உவமையாக இரண்டா மிடத்தை அடைகின்றது. ஆனால், வள்ளுவருடைய நோக்கத்தைப் பொறுத்த வரையில் அதுவே முதன்மையுடையது.

அறத்தை ஒரு போதனையாக மட்டுமே சொல்லி விடுவதில் செய்திப் பரிமாற்றம் எனும் நன்மையொன்றே ஏற்படுகின்றது. அதனை உவமை முதலிய அணிகளுள் ஒன்றாக அமைக்கிற பொழுது, அந்த அறப் போதனையை அறிய முடிவதோடு நல்லதொரு கவிதையை அனுபவிக் கின்ற இன்பமும் ஏற்பட்டுவிடுகின்றது. இவ்வாறு செய்வதனால் நூலின் கருத்துப் பெறுமதி மட்டுமன்று, அழகியல் பெறுமதியும் நன்கு அதி கரிக்குமெனப் புரிந்து கொண்டுள்ள தால்தான் வள்ளுவர் காமத்துப் பாலிலும் அடிக்கடி அறக் கருத்துகளை அணிகளாக்குகின்றார்.

காதலியோடு அனுபவிக்கின்ற இன்பத்தைக் காதலன் ஒருவன்

சொல்வதுபோலச் சொல்ல வந்த வள்ளுவர், அவ்வின்பம் வார்த்தை களால் விவரிக்கப்பட முடியாதது ஆதலால், உவமை ஒன்றன் மூலம் உணர்த்திவிட முடிவு செய்கின்றார். உவமைக்கான களங்கள் பல இருக்கும் இடத்தில் வள்ளுவர், எங்கி ருந்து உவமையை எடுத்துக் கொள் கின்றார் என்பதைக் காண்பது அவரது உண்மை உள்ளத்தை அறிய உதவி செய்யும் எனலாம்.

இன்ப அனுபவத்திற்கு உவமை சொல்ல ஆயிரம் இடங்கள் இருக்கவும் வள்ளுவர், பகுத்துண்ணும்அறத்தையே தெரிவுசெய்து,

"தம்மில் இருந்து தமதுபாத்து
உண்டற்றால் அம்மா
அரிவை முயக்கு "

என்று சொல்லிமுடிக்கின்றார். இதன் மூலம், காதல் இன்பமானது, பகுத் துண்டு பெறும் இன்பத்தைப் போன்றது என்கிறார் வள்ளுவர்.

அதாவது, தமது சொந்த வீட்டில் இருந்துகொண்டு வருவாயை அறம் சொல்லும் நெறியில் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுப்பதற் காகப் பகுத்த பின்னர், விருந்தினர்க் குரிய பகுதியினை விருந்திட்டு, பின் தானுமுண்டு திருப்தி அடையும் பொழுது பெறுகின்ற இன்பத்தை ஒத்தது அக் காதலின்பம் என்பது வள்ளுவர் வார்த்தை.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு "

என்றெல்லாம் பலவாறாக அநத்துப் பால் விருந்தோம்பல் அதிகாரத்தில் விருந்தோம்பலின் அவசியத்தை வலி யுறுத்திச் சென்றுள்ளார் வள்ளுவர். அந்த அதிகாரத்துக்கு அப்போதனைகள் மிகவும் அவசியமானவையே என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், பகுத்துண்ணும் இந்த அறத்தைப் பற்றி நினைக்கவே வேண்டாத இடத்தில், அதுவும் காமத்துப்பாலில் அவர், தம் மில் இருந்து தமதுபாத்து உண்பதைப் பற்றிப் பேசுவதுதான் அதிசயமானது.

அறப் போதனையாக அமைய வல்ல ஒரு செய்தியை, தம்மில் இருந்து தமதுபாத்து உண்பதைப் போன்ற காதல் இன்பம் எனக் கூறுவதன் ஊடாக, தக்கதோர் உவமையாக்கி விட்டார் வள்ளுவர். இந்த அற உவமை வாசகர்கள் எதிர்பாராத இடத்தில் பூத்து நின்று அழகியல் தேன் சொரிந்து கொண்டு நிற்கின்றது.

அதுவும் பகுத்துண்பதைப் போன்ற காதலின்பம் என்றளவில் சொல்லி அமைந்திருந்தால், இக் கவிதை உவமை இன்பத்தை மட்டும் தந்து நிற்க, இதன் அழகியல் பெறுமதி மட்டுப்பட்டதாகவே அமைந்திருக்கும். ஆனால் இக்கருத்தை வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தி யுள்ள வார்த்தைகளும் அவை கூறும்



உண்மைகளும் குறளின் கவித்துவ வசீகரிப்பை மென்மேலும் அதிகரித்துள்ளன. இவ்வசீகரிப்பு குறளின் அழகியல் பெறுமதியை மிகவும் அதிகரிக்கச் செய்துவிடுகின்றது.

முதலில் குறளில் காணப்படும் "தம்மில்" எனும் வார்த்தைப் பிரயோகம் கவனிக்கத்தக்கது. விருந்தோம்பல் முதலாக, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைச் செய்யும் ஒருத்தன் அதன் மூலம் உண்மையான மகிழ்ச்சியை அடைய வேண்டுமாயின் தனது சொந்த வீட்டிலிருந்து இந்த அறத்தைச் செய்ய வேண்டும் என்பதையே இந்தப் "தம்மில்" என்னும் பிரயோகத்தின் ஊடாக வள்ளுவர் குறித்துள்ளார். இதன் மூலம் அடுத்தவர்கள் வீட்டில் நடக்கும் விருந்தோம்பலை ஏதோ தாம் நடாத்தியது போல பொய் மகிழ்ச்சி உறும் சில சமுதாய மனிதர்களை இலாவகமாக ஓரங்கட்டுகிறார் அவர்.

தம் வீட்டில் வைத்து விருந்து கொடுத்தால் மட்டும் போதுமா? போதாது. அந்தப் பகுத்துண்ணும் அறத்திற்குச் செலவு செய்யும் பொருளும் அந்த ஒருத்தனின் சொந்த உழைப்பாக இருத்தல் வேண்டும். தமது வீட்டில் வைத்து அடுத்தவனின் உழைப்பில் விருந்திட்டு மகிழ்வது உண்மையான மகிழ்ச்சி இல்லை என்பது வள்ளுவர் கருத்து. இக்கருத்தையே இக்குறளில் அவர் பெய்துள்ள "தமது" எனும் சொல் குறிக்கின்றது.

இங்கே, "தம்மில்" என்றும் "தமது" என்றும் வள்ளுவரால் அமைக்கப்பட்டுள்ள சொற்கள் மேலே காட்டப் பெற்றுள்ளவை போல, பகுத்துண்ணும் அறத்துப்பால் அறங்களை மட்டும் சொல்லப் பெய்யப்படவில்லை. உவமானத்துக்குப் பயன்படுத்தப்பெற்றுள்ள சொற்களை உவமேயத்துக்கும் கூட்டியுரைக்க வேண்டுமென்பது வள்ளுவர் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். இதனால், பெண்ணின் பத்தைப் பெறும் தலைவன் ஒருவன் அந்த இன்பத்தை தனது உரித்துடையாளிம் மட்டுமே பெறுதல் வேண்டும் எனும் காமத்துப்பால் அறமும் உணர்த்தப்படுகிறது. வள்ளுவர் சொல் வலை வேட்டுவக் கலைஞர். ஒரு வலை வீச்சில் பல பொருள்களை வீழ்த்தி விடுவது அவரியல்பு.

தொடர்ந்து அவருடைய அற உள்ளம் நன்கு வெளித் தெரியும் வார்த்தை வருகிறது. அச்சொல்தான் "பாத்து" என்பது. அதற்கு பகுத்து என்பது பொருள். இல்லறக் கடமைகள் பலவற்றுக்குமாக, தமது வருவாயைப் பகுத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்தது தான் இவ் வார்த்தைப் பிரயோகம். அதாவது, தெய்வம், தென்புலத்தார், விருந்தினர், சுற்றத்தார் ஆகியோருக்கு, தனது வருவாயை ஒருவன் பகுத்து வழங்கி அறம் செய்ய வேண்டும் என்னும் அவர் கருத்தை இச்சொல் தருகின்றது.



இக் கருத்து முன்னமே அவரால் அறத்துப் பாலில் சொல்லப்பட்பதுதான். எனினும், இங்கே உவமை சொல்வது போல மீள மேலோட்டமாகச் சொல் வதற்கும் காரணம் உண்டு. அறத்துப் பாலில் இவ்விடயத்தைக் கற்றவன் பெண்ணின்பத்தில் மயங்கி, சில வேளை அற நினைப்பற்றவனாகி விட்டிருப்பான். அவனுக்கு ஞாபகமூட்ட வும், அறத்துப்பாலைக் கற்காமல் ஆர்வ மிகுதியில் நேரே காமத்துப் பாலைக் கற்பவனுக்கு இதை அறிவிக்கவுமே அவர் இவ்விடத்தில் பகுத்து என்பதைக் கூறுகின்றார்.

உவமானத்துக்குப் பயன்படுத்தப் பெற்றுள்ள சொற்களை உவமேயத் துக்கும் கூட்டியுரைப்பதன மூலம் மேலதிக விடயங்களை உணர்த்துகிற வள்ளுவர், பாத்து எனும் சொல் இதனால், உரைக்கும் செய்தி நுட்ப மானது. பெண்ணின்பத்தைப் பெறும் தலைவன் ஒருவன் அந்த இன்பத்தை தான் மட்டுமே பெறும்படியாக அனுப விக்காமல், தன் துணையும் பகிர்ந்து பெறும் வண்ணம் அனுபவிக்க வேண்டும் எனும் காம சாத்திரச் செய்தியும் உணர்த்தப்படுகிறது.

இப்படி, "பகுத்து" எனச் சொல்வதனால் ஏதோ விருந்தோம்பல் முதலிய அறங்களைச் செய்து மற்றவர் களுக்கு வழங்குவதை மட்டும்தாம் வள்ளுவர் வலியுறுத்துகின்றார் என நினைத்தலாகாது. முழுப் பொருளை யும் அறங்களுக்கே செலவு செய்ய வேண்டும்போலும் என்று எழுகின்ற எண்ணத்தையும் அவர் அங்கீகரிக்க வில்லை. அறங்களுக்கு முழுப் பொருளையும் செலவு செய்து விட்டால் தன்னை மனைவியை குழந்தை களைப் பேணுவது எப்படி என்னும் யதார்த்தபூர்வமாகவும் சிந்திக்கச் செய்கின்றார் வள்ளுவர்.

அதனால்தான் "தம்மில் இருந்து தமது கொடுத்து" மகிழ்கின்ற இன்பம் என அவர் பேசவில்லை. "தம்மில் இருந்து தமது பாத்து உண்பது" போன்ற மகிழ்ச்சி என்றுதான் பேசு கின்றார். "பாத்து உண்க" அதாவது, பகுத்துக் கொடுத்து அறம் செய்த பின்னர் உனக்கு உரிய பங்கை உண்க என்பது தான் அவர் அறிவுரை. "தமது பகுத்து கொடுத்தற்றால்" என அறஞ் செய் தலுக்கே முழுமையும் சார்பாக அமைக் காமல், "தமது பகுத்து உண்டற்றால்" என யதார்த்தச் சார்பாக அவர் இக் குறளை அமைத்துள்ளமை இங்கே கவனிக்கத்தக்கது.

"கொடுத்துக் கொடுத்துக் கொண்டே இருப்பது மட்டும் அறமன்று. உன்னை யும் உன் குடும்பத்தையும் பேணு வதும் அறந்தான். ஆகவே மற்றவர் களுக்குக் கொடுப்பதிலேயே முழுப் பணத்தையும் செலவு செய்யாமல், உனக்கான பங்கில் நீயும் நன்கு சாப்பிடு" என வாசகர்களுக்கு வள்ளுவர் கூறிச் செல்கிறார். இச் செய்தியைத் தெரிவிக்க அவருக்கு பல வரிகள் தேவைப்படவில்லை. வெறு



மனே "உண்டு" எனும் ஒற்றைச் சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன் படுத்தியுள்ளதன் மூலம், இதனை உணர்த்தி விடுகிறார். இவ்வாறு உலகியல் சார் யதார்த்தக் கருத்தை மிகமிகச் சுருக்கமாக அவர் வெளிப் படுத்தியுள்ள விதம் அவரது கவிதா வீரியத்தையும் காட்டுகின்றது.

அறம் சொல்கிறோம் என்ற போர்வையில் "விருந்திடுக" என, சும்மா மேம்போக்காகச் சொல்லி விட்டு அமையாமல், தனது அறிவுரைகளைப் பின்பற்றுபவன் வாழ்க்கையிலும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மிகவும் யதார்த்தபூர்வமாகக் கருத்து களை வள்ளுவர் வெளியிட்டுள்ளார். வருவாயைப் பகுத்துக் கொள்ளாமல் முழுப் பொருளையும் செலவிடுகின்ற வனுக்கு மகிழ்ச்சி தொடர்ந்தும் நிலைக்காது என்னும் செய்தி இதன் மூலம் மறைவாக உணர்த்தப்படு கின்றது. இச் செய்தியை மறைவாக உணர்துகின்ற தன்மையானது, அறப் பிரசார நூல் எனும் நிலையையும் மேவி, உன்னத கவிதை நூல் எனும் வர்க்கத்திலும் குறளை அமர்த்திவிடு கின்றது.

வைக்கப் பட வேண்டிய இடத்தில் ஒரு பொருள் வைக்கப்படுவது அழகை அதிகரித்துவிடும் என்பது உலகி யற்கை. அப்படித்தான் இடமறிந்து வைக்கப்பட்டுள்ள வார்த்தைகள் குறளின் அழகியல் பெறுமதியைக் கூட்டி விடுகின்றன. அவர் சொல்ல நினைத்த பல விடயங்களையும் உணர்த்தக் கூடிய சின்னஞ் சிறு வார்த்தைகள் பென்னம் பெரிய உண்மைகளை மறைமுகமாகத் தருகின்றன,


இதன் மூலம் எவ்விடத்திலும் தனக்கு முதன்மையாகப்படும் விடயத்தைப் பேசிச் சென்றுவிடுகின்ற அவர் ஆளுமையை மட்டும் தரிசிக்க வில்லை. வாசகர்கள் விரும்பும் விடயங்களைப் பேசுவதுபோலப் பேசி, அவ்விடங்களிலும் மனுக்குலத்திற்கு அவசியமான அறங்களை இலாவக மாக, அழகியல் பூர்வமாக வெளிப் படுத்திவிடுகின்ற அவரின் கவித்துவ உளத்தையும் தரிசிக்கலாம்.

✷✷

மாங்குடி மருதனார்

ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு





வள்ளுவமும் வாழ்வும்

கே.வி.குணசேகரம்

திருக்குறளைப் பற்றிப் பேசாத அறிஞர்கள் இல்லை; திருக்குறளைப் பற்றி எழுதாத மொழியில்லை என்று கூறுமளவிற்குத் திருக்குறள் இன்று உலகளாவிய நூலாக மிளிர்வதை எல்லோரும் அறிவர். இந்து சமயங்கள் அறம் பொருள் இன்பம் வீடு என மனித வாழ்வை நான்காக வகுத்து அதற்குத் தமது சாத்திர நூல்கள் மூலம் விளக்கம் கூறத் திருவள்ளுவர் வாழ்க்கையை அறம் பொருள் இன்பம் என மூன்றாக வகுத்துத் தனது நூலில் கூறியுள்ளார். சாத்திர நூல்கள் ஆன்மா, சிவனின் பாதக் கமலங்களாகச் சென்றடைந்து, மீண்டும் பிறவாத நிலையை அடைந்து சிவனுடன் பேரின்ப வாழ்வு வாழ்வது தான் வீட்டின்பம் என்று கூறத் திருவள்ளுவர் அறிவிதிப் படி வாழ்ந்து பொருள்தேடித் தனது மனைவி பிள்ளைகளுடன் தனது வீட்டிலிருந்து இன்பம் அனுபவத்தபின் சிவனின் பாதாரவிந்தங்களை அடைவது தான் வீட்டின்பம் என்றும், எல்லா இன்பங் களுக்கும் மேலான வீட்டின் பத்தை அடைய ஒரு அளவான் தனது குடும்பத்துடன் செய்ய வேண்டிய அறச் செயல்கள் யாவற்றையும் தனது வீட்டிலிருந்த முறையாகச் செய்து பிறவாத நிலையை அடைத்து சிவனைச் சேர வேண்டும் என்றும் கூறுகிறார்.

இந்து சமய சாத்திரநூல்கள் அனைத்தும் கூறும் வழிமுறைகளை யாவும் திருக்குறளின் முப்பாலிலும் மிக மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சிவஞானபோதமும் ஏனைய மெய் கண்ட சாத்திர நூல்களும் கூறும் விதி முறைகள் யாவும் திருக்குறளின் முப்பாலிலும் கூறப்பட்டுள்ளது. இது தவிர வேத உபநிடதங்கள் கூறும் தத்து வங்களும் திருமந்திரம் திருக்கோவை யார் கூறும் தத்துவங்களும் திருக் குறளில் முழுமையாகக் காணப்படு கின்றன. திருமந்திரத்தில் உள்ள பெரும்பாலான பாடல்களின் கருத்துச் சற்றும் மாறுபடாது திருக்குறளில் காணப்படுகிறது.

கடவுள் வாழ்த்தில் சைவ சமயத் தின் மூல நூலான சிவஞானபோதம் கூறும் சைவ சமயத் தத்துவங்கள் அனைத்தும் கூறப்பட்டுள்ளன. சிவஞானபோதத்தின் 12 சூத்திரங் களின் கருத்துக்களும் கடவுள் வாழ்த்தில் தெளிவாகக் கூறப்பட் டுள்ளன. சிவஞானபோதம் சிவன் என்று சுட்டத் திருக்குறள் இறைவன் என்று கூறுகிறது. அந்த இறைவன் எண்குணத்தான் என்றும் கூறுகிறது. கடவுள் வாழ்தாகத் திருவள்ளுவர் கூறிய பத்துப் பாக்களும் சிவனைச் சுட்டி நிற்கின்றன. ஒரு தந்தை தனது மகனின் பெயரை ஒரு முறை அதை



அறியாதவர்களுக்குக் கூறிவிட்டுப் பின் தனது மகனின் பெயரைச் சொல்லாது 'மகன்' என்றே சொல்வார். அவர் அப்படி மகன் என்று சொல்வது வேறொரு வரைக் குறிக்காது. இது போலவே திருவள்ளுவரும் சிவஞான போதம் சிவன் எண் குணத்தவன் என்று கூறுவதைத் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார். கடவுள் வாழ்த்தில் கூறப்பட்ட அப்பத்துப் பாடல்களும் சிவனைக் குறிப்பனவே யன்றி வேறு கடவுளரைக் குறிப்பிடுவன அல்ல. ஏனெனில் மற்ற எந்த மதமாவது தமது கடவுள் எண் குணத்தவன் என்று குறிப்பிடவில்லை.

வேதங்கள் குறிப்பிடும் தெய்வங்கள் பலவற்றைத் திருவள்ளுவர் தனது திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார். சூரியன், வருணன், இந்திரன், தேவர்கள், திருமகள் போன்ற பல தெய்வங்கள் திருக்குறளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அடுத்து வீட்டின்பத்தைப் பற்றித் திருவள்ளுவர் குறிப்பிடாது விட்டாலும் நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், நிலையாமை துறவு, அவாஅறுத்தல், ஊழ் என்ற அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளார். அறவாழ்வு வாழ்ந்து பொருள் தேடி அதை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்ந்து சிவனை அடை என்பதே திருக்குறளின் சாராம்சம்

ஊழ் என்ற அதிகாரம் மனித வாழ்க்கையின் தத்துவத்தைச் சொல்கிறது. அறவாழ்வு என்பது இல்லறத்தைத் துறத்தல் அல்ல நல்லதொரு மனைவியுடன் வாழ்ந்து உலகிற்கு உதவி செய்வதே இல்லறம். பெண்ணுடன் கூடி வாழ்ந்து சகல இன்பங்களையும் முழுமையாக அனுபவிப்பதும் அறம் என்று வள்ளுவர் கூறுகிறார். குடும்பத்தினருடன் நல்ல வாழ்வு வாழ்பவன் வானுலகம் சென்று பேரின்ப வாழ்வு வாழ்வான் என்று வள்ளுவர் கூறுகிறார். பலர் திருவள்ளுவர் கிரியைகளைப் பற்றியும், வீடு பற்றியும் கூறாமையால் அவர் சமணர் என்று சொல்வர். முழுமையாகத் திருக் குறளை ஆராய்ந்தால் திருவள்ளுவர் பெரும் சைவர் என்றும், அவர் சைவ சமயசாத்திரங்களையே குறளாகக் கூறியுள்ளார் என்றும் புரியும்.

சமணர்கள் பெண்களை புனித மானவர்களாக ஏற்பதில்லை. அத்துடன் அவர்களை மதிப்பதும் இல்லை. பெண்களிடமிருந்து பெறும் இன்பத்தை நரக இன்பமென்று சமணர்கள் நினைப்பவர்கள். ஆனால் வள்ளுவர் 'பெண்ணிற் பெற்றிருந்தக்க யாவுள' என்று கூறுகிறார். பெண்களிடம் பெறும் இன்பத்திற்கு நிகரானது வேறெதுவும் இல்லையென்றும், அழகான தன் தாயின் தோளில் சாய்ந்திருப்பதைப் போன்ற இன்பம் தேவருலகிலும் இல்லை என்றும் சொல்கிறார். இதிலிருந்து வள்ளுவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவரென்று உறுதியாகக் கூறலாம்.

வள்ளுவர் கூறாதது எதுவுமில்லை. முப்பாலுள் அவர் உலகில் நடைபெறும் அத்தனை நிகழ்வுகளையும் வரையறை செய்து கூறியுள்ளார். வாழ்க்கையை வரையறை செய்ய முடியாது. ஆனால் வள்ளுவர் வாழ்க்கையின்



சிறுசிறு நிகழ்வு களையும் வரை யறைக்குள் கொண்டு வந்துள்ளார். பெற்றோர் எப்படி வாழவேண்டும், பிள்ளைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும், தவசிகள் எவ்வாறு இருத்தல் வேண்டும், நண்பர் கள், உறவினர்கள், குடும்பத்தினர் எவ்வாறு வாழவேண்டும். அரசன் எப்படி ஆள வேண்டும் என்றெல்லாம் கூறி யுள்ளார்.

இவற்றை விட இந்து சமய நூல்களான மகாபாரதம், இராமா யாணம், புராணங்கள் என்பவற்றின் சாராம்சங்கள் திருக்குறளில் உள்ளன. திருக்குறள் எல்லாவிடயங்களையும் தத்துவமாகக் கூற அதைப் புராண இதிகாசங்கள் கதையாகக் கூறு கின்றன. திருக்குறளை விலக்கி விட்டு உலகில் அடுத்த எந்த நூலையும் நாம் பார்க்க முடியாது. பற்றை மறைவில் பெற்றோருக்குத் தெரியாது சந்தித்து மகிழும் காதல் சோடிகளைப் பற்றியும், சில சமயம் பெண் ஏமாந்தால் ஆண் அவளுடன் இன்பம் அனுபவித்து விட்டு ஏமாற்றிச் செல்வதையும் வள்ளுவர் கூறியுள்ளார்.

வாழ்க்கையில் நடைபெறும் சிறு சிறு சம்பவங்களைக் கூட வள்ளுவர் மிகவும் அவதானத்துடன் கூறியதால் தான் இன்று தமிழில் எழுதப்பட்ட திருக்குறள் உலக மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலகில் வாழும் அத்தனை உயிர்களுக்கும் பொருத்தமான வாழ்க்கை முறையை வேறெந்த நூலும் கூறாதளவிற்குத் திருக்குறள் கூறுகிறது. அதை உணர்ந்தவர்கள் அதைத் தத்தமது மொழிகளில் மொழி பெயர்த்துத் தமது நாட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்து கின்றனர்.

கடவுள் வாழ்த்தைத் தவிர வேறெந்த இடத்திலும் தான் இன்ன மதத்தவன் என்பதை வள்ளுவர் வெளிக்காட்டாது உலகில் வாழும் மக்கள் அனைவரும் பயன்படத்தக்கவகையில் திருக்குறளை ஆக்கி யுள்ளது பெரும் புதுமை. அத்துடன் திருக்குறள் 2040 வருடங்களுக்கு முற்பட்ட நூலென்று ஆய்வாளர்கள் கூறிய போதும் அது தனக்கு முற்பட்ட நூல்களையெல்லாம் வென்று மூத்த நூலாக மிளிர்கிறது. ஏறக்குறைய 6000 வருடங்களுக்கு முற்பட்ட வேத உபநிடதங்களும் இதிகாச புராணங்களும் வட மொழியில் கூறியவற்றை யெல்லாம் திருக்குறள் தமிழிற் கூறு கிறது. உள்ளதை உள்ளபடியும் இயற்கையை அதன் இயல்புகளுக் கேற்ற வகையிலும், நீதிக் கருத்துக் களையும் ஒழுக்கக் கருத்துக்களையும் சரியாகவும் ஒழுங்காகவும் கட்டமைத்து மக்களுக்குப் புரியக் கூடியதாகக் கூறுவதில் திருக்குறளுக்கு நிகர் திருக்குறள் தான். இருப்பினும் சில குறள்களின் கருத்துக்களுக்கு உரை சொல்வோர் பொருத்தமில்லாத முறை யிலும், மயக்கத்தை உண்டுபண்ணும் வகையிலும் சொல்லியுள்ளனர். ஆனால் கதை எழுதும் சிலர் அவற்றிற்குப் பொருத்தமான கதை களை எழுதியிருக்கின்றனர்.



முதலாம், இரண்டாம், 55ஆம், 85ஆம், 236ஆம், 619ஆம் குறள்களும் வேறு சில குறள்களும் வாசிப்பவர்களுக்கு மயக்கத்தைத் தருகின்றனவே தவிர அவை சரியான கருத்தையே கூறுவதாக நான் நினைக்கிறேன். திருக்குறள் பல கலை வடிவங்களைப் பெற்றுள்ளது. அதில் கதை வடிவமும் ஒன்று. திருக்குறள் சொல்லாத எதையும் எக்கதையும் சொன்னதில்லை. கதைகள் திருக்குறள்ப் பாக்கள் ஒவ்வொன்றின் கருத்தையும் பல்வேறு கோணங்களில் நின்று சொல்கின்றன. அதனால் ஆய்வாளர்கள் அக்கதைகளை ஆராய்ந்து அக்கதைகள் கூறும் கருத்துக்கள் குறள்களுக்குச் சரியான கருத்தைச் சொல்கின்றனவா என ஆராய்தல் வேண்டும்.

திருக்குறளின் ஆறாம் அதிகாரத்தில் உள்ள 55ஆம் பாடல் கூறும் கருத்திற்குக் கதை எழுதியோர் உரை எழுதியவர்களை விடச் சிறப்பான கருத்துக்களைக் கூறியுள்ளனர். எனவே திருக்குறள் பற்றிக் கடந்த 2040 வருடங்களாக ஆய்வு செய்தவற்றையே திரும்பத் திரும்ப ஆய்வு செய்யாது புதிய வழிகளில் ஆய்வு செய்யப்படல் வேண்டும். அதற்காகத் திருக்குறளுக்காக எழுதப்பட்ட கதைகளை ஆராய வேண்டும். அப்படி ஆய்வு செய்வதன் மூலம் மயக்கத்தைத் தரும் உரைகளை நீக்கி உண்மையான கருத்தை உணர்ந்து கொள்ளலாம்.

✹✹

ஏறிச்சவூர் மலாடனார்


பாயிரம் நான்குஇல் லறம்இருபான் பன்மூன்றே
தூய துறவறம்ஒன் றுஊழாக - ஆய
அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து

போத்தியார்

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரண்இரண்டு ஒன்றுஒண்கூழ் - இருவியல்
திண்படை நட்புப் பதினேழ்குடி பதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை

மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.





வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

திருமதி நவம் வெள்ளைச்சாமி
B.A.Dip.In Edu, S.L.P.S.I
(ஓய்வு நிலை அதிபர்)

எல்லையற்று விரிந்து பரந்து கிடக்கின்ற விண்ணிலும் தமிழ் நாட்டின் புகழ் பரவி நிற்கக் காரண மாவது அதன் பரம்பரைச் சொத்துக்கள் தான். அச்சொத்துக்களில் முதன்மை யாக நிற்பது எது? என்ற வினாவிற்கு விடை தேட முனைந்த போது மகாகவி பாரதியின் மணியான கவிதை என் கருத்தைத் தொட்டது.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்ற பாரதியின் வாக்கு மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. ஆங்கிலம் முதல் பல ஐரோப்பிய மொழிகளிலும், சிங்களம் முதல் பல ஆசிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வான்புகழ் கண்ட நூல் திருவள்ளுவ நாயனார் அருளிய திருக்குறள் எனும் தெய்வ நூலாகும்.

மானிடப் பண்பின் உயிர் நிலை களைத் துருவி ஆராய்ந்து 1330 குறுகத் தறித்த குறள்களில் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார் வள்ளுவர்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ
லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து

(645) என்ற குறளில் சொற்களைக் கையாளும் திறனை விளக்குகிறார். அவர் கூறுகின்ற சொல் இலக்கணத் திற்கு அவரது நூலே தக்கசான்றாகவும் அமைந்துள்ள அழகை நூலை நுணுகிப் படிப்பதால் அறியலாம். ஒரு சொல்லை சரியான இடத்தில் முறை யாகப் பயன்படுத்துவதால் அச்சொல் பொருளுடையதாகி உயிர்த்த நிலை யைப் பெறும் என்று கூறாமல் கூறும் குறளின் சொற்கள் யாவும் பொருள் ஆழம் மிக்கவை என்பதனை உரை யாசிரியர்களின் விளக்கவுரைகள் விளம்புகின்றன.

திருவள்ளுவர் மானிட வாழ்க்கை யின் பயன்களைத் தெள்ளத் தெளி வாகக் கூறி மனித வாழ்க்கைக்கு இலட்சியம் வகுத்துக் கொடுத்துள்ளார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

என்று வாழ்விற்கு வழி சமைத்துக் கொடுத்த திருவள்ளுவரை ஈன்றதால் தமிழ் நாட்டின் புகழ் உலகெங்கும் பரவி நிலைத்த புகழாகிவிட்டது. அவரது குறள் 'தமிழ் மறையாக' மட்டுமல்லாது 'உலகப் பொது மறை'யாக உயர்ந்து விட்டது.



அண்ட சராசரங்களை அலசி ஆராய்வதில் விஞ்ஞானம் காற்றிலும் கடிதாகச் செயல்படுகின்றது. ஆயினும் அவ்வாய்வின் முடிவுகள் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டு அல்லது பிழை யென நீக்கப்பட்டு அல்லது ஏற்க முடியா தவை என மறுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் 2040 ஆண்டுகள் நிறை வடைந்த நிலையிலும் ஞானத்தைக் கொண்ட திருக்குறளானது காலத்தை வென்று நிலைத்து நிற்கும் பெருமை பெற்றுள்ளது. இதனால் வள்ளுவப் பெருந்தகையும் மரணமிலாப் பெரு வாழ்வு வாழ்ந்து கொண்டிருக் கின்றார். இவர் வகுத்துக் கொடுத்த வாழ்வியல் நெறிகள் இனமத மொழி கடந்து நாடுகள் கடந்து எல்லோருக்கும் உரித்துடையதாகவும் மனித நேயத்தை மலர்விக்கும் வழிகாட்டி யாகவும் அமைவதால் தமிழ்நாடு திருக்குறளால் சிறப்புப் பெற்றுள்ளது. தமிழ் மொழியும் வளமும் பலமும் பெற்றுள்ளது. கோவையில் நடை பெற்ற செம் மொழியாம் தமிழ்மொழி மகாநாட்டிற் குரிய பாடலுக்கு "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (972) என்ற குறளைத் தான் முதலடியாக கலைஞர் கருணாநிதி அவர்கள் எடுத்தாண் டுள்ளார்கள். உலகின் எல்லா மக்களிடமும் காணக்கூடிய இயல்பு களை கேட்பார் பிணிக்கும் வகையில் கூறியதில் மாபெருஞ் சாதனை படைத்த வள்ளுவர் தமிழ் நாட்டின் தவப் புதல்வன் - அவரால் தமிழ் நாட்டின் புகழ் ஓங்கி வளர்கின்றது.

வாழ்க்கையில் ஏற்படும் சரிவுகளை தூக்கி நிலை நிறுத்தும் சக்தி வாய்ந்தது நல்லொழுக்கமுடைய சான்றோரின் வாக்கு மட்டுமேயாகும்.

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ - லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.
(415)

ஒவ்வொரு குறளும் இதற்கு உறுதுணையாக உள்ளன. அறன் எனப்பட்ட இல் வாழ்க்கையில் நெறி யோடு வாழ்ந்த சான்றோன் திரு வள்ளுவர். இவரது குறள் எந்நாட்டு மக்களது நல்வாழ்வுக்கும் ஊன்று கோலாகும்.

பக்தியின் மொழி தமிழ் எனப் பாராட்டப்படுகின்றது. காதலின் மொழி பற்றி குறள் இவ்வாறு கூறுகின்றது. "கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல" எந்தவூர்க் காதலா னாலும் கண்ணால் பேசும் மொழியே காதல் மொழி என்று காதலுக்கு மொழி சமைத்த காம் பீரியத்தை இக்குறளில் காணலாம். "ஊழிற் பெருவலி யாவுள"? என்றும் "இடுக்கண் வருங்கால் நகுக" என்றும் "கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்" என்றும் ஒவ்வொரு குறளும் தரும் கருத்துக் கருவூலங் களை ஆராய்ந்தால் வள்ளுவர் வாய்மொழி என்பது பொய்யாமொழி என்பதும் அதுவே தமிழின் முதல் சொத்து என்பதும் ஏற்புடையதாகும்.



இதற்கு மிகவும் பொருத்தமுடைய ஒரு குறளைப் படிக்கலாம்.

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

மாபெரும் தத்துவ ஞானி சோக்ரடீஸ் பற்றி வள்ளுவர் அறியமாட்டார். மேற்போந்த குறளை சோக்ரடீஸ் அறிந்திருக்கவும் மாட்டார். ஆனாலும் குறள் கூறும் கருத்திற்கு சிறந்த உதாரண புருஷனாக மேலை நாட்டின் ஞானியின் வாழ்க்கை அமைந் துள்ளது.

நூல்களின் நயம் பற்றிச் சான்றோர் இவ்வாறு கூறுகின்றனர். 'மனிதன் மனிதனுக்குச் சொன்னது'. அதுவே திருக்குறள், 'மனிதன் இறைவனுக்குச் சொன்னது' அதுவே திருவாசகம், 'இறைவன் மனிதனுக்குச் சொன்னது' அதுவே பகவத் கீதை. திருக்குறளின் பெருமை வானளாவியது என்பதில் ஐயமே இல்லை. ஆன்மீகக் கருத்துக் களையும் குறள் தக்க இடங்களில் சிறந்த உதாரணங்களோடு முன் வைத்துள்ளது. "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற குறள் புனர்ஜென்மக் கொள்கையை எளிதாக உணர்த்தி விட்டது. உடம்பிற்கும் உயிருக்கு முள்ள தொடர்பை" குடம்பை தனித்து ஒழியப் புள்பறந்தற்றே" என்று அழகான உவமை மூலம் விளக்குகின்றார்.

நிறைவாக நாடு பற்றி வள்ளுவரின் கருத்தை மீட்டுப் பார்ப்போம்.


உறுபசியு மோவாப் பிணியுஞ் - செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. (734)

நாடு அமைதி பெற்று பொலிவுடன் திகழ் உலகத்துக்கு குறள் காட்டும் நன்நெறி இதுவாகும். "நவில் தொறும் நூல்நயம் போலும்" என்றும் வள்ளுவப் பெருந்தகை நூல்களின் தன்மையை விளம்புகின்றார். அக்கூற்றுக்கமைய செம்மொழியாம் செந்தமிழின் உயிராக ஒளிரும் திருக்குறளை கசடறக் கற்று அதன் வழி ஒழுகுவதே நமது பண்பட்ட செயலாகும். திருக்குறளை நம்மனதில் பதியவிட்டால் நமது நாளாந்த வாழ்வில் மனித நேயம் மலரும். குறள் தரும் வாழ்வு குறைவில்லாப் பெருவாழ்வாக அமையும்.

✹✹

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.





திருக்குறளில் புதைபொருள்கள்

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

செல்வம் பலவகைப்படும். அவற்றுள் பூமியிற் புதைபட்டவை சில. நீரில் ஆழ்ந்துகிடப்பவை சில. நூல்களில் மறைந்துகிடப்பவை பல என்று கூறலாம். மண்ணிலும் நீரிலும் மறைந்துகிடக்கும் செல்வங்களை எடுக்க மக்களுக்கு ஏற்படும் ஆக்கமும் முயற்சியும் நூல்களில் மறைந்து கிடக்கும் செல்வங்களை எடுப்பதில் ஏற்படுவதில்லை. அதுவும் ஏற்பட வேண்டும் என்பது நமது ஆசை.

இப்பரந்த உலகில் எந்தக் கண்டத்திலும், எந்தக் காலத்திலும், எந்த மொழியிலும், எந்தப் பேராசிரியரும் சொல்லியிராத உயர்ந்த கருத்துக்களைத் தமிழ் நூல்களில் இன்றும் காணலாம். இச் சிறந்த கருத்துக்கள் தமிழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் களால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறப் பெற்றிருப்பவை. இவ் உண்மையை தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்த பிற நாட்டுப் பேராசிரியர்களே ஒப்பியிருக்கின்றனர்.

திருக்குறள் ஒரு உயர்ந்த நூல். அது பழைய சங்க காலத்திய நூல்களில் ஒன்று. அது தோன்றி இன்றைக்கு 19 நூற்றாண்டுகள் ஆயின. அதற்கு இன்றும் உயிர் உண்டு. இனியும் அது உயிரோட்டத்தோடு ஒளிவீசும். நாடு, மக்கள், மொழி, நிறம், சமயம் ஆகிய அனைத்திற்கும் பொதுவான ஒரு ஒப்பற்றநூல் அது.

திருக்குறள் ஒன்று தோன்றிய பின்புதான் தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் உலக மக்களால் அறிய முடிந்தது. இது தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழகத்திற்கும் பெருமை அளிப்பதாகும்.

உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்ற நூல்கள் 3, முதல் வரிசையில் முதலில் இருப்பது பைபிள். இரண்டாவதாக இருப்பது குரான். அடுத்து மூன்றாவதாக இருப்பது திருக்குறள். முதல் இரண்டும் சமய நூல்கள் என ஒதுக்கப்பட்டு விடுமானால், உலக இலக்கியங்களிலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று தலைமை வகிக்கின்ற நூல் திருக்குறள் ஒன்றேயாகும்.

திருக்குறள் ஒரு கடல். அதில் மறைந்து கிடக்கும் புதைப்பொருள்கள் விலை உயர்ந்த முத்துக்களாகும். முத்துக் குளிக்கும் மக்கள் தங்கள் மூச்சு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங் களை அள்ளிக் கொள்வதைப் போல, குறளில் முழுகும் மக்களும் தங்கள் அறிவு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங்களை அள்ளிக்கொள்வ துண்டு.

திருக்குறள் மிகக் குறைந்த அறிவு படைத்த மக்களுக்கு நெருங்கி நின்று உணவு ஊட்டியும், பேரறிவு படைத்த மக்களுக்கு எட்டியிருந்து உணவு அளித்தும் வருவது வியப்பிற்குரிய ஒன்றாகும்.

திருக்குறளில் புதைந்துகிடக்கும் பொருள்கள் அனைத்தையும் துருவி,



ஆராய்ந்து எடுத்து மக்களுக்கு விளக்கிக் கூற ஒரு அறிஞர்குழு வேண்டும். தனிப்பட்ட எவராலும் இயலாது. என்றாலும் முயன்றால், சில குறள்களின் புதைபொருள்களை யாவது பெறமுடியும். இன்று ஒரே ஒரு குறளைமட்டும் எடுத்துக்கொண்டு அதிற் புதைந்துகிடக்கும் பொருள் களைப் பெற முயற்சிப்போம். அக்குறள்:

கொல்லா நலத்தது நோன்மை
பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.
என்பது

1. இக்குறள் சான்றாண்மை என்ற தலைப்பின் கீழ் வந்தது. தமிழகம் சான்றோரை தனது நாட்டுச் செல்வமாகக் கொண்டிருக்கிறது. சேரநாடு வேழமுடைத்து, பாண்டிநாடு முத்துடைத்து, சோழநாடு சோறு டைத்து, தொண்டை நாடு சான்றோரு டைத்து என்பது ஔவையின் வாக்கு, இதிலிருந்து நிலவளமாகிய நெல்லும், மலை வளமாகிய யானையும், கடல் வளமாகிய முத்தும், மக்கள் வளமாகிய சான்றோரும், தமிழகத்தின் செல்வங் கள் என்ற உண்மையை நன்கு உணரலாம்.

சான்றாண்மை என்ற சொல் தமிழ்மொழி ஒன்றிற்கே உரியது. சான்றாண்மைத் தன்மை தமிழ் மக்களின் கலை. சான்றாண்மை என்ற சொல்லைக்கூட பிறமொழிகளில் மொழிபெயர்க்க முடியாது. மொழி பெயர்த்துக் கூறினாலும் அச் சொல்லில் தமிழ் கூறும் பொருள் இராது என துணிந்து கூறலாம். சான்றாண்மை என்பது பல நல்ல குணங்கள் அமைந்துள்ள ஒருவன் அக்குணங் களில் எதுவும் தன்னைவிட்டுப் பிரிந்து போய்விடாமல் காப்பாற்றி ஆளும் தன்மை எனப்படும். எனவே சான் றாண்மை என்பது உயர்ந்த மக்களின் சிறந்த தன்மை என்றாகிறது.

2. மக்களின் உயர்ந்த பண்புக்கு பல நற்குணங்கள் இருந்து தீர வேண்டும். எது இல்லாவிடினும் இரு பெருங் குணங்களேனும் வேண்டும். அவற்றுள் ஒன்று பிற உயிர்களைக் கொல்லாமை. மற்றொன்று பிறர் தீமைகளைச் சொல்லாமை என்று இக்குறள் கூறுகிறது.

3. சான்றாண்மைக்கு திரு வள்ளுவர் சொல்லில் ஒன்றும், செயலில் ஒன்றும் விரும்புகிறார் என்பதையும் அதிலும் சொல்லுக்கு முன்னே செயலை விரும்புகிறார் என்பதையும் இக்குறளால் அறிந்து மகிழ்ச்சியடை கின்றோம்.

4. உயிரைக் கொல்லாமையும், தீமையைச்சொல்லாமையும் ஆகிய இவ்விரண்டும் "நலம்தரும்" என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிடுகிறார். இதனை கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது என்ற சொற்களால் அறிய முடிகிறது.

5. கொலையுண்ட உயிர்களும், சொல்லுண்ட உயிர்களும் பெரிதும் துன்பப்படும் ஆதலின் அவ்வாறு செய்யாதிருப்பது அவ்வுயிர்களுக்கு நல்லது என்பது இக்குறளில் உள்ள. 'நலத்தது' என்ற சொல்லின் கருத்து.

6. கொல்லுகின்றவனைத் தீய செயலாளன் என்றும், சொல்லுகின்ற வனைக் தீயசொல்லாளன் என்றும், உலகத்தார் சொல்லிப் பழித்து, வெறுத்து ஒதுக்குவர். ஆதலின் கொல்லாமையும்,



சொல்லாமையும் பிறருக்கன்றி தமக்கும் நல்லது என்ற கருத்தும் இக்குறளில் அடங்கியேயிருக்கிறது.

7. உயிரைக் கொல்லாமை தீமையைச் சொல்லாமை ஆகிய இரண்டையும் 'நலத்தது' என்ற ஒரு சொல்லால் ஒற்றுமைப் படுத்திய வள்ளுவர், அவற்றின் பண்பை வேற்றுமைப் படுத்திக் கூறியிருப்பது எண்ணி எண்ணிவியக்கக் கூடிய ஒன்றாகும்.

8. கொல்லா நலத்தினை நோன்மை என்றும், தீமை சொல்லா நலத்தினை சால்பு என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுகின்றார். இக்குறளில் அமைந்துள்ள இச்சொற்கள் பொன்னிற் பதிந்த மணிகள் என மின்னிக் கொண்டிருக்கின்றன.

9. 'நோன்பு' என்பதை விரதம் என வடமொழியாளர் கூறுவர். இது குறிப்பிட்ட சில நாட்களில் இதைச் செய்வதில்லை யென்பதும், நான் விரும்புவதைப் பெறும் வரையில் இவ்வாறு இருப்பேன் என்பதும் ஆகும். புரட்டாதி சனிக் கிழமைகளில் மட்டும் புலால் உண்ணுவதில்லை யென்பதும், திருப்பதிக்குப் போகும் வரை முடி எடுப்பதில்லை யென்பதும் நோன்பு என்பதிற் பாற்படும்.

10. சால்பு என்பது குறித்த நாளில் குறிப்பிட்ட ஒன்றைச் செய்யாதிருக்கும் நோன்பினைச் சுட்டாது. அது என்றும் நின்று நிலவுகின்ற ஒரு உயர்ந்த பண்பையே சுட்டிக்காட்டுகிறது.

11. நோன்பின் நன்மையையும் சால்பின் தன்மையையும் அறிந்து கொண்ட நமக்கு இக்குறள் நோன்பை விட சால்பு உயர்ந்தது என்று வற்புறுத்திக் கூறுவதாகத் தெரிகிறது.

12. நோன்பைவிட சால்பு உயர்ந்தது என்று இக்குறள் கூறுவதிலிருந்து உயிர்களைக் கொல்லா திருப்பதை விட தீமைகளைச் சொல்லாதிருப்பது உயர்வு என்பது வள்ளுவர் கருத்து என விளங்குகிறது.

13. சான்றாண்மைக்கு இலக்கணம் கூறுவந்த வள்ளுவர் அதற்கு இருக்க வேண்டிய பல நல்ல குணங்களுடன் கொல்லாமையும், சொல்லாமையும் வேண்டும் என்று மட்டும் இக்குறளில் கூறியிருக்கவில்லை. பின்னேதற்கு முன்னதை ஒப்பு நோக்கும் உவமையாகக்கூட கூறியிருக்கிறார் என்பதை அறியும் பொழுது நம் உள்ளம் பெரு மகிழ்ச்சியடைகிறது.

14. கொல்லுதற்குரிய கருவி கிடைக்கப் பெறாத ஒருவன் கொல்லா திருந்து விடவும் முடியும். அது எளிது. ஆனால் சொல்லுதற்குரிய கருவி இருந்தும் அதனை அடக்கி ஆண்டு, கட்டுப்படுத்திக் கொண்டு சொல்லா திருப்பது அரிது. ஆதலின் கொல்லாச் செயலைவிட தீமை சொல்லாச் செயலை இக்குறள் உயர்வு படுத்திக் கூறுகிறது.

15. கொல்லுங் குணத்தைவிட தீமை சொல்லுங் குணத்தைக் கொடுமையாகக் கூறியிருப்பது கொலையுண்டவன் அப்பொழுது மட்டுமே துடிதுடித்துச் சாகிறான். சொல்லுண்டவன் வாழ்நாள் முழுவதுமே துடி துடித்துச் சாகிறான் என்பதின் பொருட்டு எனத் தெரிய வருகிறது.

16. 'கொலைவாளினும் கொடியது நாக்கு' எனலாம். வாள் மனிதனை விட்டு சில பொழுதேனும் பிரிந்திருக்கும். நா எப்பொழுதும் மனித



னுடனே இருந்துவரும். வாளால் சிலரையே வதைக்க முடியும். நாவால் பலரை வதைக்க முடியும். வாள் கண்ட வரையே கொல்லும். நா காணாத வரையும் கொன்று விடும். ஆகவே வாளினும் நா வலிமையுடையது என்பது வள்ளுவர் கருத்து.

17. "நாவினால் சுட்ட வடுவை உண்டாக்குவதை விட தீயினால் சுட்டு புண்ணை உண்டாக்குவது நல்லது" என்று முன்பு ஒரு குறளில் கூறினர். "தீமையைச் சொல்லி பல நாள் துன்புறுத்தும் கொடுமையைவிட கொலையைச் செய்து ஒரு நாள் துன் புறுத்தும் கொடுமை நல்லது" என்று இக்குறளில் கூறுகிறார். இக்கருத்துகள் நமது உள்ளத்தைப்போய் சுடுகின்றன.

18. பெற்றவர்கள் பிள்ளைகளின் குறைகளையும் எடுத்துக் கூறாமல் இருக்கலாமா? இருந்தால் அவர்கள் திருந்துவது எப்படி? என்று நாம் வள்ளுவரைக் கேட்டால் 'அவர் நன்றாக எடுத்துக் கூறுங்கள். மக்களின் குறைகளை எடுத்துக்கூறித் திருத்தி தம்மில் தம் மக்களை அறிவுடை யவராகச் செய்யுங்கள். அதுதான் தந்தையின் கடமை. நண்பர்களின் தவறுகளை அழச் சொல்லியுமல்ல, இடித்து இடித்துக் கூறுங்கள் அது தான் நட்பு. நான் கூற வந்தது அவர்களை யல்ல. உற்றாரும் நண்பரும் அல்லாத பிறரை!' என்று வெகுநயமாகப் பதிற் கூறுகிறார். இவ்வுண்மையை இக்குற ளில் உள்ள பிறர் என்ற சொல் வெகு அழகாக அறிவித்துக் கொண்டிருக்கிறது.

19. 'தீமை' என்ற ஒரு சொல் இக்குறளில் ஆட்சி புரிகிறது. இதற்கு 'தவறு' என்பதோ 'குறை' என்பதோ பொருள் ஆகாது. இது பழி பாவங் களுக்கு அஞ்சாத கொடுஞ் செயல் என்ற பொருள் பெறும். வள்ளுவர் இதனைக் கருத்திற் கொண்டே "பிறர் குறையை, பிறர் தவறை" என்று கூறாமல் பிறர் தீமை என அழுத்திக் கூறியிருக்கிறதாகத் தெரிகிறது.

20. 'பிறருடைய தீமைகளை அவரது நலம் கருதுவோர் அவரிடமே நேரிற்சென்று எடுத்துக் கூறியும் கூட திருத்தலாம்" என்பது வள்ளுவருடைய கருத்து, இதனை "கண்ணின்று கண்ணிறச் சொல்லினும்" என்ற வள்ளுவர் வாய்ச்சொல்லே மெய்ப் பிக்கும். இக்குறளில் கூறியிருப்பது அது வல்ல என்றும், பிறருடைய தீமை களைப் பிறரிடத்தே போய்க் கூறும் கொடுமையினையே என்றும் தெளி வாக அறியலாம்.

21. பிறருடைய தீமைகளை அவரிடமே சென்று கூறுவது குளிர்ச்சி உள்ளங் கொண்டவர் செயலாகுமே ஒழிய, எரிச்சல் உள்ளங் கொண்ட மக்களின் செயலாகாது என்பதை எண்ணியே வள்ளுவர் அவ்வாறு கூறியிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

22. பிறருடைய தீமைகளை பிறரிடம் போய்க் கூற அவரது நலம் கருதுவோர்க்கே உரிமையில்லை என்றாகும் பொழுது பகைமை உடையவர்க்கு அவ்வாறு கூற உரிமை ஏது? நண்பரும், பகைவருமாகிய இவ்விருவரும் வேறு பல உயர்ந்த பண்புகளால் சால்பு பெற்றிருந்தாலும் பிறரிடத்தே போய்த் தீமை சொல்லும் நாவைப் பெற்றிருந்தால், அது அச்சால்பையும் அழித்து விடும் என்பது



வள்ளுவர் முடிவு. இதனை இக் குறளில் உள்ள சொல்லா நலத்தது சால்பு என்ற சொற்கள் அறிவிக்கின்றன.

23. பிறருடைய தீமைகளைப் பிறரிடம் போய்க் கூறுவதே கொடுஞ் சொல்லாக இருக்குமானால், தீமை செய்யாதவர்களை தீமை செய்ததாகப் பிறரிடம் போய்க் கூறுஞ் சொல்லுக்கும், நன்மை செய்தவர்களையே தீமை செய்ததாகப் பிறரிடம் போய்த் திரித்துக் கூறுஞ் சொல்லுக்கும் என்னபெயர் கொடுப்பது? இக்கேள்வியை நாம் இக்குறளிடம் தான் கேட்க வேண்டும். கேட்டால் அது, "சொல்லும் சொல்" என்று பதிற் கூறுகிறது. இச்சொற்கள் இரண்டையும் இக்குறளடிகளில் உள்ள தலைப்பிலேயே கண்டு மகிழுங்கள்.

24. நலத்தது என்ற சொல்லை இக்குறளில் எத்தனை முறை படித்தோம் அதன் பொருள் விளங் கிற்றா, நமக்கு? 'நல்லது', 'நல்லது' என்ற பொருள் தானே அதை அறிந்தோம். அது தவறு. அதன் பொருள் அதுவல்ல. அதன் உண்மை யான பொருள் நல்லதைச் சார்ந்தது என்பதேயாகும்.

உயிர் கொல்லாச் செயலையும் தீமை சொல்லாக் குணத்தையும் வள்ளுவர் நல்லதைச் சார்ந்தது என்று கூறினாரே ஒழிய 'நல்லது' என்று கூற அவருடைய உள்ளம் ஒப்பவே யில்லை. இக்கருத்தை இக்குறளில் உள்ள 'நலத்தது' என்ற சொல்லிற் காணும்பொழுது நம் உள்ளமெல்லாம் இனிக்கிறது.

25. கொல்லாமையும், சொல்லா மையும் நல்லதைச் சார்ந்தது என்று இக்குறள் கூறும் பொழுது வேறு எதையோ "நல்லது என்று இக்குறள் கூறுவது போலத் தெரிகிறது. அது எது? என ஆராயும் பொழுது பிற உயிர்களை வளர்த்து வாழ்தலும், பிறர் நன்மை களைச் சொல்லி வாழ்தலுமே எனப் புலப்படுகிறது. இவ் உயரிய பொருளை விளக்கவே இக்குறள் தோன்றியிருக் கிறது என்பதை மலை மீது நின்றும் கூறியாகவேண்டும்.

இத்தனை பொருள்களும் இக்குறளில், ஒன்றே முக்கால் அடிகளில் ஏழு இடங்களில், எட்டே சொற்களில் இருக் கின்றன என்றும் நாம் அறியும் பொழுது நாம் அடைகின்ற மகிழ்ச்சிக்கு எல்லை ஏது? குறளை மறுபடியும் கூறுகிறேன் பாருங்கள்.


கொல்லா நலத்தது நோன்மை
பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

எப்படி இக்குறள்! இந்த ஒரு குறளே நமக்கு நோன்பு, சால்பு, பண்பு, நேர்மை, அறிவு, ஆண்மை, உயர்வு, வாழ்வு ஆகிய செல்வங்கள் அனைத் தையும் தருமானால் இன்னும் திருக்குறளில் உள்ள 1329 குறள்களும் என்னென்ன செல்வங்களைத் தரும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

✷✷

1955 இல் கொழும்பு திருக்குறள் மன்றம் வெளியிட்ட
'திருக்குறள் கட்டுரைகள்' தொகுப்பிலிருந்து





அன்பின் ஐந்திணை

டாக்டர்.மு.வரதராசனார்

உலகத்தில் நன்மை தீமைகளைப் பிரிக்கமுடியாததுபோல் காதலையும் காமத்தையும் பிரிப்பதும் அருமையே, நன்மையான செயலில் சிறு தீமையும் கலந்திருக்கிறது. தீமையில் சிறு நன்மையும் கலந்திருக்கிறது. அது போலவே, காமுகரான கணவன் மனைவி வாழ்க்கையிலும் சிறிதளவு காதல் காணலாம். காதலர் வாழ்க்கை யிலும் காமம் காணலாம்.

காமம் காதல்என்னும் சொற் களுக்குப் பழங்காலத்தில் ஒரே பொருள் இருந்துவந்தது. இன்று காமம் வேறு, காதல் வேறு என்று தெளிவாகிவிட்டது. காமம் தன்னலமானது உடம்பே காரணமாக எழும் ஆசை. காதல் தன்னலம் அற்றது, உள்ளம் காரண மாக வளரும் அன்பு.

வாழ்க்கையைத் தொடங்கும் நிலையில் காமுகர் காதலர் என்று பிரித்தறிவது இயலாது. தொடக்கத்தில் ஒரே தன்மை காணப்படும். வளர்ச்சியி லேயே வேறுபாறு உண்டு. ஆண் பெண் உறவு என்பது தொடக்கத்தில் ஒரு செடியாய் முளைத்து எழுவது. அப்போதே அதனிடத்தில் இரண்டு கிளைகள் உண்டு ஒரு கிளை காமம், உடல் பற்றிய கவர்ச்சி. மற்றொருகிளை காதல், உள்ளம்பற்றிய கவர்ச்சி. இந்த இரு கவடுகளும் எல்லோருடைய வாழ்க்கையிலும் உண்டு.

வளர வளர இந்த இரு கிளைகளுள் ஒன்று மட்டும் செழித்து ஓங்க, மற்றொன்று வளர்ச்சியின்றி மெலிந்து நின்று பட்டுப்போகும். நல்ல பண்புகள் நிறைந்த கணவனும் மனைவியு மாயின், காதல்கிளை செழித்து வளரும், காமக்கிளை செழிக்காமல் போகும்; பண்பாடு இல்லாதவர் களாயின் காமக்கிளையே வளர்ந் தோங்கும்; காதல் பட்டுப்போகும்.

பண்பாடு இல்லாதவர்களின் வாழ்க் கையில் காதல் செழிக்காதகுறையால் அன்புவாழ்க்கை, தன்னலமற்ற தியாக வாழ்க்கை, ஒருவன் ஒருத்தி என்ற கற்பு வாழ்க்கை இவற்றைக் காண முடியாது. அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்துப் பிரிவர். பிரியாவிடினும் வெறுத்து வாழ்வர். வேறு ஆணிடத் திலோ பெண்ணிடத்திலோ உறவு கொள்ளவும் முயல்வர். அந்த உறவில் இருவகை உண்டு. தம்மை விரும்பாத வரிடத்திலும் தாமே வலிந்து உறவு கொள்வது அதனை ஒருதலைக் காமம் அல்லது கைக்கிளை என்று சான்றோர் ஒதுக்கினர். மற்றொன்று தம்மை ஒருசிறிது விரும்புவாரிடத்தில் உறவு கொள்வது. அது ஒத்த அன்பு அன்று, ஆகையால், அதனைப் பொருந்தாக் காமம் அல்லது பெருந்திணை என்று சான்றோர் ஒதுக்கினர்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் ஒருதலைக் காமத்தையோ பொருந்தாக் காமத்தையோ கூறவில்லை. "அன்பின் ஐந்திணை" என்று சான்றோர் புகழ்ந்த ஒத்த அன்புடைய காதலர் வாழ்க்கை யையே கூறுகின்றார்.



தகைய காதலர் வாழ்க்கையில் பிரிவு நேரும்போதும் மீண்டும் மீண்டும் அந்த ஒத்த அன்பே எதிர் பார்க்கப்படுகின்றது. இதைப் பிரிவாற்றா மல் வருந்தும் காதலியின் சொற்களால் அறியலாம். "காதலர் பிரிந்தாலும் பிரியலாம், பிரிவால் வருந்துவதாயினும் வருந்தலாம். ஆனால் தாம் காதலரை விரும்புவதுபோலவே, காதலரும் தம்மை விரும்பவேண்டும். அத்தகைய ஒத்த அன்பு வாய்க்கப்பெற்றவர்கள், காதலர் பிரிந்தாலும் மீண்டுவருவர் என்று செருக்கோடு வாழும் பேறு உடையவர்கள். அவ்வாறு இல்லாமல், நாம் மட்டும் அவரைக் காதலிக்கின் றோம் அவர் நம்மேல் காதல் கொள்ளாத போது, பயன் என்ன? காதல் என்பது ஒரு சார்பாக இருப்பது துன்பமே. காவடி தாங்கும் இருபுறம் போல, இரு சார்பிலும் ஒத்த வேட்கை இருந்தால்தான் காதலும் சிறப்புறும், தாம் விரும்பும் காதலரிடமிருந்து ஓர் இன்சொல்லாவது பெற்றால்தான் பிரிவாற்றாமல் வருந்தினாலும் உயிர் வாழ முடியும். ஓர் இன்சொல்லும் பெறா மல் உயிர் வாழ்கின்றவர்களைப் போல் கல்நெஞ்சம் உடையவர்கள் உலகத் தில் இல்லை. பிரிவால் வருத்தும் துணைவியரை நினைந்து உணர்ந்து காதலர் மீண்டு வந்து அன்பு செய்வா ரானால், அவருடைய அன்புக்கு ஈடு உண்டோ? மழையையே நோக்கி வாழ்கின்றவர்களுக்கு மழை பெய்து காக்கும் அருளைத்தான் அதற்கு ஒப்பாகச் சொல்லவேண்டும்" என்று காதலி கூறும் மொழிகளில், காதலர் வாழ்க்கையில் பிரிவின்போதும் ஒத்த அன்பே வேண்டும் என்று ஏங்கும் ஏக்கத்தைக் காணலாம்.

வீழுநர் வீழப் படுவார்க்
கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு (1193)

நாங்காதல் கொண்டார் நமக்கெவன்
செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை (1195)

ஒருதலையா னின்னாது காமங்காப்
போல
இருதலை யானு மினிது. (1196)

வீழ்வாரி னின்சொற் பெறாஅ -
துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில்.
(1198)

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்
வீழ்வார்க்கு
வீழ்வா ரிளிக்கு மளி. (1192)

ஒத்த உருவும் திருவும் பருவமும் பண்பும் உடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முள் கண்டு மயங்கு கின்றனர். அந்த மயங்கிய உள்ள நிலையைத் தலைவனே புலப்படுத்து கின்றான். "அணங்கோ, மயிலோ, மங்கையோ" என்று அவன்நெஞ்சம் மயங்குகின்றது.

"அணங்குகொ லாய்மயில் -
கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு"
(1081)

தலைவியின் அழகுமட்டும் அவனு டைய நெஞ்சைக் கவரவில்லை. உடலழகு மட்டும் கவரும் கவர்ச்சி உயர்ந்த கவர்ச்சி அன்று.

விலங்கு பறவைகளைவிட உயர்ந்து நிற்பவர்கள் மக்கள் ஆகையால், உடலின் கவர்ச்சியோடு நிற்பது இல்லை. உள்ளம் கவரும் கவர்ச்சியே சிறப்பைத் தருவது. முதலில் தலைவன் தலைவியின் உடல் வனப்பைக் கண்டு மயங்கினான் என்றாலும் அவளுடைய உள்ளத்துக் கவர்ச்சியையே எதிர் பார்த்து நிற்கின்றான் அதையும் பெறுகின்றான். "அந்த அழகி என் பார்வைக்கு எதிரே பார்க்கின்றாள்; அதுதான் என் வருத்தத்தை வளர்க்கின்றது. அந்த வருத்தம் எவ்வளவு? கூற்று என்று சொல்கின்றார்களே, அதன் செயல் போல் உள்ளது. பெண்தன்மையோடு அவளுடைய கண்கள் வருத்தும் வருத்தத்தில் அதை உணர்கின்றேன். அந்தக் கண்கள் கண்டவரின் உயிரை உண்ணும் தன்மை பெற்றிருக்கின்றன" என்கின்றான்.

நோக்கினா ணோக்கெதிர் நோக்குத
றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.
(1082)

பண்டறியேன் கூற்றென் பதனை
யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு
(1083)

கண்டா ருயிருண்ணுந்
தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.
(1084)

பார்வையின் கொடுமையை மட்டும் தலைவன் கண்டு நிற்க வில்லை. அதன் அழகையும் காண்கின்றான். அதனோடு பெண் தன்மையை எடுத்துக்காட்டும் நாணம் என்னும் பண்பையும் காண்கின்றான். கண் ணழகும் நாணழகும் உள்ள போது, வேறு அணிகலன்களை அணிவது ஏன் என்று வியந்து எண்ணுகின்றான்.

பிணையேர் மடநோக்கு நாணு
முடையாட்
கணியெவனோ வேதில தந்து?
(1089)

இவ்வாறு தலைவன் காணும் கண்களில் வெறும் புறத் தோற்றத்தை மட்டும் கண்டு நிற்கவில்லை கருமணியும் செவ்வரியும் காண்பதாகத் தலைவன் கூறவில்லை. அந்தப் பார்வையையே கண்டு வருந்துகின்றான்; வியக்கின்றான். கண்ணின் புறத்தோற்றத்தில் தலைவியின் உள்ளம் வெளிப்படுவதில்லை கண் நோக்கும் நோக்கில்தான் அவளுடைய உள்ளம் வெளிப்படுகின்றது அதனால் தான் கண்பார்வையோடு பெண் தன்மையும் கலந்து வருத்துவதாகக் கூறுகின்றான்; கண்பார்வை யோடு நாணமும் கலந்து அழகு விருந்து அளிப்பதாகக் கூறுகின்றான். இவ்வாறு அவன் தலைவியின் கண்களில் காண்பது அவளுடைய உள்ளத்தையே; உள்ளத்தின் கவர்ச்சியையே.

திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரப் பெயர் ஒன்று உள்ளது. அதுவே குறிப்பறிதல் என்பது. பொருட்பாலில் அங்கவியலிலும் குறிப்பறிதல்



உண்டு. காமத்துப் பாலில் களவி யலிலும் அது உண்டு. பொருட்பாலில் குறிப்பறிதலை விளக்கும் திருவள் ளுவர், நெஞ்சம் கடுத்ததைக் காட்டுவது முகமே என்றும், அந்த நெஞ்சக் குறிப்பை அளந்தறிவது கண்ணே என்றும் கூறுகின்றார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோ
னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். (706)

குறிப்பிற் குறிப்புணரா வாயி -
ணுறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். (705)

அந்த அதிகாரத்தில் இறுதியாக இரண்டு குறளில், உள்ளத்தில் உள்ள பகையையும் நட்பையும் (வெறுப் பையும் விருப்பையும்) கண்ணே சொல்லிவிடும் என்றும், உள்ளக் கருத்தை நுட்பமாக அளந்தறியும் கருவியாகப் பயன்படுவது கண்ணே என்றும் தெளிவாக்குகின்றார்.

பகைமையுங் கேண்மையுங்
கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.
(709)

நுண்ணியமென்பா ரளக்குங்கோல்
காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. (710)

பிறனுக்கு உரியவளைத் தான் பெற விரும்புவது கொடுமை; தன்னை விரும்பாத ஒருத்தியைத் தான் விரும்புவது கயமை; தன்னைப் பற்றி அறியாத ஒருத்தியைத் தான் அறிந்து நாடுவது குற்றம்; தன்னைப் புறக் கணிக்கும் ஒருத்தியைத் தான் நாடி நிற்பது பேதைமை; தன்னை வெறுத்து ஒதுக்கும் ஒருத்தியைத் தான் நினைத்து வருந்தி உடைவது ஆண்மைக்கு இழுக்கான கோழைத் தன்மை, இவற்றை நன்கு உணர்ந்தவன் தலைவன். ஆகையால் தொடக்கத்தில் 'அணங்கோ மயிலோ மங்கையோ' என்னும் அளவில் உடல் கவர்ச்சியால் மயங்கி னாலும், அதன் பிறகு தலைவியின் கண்களின் வாயிலாக உள்ளக் கவர்ச்சியும் பெற்ற பிறகே வருந்தத் தொடங்கினான். இதை அறிவிப்பதே காமத்துப்பாலில் அமைந்த குறிப்பறிதல் என்னும் பகுதி. தலைவி விரும்புவதை அறிந்தே தலைவனும் விரும்புகின்றான் என்னும் ஒத்த அன்பை இந்தப் பகுதி விளக்குகின்றது.

"இவளிடம் உள்ள நோக்கு இருவகை: ஒன்று எனக்குத் துன்பம் தருகின்றது; மற்றொன்று அதற்கு மருந்தாக நின்று அந்தத் துன்பத்தைத் தீர்க்கின்றது. யான் காணாத போது என்னைக் கண்டு களவு கொள்கின்ற சிறு நோக்கம் இவளிடம் உள்ளது. யான் காணாதபோது கண்டு, ஏதோ கருத்தை உட்கொண்டு நாணி இறைஞ்சுகின்றாள்; அதுதான் எங்களி டையே அன்பை வளர்க்கும் நீரா கின்றது. யான் நோக்கும்போது தான் எதிர்நோக்காமல் நாணித் தலை குனிந்து நிலத்தை நோக்குகின்றாள். யான் நோக்காதபோது என்னை நோக்கித் தனக்குள் மகிழ்கின்றாள்" என்று அவளுடைய உள்ளக் குறிப் பைக் கண் வாயிலாக அளந்தறி கின்றான்.

இருநோக் கிவளுண்க ணுள்ள
தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய்
மருந்து (1091)

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங்
காமத்திற்
செம்பாக மன்று பெரிது (1092)

நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா
ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர் (1093)

யானோக்குங் காலை நிலனோக்கு
நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும் (1094)

ஒருவனுக்கும் ஒரு பொருளுக்கும் உள்ள உறவு ஐந்து வகைப்படும்: அவன் அந்தப் பொருளைப் பெற்று மகிழ்தல்; அந்தப் பொருளைப் பிரிந்து வருந்துதல், இழந்த பொருளை மீண்டும் பெறமுடியும் என்று நம்பிக் கையோடு இருத்தல்; மீண்டும் பெற முடியாது என்று நம்பிக்கை இழந்து துய ருறுதல்; அந்தப் பொருள் தன் கருத்திற்கு இசையத் தன்னிடம் அமை யாதபோது அதனோடு உரிமை கொண்டு போராடுதல். இந்த ஐவகை உறவே காதலர் இருவர்க்கும் உள்ள காதலிலும் உண்டு. அவையாவன: காதலர் கூடியிருந்து மகிழ்தல் அல்லது குறிஞ்சி, பிரிந்து வருந்துதல் அல்லது பாலை; பிரிந்த பிறகு மீண்டும் கூடுவோம் என்று நம்பிக்கையோடு இருத்தல் அல்லது முல்லை; பிரிந்த பிறகு மீண்டும் காணும் நம்பிக்கை இழந்து சோர்ந்து துயருறுதல் அல்லது நெய்தல்; அன்பு மறந்து பிரிந்து மீண்டுவந்த போது உரிமையோடு ஊடுதல் அல்லது மருதம்.

இந்த ஐவகை உறவையே இருவகையாக அடக்கிக் கூறலாம். கூடுதல் அல்லது குறிஞ்சி, பிரிதல் அல்லது பாலை என இரு பெரும் பிரி வாக்கலாம். இந்த இரண்டையுமே திருவள்ளுவர் விளக்கமாகக் கூறிச்செல் கின்றார். களவியலில் காதலர் கூடும் ஒழுக்கத்திற்கு உரிய பகுதிகளைக் கூறுகின்றார். கற்பியலில் காதலர் பிரிவாற்றாது வருந்தும் வருத்தத்தைக் கூறுகின்றார். நம்பிக்கையோடு இருத் தலாகிய முல்லை பற்றியும், நம்பிக்கை இழந்து இரங்குதலாகிய நெய்தல் பற்றியும் திருவள்ளுவர் தனித்தனியே விளக்காமல், பாலையாகிய பிரிவி லேயே அடக்கிக் கூறுகின்றார். பிரிந்து மீண்டபோது ஊடுதலாகிய மருதம் பற்றி இறுதியில் கூறுகின்றார்; அந்தப் பகுதியில் அவர் பெரிய சீர்திருத்தமும் செய்துள்ளார்.

காதலர் ஒருவரை ஒருவர் பெற விழைந்த வேட்கையில் உள்ள தூய்மையைக்காட்டுவதே களவியலில் திருவள்ளுவர் நோக்கம். காதலர் ஒருவர்க்குஒருவர் இன்றியமையா தவராய் அன்பால் பிணைப்புண்டி ருத்தலை விளக்குவதே கற்பியலில் திருவள்ளுவர் நோக்கம். அதனால் களவியலில் குறிஞ்சித்திணை கூறு கின்றார்; கற்பியலில் பெரும்பாலும் பாலைத்திணை கூறுகின்றார்; சிறு பான்மை மற்றத் திணையும் உடன் கூறுகின்றார்.

✸✸



டாக்டர் மு.வரதராசனார் எழுதிய திருவள்ளுவர் அல்லது வாழ்க்கைவிளக்கம் என்னும் நூலிலிருந்து பெறப்பெற்றது.



வள்ளுவத்தின் இறைக்கொள்கை

எஸ். இராமகிருஷ்ணன் ;

திருக்குறள் ஒரு வாழ்க்கை நூலென்பது உண்மை, ஆனால் வள்ளுவரை ஒரு லோகாயதவாதி யாகவோ, சம்சயவாதியாகவோ கணிப் பதற்கு ஆதாரமில்லை. வள்ளுவருக்கு இறைமையில் இருந்த நம்பிக்கை யைத் திருக்குறளிலிருந்தே தேர்ந்து தெளியலாம்.

இறை வணக்கத்துடன்தான் திருக்குறளைத் தொடங்குகிறார் ஆசிரியர். இலக்கிய மரபுக்கு உகந்த சம்பிரதாயச் செயலே என்று அதைப் புறக்கணிக்க முடியாது. நூல் முழு வதிலும் வள்ளுவரின் இறைக் கொள்கை அடிச்சரடாக அமைந்தி ருக்கிறது.

வள்ளுவரின் வாழ்வு இயலை. அவருடைய இறைக் கொள்கை யிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அவர் திட்பம் நிறைந்த முழுப் பார்வையை உடைய பேராசான். இறைமையிடம் அவருக்குள்ள ஈடுபாடு மனித குலத்திடம் குன்றாத நம்பிக்கை யையும் வற்றாத அன்பையும் படைத்துக் கொடுக்கிறது. மனிதனிடம் அவருக்குள்ள நம்பிக்கையும் அன்பும், அவரது இறைமைக் கருத்துக்கு வலுவூட்டுகின்றன.

இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு முறை நிலவுகிறதென்றும், அந்த முறைமை யில் இறைமை இருக்கிற தென்றும் வள்ளுவர் கருதினார். இந்த முறையைத்தான் தொல்லோர்கள் "ஊழ்" என்று குறிப்பிட்டனர். "ரிதும்" என்று வேதம் குறிப்பிடும் கருத்தும் இதுவும் சாராம்சத்தில் ஒன்றே குறித்த காலத்தில் மழை பெய்யும் நிகழ்ச்சி, இறைமையின் தனிப்பெரும் அம்ச மாகக் கருதப்பட்டது. எனவேதான், "கடவுள் வாழ்த்து" அதிகாரத்தைப் பாடியவுடன் வள்ளுவர், மக்களின் வாழ்வுக்கு ஆதாரமானதும், இறை மைக்கு உரியதுமான வான்சிறப்பைக் குறித்துப் பாடுகிறார்.

இறைமைக்குரிய இயற்கையுடன் மனிதன் இசைந்து வாழ வேண்டு மானால், அவன் இறைவனது குணங் களைக் கற்றுத் தெளிந்து, அவற்றின் வழியில் வாழவேண்டும். இதையே முதல் அதிகாரத்தில் ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

கோளில் பொறியின் குணமிலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்பது குறள்

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளை நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் அந்த இந்திரியங்களுக்கு உணர்வு இல்லா விட்டால் பயனில்லை. தொட்டால் உணர முடியாத உடம்பும், சொன்னால் கேட்க முடியாத செவியும், மணத்தை நுகர முடியாத மூக்கும், காட்சிப் பொருளைக் காணமுடியாத கண்ணும்,



சுவைத்தறியமுடியாத நாவும் இருந்தும் பயனில்லை. அதைப் போலவே இறைமையின் எட்டுப் பண்புகளையும் கற்றுத் தெளிந்து, அவற்றுக்கிணங்கச் செயல்பட முடியாதவனுக்குத் தலை இருந்தும் பயனில்லையென்று இந்தக் குறளில் ஆசிரியர் கூறுகிறார்.

இறைவனை எண்குணத்தான் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இந்தக் குறளுக்கு முன்னுள்ள எட்டுக் குறட்பாக்களில் அந்த எட்டுக் குணங்களையும் அவர் எடுத்துரைத்திருக்கிறார்.

அகர முதலவெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்று கூறி, எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலெழுத்தாயிருப்பதைப் போல, ஆதி பகவனே உலகத்துக்கு முதல்வனாயிருப்பதாக அவர் கூறுகிறார். இந்த முதல்வனை உதாரண புருஷனாகக் கொண்டு வாழவேண்டு மென்பது குறிப்பு.

கற்றதனா லாய பயனென்கொல் -
வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்பது இரண்டாவது குறள். இதில் இறைவனை "வால் அறிவன்" தூய அறிவுக்கு இருப்பிடமானவன் என்று குறிப்பிடுகிறார். தூய அறிவுக்கு உறைவிடமாக விளங்கும் இறைவனைத் தொழாவிட்டால், படித்த படிப்பால் பயனில்லை என்பது இதன் கருத்து. படித்தவர்களுக்குத் தேவையான தன்னடக்கப் பண்பை இந்தக் குறள் போதிக்கிறது. அறிவின் இறுதியைக் கண்டு விட்டதாகக் கூறும் அகந்தை மெய்ஞ்ஞானிகளுக்குப் புறம்பானது. அறிவைத் துச்சப்படுத்தும் போக்கு, சோர்வுக்குத் தூண்டுகோல், சோம்பலுக்கு மூடுதிரை. இந்த இரண்டு போக்குகளையும் இங்கு வள்ளுவர் கண்டிப்பதாகக் கொள்ளலாம். "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்பதை உணர்ந்து, அடக்கத்தைப் பேணி "சாந்துணையும்" (இறக்கும் வரை) கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும்.

மலர்மிசை ஏகினான் மாணடி -
சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

என்பது மூன்றாவது குறள். மலர் என்பது மனத் தாமரையைக் குறிப்பதாகவே கொள்ளலாம். இங்கு அங்கு எனாதபடி எங்கும் நிறைந்த வராய் இறைவன் நிலவுவதாக வள்ளுவர் கருதியதால், அவர் ஒவ்வொ வருடைய மனத்திலும் இருப்பதாகப் பொருள்கொள்வது தவறாகாது. ஒவ் வொருவர் மனத்திலும் உள்ள இறை வனிடம் தஞ்சம் புகுந்து வாழ வேண்டும் என்பது வள்ளுவ ஆணை. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் வாழ்ந்தால், "நிலமிசை நீடுவாழ்வார்" என்று ஆசிரியர் கூறுகிறார். இங்கு "நிலம்" என்பது இந்த உலகத்தையே குறிக்கும். "எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகு (வீட்டுலகு - விமோசன லோகம்) என்று உரை கொள்வது வலிந்து பொருள் கொள்வதாகும்.

வேண்டுதல் வேண்டாமை
இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.



என்பது நான்காவது குறள்.

விருப்பு வெறுப்பில்லாதவனான இறைவன் அடி சேர்ந்தவரை, எந்தக் காலத்திலும் துன்பம் தொடராது என்பது இதன் பொருள். விருப்பு வெறுப்பில்லா மல் செயலாற்றி வாழவேண்டு மென்பது இதன் கருத்து. விருப்பு வெறுப்பில்லாமல் வாழ்வ தென்றால், உணர்ச்சியற்ற வர் களாகக் காலம் தள்ளுவதென்று கருதக்கூடாது. வேண்டியவன் வேண்டாதவன் என்ற வேற்றுமை பாராட்டாமல் சுயநலம் கருதாமல், அறவாழ்வு நடத்துகிற வனைத் துன்பம் தொடராதென்பதே இதன் குறிப்பு.

இருள்சேர் இருவினையுஞ் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்பது ஐந்தாவது குறள்.

இறைவனுடைய மெய்ப்புகழை நாடுவோர் "இருள்சேர் இருவினை" யிலிருந்து விடுபடுவார். "இருள்சேர் இருவினை" என்ற சொற்றொடருக்கு "மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை, தீவினை" என்று பரிமேலழகர் உரைகண்டார். நல்வினை செய்தாலும் அது மீண்டும் இவ்வுலகில் பிறத்தற் கேதுவாக அமைதலால், நல்வினையும் கூடாதென்று வள்ளுவர் கருதுவ தாக அவர் விளக்கமும் தந்தார்.

மனிதனாய்ப் பிறந்தவன் நல் வினை, தீவினை என்ற இரண்டை யும் விலக்கிவிட்டு வாழமுடியாது. கண்காணாத காட்டுக்குப் போகும் சன்னியாசிகூட, வினையாற்றுகிறான். அவன் தாவரங்களைப் பார்ப்பதும், மலர்களின் மணத்தைப் பருகுவதும், நீர் குடிப்பதும், நடப்பதும், நிற்பதும், பட்சிகானம் கேட்பதும், மலஜலம் கழிப் பதும் கூடக் செய்கைகள்தான்! சாகும் வரை, மனிதன் ஏதாவது செய்து கொண்டேயிருக்கிறான். காற்றைச் சுவாசிப்பதும் ஒரு செய்கையே. அதைச் செய்யாமல், மனிதன் வாழமுடியாது, தவிர, வள்ளுவமோ ஒரு வாழ்க்கை நூல், மக்களை நல்வினை புரியத் தூண்டும் நூல். எனவே, உரையாசிரி யரின் விளக்கம், வள்ளுவத்தின் உயிர்நிலைக்கே, சவால் விடுப்பதாகத் தோன்றுகிறது.

"இருள்சேர் இருவினை" என்பது மயக்கத்தின்பாற்பட்ட நல்வினை. தீவினைகளையே குறிக்கு மென்பது ஒருதலை. ஆனால் அஞ்ஞானத்துக் குரிய நல்வினை நீங்கலாக மெய்ஞ் ஞானத்துக்குரிய நல்வினையும் உண்டு என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். "ஈட்டம் இவறி இசை வேண்டா"ச் செல்வர்களும், கயவர்களும், கொடுங்கோலர்களும் தீவினைகளைச் செய்கிறார்கள். வேறு பலர், பலன் கருதி, நல்வினையில் ஈடுபடுகிறார்கள். இந்த உலகத்தில் இன்புறுவதற்காகவோ, விண்ணு லகத்தில் நிரந்தர இன்பம் அனுபவிப் பதற்காகவோ, நல்வினை செய்கிறவர் களையே, பயன் கருதிச் செயல்படு வோரென்று கூறலாம். இத்தகைய காரியவாதிகளும் அஞ்ஞானிகளே என்பது வள்ளுவத்தின் கருத்து. பயன்கருதாமல், சித்தசுத்தியுடன் வினையாற்றிக் கொண்டேயிருக்க வேண்டுமென்பது வள்ளுவத்தின் போதனை. இறைவனும் இவ்வாறு தான் செயல்படுகிறார். இறைவன் செயல்படாவிட்டால் பிரபஞ்சம் இயங் காது. ஆனால், அவர் கைம்மாறு

கருதாமல் பணியாற்றுகிறார். அவ் வகையில் மனிதனும் செயல்பட வேண்டுமென்பது வள்ளுவம். கீதையில் கண்ணன் காட்டிய வழியே இது. ஆகவே, இருள்சேர் இருவினை களையும் ஒதுக்கிவிட்டு, இறைவனது மெய்ப்புகழுக்குரிய பயன் கருதா கர்ம யோகத்தைக் கடைப்பிடிக்க வேண்டு மென்று வள்ளுவர் கூறுவதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பொறிவாயில் ஐந்தவித்தான்
பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்பது ஆறாவது குறள்.

இறைவன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பொறிகளின் அவாக்களை அடக்கியவன். அந்தப் பேராற்றலின் மெய்யான ஒழுக்க நெறியை உணர்ந்து கடைப்பிடிப்பவர் கள் நீண்டகாலம் வாழ்வார்கள். ஐம்புலன்கள் கடிவாளமிழந்த பேய்க் குதிரைகளாக இருக்கக்கூடாது. கேட்பது, சொல்வது, காண்பது, நுகர் வது முதலிய செயல்களுக்கு ஒரு முறை இருக்கவேண்டும். இவ்வாறு ஐம்புலன் களை மூளையால் ஆட்சி செலுத்து கிறவர்களே ஆற்றல் உடையவர் களாவார்கள்.

அவித்தான் என்பதற்கு "அறுத்தவன்" என்று பரிமேலழகர் உரை தந்தார் அதன்படி, ஐந்து பொறிகளின் இச்சைகளை அழித்து விடுவதே "பொய்தீர் ஒழுக்க நெறி" என்று முடிவு செய்தால், அது விபரீத மாகிவிடும். கண்ணிருந்தும் குருடராய், காது இருந்தும் செவிடராய், வாய் இருந்தும் ஊமையாய், மூக்கு இருந்தும் நுகராதவராய், உடல் இருந்தும் மரக்கட்டையாக வாழ வேண்டு மென்று ஆகிவிடும். இந்த நிலையில் மூளைக்கே வேலை யில்லை! பஞ்சேந்திரியங்களின் உதவிகொண்டு கிடைக்கும் கல்வி அறிவும், கேள்வி அறிவும், காட்சி அறிவும், செயல் அறிவும் இல்லா விட்டால் மூளை வெறுமையில் வேலை செய்ய முடியா தென்பது வெள்ளிடைமலை. பஞ்சேந் திரிய ஆசைகளை (அழிப்பதல்ல) அடக்கி ஆட்சி நடத்தும் ஆற்றலைப் பெற்று வாழவேண்டுமென்பதே இந்தக் குறளின் கருத்து. அந்த ஆற்றலைப் பெறுகிறவர்கள் நீண்டகாலம் உலகத்தில் வாழ முடியுமென்பதும் இதன் குறிப்பு.

தனக்குவமை யில்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

இறைவன் ஒப்புயர்வற்றவனாக உள்ளவன், தூய்மை, அறிவு, அன்பு, ஆற்றல் முதலிய குணங்களில் அவனை மிஞ்சியவர் எவருமில்லை. எனவே, அவனை லட்சிய புருஷனாகக் கொண்டு, வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு, இறை மையின் இலக்கணத்தைக் கற்றறிந்து அதன் வழியில் வாழும் மக்கள், வாழ்வில் நிறைவைக் காண்பார்கள், அதற்கு மாறாகத் தூய்மை, அறிவு, புகழ், அன்பு, ஆற்றல் முதலிய பண்பு களைப் பெறாமல் வாழ்ந்தால், அந்த அறிவிலிகளும் அன்பிலாதவர்களும் ஆற்றலற்றவர்களும் எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பார்கள்.



அறவாழியந்தணன் தாள்சேர்ந்தார்க்
கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

இறைவன் அறவாழி அந்தணர், அதாவது அறக்கடலாக விளங்கும் அந்தணர்.

அந்தண ரென்போர் அறவோர்மற்
றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்று அந்தணனுக்கு நீத்தார் பெருமை அதிகாரத்தில் இலக்கணம் வகுத்தார். மற்றெல்லா உயிரிகளிடத்தும் செவ்விய அன்புகொண்டு வாழ்வதால், அந்தணர்கள் தர்மத்தின் இருப்பிடமாவார்கள் என்பது அதன் பொருள். எனவே, இறைவனை அறக்கடலாகவுள்ள அந்தணனாகக் குறிப்பிடும் பொழுது, சகல உயிர்களிடத்திலும் பேரன்பு கொண்டவனாகவே வள்ளுவர் இறைவனை அறிகிறார் என்பது தெளிவு. இந்த இறைமைக் குணத்தை உணர்ந்து, எல்லோரிடமும் அன்பு கொண்டு வாழாதவர்கள், அறத்துக்குப் புறம்பான கடலில் (பிறஆழி) நீந்த முடியாமல், அந்தத் துன்ப - துயரக் கடலில் மூழ்கி விடுவார்கள்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.
என்பது பத்தாவது குறள்

வாழ்க்கை என்பதே ஒரு பெருங் கடல். இறைவன் அடி சேர்ந்தவர்களே, அதாவது, இறைமையின் பண்புகளை உணர்ந்து வாழ்கிறவர்களே அந்தக் கடலில் நீந்துவார்கள், நீண்டகாலம் வாழ்வார்கள். இறைமைக் குணங்களின் ஒளி பெறாத இருள் வாழ்வு நடத்துகிறவர்கள் அந்தக் கடலில் நீந்த முடியாமல் நீர்குடித்து இறப்பார்கள்.

வள்ளுவர், நம்மால் புரிந்து கொள்ள முடியாத கடவுளாக (கடந்த பொருளாக) இறைவனைக் காண வில்லை. (அதனால் தான் அவர் கடவுள் என்ற சொல்லை ஆளவில்லையா?) இறைவனுக்குப் பூசை போட்டு, வரம்கோரும் வழிவகைகளை வள்ளுவர் எடுத்துரைக்கவில்லை. அதற்கு மாறாக, ஒவ்வொருவரும் தன்னிடமுள்ள இறைமைக் குணங்களைப் பேணி வளர்த்து, அவற்றின் வழியில் வாழவேண்டுமென்பதே வள்ளுவத்தின் கருத்து. எண்குணத் தானான இறைவன், மாசில்லாத, குறை வில்லாத இலட்சிய மனிதனாக நின்று, நமக்கு வழிகாட்டியாகவும் திருஷ்டாந்தமாகவும் திகழ்கிறா னென்பதே வள்ளுவம். வாழ்வை வெறுத்து, துறக்கத்தைச் சடுதியில் அடையத் துடிக்கவேண்டு மென்பது வள்ளுவத்தின் இறைக்கொள்கை அல்ல. இறைமைப் பண்புகள் பேரொளி வீசும் வகையில், இவ்வுலகில் நீடு வாழவேண்டு மென்பதே வள்ளுவம்.

"அருளில்லார்க்கு அவ்வுலக மில்லை" என்று அவர் கூறுவதால், மேல்உலகம் ஒன்று இருப்பதிலும் அவருக்கு நம்பிக்கை உண்டு என அனுமானிக்கலாம்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு



என்று அவர் துறவிகளுக்கு அறம் போதிக்கும் அதிகாரத்தில் குறிப்பிடுவ தால், உடலைப் பிரிந்த உயிர் வேறு உடலில் புக முடியுமென்று அவர் நம்பினாரென்றும், அவ்வாறு மீண்டும் மீண்டும் பிறப்பதைத் தவிர்த்து, வீடு பேற்றை அடைவது நலமென்று அவர் கருதினாரென்றும் கொள்ளலாம். ஆனால் அந்த வீடு பேற்றினை முன்னிட்டு, வாழ்வை வேம்பாகக் கருதவேண்டுமென்ற வாதத்தை அவர் ஆதரிக்கவில்லை. வாழ்வை நேசித் தால் பாசம் வளர்ந்து, மீண்டும் மீண்டும் பிறக்கவேண்டிய நிலை ஏற்படுமென்று அச்சம் காட்டும் நிலையை அவர் ஆதரிக்கவில்லை.

பிறந்தோர் உறுவது பெருகிய
துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்

பற்றின் வருவது முன்னது,
பின்னது
அற்றோர் உறுவது அறிக.

என்று அறவணவடிகள் மாதவிக்குப் போதித்த வாய்மைகளின் கருத்தோட் டத்தை வள்ளுவத்தில் காண முடியாது.

உலகத்தில் பிறந்த மக்கள், தம்மை இறைமையின் அம்சங்களாகக் கருதி, இறைமையின் இலக்கணத்தை அறிந்து, செயலில் கடைப்பிடித்து, நீண்டகாலம் இன்புற்று வாழ வேண்டும் மென்பதே வள்ளுவத்தின் போதனை, அவ்வாறு அன்பு, அறிவு, ஆற்றல், தூய்மை, வாய்மை ஆகிய பண்புகளுடன் வாழ்கிறவர்களே மேல்உலகம் செல்வரென்பது குறிப்பு, இறைவணக்க அதிகாரத்தின் உட் பொருள் அதற்குச் சான்று பகர்கிறது. திருக்குறள் வாழ்க்கை நூலாக வடிவெடுத்திருப்பதே இதற்குப் பெருஞ் சான்றாகவுள்ளது.

இந்தக் கருத்துக்கு நிலையாமை அதிகாரம் முரணாக அமைந் திருப்பதாகச் சிலர் நினைக்கலாம். ஆனால் அது மேலோட்டமான ஆராய்ச்சியின் முடிவாகும்.

உறங்குவது போலுஞ் சாக்கா -
டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

என்று கூறி, வள்ளுவர் யாக்கை நிலையாமையை விளக்குகிறார். மனிதன் அமரனல்ல, சாவு என்பது மனித வாழ்வின் இயல்பான நிகழ்ச்சி யாகுமென்பதே இதன் கருத்து. இந்த உண்மையை எடுத்துரைப்பதால், வள்ளுவர் மானிட வாழ்வுக்குச் சாப்பறை அடிப்பதாக நினைப்பது அறவீனமாகும். ஈகை அதிகாரத்தில்,

சாதலி னின்னாத தில்லை;
இனிததூஉம்
ஈத லியையாக் கடை

என்று வள்ளுவரே குறிப்பிடுகிறார்.

சாவதைக்காட்டிலும் துன்ப மானது வேறு ஒன்றுமில்லையென்று இந்தக் குறளில் வள்ளுவர் கூறுகிறார். சாதல் எப்பொழுது இனியதாகும்? வறிய வர்க்கு ஒன்றும் கொடுத்து உதவ முடியாதபொழுது அந்தச் சாதலும் இனிதாகும். துன்பமாவது ஒன்று மில்லையென்று வள்ளுவர் கூறுவ தால், வாழ்வை வெறுக்கவேண்டு மென்று அவர் உபதேசிக்கவில்லை



யென்பது புலப்படும். வாழ்வு நிலை யற்றதென்பதைப் புரிந்துகொண்டு, நல்வினைகளைச் செய்வதற்கு முந்திக் கொள்ளவேண்டுமென்பதே ஆசிரியரின் கருத்து.

காமத்துப்பால் பாடியவர் வள்ளுவர், இருபத்தி ஐந்து அதிகாரங்களில், இருநூற்றி ஐம்பது குறள்களில் ஆசிரியர் ஆண் - பெண் புணர்ச்சியின் இயல்பை எடுத்துரைக்கிறார். இறைவனிடம் பக்தன் கொண்ட தூய காதலையே காமத்துப் பால் உள்ளுறையாகக் கொண்டிருக்கிற தென்று எவரும் விரிவுரை செய்ய முடியாமல் இந்தப் பகுதி அமைந்திருப்பது நமது பாக்கியம். இல்லாவிட்டால், வாழ்வை வெறுக்கும் விரக்திப் பார்வைக்குக் காமத்துப் பாலையே சான்று காட்டி விடுவார்கள்! ஒருவனும் ஒருத்தியும் காதலித்து ஊடிக் கூடி இன்புற்றுக் கற்பு நெறியில் வாழ்வதற்கு வழிகாட்டுவதே வள்ளுவம்.

வள்ளுவர் செல்வத்தின் நிலை யாமையைக் குறித்துப் பாடியிருக்கிறார். சமுதாயத்தின் செல்வம் நிலையற்ற தென்று பொருட்செல்வத்தைப் பெருக்கும் முயற்சியைக் கொல்வதாக அது அமையவில்லை. 'தனி உடைமை'யின் நிலையாமையைத் தான் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே -
பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

என்பது குறள். கூத்தாட்டம் பார்த்துக் களிப்பதற்கு, கூட்டம்கூடிக் கலை வதைப்போல, செல்வம் ஒருவரிடம் குவிந்து கரைந்துவிடுகிறது. மேடும் மடுவும் போலச் செல்வம் நிலையற்ற தாயிருப்பதால், பொருட் செல்வத்தைப் பெற்றவர்கள், நிலையான தர்மம் செய்யவேண்டுமென்பதே வள்ளுவத் தின் கருத்து. இதை

அற்கா வியல்பிற்றுச் செல்வம்; -
அதுபெற்றால்
அற்குப வாங்கே செயல்.


என்ற அடுத்த குறளில் தெளிவாகப் போதிக்கிறார்.

அன்பு நிறைந்தவனாய் ஆற்றல் மிகுந்தவனாய், தூய்மைக்கு இலக்கி யமாய், வாய்மையின் வடிவமாய், அறிந்து சிறந்த அடக்கசீலனாய், இயற்கையின் விதிகளை அறிந்து செயல்படுபவனாய், பயன்கருதாப் பணிபுரியும் நல்வினையாளனாய் மனிதன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளும் பாதை அதுவே என்பதும் வள்ளுவத்தின் இறைக் கொள்கை யிலே பொதிந்து கிடக்கும் கருத்துக்களாகும்.

✸✸

தமிழறிஞர் எஸ்.இராமகிருஷ்ணன் எழுதிய வள்ளுவன் கண்ட வாழ்வியல் என்ற நூலிலிருந்து பெறப்பெற்றது.

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்றும் மடி.



திருக்குறளில் நவரசங்கள்

பண்டிதர் வித்துவான் க.குகதாசன்
B.A.Dip in Ed. SLEAS

நாடகமோ, காவியமோ, பேச்சோ, கட்டுரையோ சிறப்புற அமைய வேண்டு மாயின், அவை நவரசங் களையும் உள்ளடக்கியனவாக மிளிர வேண்டியது அவசியமாகும். உலகியற் கருமாங்களிற் கூட இந்த நவரசங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எந்த ஒரு கருமத்திலும் ஏதோ ஒரு சுவை மேற்பட்டுத் தொழிலாற்றுவதை நாம் காண்கின்றோம். குறிப்பிட்ட ஒரு செயல் அற்புதம், சினம், கருணை, இழிவு, சாந்தம், இன்பம், அச்சம், நகை, வீரம் ஆகிய ஒன்பான் சுவைகளில் ஒன்றையோ, பலவற்றையோ நிலைக் களனாகக் கொண்டு நடந்தேறுவதையும் நாம் அறிகின்றோம்.

இன்று உலகில் மங்காப்புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் நூல்களிற் பல இந்த நவரசங்களைத் தம்மகத்தே கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். திருக்குறள் இன்று உலகப் பொது நூலாக மதிக்கப் படுவதற்கு அது வாழ்வியல் அடிப்படையில் அமைந்த நவரசங்களைத் தன்னகத்தே கொண்டிருத்தலும் ஒரு காரணம் எனக் கூறல் மிகையாகாது.

இனி அந்நவரசங்கள் திருக்குறளில் எடுத்தாளப்பட்ட இயல்பை ஈண்டா ராய்வோம்:

"சொற் சோர்வு, சோர்ந்த கை, மெய் மயிர் குளிர்த்தல், வியத்தகவுடையது, எய்தியதிமைத்தல், விழித்தல்" முதலியன அற்புதச் சுவையின் மெய்ப்பாடுகளாகும்.

முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறவந்த வள்ளுவர், எண்ணாற் கூறி விளங்க வைக்க முடியாத அதனை, "இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி, இத்துணையரென அறித லுற்றாற் போன்றது அவர் பெருமை" என வியந்தோதுகின்றார். ஆம் தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதன்றோ?

"வையத்துள் வாழ்வாங்கு வாழு மொருவன் வானுறையும் தெய் வத்துள் வைக்கப்படுதலும், பிற தெய்வங்களைத் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழுபவள் பெய் யெனக் கூற மழைபெய்தலும்" வியப்பன்றோ!

தனக்கு எவ்வித உதவியும் பிறர் செய்யாதிருக்கத் தான் பிறருக்கு உதவி செய்யுமொருவனுக்குக் கைம்மாறாக விண்ணுலகையும், மண்ணுலகை யுங் கொடுத்தலும் ஈடாகாது எனக் கூறும்போது, செய்யாமற் செய்த உதவியின் சிறப்பினை நினைந்து வியப்புறுகின்றோம். "தினையள விற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும் அதனைப் பனை யளவிற்றாகக் கருதிப் பயன்றெரி



வாராதல் வேண்டும்." என்னும்போது முந்திய வியப்பு மேலும் உச்ச நிலை அடைகின்றது.

"சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க்கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்" பாடு படுதல் பசிப்பிணியைத் தீர்த்தற் பொருட்டன்றோ? அப்பசிப்பிணி ஒருவருக்கு இல்லை என்றால் அவன் பெரிதும்பாக்கியசாலியே. அவ்வித பாக்கியத்தை எளிதில் பெறலா மென்றால், அது பெரு வியப்பாகவே யிருக்கும்.

பாத்தூண் மரீஇ யவனைப்
பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

என்ற பாடலைப் படிக்கும்போது அந்த அற்புதத்தை நாம் அறிகின்றோம். விருந்தினரை உபசரித்து எஞ்சியதைத் தானுண்பானது விளைபுலத்துக்கு வித்திடாதிருக்க, தானே விளையு மென்றும், அவ்வாறு விருந்தோம்பு வான் மறுமையிலே தேவனாய் வானில் உள்ளார்க்கு விருந்தாவான் என்றுந் தொடர்ந்து கூறிச் செல்வதைப் படிக்கும்போத நமது வியப்பும் விரிவடைகின்றது.

நாம் இவ்வுலகில் மற்றவர்களாலே தொழப்படல் வேண்டுமென எண்ணு வோன் பெரிதும் முயல வேண்டிய தில்லை. "ஒருயிரையுங் கொல்லாது, கொன்றவற்றையுமுண்ணாது இருந்தாற்போதும். உலகுயிரனைத் தும் அவனைக் கைகூப்பித்தொழும்" என்கிறார் வள்ளுவர்.

உழவுத்தொழிலின் மாண்பு இவ்வள வென்று கூறுந்தரத்ததன்று. "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்பதோடமையாது, "மாற்று வேந்தர னைவரையும் தம் வேந்தரின் குடைக் கீழ்க்கொண்டு வருபவர் ஒருவரே" எனவும் திருவள்ளுவர் கூறி உழவுத் தொழிலை வியந்தோது கின்றார்.

தலைமகள் ஒருத்தியைக் கண்டு ஐயுற்ற தலைமகன், அவளது அழகில் மயங்கி, அப்பெண்ணைத் 'தெய்வ மகளோ! மயில் விசேடமோ! மானுட மாதோ! என எண்ணி வியப்புறு கின்றான். அவளது கடைக்கண் பார்வையிற்கலங்கிய அவன்,

கூற்றமோ கண்ணோ பிணையோ
மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து.

எனக் கூறி வியப்புறுகின்றான்.

கள், உண்டார்க்கே இன்பம் விளைப்பது. ஆனால், காமமோ, அதனை நுகர்தற்குரியாரைக் கண்டாலே மட்டற்ற இன்பம் அளிப்பது. மெல்லியலார் தம் நல்லியல்புக்கு இதுவு மொரு வியப்புரையன்றோ! நெருப்பின் தன்மையை உலகம் நன்கறியும். அதன் தன்மை அணுகுவாரைச் சுடும்; விலகுவார்க்குத் தண்ணெனும். ஆனால், பெண்களிடத்து ஓர் ஆபூர்வ மான தீயின் அனுபவத்தைக் காண் கின்றான் தலைமகன். "இவள்

மாட்டுள்ள தீ, இவளைய கன்றுழிச் சுடாநிற்கும்; அணுகுழிக் குளிராநிற்கும். உலகில் எங்குமே பெறமுடியாத இத்தகைய தீயை இவள் எங்குதான் பெற்றாளோ!" என்னும் இக்கூற்றும் அற்புதச் சுவையின் மெய்ப்பாடுகளை அழகுறத் தோற்றுவிக்கத்தக்கதே.

அடுத்தபடியாகக் கோபம் அல்லது சினம் என்னுஞ் சுவைபற்றிய செய்யுள் களைக் காண்போம். "கைபிசையா, வாய்மடியா, கண்சிவவா, வெய்துயிரா, மெய்குலையா, வேரா, வெகுண்டெழலே" கோபச் சுவையின் மெய்ப்பாடுகள் ஆகும்.

ஒருவர் செய்த நன்றியை மிகவிரை யில் மறந்துவிடுதல் இக்கால உலகிற் சாதாரணமாக நாம் காணக்கூடிய தொரு நிகழ்ச்சி. பிறர் செய்த நன்றியை மறத்தல் பண்பாடற்ற ஒரு செய்கையே. நன்றி மறப்போரைத் திருவள்ளுவர் மன்னிக்க வில்லை. வேறு எத்தகைய அறங்களைச் சிதைப்பவரினும் பார்க்க நன்றி மறப்போரே கொடியவர்கள் என்பது அவர் கருத்து.

"எந்நன்றி கொன்றார்க்கு -
முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்ற செய்யுளைப் படிக்கும்போது கோபம் கட்டுக்கடங்காமற் போவதை உணருகின்றோம்.

"பிறன்மனை நயப்பார் போலும் பேதையர் பிறர் இல்லை, தமக்கு அஃது எளிதெனவெண்ணி, அத்தீச் செயலில் ஈடுபடுவோர்க்கு உய்தி யில்லை. பின் விளைவு கருதாது பிறனில்லாளிடத்து நெறி கடந்து செல்பவனைப் பழி தவறாது சூழும்" எனச் சினந்து கூறுதலோடு, அத்தகைய இழி தொழில்களை விட்டுப்பகையும், பாவமும், அச்சமும், குடிப்பழியும் ஒரு காலும் நீங்கா வெனவுஞ் சபிக்கின்றார் வள்ளுவர்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்.

என்னும் அவரது வாக்கில் எவ்வளவு கோபம் தோற்றுகிறது!

பயனில்லாத சொற்களைப் பல காலுங் கூறித் திரிதலையே தொழிலாகக் கொண்டு காலங் கழிப்பவரை நாம் காண்கின்றோம். அத்தகையாரை மனிதர் என்று கூறுதலை விடுத்து, மக்கட்பதர் என்றே கூறவேண்டும் என்கிறார். ஏன்? அறிவென்னும் உள்ளீடற்ற கோதாகவே அவர்கள் திரிகின்றார்கள். ஆகையால் அவர்கள் பதருக்கு நிகராகின்றார்கள். இப்படி மக்கள் உருவோடு மக்களிற் பதராய்ப் புகழுக்கேதுவாய குண நலமின்றிப் பிறப்போர் பிறவாதொழிதலே மேல். அப்படிப்பிறப்பதாயின், விலங்காய்ப் பிறத்தல் நன்று. ஏன் எனில் அறிவற்றிருப்பதற்காக விலங்கினங் களை எவரும் இகழமாட்டாரன்றோ வென்க. எனவே, "தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின்



தோன்றாமை நன்று" என இடித்து உரைக்கின்றார் வள்ளுவர்.

நெஞ்சிலே பற்றுவைத்து, அப்பற்றினைத் துறந்தவர் போல் வஞ்சித்து நடிக்கும் வேடதாரிகளை மிகமிக வன்மையாகக் கண்டிக்கின்றார் வள்ளுவர். இவ்வாறு பிறரை ஏமாற்றி வாழ்பவர்போல் வன்கண்மையுடையார் உலகில் இல்லை என்கின்றார் அவர். தருமஞ் செய்வதால் மறுமைப் பயனை எய்துவோம் என நம்பி, இத்தகைய தகுதியற்றார்க்கு ஈவோர் கூட இழிபிறப்பினராக வேண்டிய நிலையை அடைகின்றனர். எனவே, இவ்வித வேடதாரி கள் வெறுக்கப்பட வேண்டியவர்களே.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்." இச்செல்வத்தைத் தேடித்தருவது செவி. எனவே அந்தச் செல்வமாகிய கேள்வியால் துளைக்கப்படாத செவியினை உடையார் உண்மையிற் செவிடரே என வள்ளுவர் கூறுகின்றார். அச்சுவையினை உணராது வாயுணர் வினையுடையவராய் வாழும் மாக்கள், "அவியினும் வாழினும் என்" என்று அப்பெரும்புலவர் சினந்துரைக்கின்றார்.

சோம்பல் மிகக் கெடுதியான தொன்று. தனது குடியை உயர்த்த வேண்டுமென எண்ணுபவன் மிடியை முதலில் விட்டுவிட வேண்டும். அவ்விதம் அதனை விடாது தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவிலி பிறந்த குடி, அவனினும் முந்தி அழிவுறும் என்று கூறிச் சோம்பலையும் சோம்பலுடையோரையுங் கடுமையாக வள்ளுவர் தாக்குகிறார்.

இதுகாறும் மக்கட் கூட்டத்தாரைச் சினந்துரைத்த வள்ளுவரின் கோபம் உச்ச மடையும் கட்டத்தையும் அவரது நூலிற் காண்கின்றோம். ஆதிபகவனை முதலாக உடையது உலகம் என்ற வாயால் அந்த ஆதிபகவனையே நிந்தித்துக் கூறவும் துணிந்து விடுகிறார். பிழையைப் பிழை யெனக் கூறுவதற்கு எந்தக்கவிஞனும் பின்னின்றதில்லை. "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே" என்றார் நக்கீரர். "தனி யொருவனுக்கு உணவில்லையெனில், சகத்தினை அழித்திடுவோம். என்றார் பாரதியார். வள்ளுவர் என்ன கூறுகிறார்?

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற்
பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

என்கிறார்.

அவரது கோபம் புதியதொரு திருப்பத்தை அடைகிறது. உலகுயிர்களைப் படைத்த இறைவன் அவ்வுயிர்கட்கு வேண்டிய தொழில்களையும் படைத்திருக்கின்றான். அவ்வித நியதிகளை விதிக்கும் இறைவன், உலகிற் பிறந்த ஒருவன் பிறரை இரந்து உயிர் வாழ வேண்டும். என விதிப்பின் அது பெரிய அநீதியன்றோ?

இனி, கருணை ரசம் ததும்புங் கவிகளைப் பற்றிக் கூறுதும். மனித



உயிருக்கு இன்றியமையாத அணி கலன்களுள் முதன்மையானது கருணை. "கொடுமை மிக்க பருந் தினுக்குத் தப்பித் தன்னிடத்து அடைக் கலம் புகுந்த புறாவின் அழிவுக்கு அஞ்சித் தன் அழிவை அஞ்சாது, துலையுட்புக்க சிபிச்சக்கரவர்த்தி போன்ற கருணை வடிவினோர் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது. அத்தகையோரைக் குறித்து வள்ளுவப் பெருந்தகை, "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று கூறும்போது அத்தொடரில் கருணை ரசம் பீறிட்டுப் பாய்வதை நாம் உணருகின்றோம்.

தன்னகத்தே நின்று தன்னை அகழ்வார் வீழ்ந்துபடாமல் தாங்கும் நிலத்தைப்போலத் தம்மை அவமதிப் போரைப் பொறுக்கும் தன்மை கருணை உடையார்க்கே சாலும். நமக்கு ஒருவன் தீமை செய்தால், பழிக்குப் பழி வாங்கவே நமது மனம் ஏவுகிறது. மேலும் மேலும் துன்பத் தையுந் தொல்லை யையுந் தரும் வழி அது. அவனை ஒறுக்கவேண்டுமாயின் நாம் திருவள்ளுவர் கூறும் வழியைப் பின்பற்றல் வேண்டும். அவ்வழி விரைவில் நமது நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும்.

இன்னாசெய் தாரை யொறுத்தல்
அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

என்ற செய்யுளைப் படிக்கும்போது நம்மையறியாமலே நமது பகைவர்கள் மாட்டும் நமக்கு இரக்கமுண்டா கின்றது. உலகம் புரக்கும் வேந்தராயினும் அவர்க்குங் கருணை மிகமிக அவசியம். அவ்வாறு அவர்கள் கருணையுடையோராய் இருப்பா ராயின், இவ்வுலகம் நிலைபெற்று நிற்கும் என்கிறார் வள்ளுவர்.

தன்னால் விரும்பப்பட்டாரை இயன்றவரை காப்பற்றுதலே அன்புடை யார் கடன். உறுப்புக்கள் யாவற்றிலும் பிரதானமானது கண். கண்ணைப் போலத் தான் நேசித்தோரை நினைப் பவன் உண்மையிலே கருணை வடிவினனே. கண்ணிலும் பார்க்க மேலாகத் தான் காதலித்தோரை நேசிப்போர் உயர்ந்தோரன்றோ? தனது கண்மணியின் இடத்தில் தன் காதலியை வைத்துவிட விரும்பும் தலைமகனின் கருணையை நாம் என்னென்பது.

ஒரு தலைமகள் தனது காதலனை மறவாது நெஞ்சிடத்தே நினைத்திருந்த மையால் வெய்தான பொருள்களை உண்ணுதற்கு அஞ்சுகின்றாள். காரணம் உள்ளே உள்ள தலைமகன் வெந்துவிடு வானோ என்ற அச்சமே. குழந்தைஉள்ளம் படைத்தோர் கருணை இவ்வாறு வஞ்சனை யற்றதாகவேயிருக்கும்.

நான்காவதாக இழிவுச்சுவையைப் பற்றி ஆராய்வோம்: "இடுங்கிய கண்ணும், எயிறுபுறந் தெரிதலும், ஒடுங்கிய முகமும், உஞற்றாக்காலும் சோர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம்



பாமையும்" இச்சுவைக்குரிய மெய்ப் பாடுகளாகும். இம்மெய்ப்பாடுகளை எம்மிடையே தோற்றுவிக்கச் செய்யும் பாடல்கள் சுவையுடையனவாகும்.

அன்புள்ளவனை உலகம் விரும்பும். அன்பிலாரை எவரும் விரும்பார். அன்பிலாத மனத்தோடு கூடி இல்லறம் நடத்துதல் வன்னிலத்தில் வற்றல் மரம் தளிர்த்தாற் போன்றது. அன்பில்லாத உடம்பு என்பினைத் தோலாற் போர்த்தது போன்றதே. அவ்வுடம்பு உயிர் நிற்கத் தகுதியற்றது. இவற்றால் அன்பிலாரது இழிவு வெளிப்படையா கின்ற தன்றோ!

பிறரது உடைமையை விரும்புதல் இழிவான செய்கை, பிறரது இல்லாளை விரும்புதல் இழிவானவற்றுள் எல்லாம் இழிவானது. பெரும் பாவங்களை எல்லாம் செய்து, அதனால் இழிவடை வாரினும் பார்க்கப் பிறன்மனை நயக்கும் பேதையர் பெரிதும் இழி வடைவர். அதனைச் செய்தல் தமக்கு எளிதென்ற காரணத்தால், தம்மை ஐயுறாதாரில்லாளிடத்து நெறிகடந்து சேர்வாரை நினைக்க, அத்தகையோர் எவ்வளவு இழிவானவரென்பதை மெய்ப் பாடுகளோடு விளக்கும்.

உலக நடையினையறிந்து அதற்கேற்ப வாழத் தெரியாதவனைச் செத்தாருள் ஒருவனாகவே வள்ளுவர் இழித்துரைக்கிறார். பொருட்குறை நிரம்ப வேண்டாம் என்ற குறிக் கோளோடு இரப்பார்க்கீயாது தனித் துண்ணுதல் இரத்தலினும் இன்னாத தென்று கூறும்போத அத்தகையார் செய்கை எவ்வளவு இழிவானதாக மதிக்கப்படுகின்றது.

வஞ்சம்பொருந்திய மனத்தோடு கூடி வெளிக்கு நல்லவர் போல நடப்பவரை மனிதர்கள் மட்டுமன்றிப் பஞ்சபூதங்களுமே இழித்து நகையாடும். அத்தகையோர் பசுந்தோல் போர்த்த புலிகளாவர். அவர்களது செய்கை புதரின் மறைந்த புட்களைக் கொல்லும் வேடரது இழி தொழிலை ஒக்கும். இவற்றிலிருந்து பொய்யொழுக்கம் பூண்ட போலி வேடதாரிகளின் இழிவு புலனாகின்றதன்றோ!

விலங்கினங்களுக்கும் மனிதர் களுக்கும் உள்ள வேறுபாடு எத்தகை யதோ, அத்தகைய வேறுபாட்டைக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் இடையே நாம் காண்கின்றோம். மேலும், கல்வியறிவற்றாராது இழிவினைப் பின் வரும் பாக்கள் எடுத்துரைக்கின்றன.

நுண்மா ணுழைபுல மில்லான் - எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.

விலங்கொடு மக்க ளனையர் - இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்.

இப்பாக்கள் இழிவுச்சுவையின் மெய்ப்பாடுகளை எம்மிடத்துத் தோற்றுவிப்பதை உய்த்துணர முடியும்.

தாம் கற்ற ஒன்றினைப் பிறர்க்கு எடுத்துரைக்குந் தன்மையில்லார், வாள் கொண்ட பேடி போல்வர் என்றும், அத்தகையோர் கல்லாதவரினுங் கடையர் என்றும், உலகில் வாழ்ந்தாலும் இறந்தவர் போலவே எண்ணப்படுவர் என்றுங் கூறும்போது, "பல்லவை கற்றும் நல்லவையுள் நன்கு செலச்சொல்லா தார்" இழிவு தோன்றுகிறது.

பெண்களின் சொற்கேட்டு அவர்க்கு ஏவல் செய்யும் ஆண்களினும் பார்க்க, "நாணுடைப் பெண்ணே பெருமையுடைத்து" என்று ஆண்மையிலாரது இழிவினை விளக்குகின்றார் வள்ளுவர். அத்தகைய ஆடவர் இம்மை மறுமைப் பயன்களை அளிக்குஞ் செயல்களைக் கூடச் செய்யத் தகுதியற்றவர் என்பது அவர் கருத்து.

மது உண்டல், சூதாடுதல் போன்ற கூடா ஒழுக்கமுடையாரை, யாது செய்யினும் உவக்குந்தாய் கூட வெறுப்பாள். இவ்விதம் தனது நிலையினின்றும் பிறழ்ந்த மனிதன் தலையினின்றிழிந்த மயிரைப் போல வெறுக்கப்பட்டு, இழிக்கப்படுவான்.

ஒருவனை விரும்பி அவனைப் பார்த்து ஒரு பெண் சிரிக்கும் போது அவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியினும் பார்க்கப் பன்மடங்கு துன்பம், ஒருவனை வெறுத்து அவனைப் பார்த்து அவள் சிரிக்கும் போது ஏற்படுவது உலக இயல்பு. "யாம் வறியோம் எனக் கூறி மடிந்திருப்போரைக் கண்டால் நில மடந்தை இழிவுபடுத்திச் சிரிக்கின்றாள்" கேவலம்! பொறுமைக்கு எல்லையாகிய ஒருத்தியே சிரிக்கக்கூடிய அளவு இழிநிலை அடைகின்றான் சோம்பேறி. அதைவிட இழிவு பிறிதில்லை. உழுதல் முதலிய தொழில் செய்வானைப் பார்த்து நிலமடந்தை மலர்முகங்காட்டி, மணிவாய் திறந்து குலுங்கக் குலுங்கச் சிரிக்கின்றாள்; மடிந்திருப்பாரைக் கண்டு வெறுத்து மௌனமாகச் சிரிக்கின்றாள்; இதனால் உலகுயிரனைத்தும் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றன.

அடுத்தபடியாக நடுவுநிலையெனப்படும் சாந்தரசம் பற்றி ஆராய்வோம்.

"கோட்பாடறியாக் கொள்ளையுமாட்சியும், அறந்தரு நெஞ்சமும் ஆறிய விழியும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும், குறிப்பின்றாகலுந் துணுக்கமில்லாத் தகைமிகவுடைமையுந் தண்ணெனவுடைமையும், அளத்தற் கருமையும், அன்பொடுபுணர்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிப்பும்" நடுவுநிலைச் சுவையின் மெய்ப்பாடுகளாகும்.

பிறர்க்கு நீதி வழங்கும்போது காய்தல், உவத்தல் இன்றித் துலாக்கோல் போன்று பாகுபாடற்ற விதத்தில்



நீதி வழங்கல் வேண்டும் என்பதை விளக்குமுகத்தால்,

சமன்செய்து சீர்தூங்குங் கோல்போ
லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

என்று வள்ளுவர் கூறுதலை நினைக்கும் போது நடுவுநிலை தவறாதாரது இலக்கணம் அப்படியே மனக்கண் முன் தோன்றுதலைக் காண்கின்றோம்.

தன்னை அகழ்வாரை வீழாமற் றாங்கும் நிலம்போல, ஒருவர் தம்மைத் தூற்றிய வழி அவர்மாட்டுப் பகை பாராட்டாது பொறுமையுடன் இருந்து, இகழ்வார்க்கு மேலும் நன்மை செய்ய வேண்டும் என்ற சாந்த நிலையினைச் சிறந்த உதாரணம் மூலம் திரு வள்ளுவர் விளக்குகின்றார். மனச் செருக்கால் ஒருவன் தீயன செய் வானேல் நாம் அவனுக்குத் தீமை செய்யாமல் நம்முடைய பொறுமை யால் அவனை வென்று விடவேண்டும். இத்திறமை சமநிலை உடையார்க்கே வாய்க்கும்.

எடுத்ததெற்கெல்லாம் பிறரை குறை கூறுவாரை நாம் காண்கிறோம். தனக்குத் தன்னால் விளைந்த தீமைக்குக் கூடப் பிறரையே குறை கூறுவாருமுளர். அத்தகை யார்க்கு, "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற பூங்குன்றனார் பொன்மொழியும், "பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே" என்ற வெற்றிவேற்கைச் சொற்றொடரும் அறிவுரை பகர் கின்றன. வள்ளுவர் வாய்மொழி ஒன்று இவற்றினுஞ் சிறப்பாக விளங்குகிறது. எந்த ஒரு சுவைக்கும் கட்டுப்படாது, சாந்த நிலையில் இருந்து கொண்டு,

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந்
தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

என்ற செய்யுளை நாம் உணர்ந்து பாடுவோமானால், சமநிலையின் மெய்ப் பாடுகள் நம்மிடையே தோன்றி நிற்றலை அறிவோம்.

'நாகரிகம்' என்ற சொல்லுக்குரிய சரியான இலக்கணத்தைத் திருக்குறளி லன்றி வேறெந்த நூலிலுமே காணல் முடியாது. "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்பது முதுமொழி. சிறுபிழை களையல்ல, பெரும் பிழைகளையுமே பொறுக்கும் குணமுடையோரையும் நாம் காண்கிறோம். அத்தகையோர் தாம் சமநிலை உடையார். நமது உயிருக்கே இறுதி பயக்கக்கூடிய கொடுமையை ஒருவர் செய்தபோதும் அதைப்பொருட்படுத்தாது அவரோடு பழகுதல் வேண்டும்.

பெயக்கண்டு நஞ்சுண்டமைவர்
நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

என்பது வள்ளுவர் கூற்று. ஆம். இதுவே தலையாய நாகரிகம்; நிலையான நாகரிகமுங் கூட. மற்றவை யெல்லாம் அவ்வப்போது தோன்றி மறையும்



நவநாகரிகங்களே. "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சு முண்பர் நனிநாகரிகர்" என்பது நற்றிணை. இவற்றால், சமநிலை கொண்ட மக்கள் வாழ்ந்த இடம் தமிழகம் எனக் கூறிப்பெருமை கொள்ள நமக்கு உரிமையுண்டு.

தாம் இடுக்கட்பட நேர்ந்த போதும் பிறருக்கு இன்னாத வினைகளைச் செய்யாதிருத்தல் மெய்யறிவுடையார் கடன், தன்னைப்பெற்ற தாயினது பசி காணும் தன்மையனாயினும் அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிதல் வேண்டும். "கடல் கரையிகந்தாலும் தம் நிலை திரியாதிருக்குஞ் சான்றாண்மை" மிக்க பெரியார்களின் தன்மையை நினைக்கும் போது சமநிலை மெய்ப்பாடுகள் நம்மிடத்துக் கிளர்ந்தெழுவதை நாம் உணர்கின்றோம்.

ஆறாவதாகக் காமம் அல்லது இன்பம் என்னும் சுவைபற்றிய செய்திகளைக் காண்போம். "தூவுள்ளுறுத்த வடிவுந் தொழிலும், காரிகை கலந்த கடைக்கணுங்கவின் பெறு மூரன்முறுவல் சிறுநிலா வரும்பலும், மலர்ந்த முகனுமிரந்தமென் கிளவியும்" இச்சுவைக்குரிய மெய்ப்பாடுகளாகும்.

ஒருவன் பெறும் பேறுகளுள் தலையாய பேறு மக்கட் பேறு. மக்களால் எய்தும் இன்பமே தலையாய இன்பம். அமிழ்தம் அருந்துதலினும் பார்க்கச் சிறந்த இன்பம் ஒன்று உண்டு என்றால், அது தம்மக்களது சிறுகை யான் அளாவப்பட்ட சோறு என்னும் போது அனுபவவாயிலாக அதை உணர்ந்தோர் அடையும் இன்பத்துக்கு எல்லையில்லை. நம்முடைய மக்களது உடம்பைத் தீண்டுதலால் மெய்க்கு இன்பங் கிடைக்கின்றது. அவர் களுடைய மழலை மொழியைக் கேட்கும்போது செவிக்கும் இன்பம் உண்டாகிறது. அறிவுடைய தம்மக்கள் அவையகத்து முந்தியிருப்பதைக் காண்பதாற் கண்கள் இன்பம் அடைகின்றன. எனவே, ஐம்புல இன்பங்களையும் ஒருங்கே அளிக்கவல்ல செம்பொருள் மக்கட் பேறென்னும் போது அச்செல்வத்தை எண்ணி எண்ணி நாம் இன்பரசத்துள் மூழ்குகின்றோம். இம்மைப் பயன்களோடு மறுமைப்பயனையும் பண்புடைய மக்களாற் பெறமுடியும் என்று கூறும் போது முந்திய இன்பம் மேலும் உச்சநிலை அடைகின்றது.

ஒருவனது ஆக்கத்தைக் கண்டு பொறாமைப்படுதல் உலக இயல்பு. ஆனால், பிறர் ஆக்கம் பெறும்பொழுது அது தமக்கு கிடைத்ததே போல இன்பம் அடையும் பெரியாரையும் நாம் காண்கின்றோம். இப்பெரியார் யார்? இவர்களே உலக நடையினை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவர். இவர்கள், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் கருத்துடையாராவர். இத்தகையோர் பெருஞ் செல்வம் பெறின், அதனை, "ஊருணி நீர் நிறைந்தாற்" போலவும், "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தாற்" போலவும், "மருந்தாகித் தப்பாமரம்" கிடைத்தாற் போலவும் எண்ணி, மக்கள் மட்டற்ற மகிழ்வெய்துவர் எனக் கூறுகின்றார் வள்ளுவர்.



உலகில் நமக்கு இடையறாத இன்பத்தைக் கொடுக்க வல்ல நான்கு பொருள்களை வள்ளுவப் பெருந்த கையார் எடுத்துக் கூறியுள்ளார். அந்த நான்கினையும் நாம் நினைக்குந் தோறும், நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாகின்றது. அந்நான்கினுள் ஒன்று. முன்கூறப்பட்ட மக்கட் செல்வம், மற்றது அம்மக்கட் செல்வத்தோடு மற்றும் இன்பங்களைக் கொடுக்கவல்ல மகளிர். மூன்றாவது நூற்பொருள். அடுத்தது பண்புடையாளர் தொடர்பு.

ஒரு கணக்கைச் செய்து, அதன் விடையைக் கண்டு பிடித்த மாணவன் எவ்வளவோ மகிழ்வெய்துவான்! பாடுபட்டுப் படித்துப் பரீட்சையிற் சித்தியெய்தியவன் முன்னிலும் பன்மடங்கு மகிழ்ச்சி கொள்வான். அளவிறந்த துன்பத்தை அனுபவித்து, அதன் பின் பெற்றெடுத்த மகனின் பெருமையைக் கேள்வியுற்ற தாய் அத்துன்பங்கள் எல்லாவற்றையும் மறந்து மகிழ்சிக் கடலுள் மூழ்குவாள். சொந்த முயற்சியின் பயனை அனுப விக்கும் போது எவர்க்கும் இன்பக் கிளர்ச்சி ஏற்படுவது இயல்பு. வயிற்றின் கொடுமையைத் தீர்க்க யாம் எத்துணைப் பாடுபடுகின்றோம்? எந்த வழியிலாவது வயிறு நிரம்பினாற் போதும் என வாழ்பவர் நடைப் பிணங்களே. தனது முயற்சியால் கிடைத்தது நீர்போன்ற பதார்த்தமே என்றாலும், அதை உண்ணும் போது உண்டாகும் இன்பம், பிற வழியாற் கிடைத்த அமிழ்தத்தின் சுவையினும் பார்க்க மேலானதன்றோ!

காமத்துக்குரிய இருவர், ஒருவரை யொருவர் காமக் குறிப்போடு நோக்குங் கால் உள்ளத்தெழும் இன்ப உணர்ச்சி சொல்லுந்தரத்ததன்று.

தலைவியினிடத்து அதரபான மருந்திய தலைமகன் அதனை வியந்து "பாலொடு தேன்கலந் தற்றே பணி மொழி வாலெயி றூறிய நீர்" எனக் கூறுகின்றார். இப்படியே காமத்துப் பாலில் தலைவன் தலைவியர் மாட்டு நிகழும் இன்ப நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதிகள் நமக்கு எல்லையில்லா இன்பத்தைக் கொடுக்கவல்லன. அவை யனைத்தையும் இங்கு எடுத்தோதிற் பெருகும் என விடுத்தாம்.

அடுத்தது அச்சச் சுவை, "ஒடுங்கிய உடம்பும், நடுங்கிய நிலையும், மலங்கிய கண்ணும், கலங்கிய வுளனும், கரந்து வரலுடைமையும், கையெதிர் மறுத்தலும், பரந்த நோக்கமு மிசை பண்பினவே." இம்மெய்ப்பாடு களைத் தோற்றுவிப்பன அச்சச் சுவையின் பாற்படும்.

சாதாரண மனிதருக்கே கோபம் வந்துவிட்டால் அதை ஆற்றுதல் இலகுவான தன்று. அவர்கள் அற்ப ஆற்றலையே உடையவர்களாயிருந் தாலும், கோபவெறி யேறிவிட்டாற் பல கொடூரமான செயல்களைச் செய்து விடுகின்றனர். அஃதவ்வாறாயின் துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை

முதலிய நற்குணங்களாகிய குன்றின் மேல் நின்றாரது கோபம் எத்தகையதா யிருக்கும்? அதை நினைக்கவே நமக்கு அச்சம் உண்டாகிறது.

அவர்களது கோபம் "கணமேனுங் காத்தலரிது!" ஏனெனில் அவர்கள் அருளியோ, வெகுண்டோ கூறினாலும் அவ்வப்பயன்களைப் பயந்துவிடும் சக்தி பெற்றவை அவர்களுடைய வார்த்தை களாதலின் என்க.

எரியாற் சுடப்படினு முய்வுண்டா
முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

எனக் கூறும்போது முந்திய பயம் மேலும் பன்மடங்காகின்றது. அத்தகைய "மாண்ட தக்காரது" சினம் வகை மாண்ட வாழ்க்கையினை அடைய வேந்தரையும் அழித்துவிடும் தன்மை பெற்றது.

ஒருவர் செய்த நன்றியை மறந்து விடுதல் உலகியல்பாகி விட்டது. அதன் பயனை அறியாமையே இதற்கு காரணம். திருக்குறளைப் படித்தோர் நன்றி மறத்தலைக் கனவிலுங் கருதார். இதனால் விளையுந் தீமைகளை நாம் திருக்குறளிற் காண்கின்றோம். அவற்றை நினைத்தாலே குலை நடுக்கம் ஏற்படுகிறது. "வேறு எத்தகைய குற்றத்தைச் செய்தார்க்கும் உய்வு உண்டு. ஆனால் நன்றி மறந் தார்க்கு உண்டாம் குற்றத்தை தடுத்தற்கு எவ்வித பிராயச்சித்தமும் இல்லை" என்று அச்சுறுத்துகிறார் வள்ளுவர்.

தீமையான செய்கைகள் முதலில் இன்பம் பயப்பன போலத் தோன் றினும், ஈற்றில் துன்பத்தையே விளைக்கும். அதனாற்றான் வள்ளுவர்.

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

என்று நம்மை அச்சுறுத்துகிறார்.

ஒருவனோடு கூடி, உறவு கொண் டாடிக் கொண்டாடி அவனைக் கொல் லும் இயல்புடையோரும் உலகில் இருக்கின்றனரன்றோ! வெளிப்படை யாகப் பகை பாராட்டுவானன்றிக் கேளிர் போல் மறைந்து நிற்கும் பகைவருக்கே நாம் அஞ்ச வேண்டும். அவ்விதம் அஞ்சாது அலட்சியம் செய்தால் நமக்கு அழிவு உண்டாகும் என்று வள்ளுவர் கூறும்போது உட்பகையின் தீமையை எண்ணி அஞ்சவேண்டியவர்களா கின்றோம்.

ஒரு சிறு குடிசையிலே நம்மையும் ஒரு பாம்பையும் உடன் உறையச் செய்தால், நாம் எவ்வளவு நரக வேதனை அடைவோம்! அதனை நினைக்கவே மனம் பதறும். மனப்பொருத்தம் இல்லாதவரோடு கூடி வாழ்தல் மேற்போந்த கொடிய அனுப வத்தை நமக்கு உணர்த்தும். எனவே, அத்தகைய வாழ்க்கையை அஞ்சாதார் யார்? "அவ்வாறு வாழ்தலினும் சாதலே மேல்" என்று கூறக் கூடிய அளவிற்கு நம்மிடையே அச்சம் குடிகொண்டு விடுகின்றது.



"கொடிது கொடிது! வறுமை கொடிது!" என்றார் ஔவையார். ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாது கொடிய வயிற் றோடு கூடிவாழும் நாம் வறுமையைக் கண்டு அஞ்சவேண்டியவர்களே. வறுமையில் உழலும் போது எதிர்காலம் வளமுடையதாக இருக் காதா என்று ஏங்குகின்றோம். மனித வாழ்வே எதிர்காலத்தை நம்பித்தான் நடந்துகொண்டிருக்கின்றது. வறியவர் களின் வாழ்க்கை எதிர்கால நம்பிக்கை யிலே தான் பெரிதும் தங்கியிருக்கின்ற தெனலாம். இன்றையிலும் பார்க்க நாளைக்கு ஏதோ கூடுதலாக நன்மை கிடைக்குமென நம்பியிருக்க, நேற்றிருந்த அதே வறுமை மீண்டும் வருமாயின் அப்பப்பா! அதன் கொடுமை தான் என்னே! "நெருப்பிலே கிடந்து நிம்மதியாகத் தூங்கினாலும் தூங் கலாம், ஆனால், இந்த வறுமை வந்தால் யாதொன்றானும் உறக்க மில்லை." என்று நல்கூர்ந்தான் ஒருவன் கூறுவதைக்கேட்டு நமக்கும் அத்தகைய வறுமை வந்து விட்டால் நாம் என்ன பாடுபடுவோம் என்று எண்ணும்போது பயத்தினால் இதயமே நின்றுவிடும்போல் இருக்கின்றது.

எட்டாவதாக நகைச்சுவை பற்றி ஆராய்வோம். "மிகைபடு நகையது, பிறர்நகையுடையது, கோட்டிய முகத்தது, விட்டு முரிபுருவமொரு விலா அறுப் புடையது, செய்வது பிறிதாய் வேறு சேதித்தல்" என்பன நகைச் சுவைக் குரிய மெயப்பாடுகளாகும்.

"பேயோடு பழகினும் பிரிதல் அரிது" என்பது முதுமொழி. புகைவண்டியிற் கண்டு பழகியவர்களைக் கூடப் பிரிவதாயின் நமக்கு எவ்வளவு துன்பம் உண்டாகின்றது. ஆனால், பேதமை யுடையார் இடையில் நட்புண்டாகில் எவ்வித தீமையோ துன்பமோ வந்துவிடாது. ஆகவே, பேதையர்க் கிடையிற் பிரிவு நன்கு உண்டாகலாம் என்கிறார் திருவள்ளுவர்.

அறிவில்லாத கயவர் நெல்லொடு சேர்ந்த பதரே போல்வர்; வெளித் தோற்றத் தளவில் அவர்கள் மக்களைப் போலத்தான் இருப்பார்கள்.

அவர்களுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாட்டைப் பிரித்துணர்தல் இலகுவான தன்று. அத்தகைய கயவர் தமக்கு உறுதியான கருமங்களைச் சிறிதும் சிந்திக்க மாட்டார்கள்; பழி பாவங்களைத் தவறாது செய்வார்கள்; மனத்திலே எள்ளளவேனும் கவலை கொள்ள மாட்டார்கள். எனவே, அத்த கையோர் போலத் திருவுடையோர் வேறு யார்? அவர்கள் எவரது ஆணைக்கும் அடங்காத தேவர் களைப் போன்றவர்கள்; எதை நினைக் கின்றார்களோ அதைச் செய்து முடிக்கும் தன்மையர். அவர்களைத் தான் வள்ளுவப் பெருந்தகையார், "தேவரனையர் கயவர்" என நகைச் சுவை ததும்ப உரைக்கிறார்.

கண்ணொடு கண்ணினை நோக்கிக் காதல் கொண்ட பின், பிரிந்து போன தலைவனை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றாள் தலைவி; பின்பு சிறிது தேறுகிறாள்; "பின்

விளைவை நோக்காது காதலரைப் பார்த்துவிட்டு, அவர் பிரிந்த பின் ஏன் அழுகின்றாய்? என்று கண்ணைத் தானே கேட்டுக்கொள்கிறாள்.

பிரிந்து சென்ற தலைமகன் தலைவியை நோக்கி வருகின்றான். தலைவி ஊடி நிற்கின்றாள். மட்டற்ற வேட்கையோடு தன்னை நெருங்கிய தலைவனை அணைய மறுக்கிறாள் தலைவி. தலைவனின் ஆற்றாமை யையும், அவன்படும் பாட்டையும் பார்த்து நகையாடும் பொருட்டே இந்த நாடகத்தைத் தலைவியுடன் சேர்ந்து தோழி ஒழுங்கு செய்கிறாள்.

வெவ்வேறு இடங்களில் இருக்கும் நெருங்கிய உறவினர், ஒருவரை யொருவர் நினைக்கும்போது தும்மல் உண்டாகும் என்பது நம் முன்னோர் கள் கொண்ட கருத்து. இக்காலத்திலும் இது நிலவிவருகிறது சாதாரணமாகத் தும்மல் உண்டாகும் போது தும்மிய வரை வாழ்த்துதலும் மரபு. ஊடியிருந்த தலைவியின் மனத்தைச் சிறிது மாற்ற, தலைவன் வேண்டுமென்றே தும் மினான். அப்போது தலைவி தன்னை வாழ்த்துவாள்; அதன் பின் அவளுடன் உரையாடல் தொடங்கலாம் என எண்ணினான் தலைவன். ஐயோ பாவம் அவனது செய்கை விபரீதமாக முடிந்துவிடுகிறது. "நீர் தும்முதற்குக் காரணமாய் இருந்த மகளிர் யாரோ?" எனக் கேட்டுவிடுகிறாள் தலைவி. சரி சரி, இனித் தும்மலால் இவளது மனத்தைமாற்ற முடியாது என நினைத்து, இயற்கையாகவே எழுந்த தும்மலையே அடக்க முயன்றான் தலைவன். "எந்தப் பெண்ணோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்?" என்று இன்னொரு வெடிகுண்டை தலைவி அவன் தலையில் போடுகிறாள். இத்தகைய காதற் கட்டத்தை நினைக்கும் போது நகைச்சுவை மிகைபடத் தோன்றுகின்றதன்றோ!

இறுதியாக, வீரச்சுவை பற்றிய செய்திகளை இங்குக் கூறுவோம். "முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும் பிடித்தவாளும் கடித்த எயிறும் மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும், திண்ணெ னவுற்ற சொல்லும் பகைவரை எண்ணல் செல்லாவிகழ்ச்சியும்" என்பன இச்சுவைக்குரிய மெய்ப்பாடு களாகும். இவ்வகை மெய்ப்பாடுகளை நம்மிடையே தோற்றுவிக்கவல்ல செய்திகளை இச்சுவையின் பாற் படுத்தலாம்.

பிற உயிர்களை வெல்லுதலினும் பார்க்கத் தன்னை வெல்லுவோனே உயர்ந்த வீரமுடையவன். புலன்களை அடக்கி, அப்புலன்களால் நுகர்தற்குரிய இன்பங்களை எவன் துறந்து விடு கிறானோ அவன் வீரருள் வீரன். 'முடியாதது' என்ற ஒரு வார்த்தை தனது அகராதியில் இல்லை என்றான் நெப்போலியன். வீரமுள்ள எவனுக்கும் இத்தகைய உணர்ச்சி ஏற்படவே செய் யும். "அருவினை என்ப உளவோ?" "ஞாலங்கருதினுங் கைகூடும்" என்பன போன்ற வள்ளுவர் வாய் மொழியைப் படிக்கும் போது எத்தகை யோர்க்கும் வீர உணர்ச்சி தோன்றும்.



தனக்கொரு துன்பம் வந்தவிடத்து, அத்துன்பத்தைப் பார்த்துச் சிரிக்க வேண்டும். அத்தகைய வீரம் நம்மிடத்திலிருந்தால் எத்தகைய துன்பமும் நம்மை அணுகாது. மறக்குடியிற் பிறந்த வீரர்கள் துன்பத்தைக் கண்டு அஞ்ச மாட்டார்கள். வேல் வீரன் ஒருவன் தன்னைத் தாக்க வந்த யானையது உயிரைப்போக்குதற்காக கையில் இருந்த வேலை அதன் மீது வீசுகின்றான். மறுகணம் அவனைப் பகைவர் பலர் சூழ்ந்து கொள்கின்றனர். கையில் வேல் இல்லை. மெய்யில் வேல் தைத்திருப்பதை அப்போது தான் அவன் கவனிக்கின்றான்; மட்டற்ற மகிழ்ச்சியோடு அவ்வேலைப் பிடுங்கி எடுக்கிறான்; வீராவேசத்தோடு எதிரிகளைப் பார்த்துச் சிரிக்கின்றான்; எதிரிகளின் வேல் வீச்சுக்கு அஞ்சிக் கண்களைக் கூட இமைத்தல் செய்யாது ஆண்மையோடு போர் புரிகின்றான். இவ்விதம் அஞ்சாது போர் செய்து, முகத்திலும் மார்பிலும் விழுப்புண் பெறாத நாள்களைப் பிறவாத நாள்களாகவே அத்தகைய வீரன் கருதுவான்.

பகைமுகத்துச் சாகும் வீரத்திலும் பார்க்க மேலான வீரச் செயலும் ஒன்று உண்டு. அதுதான் அவையகத்து நின்று அஞ்சாது சொற்போர் செய்தல். அத்தகைய வீரர் ஒரு சிலரைத்தான் நாம் காணக்கூடும். அவர்களை வெல்லுதல் எவர்க்கும் அரிது.


சொலல்வல்லன் சோர்வில -
னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது.

என்று வள்ளுவர் கூறுகின்றார். அவரது வாய்மொழியைக் கேட்கும் போது ஏன் நாமும் அப்படி வீரர்களாக வரக்கூடாது என்ற வீர உணர்வு கிளர்ந்தெழு கின்றதன்றோ!

இதுகாறுங் கூறியவற்றிலிருந்து திருக்குறளில் நவரசங்களுஞ் சிறந்த முறையில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன என்பது தெற்றெனப் புனலாகும். ஒரு சுவைக்குரிய பாடல்களைப் படிக்கும் போது அச்சுவைக்குரிய மெய்ப்பாடுகள் நம்மிடத்தே கிளர்ந்தெழுவதைக் காண்கின்றோம். அக்கிளர்ச்சி அக்குறிப் பிட்ட பாடல்களின் கருத்தையும் மனத்திடையே ஆழப் பதிய வைத்து விடுகிறது. நம்முடைய அனுபவம் அக்கருத்துக்கு ஒத்துவரும்போது திருக்குறளின் பெருமை நம்மாற் போற்றப்படுகின்றது. எனவே, நவரசங்களுந் ததும்பி நிற்கும் திருக்குறள் மக்களைத் தன்வயப் படுத்துதலில் வியப்பொன்று மில்லை.

✷✷





திருவள்ளுவர் வகுத்த சமுதாய மறுமலர்ச்சி

கு.ச.ஆனந்தன்

திருக்குறள் ஓர் சிறந்த அறநூல்; சீரிய இலக்கியம்; செப்பமான சிந்தனை நூல் என்று போற்றப்படுகிறது. ஆனால் நடுவு நிலையில் நின்று ஆய்வு செய்தால், திருக்குறள் இலக்கியச் சுவையுடன் எழுதப்பட்ட செறிவான 'சமுதாயவியல்' என்பது தெற்றென விளங்கும்.

திருவள்ளுவர் வெறும் வறட்டுத் தத்துவங்களை மட்டும் வகுத்துத் தரவில்லை. தனிமனிதனோ அல்லது அவன் சார்ந்த சமுதாய அமைப்புகளோ நடைமுறையில் பொருத்திப் பயன் படுத்தக் கூடிய செயல்முறை களையே அவர் கற்றுத் தருகிறார். அதற்காக அவர், குறிக்கோளை விட்டுத் தருவ தில்லை. நடைமுறைக்கேற்ற குறிக் கோள்களையும் நடை அளவுடன் கலந்து முற்றிலும் புதியதொரு இன் கலவையாக ஆக்கித் தருகிறார்.

இறைப் பண்பைப் பேசும் திருக் குறள், பக்தி மார்க்கத்தைப் போதிப்ப தில்லை; அரசு முறையினை ஆராய்ந்த வள்ளுவம், அரசனைப் போற்றிப் பாடவில்லை; தமிழ் மறையான திருக்குறள் தமிழரையோ தமிழ் மொழி யையோ தமிழ் நாட்டையோ குறிப்பிடு வதில்லை. தவத்தை இல்வாழ்க்கை யின் சிறப்புப் பகுதியாகப் பேசி, நெஞ்சால் துறப்பதைத் 'துறவு' என்று கூறிய பொதுமறை எந்தத் துறவி யரையும், தவஞானிகளையும் பாட வில்லை; மெய்யுணர்வைக் காட்டுகிற மறு மலர்ச்சிப் பனுவல், எந்தவொரு சமயத்தையும் ஏற்கவில்லை.

'மனித இன உயர் தகைமை' (humanism) என்கிற பரந்த அடிப் படையில், அறிவை முதன்மைப்படுத்தி, சமுதாயச் சிக்கல்களுக்குரிய தீர்வு களை, வகுத்துத் தொகுத்து; ஒரு முழு வடிவமாகத் தருகிறது திருக்குறள். மாந்தனே திருக்குறளின் தனிநாயகன்; மனித நலமே அதன் மூல நிலைக் களன்; வாழ்க்கை ஏற்புக் கொள்கையே அதன் உயிர்நாடி; திட்டமிட்ட வாழ்க்கை முறையே அதன் நுவல் பொருள்; சமுதாய மறுமலர்ச்சியே அதன் இறுதிக்குறிக்கோள்.

திருவள்ளுவம் மெய்யாகவே சமுதாய மறுமலர்ச்சிக்கு வழிகோலு கிறதா? இனி ஆராய்வோம்.

'சமுதாய மறுமலர்ச்சி' அல்லது சமுதாய மாற்றம் (Social Revolution) என்றால் என்ன?

'சமுதாயத்தினுடைய அரசியல் வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை, கருத்தியல் வாழ்க்கை ஆகியவைகளில் நிலையாக ஏற்படக் கூடிய ஓர் ஆழமான உயர்வெழுச்சியே சமுதாய மறுமலர்ச்சி எனப்படும். அச்சமுதாய மறுமலர்ச்சி மெத்தத் திறன் வாய்ந்தது. சமுதாயத்தின் பழைய பார்வைக ளையும்; பழைய அமைப்புக்களையும்



முற்றிலும் புதியனவாக மாற்றியமைத்துவிடும். யாரோ ஒருவர் விருப்பத்திற்காக மட்டும் அம் மறுமலர்ச்சி தோன்றி விடுவ தில்லை. சமுதாய மாற்றம் உண்டாக்கப்படுவதில்லை; மலர்கிறது; என்றாலும் ஒவ்வொரு மறுமலர்ச்சியும் ஒரு தனி மனிதனுடைய சிந்தனையில் தான் முதன் நிலையில் எண்ணமாகத் தோன்றுகிறது. அந்த எண்ணம் விரிகிறது; வளர்கிறது; பரவுகிறது. மக்கள் சிந்தனைகளில் ஆழப்பதிகிறது. வரலாற்றின் உந்துவிசையாக மாறுகிறது.

ஏறத்தாழ ஈராயிராம் ஆண்டுகளுக்கு முன்பே, ஏற்றத்தாழ்வற்ற தொரு சமனியச் சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், மனிதகுல வாழ்க்கைத் துறைகள், பலவற்றையும் ஆழமாக ஆராய்ந்தார். தமிழ்ச் சிந்தனையாளர் திருவள்ளுவர். அத்தனி மனிதனுடைய சிந்தனையில் மறுமலர்ச்சி எண்ணங்கள் தோன்றின; வளர்ந்தன; விரிந்தன; அவை திருக்குறளாக மலர்ந்தன.

அறம்பொரு ளின்ப முயிரச்ச -
நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்

மாந்தர் வாழ்க்கையில் உறுதிப் பொருட்களாய்க் கருதப்பட்ட அறம், பொருள், இன்பம் ஆகியவைகளுக்குத் திருக்குறள் எழுதப்பட்ட காலம் வரை தரப்பட்டு வந்த கருத்துப் பொருள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றார். மறு ஆய்வு செய்யப்பட்டதா? இல்லை. மாந்தனின் இறுதிநிலை பற்றிப் பல சமயங்கள் முரண்பட்டு நிற்கின்றன. அதனால் தத்துவங்கள் பல எழுந்தன; திருக்குறளில் வீடுபேறு இல்லை. ஆனால் மாந்த உயிரில் எஞ்சி நிற்பதை 'உயிரெச்சம்' என்று கூறி, அதுவும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று பணித்தார். செய்தோமா இல்லை. அவர் கூறிய இந்நால்வகைச் சமுதாய அடித் தளங்களின் திறத்தை ஆராய்ந்து, நாம் தெளியவே இல்லை. விளைவு? பழைய கருத்தியல் கொள்கைகள், மரபுகளாகச் சமுதாயத்தில் அப்படியே தேங்கி நின்றுவிட்டன.

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ்
செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

தீயவர்களுக்கு ஆக்கம் ஏன்? நல்லவர்களுக்கு கேடு ஏன்? எண்ணிப்பார், புலன் விசாரணை செய், என்றார். நினைத்தோமா? இல்லை. அதற்கு விளக்கம் எழுதிய உரையாசிரியர்களோ, நல்லவனுக்குத் தீமையும் தீயவனுக்கு ஆக்கமும் வருவதற்கு 'விதிதான்' காரணம் என்றனர். ஆனால் திருவள்ளுவரோ என்றும் 'நினைக்கப்படும்' என்கிறார்.

இந்த அறவகை ஆய்வினுள்ளே அடங்கியதுதான், வள்ளுவம் வெளியிடும் சமுதாய மறுமலர்ச்சி ஏற்பாடு. வள்ளுவரே அவற்றை அறிவின் துணைகொண்டு காரண-காரியத்துடன் ஆராய்ந்தார். பல தீர்வுகளைப் படைத்தளித்தார். சமுதாயத்தின் கருத்தியல் வாழ்க்கையிலும், அரசியல், பொருளாதார வாழ்க்கையிலும் இனி



ஏற்பட வேண்டிய மறுமலர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கூறுகளை வெளியிட்டார். ஆனால் தமிழகத்தின் வரலாற்று விபத்துக்களால், அவை ஏற்கப்படவில்லை.

கருத்தியல் வாழ்க்கை

மாந்தர் கூட்டு வாழ்க்கையில் விழைவுகளும். தேவைகளும் காலத்திற்கு ஏற்ப, நாட்டிற்கு ஏற்ப, நிலைக்கு ஏற்ப, வெகுவாக வளர்கின்றன. முரண்பாடுகள் முளைக்கின்றன. தன்னலம் ஓங்குகிறது; சிக்கல் மிகு அமைப்புக்கள் உருவாகின்றன. நடைமுறை இயல்புகளும் பண்பாக்கங்களும் மாறுபட்டு நிற்கின்றன. சமுதாயத்தில் பொதுவான அடிநிலை எண்ணங்களும் மேல் நிலைக் குறியீடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றுப் போகின்றன. விளைவு? மாந்தப் பயன் மதிப்புக்கள் (human values) சமுதாயப் புலத்தில் பலியிடப் படுகின்றன. அவ்வகைக் கருத்து நிலையில் முரண்பாடுகளை மாற்றக் கூடிய - பொதுமையை நல்கக்கூடிய - சமன்மையைப் படைக்கக் கூடிய சிந்தனை ஓட்டங்கள் செழிப்பாக வளர வேண்டும். பழைமைக் கருத்துக்களில் மாற்றம் எனப்படுகிறது.

தனிமனிதனின் பண்புகளை, சிந்தனைகளை, எண்ண அலைகளை, தன்னலத்தினின்றும் மாற்றிப் பொதுநலத்தை நோக்கிச் செலுத்தும் வகையில் கருத்தியல் மறுமலர்ச்சிக்குத் திருவள்ளுவர் வழிவகுத்தார். சமயங்களைப் போலத் தனிமனிதனைத் (individual) தனிநிலையில் நிறுத்தாமல், சமுதாயத்தின் ஒரு சிறப்புக்கூறு என்று உணரும் வகையில் ஒழுக்க முறைகளையும், அதன் மேல் கட்டப்படும் வாழ்க்கை முறையையும் உருவாக்கினார்.

உலகத்தோ டொட்ட ஒழுகல்
பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். (140)

உலகம் என்பது ஒரு பூகோளப் பரப்பெல்லையன்று; ஒழுங்கு முறையுடன் கூடிய மாந்தச் சமுதாயம். கற்றவர்களெல்லாம் அறிவுடையவர்கள் எனக் கருதப்படும் காலத்தில் உலக ஒழுங்கு முறைக்கு ஒத்தவர்கள்தான் அறிவுடையவர்கள் என்கிறார். சமுதாய ஒழுங்கமைப்புடன் இயைந்து நடத்தலைப் பயிலாதவர்கள் பல துறைகளில் கற்றிருந்தாலும் அறிவில்லாதவர்கள்.

சமுதாயத்திற்கு ஒத்த எண்ணம், சொல், செயல் யாவும் ஒழுக்கம். 'ஒழுக்கமுடைமை குடிமை' மனித இனத்தின் பொதுநன்மையைப் பெறவும் அந்நலத்தை வளர்க்கவும்; எப்படிச் சமுதாய உறுப்பினனாக ஒரு மனிதன் அல்லது அவன் சார்ந்த சமுதாய அமைப்புகள் செயற்பட வேண்டுமென்பதைக் குறளறம் கற்பிக்கிறது; கருத்தியல் கோட்பாட்டில் புதியதோர் மாற்றம்.

தனிநலமே தகைமை என்று கருதப்படும் இன்றைய நிலையில், 'இன நலம் எல்லாப் புகழும் தரும்' (457) என்று வழிப்படுத்துகிறார். புகழ் தருவது தனிநலம் அல்ல; சமுதாய நலமே.



அறிவு என்பது விதிவசத்தால் ஒருவன் மூளையிலேயே பிறந்து வளர்ந்து பெருகுவது, என்பது இன்றைய நடைமுறைக் கருத்தோட்டம். ஆனால் அறிவு அகவயப்பட்டதன்று; புறவயப் பட்டது என்கிறார். ஒருவனுடைய அறிவின் வாயில் சமுதாயம். அவ னுடைய அறிவின் இயல்பு அவன் சார்ந்த சமுதாயத்தின் இயல்பு என்கிறார்.

இனத்துஉள தாகு மறிவு (454)
இனத்தியல்ப தாகு மறிவு
(452)

ஒருவனுடைய மனத் தூய்மையும் செயல் தூய்மையும் தற்சார்புடையது என நாம் கருதுகிறோம். ஆனால் ஒருவனுடைய மனத் தூய்மையும் செயல் தூய்மையும் அவன் சார்ந்த சமுதாயத்தின் தூய்மையையே தழுவி அமையும் என்கின்றார் திருவள்ளுவர்.

மனம்தூய்மை செய்வினை
தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (455)

தனிமனித நலம் காப்பைத் தாராது; ஆனால் சமுதாயத்தின் மொத்த நலன்தான் காப்பை உடையது (458) என்ற புதிய சமுதாயச் சிந்தனையை வழங்குகிறார்.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருளைக் காண்பது அறிவு; நுண்பொருள் காண்பது அறிவு என்கிறார். அறிவு என்பது தேக்க நிலை கொண்டதன்று; அறிய அறிய அறியாமை தென்படும். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்று கூறி அறிவன் முடிவிலாச் செயல் திறனை (endless process of knowledge) அறிவியல் வாயிலாகக் காட்டுகிறார். அந்த அறிவு, பிறரது துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக உணரவேண்டும்.

'அறம்' என்பது உணர முடியாதது; புலன்களுக்குத் தெரியாதது; அறிவால் உணரப்பட முடியாத கடவுள் ஆணை போன்ற ஒன்று; என்ற குழப்பமான நுண்பொருளையே அறத்துக்குத் தந்து வந்தனர். ஆனால் அறம் என்பது 'சமுதாய ஒழுங்குமுறை' என்கிறார். திருவள்ளுவர். சமுதாயத்தை மேல் நிலை இன்ப வாழ்விற்கு இட்டுச் செல்வதற்குரிய முற்போக்கான அடிப் படை நடைமுறைக் கொள்கைகளின் திரட்சியால் அமைக்கப்படுகிற இயங் காற்றல் கொண்ட ஒழுங்கமைப்பே அறம்! என்பது புதிய மறுமலர்ச்சிச் சிந்தனை.

அறத்தின் ஒரு கூறு அறன். 'அறன்' தனி மனிதனுக்கும், தனி அமைப்பு களுக்கும் பரிந்துரைக்கப்படுகின்றது. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்பது தனிமனித உயர்வெழுச்சிக்கு அடிப்படை. மற்றவை வெறும் 'புறத்த, புகழும் இல'. மற்றவை வெறும் விளம்பரத்துக்கானவை என்கிறார். ஆனால் இன்றோ மாசற்ற மனம் நீங்கலாக மற்ற அனைத்துமே அறமாக்கப்பட்டு விட்டன. அவையே புகழ் தருபவை என்ற கருத்தியல் கோளாறும் நிலவுகிறது.

சங்க காலத்தில் 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற தெளிவற்ற



கோட்பாடு நிலவியது. ஆட்சிக்குக் கூட அறம்தான் முதன்மையானது என்பது அதன் பொருள். ஆனால் திருவள்ளுவர் ஓர் அடிப்படையான கருத்தியல் மாற்றத்தை வழங்குகிறார்.

அந்தணர் நூற்கு மறத்திற்கு - மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

அரசின் செம்மையான ஆட்சியே, அறத்திற்கும், உயர்ந்தவர்களின் நூல்களுக்கும் மூலமாய் நின்றது.

'பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்' (புறம்31) என்பது புறநானூறு புகல்கிற கருத்தியல் கொள்கை. கடவுள் ஆணை போன்ற கண்ணுக்குப் புலப்படாத அறத்தின் வழியில் தான் பொருளும் இன்பமும் மீதூர்ந்து நிற்கும் என்பது அதன் கருத்து. ஆனால் திருவள்ளுவரோ, உழைப்புத் திறனை அறிந்து, யாருக்கும் எவ்வகைத் தீமையும் இல்லாமல் உருவாக்கப்படும் உற்பத்திப் பொருள்களே அறத்தையும் இன்பத்தை யும் தரும் எனமாற்றிச் சொல்கிறார்.

அறனீனு மின்பமு மீனுந் - திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (754)

தனிமனிதனின் உழைப்புத் திறனை முறையாக உணரும்போது அதற்குரிய சிறப்பும் ஊதியமும் தரப்படும். அப்பொருள், உழைப்ப வனுக்கோ மற்றவனுக்கோ தீமை யேதும் இழைக்காமல் வரும்போது, சுரண்டல் நிகழ்வதில்லை. பொருள் உற்பத்தியிலேயே சீரான விநியோகம் அடங்கி உள்ளது என்பது இன்றைய சமஉடைமைக் கோட்பாடு. இந்த மறுமலர்ச்சி வித்துக்கள் குறளில் தென்படவில்லையா?

அறுதொழில் என்பது ஆறு பெரும் பகுப்புகள் அடங்குகிற பல தொழில்கள். உறவு, தொழில்கள், வணிகம், வரைவு, சிற்பம், வித்தை என்கிற அறிவியல்கள். அவை அரசின் பாது காப்பின்றேல் நசிந்துவிடும்: அவை பற்றிப் பேசுகிற அறிவு நூல்களும் அழிந்துவிடும்.

அறத்தை 'ஆக்கம்' என்று சொன்ன முதல் சிந்தனையாளர் திருவள்ளுவர். அதனால் அந்த அறத்தைத் தருவது தெய்வீகச் சக்தி அல்ல; மாந்த உயர்தகைப் பண்புகள் என்கிற சிறப்பு. சமுதாயச் செல்வம், திறனறிந்து, தீதின்றி வந்த பொருள் ஆகியவை அறத்தை ஈனும், அறம் இன்பத்தைத் தரும் என்பது திருவள்ளுவரின் புதிய கோட்பாடு(31)

பகை நாட்டவரின் செருக்கை அடக்குவது போர் அன்று: ஒரு நாட்டின் பொருள் உற்பத்தியே. எனவே 'செய்க பொருளை' (produce the wealth) (755). என்கிறார்.

நாட்டின் பொருளாதார உயர்வை (economic development) 'பொரு ளாக்கம்' என்று கூறி, அதனை மக்க ளுடைய சகோதரத்துவத்துடன் பெற வேண்டும் என்று வழிப்படுத்துகிறார் (755).



இன்பம் என்றால் என்ன? அதன் வாயில் என்ன? 'அறத்தான் வருவதே இன்பம்'. அறம் என்கிற சமுதாய ஒழுங்கமைப்பு முறையின் மூலமாக முறையாக வருவது எதுவோ அதுவே இன்பம். மற்றவை புறத்தன்மை வாய்ந்தவை, புகழும் இல்லாதவை.

அறிவின்பம் (Happiness) உவகை (Joy) புலன்நுகர் இன்பம் (Pleasure) காமம் (Sexual love and pleasure) சுவை (Taste). இனிது (Sweetness) சமுதாய இன்பம் (Social Happiness) பேரின்பம் (Bliss) ஆகிய பல்வகை இன்பங்களைப் பேசும் திருவள்ளுவர், சமுதாய இன்பத்தையே மற்ற இன்பங்களைக் காட்டிலும் சிறப்பானது என்கிறார்.

ஒரு நாட்டின் குறிக்கோளைப் பற்றிக் குறிப்பிடும்போது அந்நாட்டு மக்களின் பொது இன்பமான சமுதாய இன்பம் முதன்மைப்படுத்தப்படுகிறது.

'தொடர் புடையவர் களிடம் செலுத்தும் கசிவுணர்ச்சியே அன்பு' என்ற குறுகிய வட்ட கருத்தியல் கோட்பாட்டை மாற்றி யமைத்து, மறுமலர்ச்சிச் சமுதாயத்திற் கேற்ற அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு; (72) என்ற புதிய மானுடத் தொடர்பைத் தருகிறார். சமுதாய இயைபு கொண்ட கூட்டிணைவு வாழ்க்கையை அமைப்பதற்கு மனித மனத்தினுடைய திறன்மிகு உறுப்பாகத் திகழ்வது அன்பு. அது எல்லோரிடமும் ஊடுருவிப் பாய்கிற, உள்ளத்திலிருந்து எழும் உந்துவிசை. 'யாக்கை அகத்து உறுப்பு அன்பு'(79).

சமுதாய ஒழுங்கமைப்புக்கு ஒத்த தனிமனிதனின் எண்ணம், சொல், செயல் யாவும் ஒழுக்கம். அவ் வொழுக்கம் ஒவ்வொரு குடிமகனுக்கும் உயிர் போன்றது. சமயங்களும் மற்ற ஒழுக்கவியல் நூல்களும் ஆன்மீக உயர்வை நாடி அதற்காக மனித ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றன. ஆனால் மறுமலர்ச்சியை நாடும் திருவள்ளுவர் ஒழுக்கத்திற்குப் பின்னரே ஆன்மீகம் என்கிறார். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' (131); 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' (138); ஒழுக்கமுடையவனே சமுதாய வழிகாட்டியாகத் தகுதியுள்ளவன் (415); அறிவுடையவர்கள் என்பவர்கள் ஒழுக்கம் வழுவாதவர்கள் என்ற புதிய கருத்துக்களை நாட்டுகிறார்.

'பண்பு' என்பது 'தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் தகைமை'. இது பண்புக்குப் புதிய இலக்கணம். கூரிய அரத்தைப் போல அறிவுக் கூர்மையைக் கொண்டவராயினும் மக்கட் பண்பு அற்றவர் மரத்தோடு ஒப்பர்(997); உலகியல் வாழ்வது பண்பால்; உலகு தங்குவது பண்பாளரிடம்; உலகு பாராட்டுவது-நீதி, அறம் புரியும் பொதுப் பண்பாளர்களை; பண்பின்றேல் உலகே மண்ணில் மூழ்கி மாய்ந்து விடும். புதிய மறுமலர்ச்சிச் சமுதாயத்தின் அடிப்படை 'மாந்தப் பண்பு' என வலியுறுத்துகிறார்.

எல்லாம் அவன் செயல்; 'அவனின்றி ஓரணுவும் அசையாது' என்ற ஆன்மீகக் கொள்கை அனை



வரிடமும் வலுப்பெற்றிருக்கிறது. ஆனால் அந்த தெய்வத்தாலே கூட ஆகாவிடினும், ஒருவனுடைய தளரா முயற்சி அதற்குரிய கூலியைப் பெற்றுத் தரும் என்ற புதிய மறுமலர்ச்சிக் கோட்பாட்டைத் தெளிவாக வலியுறுத்துகிறார்.

தெய்வத்தா னாகா தெனினும் -
முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (619)

உயிர், உலகு, இயற்கை ஆகிய வற்றின் தொடர்பினைப் பற்றி எழுந்த ஆராய்ச்சியே தத்துவம் என்ற ஒன்றையும் கூட்டி அதற்கும் மாந்தனுக்கும் மற்றவற்றிற்கும் உள்ள பிணைப்பை எடுத்தோதுவது சமயத் தத்துவம். இவ்விரண்டையும் கடந்து மாந்தனின் இறுதியான அகவளர்ச்சி நிலையை - அஃதாவது 'பேரா இயற்கையை' (பெயராத இயல்பை) அடையத்தக்க பல படி நிலைகளை விளக்குவது. திருவள்ளுவருடைய தனிமெய்யியல்.

அதில் உடல் - உயிர் தொடர்பு பேசப்படுகிறது. ஆன்மீகம் காட்டப்பட வில்லை. நெஞ்சத்தால் மெல்ல மெல்லத் துறக்கும் துறவு வலியுறுத்தப் படுகிறது. சன்னியாசம் கூறப்பட வில்லை. பகுத்தறிவின் பாற்பட்ட மெய்யுணர்வு காட்டப்படுகிறது. இறைவனை அடையும் ஞானம் விளக்கப்படவில்லை. செல்வம், உடல், இளமை ஆகியவைகள் நிலையற்ற வைகள். அவை அழியும் முன்பே சமுதாயத்திற்குப் பயன்படும் அரிய செயல்களைச் செய்து விடு என்ற சமுதாயக் கடமை கூறப்படுகிறது. உலகமே பொய் என்ற மாயாவாதம் பேசப்படவில்லை. அதில் புண்ணிய பாவங்களின் நுண்மைகள் இல்லை; யான் எனது என்னும் செருக்கறுப்பு பரிந்துரைக்கப்படுகிறது.

காமம், வெகுளி, மயக்கம் அகற்றி, துறவுள்ளம் கொண்டு, மெய்ம்மையை உணர்ந்து, அவா அறுத்து, இடையறா இன்பம் பெறுகிற பெயராத இயல்பான பேரா இயற்கையை அடையும் செந்நெறி காட்டப்படுகிறது. வீடு பேறு விளக்கப்படவில்லை. ஆம்! வாழ்க்கை மறுப்புக் கொள்கை வள்ளுவத்தால் மறுக்கப்படுகிறது. புதிய சமுதாயத் திற்கேற்ப 'வாழ்க்கை ஏற்புக் கொள்கை' திருவள்ளுவர் மெய்யியலின் உயிரோட்டமாகத் திகழ்கிறது.

"சமுதாயத்தின் கருத்தியல் வாழ்க்கையிலும், அரசியல், பொருளாதார வாழ்க்கையிலும் இனி ஏற்பட வேண்டிய மறுமலர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கூறுகளை வெளியிட்டார். ஆனால் தமிழகத்தின் வரலாற்று விபத்துக்களால், அவை ஏற்கப்படவில்லை"

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருடன்' என்ற தன்னுரிமை யற்ற அடிமையின் நடைமுறையே இந்தியப் பெண்ணின் வாழ்க்கை முறை. ஆணாதிக்கச் சமுதாயம் இன்றைய நடப்புநிலை. பழஞ் சாத்திரங்கள் வகுத்த பெண்ணடிமைக்



கொடுமையினையும். அவற்றின் எச்சங் களாக இன்றைய சமுதாயம் ஏற்றுள்ள ஆணாதிக்க நிலையினையும், பரத்தமை என்கிற சமூக இழிவினை யும் தகர்த்தெறிந்து ஆண் - பெண் இருபாலருமே சமம் என்கிற புதிய சமுதாய மறுமலர்ச்சிக் கோட்பாட்டை முன் வைக்கிற முதல் நூல் திருக்குறள். பெண்ணை 'வாழ்க்கைத் துணை' என முதன் முதலாக விளித்த, 'பெண்ணே பெருமையுடைத்து'(90) எனப் பொருட்பாலில் கூறி, 'பெண்ணின் பெருந்தக்கது இல்' (1137) என்று காமத்துப்பாலில் முடித்துச் சொல்லிப் பெண்மையைச் சமூகக் கோயிலின் கலசமாக ஆக்குகிறார், திருவள்ளுவர்.

'கற்பு' என்பது இன்றைய சமுதாயக் கருத்தியல் கண்ணோட்டத்தின் விளங்கா நெறிமுறையாக உள்ளது. கற்பைத் தெய்வீகமானது என்று புகழ்ந்து கூறிக் கணவன் இடுகிற அனைத்துக் கட்டளைகளையும் அதன் நல்ல - தீய விளைவுகளைக் கருதாமல் நிறைவேற்றித் தனக்கென்று ஒரு மனமோ; உணர்வோ உரிமையோ விருப்போ இல்லாமல் தன்னைத் தானே ஒரு வகையான உளவியல் சிறைக்குள் ஆட்படுத்திக் கொண்டு, கணவன் மேல் செலுத்தக் கூடிய மூடபக்தியே 'கற்பு' என்று கருதப்படு கிறது. ஆணின் வல்லாண்மையை நடுவமாக வைத்துச் சுழல்வதே இவ்வகைக் கற்பு நெறி.

ஆண் - பெண் சமனியத்தை அடிப் படையாகக் கொண்ட மறுமலர்ச்சிச் சமுதாயத்தைப் படைக்க விரும்பிய திரு வள்ளுவர் 'கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்' (54) என்ற புதிய கருத்தைத் தருகிறார். அஃதாவது கற்பு என்பது பெண்ணின் 'விருப்பார்வச் செயல் திறனான மனத் திண்மை', வெறும் மூடபக்தியல்ல. பெண்ணுக்குத் திண்மையை வலியுறுத்திய திரு வள்ளுவர் ஆணுக்குச் 'சால்பு' என்ற திண்மையை விதிக்கிறார். 'சால்பு' என்னும் திண்மை உண்டாகப் பெறின்; (989) என்கிறார். 'பிறன்மனையை நோக்காமையைப் பேராண்மை' என்றும், பொருட் பெண்டிரை நயவாதிருத்தலை ஆணின் சமுதாயக் கடமையென்றும் உணர்த்துகிறார். அன்பு, குணநலன், தீச்செயல்களைச் செய்ய நாணுதல், சமனியத்தை அறிதல் (ஒப்புரவு) கண்ணோட்டம், வாய்மை, கெழு தகைமை, நடுவு நிலைமை, மன நலம், கொல்லாமை, பயனில சொல் லாமை. குடிமை, பணிவுடைமை, இன்னா செய்யாமை, தன்முனைப்பு அழிதல், நல்லவை யெல்லாம் தம் கடமைகளே என்று கருதுகிற மனப்பான்மை, பெயராத இயல்பு போன்ற ஏறத்தாழ 20 சமுதாயப் பண்பாக்கங்களை உள்ளடக்கிய சால்பினை ஆண்மகன் பெற்றுத் திகழ வேண்டும் என்ற மறுமலர்ச்சி நியதியைத் திருவள்ளுவம் விதிக்கிறது.

'பெண்மை' என்பதற்குத் திருக் குறளில் புதிய விளக்கம் தரப்படுகிறது. அந்த விளக்கம், நடைமுறைப்படுத்து வதற்கேற்ற இயல்பினைப் பெற்றுள்ளது. நுகர்ச்சிப் புலங்கள் (1101); அழகு - மகிழ் செய்தல் (1081, 1090), உயிர்க்காதல் (1298); காதற் செறிவு



(1110); பாலுணர்வு அடக்கம் (1137), நாணம் (981,1089, 1162, 1163,1247, 1251, 1255, 1297), திண்மை என்னும் கற்பு (54), தற்காப்பு, தன்கணவனைப் பேணல், குடும்ப - சமுதாயக் கடமை ஆற்றிப் புகழ்ச் சொல் காக்கும் பெருமை, சோர்வின்மை (56), இல்லற மாண்புடைமை, கணவன் வளத்துக் குரிய தகுநிலை (51), மனைமாட்சி (52), சிறு தெய்வங்களைத் தொழாமை, கணவனைப் போற்றிப் பொருந்தி வணங்கி உயர்வடைதல் (55), நன்மக்கட் பேறு (60), தாய்மை(69) போன்ற பண்புகளும், செயல் திறன்களும் ஒருங்கே அமைந்து 'இல்வாழ்க்கைத் துணையாகத்' திகழ்கிற நிறைவுடை மையையே சமுதாய மறு மலர்ச்சிக்கான 'பெண்மை'யெனத் திருவள்ளுவர் புலனறிவிக்கின்றார்.

நாட்டைத் துறந்து, காட்டைத் தேடி ஓடி, இறை அருளை நாடிப்பெறுவது தான் 'தவம்' என்று இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய சமுதாயத்தின் இக்கருத்தியல் நிலைக்கு மாறாக, தவத்தை இல்வாழ்வின் சமுதாயப் பகுதியாக்கி, ஓர் பயன்பாட்டுத் தத்துவமாக (Utilitarian Philosophy) உருவாக்கித் தருகிறார், திருவள்ளுவர்.

ஒருவன் சமுதாயத்திற்கு இடுக்கண் ஏதும் செய்யாமையையும், தனக்கு வந்துற்ற துன்பத்தை ஏற்றுப் பொறுத்தலையும் தவம் என்கிறார்.

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண்
செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

சமுதாயத்தில் வறுமையாளர் பல்கிப் பெருகிப் போனதற்குக் காரணங்கள் இரண்டு. சமுதாயத் திற்குத் தீங்கிழைக்காமல் தம் கடமைகளை ஆற்றுவோரும் - தமக்கு வந்துற்ற தனித் துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவருமான - தவம் செய்பவர்கள் மெல்ல மெல்லக் குறைந்து சிலராகத் தேய்ந்து விட்டனர். அடுத்து ஆசை என்னும் தன்னலத் தேட்டத்திற்கு ஆட்பட்டுச் சமுதாயத்திற்கு அவம் செய்பவர்கள் பலராகப் பெருகிவிட்டனர். எனவே இவர் பலராகிவிட்டனர்.

'வாய்மை' என்பதைத் தனிமனிதன் சமுதாய ஆக்கப் பண்பாகத் திரு வள்ளுவம் விளக்குகிறது. உள்ளதை உள்ளபடி கூறல் உண்மை. ஆனால் அதனைக் காட்டிலும் சிறப்பானது 'வாய்மை'. எந்தவொரு சமுதாயத் தீமையையும் பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மை. சமுதாயத் திற்குக் குற்றம் நீங்கிய நன்மையைப் பயக்குமாயின் பொய்ம்மை கூட வாய்மை நிலை கொண்டது, என்ற சமுதாய நலனை உரைகல்லாக வைத்துப் பதிய கோட்பாடு 'வாய்மையாக' விளக்கப்படுகிறது.

'ஊழ்' என்பது விதியல்ல; உலகத்து இயற்கை. ஊழ் உலகத்தியற்கை. உலகச் சூழல் (Natural Circums tances), உலக நியதி (Order of Nature), இயல் நிகழ்ச்சி (Natural Phenomenon) போன்றவற்றைக் குறிக்கும். அது அனைத்துக் காரண - காரிய விளைவுகளின் தொகுப்பு. மாந்த முயற்சிக்கு எந்த அளவில் ஊழ் (உலக



இயற்கை) துணை புரியும் அல்லது துணை புரியாது என்பதை விளக்குவதே திருவள்ளுவருடைய இயற்கையில் ஊழ்க் கோட்பாடு. அது சமயவாதிகளின் 'விதிக் கொள்கைக்கு எதிராகத் தரப்பட்டது.

ஒருவனுடைய சமுதாயத் தகுநிலை 'பெருமை' (Social Status) எனப்படுகிறது. ஒருவனின் சமுதாயத் தகு நிலைக்கு அவனுடைய பிறப்போ, செல்வமோ, தொழிலோ காரணமாகா. மாறாக அவனுடைய சமுதாயத் தகுநிலையை அளக்கும் அளவுகோல், அவன் செய்யும் பணியின் செயற் பாங்கு. அவன் திண்மையான ஒழுகலாறு. மேல் தட்டில் இருப்பவர் களெல்லாம் மேன்மையுடையவர் அல்லர்; கீழ்த் தட்டில் இருப்பவர்கள் எல்லாம் கீழ்நிலையில் உள்ளவரல்லர். மாறாக அரிய செயல்களைச் செய்வதிலும், பணியிலும், பண்பிலும், மேன்மை நிலை பெற்றவர்களே மேலானவர்கள். அவற்றில் கீழ்மை பெற்றவர்கள் கீழானவர்கள் என்ற புரட்சிக் கோட்பாடு வள்ளுவத்தில் முதன் முதலாக இடம்பெறுகிறது.

'உழைப்பை' உயர்வாகக் கருதாமல், 'கூலிக்காக விற்கப்படும் ஒரு பொருள்' என்று இன்றைய சமுதாயத் தால் கருதப்படுகிறது. ஆனால் உழவே தலை; உழவின் நிழலில் அரசும் தங்கும்; உழுபவர் உலகத்தார்க்கு அச்சாணி; உழைப்பவர் நாட்டின் அடிப்படைக் கூறு; 'வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்' என்ற மறு மலர்ச்சி வித்துக்கள் சமுதாய நிலத்தில் விதைக்கப்படுகின்றன.

'ஈகை' என்பது இரப்பவர்களுக்கு மட்டும் தருவது அன்று. வறியவர் களுக்கு பொருந்துவனவற்றைத் தாமே வலியச் சென்று தருவதாகும். 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'. அதன் வழிச் சமுதாய மேடு பள்ளங்கள் நிரவப்படுகின்றன.

'நாணம்' என்பது தீச்செயல்களைச் செய்ய நாணுவது. சமுதாயத்தில் தம்மை ஒத்த பிறர் நாணத்தக்க வைகளைத் தான் செய்வதற்கு நாண வேண்டும். இன்றேல் சமுதாய ஒழுங்கு முறையான அறம் நாணி விடும் (118). சமுதாயச் சமத்துவத்தை நிறுவ நாணத்திற்குப் புதுவிளக்கம் தரப்படுகிறது.

இன்றைய சமூகத்தில் தனியுடைமை கோலோச்சுகிறது. தன்னலம், வாழ்க்கையின் வழி மறையாக்கப்பட்டு விட்டது. ஆனால் சிறந்த பண்புகள், குணநலன்கள் தவிரப் பொருளைத் தனியுடைமையாக்கிக் கொள்ள வேண்டுமென்று திருவள்ளுவம் எங்கும் கூறியதில்லை. 'உள்ளம் உடைமை உடைமை'. செயல் செய்யும் உள்ளக் கிளர்ச்சியான ஊக்கமே ஒருவனது தனியுடைமை.

தமது மக்கள் பெற்ற பேரறிவும் கூடச் சமுதாயத்திற்குப் பயன்படுவதற்காகவே யல்லாமல் தமக்கு மட்டுமே பயன்படுவதற்கன்று (68). தம்முடைய மக்கள் பொருள் அவரவருடைய செயல் களாலேயே அவனுடைய மக்களுக்குச் செல்லா.

பிறருக்குரிய பங்குப் பொருளைச் சுரண்டாதே. அதனை வெஃகாதே. பிறன் பங்குப் பொருளால் கிடைக்கும் ஆக்கத்தை விழையாதே. நாட்டுச்



செல்வம் குறைவுபடாமல் இருக்க வேண்டுமெனில் பிறர்க்குரிய அடிப் படைக் கைப்பொருளை விரும்பாதே. வஞ்சனையால் பொருளைச் செய்யாதே. அறவினை ஓவாதே செயல் செய்க; அறம் செய்க; செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை; செய்ய பொருளை (Produce Wealth). ஆனால் செல்வத்தைச் செய்யாதே. அஃதாவது செல்வத்தை ஈட்டாதே. இவையெல்லாம் வெறும் அறக் கருத்துக்கள் மட்டுமல்ல. மறுமலர்ச்சியை நிறுவுவதற்குரிய மாண்புடைய வழி வகைகள்.

இன்றிருக்கும் சமூக ஏற்றத் தாழ்வுகளைப் - பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை முற்றாகக் களைய வேண்டும் என்பதே திருவள்ளுவம் வகுக்கும் அடிப்படை மறுமலர்ச்சிக் கோட்பாடு.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூடாது. செய்யக் கூடிய தொழில் வேறுபாட்டின் அடிப்படையில் சிறப்புத் தருவதும் தகாது என்ற சமுதாய சமனியமும் பொருளியல் சமனியமும் வலியுறுத் தப்படுகின்றன.

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம்
வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. (1012)

உணவும் உடையும் மற்ற உலகத்தில் எஞ்சிய அனைத்தும் மாந்தர்க்குப் பொதுவானது; வேறு வேறானது அல்ல. அதாவது அவற்றில் வேறுபாடுகள் கூடாது. ஆனால் மனிதனுக்கு மனிதன் சிறப்புநிலை பெறுவது ஒருவன் தீச்செயல்களைச் செய்வதற்கு நாணம் கொள்வதிலே தான் அடங்கியுள்ளது.

ஒருவனுடைய உழைப்பால் உரு வாக்கும் பொருளெல்லாம் அவனுக்கு மட்டுமே உரிய தன்று. தக்கவர்களுக்கு பயன்படுவதன் பொருட்டேயாம்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாந்
தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.
(212)

ஒப்புரவு என்ற 'சமநிலை அறிதலை' பொருளியல் மறுமலர்ச்சியின் முதல் கோட்பாடாக அமைக்கிறார் திருவள்ளுவர்.

ஒப்புரவு என்பது பொருட் சமத்து வத்தை உருவாக்கும் நெறிமுறை. சமதாய மறுமலர்ச்சிக்குரிய கைம்மாறு வேண்டாக் கடப்பாடு' (211).

பொருளின் தனியுடைமைத் தன் மையை மாற்றிச் சமுதாயத் தன் மையைப் பெறவைக்கும் முதல் நிலையையே 'ஒப்புரவு, விளக்குகிறது. உலகு அவாம் பேரறிவாளன், நயனு டையான், பெருந்தகையாளன், சீருடைச் செல்வர் ஆகியோரிடம் செல்வம் சேர்ந்தால் அச்செல்வத்தின் உடைமை மட்டுமே அத்தகை யோரிடம் இருக்கும். ஆனால் அச்செல்வத்தின் முழுஉரிமையும் சமுதாயத்திற்கே உரித்தாக்கப்படும். ஊருணியில் (ஊர்க் குளத்தில்) நீர் நிறைந்தது போல, உள்ளூர் மரம்



பழுத்தது போல, மருந்து மரத்தைப் போல, தனிமனிதச் செல்வம் பொது மக்களுக்கு உரியது. இப்பொருளியல் சமன்மையை அறிந்து ஏற்பவன் தான் சமுதாய உறுப்பினனாக வாழத் தகுந்தவன். அதனை ஏற்காதவன் உயிரோடு உலவினாலும் செத்தவனே.

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான்
மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (214)

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற புதியதொரு மறுமலர்ச்சிச் சமுதாயமே திருக்குறளின் இறுதிக் குறிக்கோள். அதன் அடிப்படையான பொருளியல் கொள்கை 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல்
நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.
(322)

நாட்டின் அனைத்துப் பொருளைப் பகிர்ந்து துய்த்தலும், அதன் வழிப் பல்லுயிர் ஓம்புதலும் திருவள்ளுவர் தருகிற கூட்டுடைமையின் இரட்டைக் கொள்கைகள். சமுதாயத்தில் வாழும் பல்லுயிர்களும் ஓம்பப்பட வேண்டும். அதற்காகச் சமுதாயப் பொருள் பகுக்கப் பட்ட வேண்டும். அதன் பின்னர் ஊண், உடை, உலகத்தில் எஞ்சிய அனைத் தும் பொதுவாக்கப்பட வேண்டும். இக்கூட்டுடைமைக் கொள்கையைச் செயற்படுத்தும் அதிகாரம் அரசுக்குத் தரப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சியை விளைவிக்கிற திருவள்ளுவருடைய 'அரசு' நால் வகையான வன்மை நிறை பொரு ளியல் அதிகாரங்களைக் கொண்டு இயங்கும்.

இயற்றலு மீட்டலுங் காத்தலுங்
காத்த
வகுத்தலும் வல்ல தரசு (385)

மனித உலகம் உண்டும், முகர்ந்தும், துய்த்தும், மகிழ்ந்தும் வாழ் வதற்குரிய அனைத்துப் பொருள்களை உற்பத்தி செய்தலும்; அப்பொருள் களையும் வரி, சுங்கம் முதலான உல்கு பொருளையும், அரசுக்குரிய பொருளையும் சமுதாய எதிரிகளிட மிருந்து பெறும் பொருளையும் ஈட்டுதலும்; அவற்றை மறுஉற்பத்தி பெறும்வரை முறையாகக் காத்தலும்; காத்தவற்றை, நாட்டு மக்களின் பொது நலனுக்கு ஏற்ற வகையில் வகுத்துப் பகிர்ந்து அளித்தலும்; அரசின் வன்மை மிகுந்த நால்வகைப் பொருளியல் அதிகாரங்கள்.

ஆட்சிமுறைக்குரிய அறத்தினின் றும் பிறழாமல், அறமற்ற அனைத் தையும் நீக்கி, வீரம் குறைவு படாமல், நாட்டின் மானத்தையும் காக்கும் வகையில் அரசு செயல்பட வேண்டும்.

மறுமலர்ச்சியை நோக்கிச் செல்லும் புதிய அரசு முழுமையான இறை மையைத் (Sovereignty) தன்ன கத்தே பெற்றிருத்தல் வேண்டும். அந்த அரசு செயற்படுத்த வேண்டியவை யாவன: உறுபசி தீர்த்தல், ஓவாப்பிணி அகற்றல், மக்கள் தம் உயிர் உடைமைகளைக் காத்தல், நாட்டுச்



செல்வத்தைப் பேணி வளர்த்தல், உற்பத்தியைப் பெருக்கல், நாட்டை வளமுடையதாக்கல், கேடுகளகற்றிப் பொருள்வளத்தை மேம்படுத்துதல், அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவைப் பெறுதல், சமூக இன்பத்தைத் தருதல், சமனியச் சமுதாயத்தை நிறுவுதல்.

நாட்டின் விளைபொருளும், தாழ்வற்ற செல்வமும், அவற்றை இயற்றுகிற மூளை மற்றும் உடல் உழைப்பாளர்களும் அந்நாட்டின் அடிப்படைக் கூறுகள். அந்நாட்டிற்கு ஓர் சிறப்பான வலிமையுள்ள 'வேந்து அமைவு' அல்லது 'ஆட்சி அமைப்பு' (Constitution) வேண்டும்.

அந்த அரசிற்குப் படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, அரண் (காப்பு) ஆகியவைகள் உடைமைகள்.

திருவள்ளுவர் வகுக்கும் மறுமலர்ச்சிச் சமுதாயத்தில் ஒரு நாட்டின் மக்களும் அதன் பொருளும் அரசின் உடைமைகள் ஆகின்றன. செம்மையான சமநீதி வழாங்கும் ஆட்சியின்றேல் அந்த நாட்டரசு தன் உடைமைகளான குடிமக்களையும் நாட்டுச் செல்வத்தையும் இழந்துவிடும்.

"இன்றைய சமூகத்தில் தனியுடைமை கோலோச்சுகிறது. தன்னலம், வாழ்க்கையின்வழி மறையாக்கப்பட்டு விட்டது. ஆனால் சிறந்த பண்புகள், குணநலன்கள் தவிரப் பொருளைத் தனியுடைமையாக்கிக் கொள்ள வேண்டுமென்று திருவள்ளுவம் எங்கும் கூறுவதில்லை."

கூழுங் குடியு மொருங்கிழக்குங் - கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. (554)

ஆட்சி வேறு, ஆட்சித் தலைமை வேறு. ஏந்திய கொள்கையார் சீறி எழுந்தால் ஆட்சியும் அழியும் ஆட்சித் தலைமையும் மாயும். எனவே அரசு, 'நாள்தோறும் நாடி முறை செய்ய வேண்டுமென்கிற அரசக் கடமையை தெள்ளிதின் விளக்குகிறது திருவள்ளுவம். இன்றேல் நாடே அழிந்து விடும். குடிமையத் தழுவிய ஆட்சியும், அந்த ஆட்சியைத் தழுவிய குடிகளும்' திருவள்ளுவரின் மறுமலர்ச்சி அமைப்புகள். ஓர் அரசுக்கு ஏற்ற குடிகளே அமைவர். அக்குடிகளுக்கு ஏற்ற அரசே அமையும். அரசின் இறுதி அதிகாரம் குடிமக்களிடமே உண்டு.

நாட்டின் குடிமக்களை, வெறும் பொதுமக்களாகப் படைக்காமல், அறிவு நிறைந்த, விழிப்புணர்ச்சி பெற்ற, குடிமைக் கடமைகளை ஓம்புகிற சிறந்த குடிமக்களாகப் படைக்கிறது திருவள்ளுவம். நடுவுநிலைமை, நாணம் ஒழுக்கம், வாய்மை, முகமலர்ச்சி, இன்சொல், ஈகை, இகழாமை, குன்றுவசெய்யாமை, பண்புடைமை, பணிவு, அன்புடைமை, சால்பில் (வஞ்சனை) செய்யாமை, இல்லாண்மை என்கிற நாட்டுப்பற்று, கடுமுயற்சி ஆகிய குணநலன்களையும் செயல் திறன்களையும் குடிமக்களுக்கு விதிக்கிறது திருவள்ளுவம்.

இவ்வாறாக 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இறுதிச் சமுதாயத்தை நோக்கித் திருவள்ளுவம் நடைபோடு கிறது; அதற்குரிய பல மறுமலர்ச்சிக் கோட்பாடுகளைத் தெள்ளிதின் வகுத்தளிக்கிறது.



பாடுகளைத் தெள்ளிதின் வகுத்தளிக் கிறது.

ஆனால் தமிழகத்தினுடைய வர லாறு இடையில் வெட்டுண்டு போய் விட்டது. நிலையாமைக் கருத்துக்கள், நீங்காத சமயத்தாக்கங்கள், நெறி பிறழ்ந்த சமுதாய அமைப்புகள், சாதியக் கொடுமை, ஏற்றத் தாழ்வைப் படைக்கும் பொருளியல் முறை, பழை மையைக் கட்டிக்காக்கும் அரசுகள் இப்படி எத்துணை எத்துணையோ தமிழக வரலாற்றின் விபத்துக் களாகிவிட்டன. திருவள்ளுவத்தின் அடிப்படையில் மறுமலர்ச்சியைத் தோற்று விக்கத்தக்க 'வரலாற்றின் உந்துவிசை' இன்று வரை தமிழகத்திற்குக் கிட்டவே யில்லை. தமிழக வரலாறு, புதிய திருப்பத்தைச் சந்திக்காமல் பழைய நிலையிலேயே தேங்கி விட்டது. விளைவு? திருவள்ளுவர் விதைத்த மறுமலர்ச்சி வித்துக்கள், சமுதாய மணலில், வெறும் வீரிய வித்துக்களாகவே பயனின்றிப் புதையுண்டு போய் விட்டன. வெடித்து முளைவிட வில்லை. தழைக்கவுமில்லை. உரையாசிரியர்களாலும் சமயக் கணக்கர்களாலும் திருவள்ளுவம் திசை திருப்பப்பட்டது. அதன் உள்ளுறு பயன்மதிப்புகள் (Values) செயல் வடிவம் பெறவில்லை. மறுமலர்ச்சி காட்டும் மெய்யான வள்ளுவம் வெளிப்படவேயில்லை.


இன்றைய முதல்நிலைத் தேவை, மெய்யான வள்ளுவத்தை முறை யாகக் கண்டறிதல்; அடுத்து அதனை நடைமுறைப்படுத்துதல். தொல் பழங்காலத் தமிழர் மட்டுமல்ல; காதலையும் வீரத்தையும் போற்றிய சங்ககாலத் தமிழர்களும், சமயங்களில் சரணடைந்து விட்ட இடைக்காலத் தமிழர்களும்; ஏன், இன்றைய புதுமைத் தமிழர்களும் கூட வள்ளுவத் தால் மறுமலர்ச்சியைப் படைத்துக் கொள்ள முடியும்.

காவிரிக் கரையோரத்தில் வாழ்கிற ஒரு சின்னஞ்சிறு சமுதாயம் மட்டுமே வள்ளுவத்தால் மறுமலர்ச்சிகளைப் பெறும் என்று கருதற்க. கங்கைச் சமவெளியிலும், சிந்துநதி தீரத்திலும், அமேசான் காடுகளிலும், பனித் துருவப் பகுதிகளிலும், பல்வேறு உலகப் பகுதிகளிலும் வாழும் மாந்தக் கூட்டங்கள் மெய்யான வள்ளுவத்தை நடைமுறைப்படுத்தினால் உரிய மறுமலர்ச்சியைப் பெற்றுத்திகழும்.

✸✸

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.





'திரு.வி.க.பார்வையில் திருக்குறள்'

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' - திருமூலர்.

திருவள்ளுவர் பிறப்பு வளர்ப்பு முதலியவற்றைப் பற்றிய உண்மை வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. அவரது வரலாறு பலவாறு பகரப்படுகிறது. இந்நாளில் வழங்கிவரும் அவர்தம் வரலாறுகளெல்லாம் புனைந்துரைகளே. திருவள்ளுவர் தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்தவர் என்பதும், இல்வாழ்க்கையில் நின்று ஒழுகினவர் என்பதும், மக்களை ஈன்றவர் என்பதும், தெய்வப் புலவர் என்பதும், அறவோர் என்பதும் அவர் அருளிய நூலால் இனிது விளங்குகின்றன.

நாடும் நூலும்

திருவள்ளுவர் தமிழ் நாட்டில் தோன்றியவர்; திருக்குறள் என்ற நூலை யாத்தவர். இங்கே அவர் தோன்றிய நாட்டுக்குச் சிறப்பளிப்பதா? அல்லது அவர் யாத்த நூலுக்குச் சிறப்பளிப்பதா? நூலுக்குச் சிறப்பளிப்பதே சால்பு. ஏன்? திருக்குறள் தமிழ்நாட்டுக்கு மட்டும் பயன்படுவதாய் அமையவில்லை. அஃது உலகுக்குப் பயன்படுவதாய் அமைந்துள்ளது. நாட்டினும் உலகம் பெரிதன்றோ?

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை ஈன்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. இது குறித்துத் தமிழ் மக்கள் இறும்பூதெய்தலாம்; இறுமாப்படையலாம். ஆனால் திருவள்ளுவரைத் தமிழ்நாட்டளவில் கட்டுப்படுத்தலாகாது. அது தளையாகும்; சிறையாகும்.

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை உலகவர் என்று கோடலே சிறப்பு. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து - வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியதும் ஈண்டுக் கருதற்பாலது.

உலக நூல்

திருவள்ளுவர் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும் பொருளும் காதலும் ஒரு வகுப் பார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ, ஒரு மொழியார்க்கோ, ஒரு நாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு-உலகுக்குப்-பொது. திருக்குறளில்-எழுவாய் முதல் இறுவாய் வரை-உலகு என்னுஞ் சொல்லும், பொதுமைப் பொருளுணர்த்தும் சொற்களும் சொற்றொடர்களும் தக்க இடங்களில் திகழ்கின்றன. இன்னோரன்ன குறிப்புக்கள், திருக்குறள் உலக நூல் என்பதை வலியுறுத்துவன.



தமிழ்நாடும் உலகமும்

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்த காலத்தில் தமிழ்நாடு உலகுடன் தொடர்புகொண்டிருந்ததா? இல்லை; பெரிதும் இல்லை. அக் காலத்தில் தமிழகத்தில் அவர் வாயிலாக உலக நூல் ஒன்று எவ்வாறு மலர்ந்தது?

நாம் வாழும் இவ்வுலகம் தோன்றிச் சுமார் இருநூறு கோடி ஆண்டு களாயின. முதல் ஒரு நூறு கோடி ஆண்டு இவ்வுலகம் அழற்பிழம்பாய், அனலாவியை உமிழ்ந்து கிடந்தது. பின்னே அது படிப்படியே தணியத் தொடங்கிற்று. அனல் தணிந்து தணிந்து, இப்போழ்து ஏறக்குறைய நாற்பது கல் தொலைவில் கனன்று கொண்டிருக்கிறது. தணிவு உற உற, ஆங்காங்கே, அனல் நின்று நின்று வெம்மை அலைகளைக் கொழித்துச் சென்றது. அலைகள் யாண்டும் ஒரே விதமாகக் கொழிக்க வில்லை; சில இடங்களில் வன்மையாய், சில இடங் களில் மென்மையாய், சில இடங்களில் இடைமையாய்க் கொழிக்கலாயின. வன்மை மென்மை இடைமைக் கேற்ற வண்ணம் நிலத்தில் தட்பவெப்பம் தவழும்.

அனல் முதல் முதல் தணியத் தொடங்கிய இடம் தமிழ் நாடு. இஃது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மை. தமிழ் நாட்டின் தட்ப வெப்ப நிலையோ வன்மையதும் அன்று; மென்மையதும் அன்று; இடைமையது. தமிழ்நாட்டின் முதன்மைத் தணிவும் தட்ப வெப்ப நிலையும் அதைப் பல வழியிலும் பண்படுத்தின. அதனால் தமிழ்நாட்டின் பண்பாடு தொன்மையதாயிற்று. முதன் மையும் தொன்மையும் வாய்ந்த பண் பாட்டில் உலக வாழ்க்கைக் கூறுகள் கருக்கொண்டன. கருக்கொள்ளல் இயல்பு. அக்கரு, தெய்வப் புலவராகிய திருவள்ளுவருக்குப் புலனாயிற்று. ஆகவே, அவர்பால் உலக நூல் ஒன்று மலர்ந்ததென்க.

திருக்குறளின் உயிர்ப்பு

திருக்குறளின் உள்ளக் கிடக் கையை பலபடக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று. அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது.

'உலகம் ஒரு குலம்' என்பது பழந் தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்த்த ஒரு பெருங் குறிக்கோள். அக்குறிக் கோள் திருவள்ளுவருள் படிந்து நின்று வளர்ந்து ஒரு சீரிய உலக நூலாயிற்று. அந்நூலின் உள்ளுறை நுண்ணிய தாய்ப் பல பேரறிஞரிடம் புகுந்து புகுந்து பல மொழிகளில் பரிணமித்தது. இவ் வாறு திருவள்ளுவர் கருத்துப் பெருகிப் பெருகி, இந்நாளில் விஞ்ஞானத்தில் விரவி மார்க்சியமாகவும், தெய்வி கத்திற் கலந்து காந்தியமாகவும் பரவியுள்ளது. விஞ்ஞான மார்க்சிய மும், தெய்விகக் காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக்கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நம் நாடு முற்பட்டால் உலகம் நலம்பெறும்.



உயிர்ப்பும் அரண்களும்

'உலகம் ஒரு குலம்' என்னுங் கொள்கை திருக்குறளின் உயிர்ப்பு. திருக்குறள், உயிர்ப்பை மட்டும் புலப்படுத்தும் அளவில் நின்றுவிட வில்லை. உயிர்ப்பு, செவ்விய முறை யில் இயங்கிப் பயன்படுதற்குரிய கருவி காரணங்கள், அரண்கள் முதலிய வற்றையும் திருக்குறள் வகுத்துள்ளது. அவற்றிடை நுண்மையதாய் இயங்கு வது உயிர்ப்பு, உயிர்ப்பை உணர்தற்கு உழைப்புத் தேவை.

அன்பு வித்து

'உலகம் ஒரு குலமாதல் வேண்டும்' என்று பேசுதல் எளிது; எழுதுதல் எளிது, பேச்சும் எழுத்தும் செயலாதல் வேண்டும். செயலை எழுப்ப வல்ல ஒரு கருவி வேண்டும். கருவி உளதா? உளது. அஃது எது? அஃது அன்பு. உலகை ஒரு குல மாக்குதற்கென்று அன்பு இயற்கையில் அமைந்துள்ளது. அவ்வன்பே வித்து. 'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு - என்புதோல் போர்த்த உடம்பு என்பது திருவள்ளுவர் வாய்மை.

வளர்ச்சி

அன்பு யாண்டு இல்லை? அது யாண்டும் உளது. அன்பில்லாத உலகமே இல்லை. அன்புண்மைக்கு அறிகுறி என்னை? வளர்ச்சி. வளர்ச்சி யற்ற உலகம் உண்டுகொல்! இல்லை. மலை, மரம், புள், விலங்கு முதலிய வற்றைக் கொண்ட அஃறிணை யுலகும் மக்களைக் கொண்ட உயர்திணையுலகும் வளர்ந்தே வருகின்றன. அவற்றை வளர்க்கும் பண்பு அன்பிடை மருவுகிறது. அன்பு நிகழ்த்தும் வளர்ச்சியே கூர்தல் - உள்ளது சிறத்தல் (Evolution) - என்பது. அன்புக் கூர்தல் புரியுந் திருவிளையாடலை எச்சொல்லால் சொல்வது! எவ்வெழுத்தால் எழுதுவது! கூர்தல்வழியே அன்பு, அஃறிணை யுலகை மெல்ல மெல்ல வளர்த்தும், பின்னே அதை உயர்திணையுலகாக்கி விரைந்து விரைந்து வளர்ந்தும் வரும் பான்மையை உன்ன ஓர் உள்ளம் போதுமோ?

மக்கட் பிறவி

அன்பு விரைந்து பெருகும் வாய்ப்பு மக்கட் பிறவிக்கு உண்டு. அதனால் அப்பிறவி விழுமியதென்று ஆன் றோரால் போற்றப் பெற்றது. மக்கள் பிறவி விழுமியதே. எப்பொழுது? அப்பிறவி தன்மாட்டுக் கெழுமியுள்ள அன்பு வளர்ச்சிக்குரிய வாய்ப்பை நன்முறையில் பயன்படுத்தினால் அது விழுமியதாகும். இல்லையேல் அது விழுமியதாகாது.

வாழ்க்கை கலை

அன்புவழி வாழ்க்கை வளர்தல் வேண்டும். அவ்வழி வளரும் வாழ்க் கையே பண்பும் பயனும் உடைய தாகும். பண்பும் பயனும் உடைய வாழ்க்கையே ஒரு கலை. அவ் வாழ்க்கைக் கலை அன்பிலே வளர்ந்து



உருக்கொள்வதென்பதை மறத்தலாகாது. வாழ்க்கைக் கலையே மற்றக் கலைகளின் தாயகம்.

திருவள்ளுவர் நெறி

வாழ்க்கைக் கலையை உலகுக்கு உதவினோர் பலர். அவருள் குறிக்கத் தக்க பண்டைச் சான்றோர் ஆதிமனு, அரிஸ்டாட்டல், திருவள்ளுவர் முதலியோர். ஆதிமனுநெறி செவ்வனே செழித்துவந்தது. இடைநாளில் மனு என்ற பெயரால் தோன்றிய சிலர் பழைய செந்நெறிக்குக்கேடு சூழ்ந்தனர். அவரால் பிறப்பில் உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, தீண்டாமை, கண்மூடி வழக்கங்கள் முதலியன கற்பிக்கப் பெற்றன. அவை தூறுகளாய்ச் செந்நெறியை மறைத்தன. இவ்வாறு ஆதிமனுநெறி குலைந்தது. அரிஸ்டாட்டல் வழியில் பொறாமை, நாட்டாசை, சுரண்டல், இகல், போர், கொலை முதலிய கொடுமைகள் மலியலாயின. இம் மலிவால் அரிஸ்டாட்டல் வழி இரத்த ஆறாகியது. திருவள்ளுவர் நெறியோ அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறத்தில் மாசு படிதல் அரிதன்றோ? அதனால் திருவள்ளுவர் நெறி சிதைவுபடவில்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.

அறத்தின் இயல்

திருவள்ளுவர், அறத்தை 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றும், 'அழுக்காறவாவெகுளி இன்னாச் சொல் நான்கும் - இழுக்கா இயன்ற தறம்' என்றும் விளக்கியுள்ளார். இஃது ஊன்றி ஊன்றி உன்னத்தக்கது. மனத்தின் முழுத் தூய்மையே அறம் என்பது திருவள்ளுவர் கருத்து.

முறைகள்

மனத்துக்கண் மாசிலா அற நிலையை எய்துதற்குத் திருவள்ளுவர் வகுத்த முறைகள் போற்றற்குரியன. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, அன்பு முதலிய அதிகார வைப்புமுறைகளை நோக்குக. அவற்றை நோக்க நோக்கத் திருவள்ளுவர் கோலிய அறநெறி புலப்படும்.

அன்பும் அறமும்

இல்வாழ்க்கையாலும், அதன் சார்புகளாலும் அன்பு எழுகிறது. அன்பு மனமாசைக் கழுவுங் கருவியாகிறது. மனமாசற்ற நிலையே அறம் என்பது. அறத்தை விளங்க வைப்பது அன்பு. இதற்கு விரிவுரை வேண்டுவதில்லை. திருவள்ளுவர் கண்ட நெறி, அன்பால் தெளிவுறும் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை உளங்கொண்டு, திருவள்ளுவர் அருளிய வாழ்க்கைக் கலையில் ஆழ்ந்து திளைத்தால், அஃது அன்புக் கலை - அறக்கலை - என்பது உறுதிப்படும். அக்கலை, உலகை ஒரு குலமாக்குந் தகைமையது என்று சொல்லலும் வேண்டுமோ?



முப்பால் நுட்பம்

திருவள்ளுவர் கலை முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. 'உலகம் ஒரு குலம்' என்பதற்குக் கால்கொள்ளும் இடம் காமத்துப்பால். அக்காலுக்கு உரம் அளிப்பது பொருட் பால். இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக் காப்பது அறத்துப்பால். மூன்றன் குறிக்கோளும் 'உலகம் ஒரு குலமாதல் வேண்டும்' என்பதே.

உரையும் ஆராய்ச்சியும்

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு உரை கண்டவர் பலர்; ஆராய்ச்சி வேய்ந்தவர் சிலர். உரையும் ஆராய்ச்சியும் காலத்துக்கேற்றவாறு பிறப்பன. இப்பொழுது புது உலகம் பூத்துவருகிறது. அதற்கேற்ற உரையும் ஆராய்ச்சியும் வேண்டும்.

திருக்குறள் ஒரு சுரங்கம்

திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக் கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப்போது வழங் கும் பெற்றியது. அதினின்றும் இது காறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ்வேளையில் திரண்டுவரும் புது உலகமும், இனித் திரளப்போகும் பல வகை உலகங் களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறட் சுரங்கம் வற்றாதது.

✸✸

மோசிகீரனார்

ஆண்பால் ஏழ்ஆ றிரண்டுபெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக - மாண்பாய
காமத்தின் பக்கம்ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு


காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாரும் நூறும் அதிகாரம் மூன்றுமாம்
மெய்யாய வேதப் பொருள்விளங்கப் - பொய்யாது
தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தாமரை மேல் அயன்

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்
பரந்த பாவால் என்பயன் வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை





நடைமுறை அறங்கள்

வ.சு.மாணிக்கம்

எவ்வகையாலும் முடிந்த அளவு பொதுத் தொண்டு செய்து கொண்டிருக்கவேண்டும்; எவ்விடத்து எவ்வளவு என்பதனை அவரவர் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது என்று வள்ளுவர் பொதுப்படச் சொல்லுவர்.

மக்களினம் பெருகி வரும் இக் காலத்தில் தொண்டுக்கு இடமும் பெருகியுள்ளது. பொருளிருந்து தொண்டு செய்யவேண்டும் என்பதில்லை. பொருளில்லாமலே எவ்வளவோ தொண்டுகள் செய்யலாம். மேலும் தொண்டுகளில் சிறியன பெரியன என்ற வேறுபாடும் இல்லை. வீதியிற் கிடக்கும் முள்ளினை, கண்ணாடித் துண்டினை, இலாடத்தைக் குனிந்து எடுத்து ஒதுக்குப் புறமாகப் போடுவது தொண்டில்லையா? கிடப்பது தெரிந்தும் எடுத்தெறியாவிட்டால், யார் காலிலாவது கண்ணாடித் துண்டு பாய்ந்தால் எவ்வளவு புண்பாடு ஏற்படும்? தீய விளைவை நோக்கும்போது, கண்ணாடித் துகளை அப்புறப்படுத்துவது பெருந்தொண்டல்லவா?

வீதிக்குழாயிலிருந்து தண்ணீர் விழுந்து கொண்டிருந்தால் அதனை அடைத்துத் தண்ணீரைக் காப்பது பொதுவாய் தொண்டு.

வீட்டில் கூட்டிய குப்பையை வீதியில் எறியாது, வீட்டுக் குழியில் போடுவதும், கொண்டு சென்று வீதித் தொட்டியிற் போடுவதும் ஊராயத் தொண்டு.

கண்டவிடங்களில் காறித் துப்பாமை, பொதுவிடங்களைக் கெடுக்காமை, சுவர்களில் கண்டபடி எழுதாமை, காம விளம்பரங்கள் ஒட்டாமை இவையெல்லாம் சிறியனவாகத் தோன்றினாலும் சிறந்த பொதுமைத் தொண்டுகளாகும்.

புகை வண்டிகளில் பிறர்க்கும் இடங்கொடுத்தல், முதியவர்க்கும் நோயாளர்க்கும் மிக்க இடவசதியளித்தல், பொருள்களை அளவாக எடுத்துச் செல்லுதல் எல்லாம் பொது நலங்களே.

விளம்பரப் பலகைகளில் மொழிப் பிழைகள் இருந்தால் அவற்றைத் திருத்துவதும் ஒரு பொதுத் தொண்டெனவே கருதவேண்டும். இங்ஙனம் பொது நலங்கள் பல யாரும் செய்யலாம். இவற்றைச் செய்வதற்குப் பணம் வேண்டுமா?

உயிராயத் தொண்டு என்பது யாரோ பெரியவர்கள் செய்ய வேண்டிய செயல் என்று மலைக்கவேண்டா ஒதுக்க வேண்டா. குடும்பக் கடமையும் பொதுத் தொண்டும் சேர்ந்து செய்ய முடியாது என்று தவறாக எண்ண வேண்டா.

தன் தோட்டத்தில் மரம் வைப்பது குடும்பக்கடன். தன் வீட்டுக்கு முன்னே பொது வீதியில் மரம் வைப்பது உலகக்கடன். தன் குழந்தைக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பது குடும்பக் கடன். தான் அதனோடு இன்னொருவர்



குழந்தையையும் உடன் வைத்தச் சொல்லிக் கொடுப்பது பொதுநலக் கடன். இவற்றைப் பெரியவர்களாகித்தான் செய்ய வேண்டுமா?

இவற்றைச் சிறிய பருவ முதல் செய்து பெரியவர்களாகக் கூடாதா? எப்பருவத்தினரும் எந்நிலையினரும் செய்யக்கூடிய பொதுநலங்கள் ஏராள மாக உள்ளன. இவற்றைச் செய் வதற்குப் பணம் தேவையில்லை, மனமே தேவை. அழைப்புத் தேவை யில்லை, உழைப்பே தேவை. அறிவு கூடத் தேவையில்லை; அன்பு கூடத்தேவை.

துன்பச் சுவை

எல்லோரும் வாழ விரும்பு கின்றோம். இருந்தாலும் சிலரே செம்மையான திறமையான ஆற்ற லான வாழ்க்கை நடத்தக் காண்கின் றோம். ஏன் போதிய முயற்சியில்லையா? போதிய விருப்பமில்லையா? போதிய அறிவு இல்லையா?

தக்க முயற்சியும் விருப்பமும் அறிவும் இருந்தாலுங்கூடப் பலரால் முன்னேற முடியவில்லையே. ஏன்? வள்ளுவர் கண்டுபிடித்த ஒரு காரணம்: எண்ணியது உடனே கைகூடா விட்டால் பலர் பெருஞ் சோர்வடைந்து விடுகின்றனர்.

ஓரிரு காரியங்கள் தோல்வியா னாலும் வாழ்க்கையே தோல்வி என்று மதிமயங்குகின்றனர். சிறிய ஏமாற்றங் களைப் பெரிதுபடுத்தி அவலப்படு கின்றனர். தம் ஆற்றலுக்கு மிகையான காரியங்களை மேலிட்டுக் கொண்டு வீணே அல்லற்படுகின்றனர்.

எண்ணிய பதவி கிடைக்கா விட்டாலும், பதவியுயர்வு கிடைக்கா விட்டாலும், பல்லாண்டு இருந்த பதவி இல்லையானாலும். எதிர் பார்த்த இலாபம் வராவிட்டாலும், இலாபக்குறி சிறிது குறைந்தாலும் பலர் மனம் நிலைகொள்ளவில்லை. வணிகத் திலும் பதவியிலுமேயன்றிக் குடும்ப வுறவுகளில் ஏமாற்றங்களும் எதிர்ப்பு களும் சோர்வுகளும் அலையலை யாக வந்து கொண்டிருக்கின்றன.

சுருங்கக் கூறின் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு மக்கள் ஏதோ ஒரு வகையில் சோர்ந்த வாழ்க்கையைத் தான் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இவர்களையெல்லாம் நன்றாக வாழுங் கள் என்று ஊக்கப்படுத்தம் நோக்கோடு, இடுக்கண் அழியாமை என்றே ஒரு புதிய அதிகாரம் கண்டார் வள்ளுவர்.

ஏன் ஒவ்வொருவரும் மனக் கலகலப்பாகவும் உடற் குதுகுதுப் பாகவும் இருக்கக் கூடாதா? நன்றாக வாழ்வதற்கு என்ன குறைவு? தேவை யின்றியும் காரணமின்றியும் சோர் வடைதல் என்பது மக்கட்குத் தீய பழக்க மாகி விட்டது. துன்பத்தின் உண்மை யான மெய்ம்மை என்ன?

இன்பம் விழையா னிடும்பை -
யியல்பென்பான்
துன்ப முறுத லிலன்.

எவனுக்குத் துன்பம் இல்லை? எவன் துன்பத்தை வாழ்வின் இயல்பு என்று விளங்கிக் கொள்கின்றானோ அவ்விளங்கிக்குத் துன்பம் இல்லை என்பர் வள்ளுவத் தோன்றல்.



நில வளர்ச்சிக்குக் குழி தோண்டு தலும் பள்ளம் பறித்தலும் வேண்டுமாப் போல், வாழ்க்கை வளத்துக்குப் பல் வகைத் துன்பங்கள் அடிக்கடி கட்டாயம் தேவை.

நுணுக்கிய வேர்முனைகள் எப்படியோ கற்களின் இடுக்கிற் புகுந்து துளைத்து மதில் மேல் இறுமாந்து நிற்கக் காண்கின்றோம். மண்ணிற் கிடவாமல் மதிலிற் கிடக்கின்றோம் என்று அவ்வேர்கள் உணங்கி விடுவதில்லை. வளரும் வழியைக் கண்டுபிடிக்கின்றன.

வண்டி மேட்டுப்பாதை ஏறும்போது தளராமல் காளைகள் மூச்சடக்கி மேலேறுகின்றன. வெள்ளத்தால் எறும்புக் குழிகள் மூடப்பட்டாலும் புதிய குழிகள் எறும்பினங்கள் உண்டாக்கிக் கொள்கின்றன. ஆதலின் இடையூறு கள் என்பவை உயிராற்றல்களை வேகமாக வெளிப்படுத்தும் வாழ்க்கைக் கூறுகள் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

துன்பத்தை வரவேற்க என்பது வள்ளுவர் அறிவுரை. வாழ்வு ஒளிபெற வேண்டு மாயின், புதுப்புதுத் துன்பங் கள் சுடச்சுட வந்து தாக்க வேண்டுமாம். பொன் ஒளிபெறுவது புடம் போடுவ தாலன்றோ என்று சுட்டிக்காட்டுவர்.

வெள்ளத் தனைய விடும்பை -
யறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும்.

பெரிய துன்பங்கள் வரட்டுமே! அவை மனிதனை என்ன செய்ய முடியும்?

துன்பம் இயல்புதானே என்ற மெய்யறிவு மனிதனுக்கு இருந்தால், துன்பத்தைக் கேவலம் துன்பம் என்று அஞ்சியோடாது, ஏதோ நன்மை செய்ய வந்த இன்பம் என்று எண்ண வேண்டுமாம். 'இன்னாமை இன்பம் எனக்கொளின்' என்று வள்ளுவர் துன்பத்தின் மெய்ம்மையை யார்க்கும் புரியவைத்துள்ளார்.

நாம் துன்பம் என்று நினைத்துக் கொண்டிருப்பன எல்லாம் உண்மை யில் துன்பங்கள் அல்ல. சிறு பொறுமை கூட இன்றி எதற்கும் துன்பப் பெயர் சூட்டுகின்றோம். சிறிது தொலை நடப்பதையும், ஒரு காரியத்துக்குக் காத்துக் கொண்டிருப்பதையும், கூட ஒரு மணி அரை மணி வேலை பார்ப்பதையும், குழாய்த் தண்ணீர் கொண்டு வருவதையும், கிணற்றில் நீர் இறைப்பதையும், சிறு சுமை தூக்கு வதையும், சிறு தாமதங்களையும் துன்பமெனப் பெருஞ் சோர்வு கொள்கின்றோம்.

கால்வாய் அலையைக் கடலலை யென மயங்குகின்றோம். வாழ்வின் துன்பம் என வருபவை மிகச் சிலவே. எது துன்பம்? எது அளவிறந்த முயற்சியைப் பெருக்குமோ, எது அறிவைப் பெருங் கூர்மையாக்குமோ, எது மனத்தைப் பண்படுத்துமோ, சுருங்கச் சொல்லின், எது வாழ்வை ஆலமரம் போல விரிவாக்குமோ அதுவே துன்பம் எனப்படும். அத்தகையை நல்ல இனிய துன்பம் கிடைப்பது வாழ்வுப் பேறு. ஆதலின் வாழ்வாங்கு வாழ விரும்பும் ஒவ்வொரு வரும் பொய்யான துன்பப்



போலிகளைத் தள்ளி, வளமான துன்பங்களை வரவேற்பார்களாக.

செயல் ஒழுக்கம்

மனிதப்பிறப்பு மிக உயர்ந்தது. அவ்வுயர்வுக்கு ஒரு காரணம் மக்கள் பேச்சாற்றல் பெற்றி ருப்பது. குயில் கூவுகின்றது, காக்கை கரைகின்றது, குதிரை கனைக்கின்றது, நாய் குரைக்கின்றது. கூவுதலும் கரைதலும் கனைத்தலும் குரைத்தலும் இன்ன இனம் என்று காட்டும் அஃறிணைக் குரல்களே. அக்குரல்களுக்குச் செய்திப் பொருளில்லை. மனித இனத்துக்கும் ஒரு தனிக் குரல் உண்டு. அக்குரல் ஒலிப்பது மட்டுமில்லை, பேசவும் செய்கின்றது.

மனிதன் ஏன் பேசுகின்றான்? தன் கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிப் பதற்காகப் பேசுகின்றான் என்று பொதுவாக நினைத்துக் கொண்டிரு கின்றோம். மொழியின் நோக்கம் கருத்துப் பரிமாறிக் கொள்வதன்று, காரியம் பரிமாறிக் கொள்வது. செய்தி தெரிவிப்பதற்காகப் பேசவில்லை. மக்கள் வாய் செய்தித்தாள் இல்லை. செய்தியைச் சொல்லிச் சிலகாரியம் முடித்துக் கொள்வதற்காகப் பேசுகின் றோம். இதுவே மொழியின் பயன்.

காரியம் முடித்துக் கொள்வதற்கும் பேச்சு வேண்டும் என்றால், அப்பேச் சுக்கு ஒரு நற்பண்பு வேண்டும். தண்ணீரானன்றி வெந்நீரால் பயிர் விளையாது. இன்சொல்லானன்றி வன்சொல்லால் காரியம் முடியாது.

நயனீன்று நன்றி பயக்கும்
பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

என்ற குறளால் பேச்சுக்குப் பண்பு வேண்டும்; பண்பு என்ற தடத்தினின்று பேச்சு என்ற நடை வண்டி விலகக் கூடாது என்று வலியுறுத்துவர் வள்ளுவர்.

பேச்சுப் பண்பு என்பது என்னை? பிறரை இகழாமை, இழிந்த சொற் களால் ஏசாமை. திருக்குறள் பல அறங் களைப் பலபட மொழிந்தாலும், எல்லா அதிகாரங்களிலும், குருதியோட்டம் போல் ஓடுகின்ற ஒரு பொதுவறம் உண்டு. அதுதான் பேச்சொழுக்கம். யாரிடத்துப் பேசினாலும் எந்நிலையிற் பேசினாலும் பணிவுடையன் இன் சொலனாதல் வேண்டும். இதுதான் நன்மனிதன் என்பது காட்டும் நாகரிக அடையாளம்.

நம் வாழ்க்கையில் நாள்தோறும் எவ்வளவு உரையாடுகின்றோம், எத்துணை மக்களோடு சொல்லாடு கின்றோம், எது எதற்கெல்லாம் பேச்சுத் தொடுகின்றோம். பாலும் பருவமும் வேறுபட்ட, மொழியும் நிலையும் வேறுபட்ட, அறிவும் அன்பும் உணர்ச்சியும் வேறுபட்ட மனிதகுலங் களோடு பழகுகின்றோம்.

நா என்னும் துடுப்பால் மொழி என்னும் நாவாயை ஓட்டிக்கொண்டு மனிதப் பெருங்கடலில் வாழ்வுக் கரைகாண மிதக்கின்றோம். மொழித் தெப்பம் நன் முறையில் புரையின்றி இயங்க வேண்டும் என்றால், வள்ளுவர் கூறுவதுபோல யார் மாட்டும் இன்புறும் இன்சொல் வேண்டும். பண்பற்ற பேச்சு படியற்ற இல்லத்தை யும் அடியற்ற உடலையும் ஒக்கும்.

மனிதவுறவு என்பது பேச்சுறவு. நண்பர்கள் தானே என்று நண்பர் களைக் கேலி செய்யக் கூடாது. பகை



வர்கள் என்றும் பகைவர்கள் அல்லர். ஆதலின் அவர்களையும் ஓயாது இகழ்ந்து சிறுசொல் சொல்லக்கூடாது. நண்பர்களை எஞ்ஞான்றும் நண்பர் களாக வைத்துக்கொள்ள வேண்டும். பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் முயற்சி வேண்டும். இதற்கு ஒரேவழி பேச்சில் இகழ்ச்சியின்மை.

நகையுள்ளு மின்னா திகழ்ச்சி - பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

கேலி செய்வோரை வெறுப்பது எவ்வுயிர்க்கும் பொதுக்குணம். ஆதலின் இழிசொல் சொல்லாதவர்க்கு மனிதவுறவு பெருகும், மனித நாட்டம் வளரும்.

இன்றைய நம் உலகம் பெரும் பகுதி பேச்சுலகம். பேச்சு முறை ஆட்சிமுறை யில் ஒன்றாகிவிட்டது. குழுக் குழுவாகக் கூட்டம் கூட்டமாக மனிதவுறவு செறிவடைகின்றது. கூட்டுறவும் நாட்டுறவும் பெருகுகின்றன. கருத்து வேற்றுமைகளும் கொள்கைப் பூசல் களும் எதிர் குதிராகின்றன. எழுத் தாலும் சொல்லாலும் இகழ்கலை கூத்தாடும்.

இந்நாளில் பேச்சொழுக்கம் பெரிதும் தேவைப்படுகின்றது. தன்னைப் பிறர் மதிக்க வேண்டும் என்ற ஆசை இல்லாதவன் உண்டா? அவ்வாசை நிறைவேறுவதற்கு ஒரே வழி இன்சொல்லால் தான் பிறரை மதித்தல். மதிப்பு என்பது மன்னாயத்தில் ஒரு வகைப் பண்டமாற்று. மதிப்புக் கொடுத்து மதிப்புப் பெறல் வேண்டும். அம்மதிப்பு என்பது நாவினைப் பொறுத்தது.

ஏனை உயிரினங்கட்கு உண்ணப் பயன்படும் நா மனிதனுக்குச் சொல்லவும் பயன்படுகின்றது. சிறுசொற் பேசிப் பிறரை வடுப்படுத்தும் கொடு நாவாக இல்லாமல் இன்சொல் மொழிந்து யாவரையும் அணைக்கும் செந்நாவாக விளங்கவேண்டும். நம்மிற் சிறியரையும் இகழக்கூடாது. நம்மைச் சின்னவன் என்று தூற்றிக் தூண்டிய போதும் இழிவுரை வரக்கூடாது.


தன்மதிப்பு என்பது தன் நாவின் மதிப்பு. தற்பண்பு என்பது தன் நாவின் சொற்பண்பு. தன்னுடைமை என்பது தன் நாவின் அடக்கமுடைமை. 'என் நாவிலிருந்து இழிசொற் பிறவாது. என நா எதிரியையும் இழிவு பேசாது. என் நா நிறத்தாலும் செந்நா; தரத்தாலும் செந்நா.' இதுவே உண்மை மனிதனின் உயர்ந்த குறிக்கோள். இஃது அரிய குறிக்கோளாயினும் தன் மனிதப் பிறப்பை மதிப்பவனுக்கு உரிய குறிக்கோளாகும்.

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

நாகாக்க என்பது பொய்யில்புலவர் முடிவாகக் கூறும் பெரிய எச்சரிக்கை. பிறரை இகழ நா வளையும்போது இவ்வெச்சரிக்கையை நினைவு கொண்டு அடங்குவோமாக.

✸✸





திருக்குறளின் இறுதிக் குறள் ஏது? ஏன்?

இரா.முத்துகுமாரசாமி
(முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், திரூர்)

உலகப் பொதுமறையான திருக்குறள் என்னும் நூலின் முதற்குறட்பா எது என்ற கேள்வியைக் கேட்போமானால் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று எளிதில் விடை அளித்து விடுவர். அப்பெருநூலின் இறுதிக் குறள் எது என்று அடுத்த கேள்வியைக் கேட்போமானால் பலருக்கு விடை கூறத் தெரியாது, அரசுப் பணி நேர்முகத் தேர்விலும் இக்கேள்வி கேட்கப் பெற்றுப் பதில் கூறத் தெரியாமல் பலர் இடர்ப்பட்டு பின்பு நூலைப் பார்த்து "ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம் கூடிமுயங்கப் பெறின்", என்று கூறுவர். அத்துடன் திருக்குறள் நூல் (அ) அகரத்தில் தொடங்கி(ன்) னகர மெய்யில் முடிவதாகவும் கூறுவர். பல அறிஞர் பெருமக்களும் இவ்வாறு கூறக் கேட்டுள்ளோம், எழுதப் படித்துள் ளோம். இக்கோள்வியைக் கேட்பவர் கூற்றும் பதில் அளிப்போர் கூற்றும் சரியானதா?

ஒரு நூலின் முதலடியின் முதல் கருத்து எவ்வாறு சிறந்ததோ அது போன்று ஒரு நூலின் முடிவில் இறுதியடியில் கூறப்படும் கருத்தும் சிறந்தது என்பதை மனதில் கொண்டு உரையாசிரியர்கள் இறுதி அதிகாரத்தில் ஏதாவது ஒரு சிறந்த குறளை நூலின் இறுதியில் வைத்தனர். அவ்வாறு வைத்த பழங்கால உரையாசிரியர்கள் பத்துப்பேருள் முதல் உரையாசிரியர் மணக்குடவர் ஆவார். சைனப் பெரிய ரான அவர் கி.பி.பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் திருக்குறள் நூலின் இறுதிக் குறள் ஆக, "புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ? நிலத்தொடு நீரியைந் தன்னார் அகத்து" என்பதை வைத்துள்ளார். அவரைப் பின்பற்றியே பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரிப்பெருமாள் என்ற உரை யாசிரியரும் அக்குறட்பாவையே இறுதியில் வைத்துள்ளார். பதி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த காலிங்கர் என்ற உரையா சிரியரும் அவ்வாறே இறுதியில் வைத்துள்ளார்.

ஆனால் மணக்குடவருக்குப் பின்பு வந்த பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரிமேலழகர் என்னும் உரையாசிரியர், 133 ஆம் அதி காரத்தில் மணக்குடவர் அமைப்பில் நான்காவதாக வந்துள்ள குறட்பாவை எடுத்துப் பத்தாவதாக இறுதிக் குறளாக வைத்தார். அவரைப் பின் பற்றியே அனைத்துப் பழங்கால, தற்கால



உரையாசிரியர்களும் திருக்குறளின் இறுதிக்குறள் "ஊடுதல்" என்று தொடங்கும் பாவே என்று முடிவு செய்து உரை எழுதினார்கள். அதனைத் தொடர்ந்தே பல அறிஞர்களும் விளக்கம் கொடுத்து ஆராய்ச்சிக் கருத்துக்களை எழுதத் தொடங்கினர்.

மணக்குடவர் பத்தாவதாக வைத்த குறளைப் பரிமேலழகர் தம் வைப்பில் மூன்றாவதாகக் கொண்டார்.

இவ்வாறு இருவேறுபட்ட கருத்தினர்கள் இருவகைப்பட்டு வெவ்வேறு குறட்பாவை இறுதிக் குறளாக வைத்தது ஏன்? எக்குறள் இறுதியானது? வள்ளுவர் எக்குறளைத் தம் நூலின் இறுதியில் வைத்திருப்பார்? இது இன்றுள்ள இலக்கியச் சிக்கல் ஆகும். இதனை அகச்சான்று புறச் சான்று கொண்டு தீர்க்க முயல்கிறேன்.

காமத்துப்பாலில் கூறப்பட்ட கருத்துக்களின் பிழிவு தலைவனும் தலைவியும் உடம்பொடு உயிரிடை அன்ன நட்புடையராய் (குறள் 1122), நிலத்தொடு நீரியைந் தன்ன அகத்தின ராய் (குறள் 1322) வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக (குறள் 50) மறுமையின் பத்தைப் பெற வேண்டும் என்பதாகும். வீடு பேற்றிற்கு, மறுமையின்பத்திற்கு உறைவிடம் புத்தேளிர் உலகு, அவ்வுலக இன்பப் பேற்றின் ஒரு சிறு கூறே இம்மை இன்பம். இவ்வின்பத்தில் மூழ்கி மறுமையின் பத்தை மறந்து விடக்கூடாது என்பதை அறிவுறுத்தவும் புத்தேணாடு ஒன்றுண்டு என்ற உண்மையைக் கூறவும், காம இன்பத்தோடு வாழ்க்கை முடிந்து விடவில்லை என்பதைத் தெளிவுபடுத்தவும், புத்தேள் நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் உணர்வைத் தூண்டவும் "புத்தேணாடு உண்டோ" என்ற சொற்றொடர் அடங்கிய குறட்பாவை, மறுமையின் பத்திற்குச் சிறப்பிடம் அளித்து மணக்குடவர், நூலின் இறுதியில் வைத்தார் என்று கருதலாம்.

பின்பு வாழ்ந்த பரிமேலழகரோ இம்மையின்பத்தை மட்டும் மனதில் கொண்டு காம இன்பத்திற்குச் சிறப்பிடம் தந்து, "மலிவும் புவலியும் ஊடலும் உணர்வும் பிரிவோடு புணர்ந்தது கற்பெனப்படுமே" என்ற தொல்காப்பிய இலக்கிய நெறியைப் பின்பற்றி "ஊடுதல்..." என்று தொடங்கும் குறட்பாவை நூலின் இறுதியில் வைத்தார். அகத்தியன், சிவன், குமரன் என்ற கடவுளர் பெயர்களின் இறுதி எழுத்தும் னகர மெய் தானே என்று கருதியும் சமயச் சார்பாகவும் சமய நோக்கில் பரிமேலழகர் அக்குறட் பாவை இறுதியில் வைத்தார் என்று கருதலாம்.

மணக்குடவர்க்குக் கிடைத்த திருக்குறளின் கைப்பிரதி நூலில் எக்குறள் இறுதிக் குறள் ஆக இருந்தது? திருவள்ளுவர் எக்குறட்பாவைத் தம் நூலின் இறுதியில் வைத்திருப்பார்? என்பதற்கான விடையினை உயர் ஆராய்ச்சித் தலைவரான அரசி அகத்தியனாரால் தான் கூற முடியும். அல்லது அவ்வாராய்ச்சியின் பயனாகத் திருவள்ளுவர் வாழ்ந்து மறைந்த



மதுரை மாநகரில் தொல்பொருள் ஆய்வினைக் பயன்படுத்திப் பொற்ற கட்டில் அல்லது வள்ளுவர் தம் கைப் பிரதி கிடைக்குமாயின் உண்மையை அறிய இயலும், அதுவரை மேற்குறிப் பிட்ட இருவகைக் கருத்துக்களுள் எக்கருத்து சரியாக இருக்கும் என்பதற் கான அகச்சான்று எவை என்பதை அடுத்து ஆராய முயற்படுகிறேன்.

வாழ்க்கைத் துணைநலம் அமையப் பெற்றவர் பெருஞ்சிறப்புடைய புத்தேளிர் வாழும் உலகைப் பெறுவர் (குறள் 58) என்றும், ஒப்புரவைக் காட்டிலும் நல்லவற்றைப் புத்தேளு லகத்தும் ஈண்டும் பெறல் அரிது (குறள் 213) என்றும், இவ்வுலகத்தில் நீண்ட புகழை ஆற்றின் தேவருலகப் புலவரைப் புத்தேள் உலகு போற்றாது (குறள் 234) என்றும், கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு (குறள் 290) என்றும், மானத்தை விட்டு, இகழ்வார் பின் செல்லும் நிலையினால் (குறள் 966) என்றும் வள்ளுவர் அறத்துப் பாலிலும் பொருட்பாலிலும் புத்தேணாட் டிற்குச் சிறப்பிடம் தந்து அறம் பொருள் கண்டார். அந்நாட்டைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த குறிக் கோளினைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வகைச் சான்றுகள் காமத்துப்பாலில் மீண்டும் அந்நாட்டை நினைவு படுத்துவதற்கு இவ்வுயரிய குறட்பாவை மணக்குடவர் இறுதியில் வைத்தார் என்பதைப் புலப்படுத்துகின்றன. மேலும் அகரத்தில் தொடங்கும் நூல் அகத்து என்ற சொல்லில் முடிந்தால் அவன் உறையும் நெஞ்சகத்தையும், மண்ணக விண்ணக வீட்டையும் நினைவுபடுத்தட்டும் என்று கருதியும் இறுதியில் வைத்திருக்கலாம். என்று கொள்ள இடமுள்ளது.

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் (கி.மு.40 - கி.பி. 50) வழங்கி வரும் குறுந்தொகைப் பாடலிலும் பதுமனார், பெருங்கடல் சூழ்ந்த இவ்வுலகும் அரிதாகப் பெறக்கூடிய சிறப்புடைய புத்தேணாடும் இரண்டும் சீரில் பொருந்தா (குறுந்தொகை 101), என்று கூறுவதாலும், இனிதோ இனிதெனப் படும் புத்தேணாடே என்று கபிலர் கூறுவதாலும் இப்புறச்சான்றால் மணக்குடவர் வைப்புமுறை சரியானது என்பது புலப்படுகிறது.

பரிமேலழகரோ இலக்கண நெறிப்படி வேறு ஒரு குறளை நூலின் இறுதியில் வைத்தது சரியா? பொருந்துமா? திருக்குறள் வெறும் காம இன்பத்தைக் கூறும் அகப்பொருள் நூலாக இருப்பின் அவ்வாறு வைத்தது பொருந்தும் எனலாம். திருக்குறள் நூலோ அகப்பொருள் நூலாகவும் புறப்பொருள் நூலாகவும், சமயங்கடந்த தத்துவ நூலாகவும், அமைந்துள்ளது. இலக்கிய நூல் மரபுப்படி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளை யும் கூறும் புனித நூலாகவும் விளங்குகின்றது. மேலும் திருக் குறளின் நோக்கம் காமத்து இன்பம் பெறுவது மட்டுமன்று. அறத்தான் வரும் இன்பத்தையும் (குறள் 228), இருள் நீங்கிய பின்பு ஏற்படும் மெய்யுணர்வு இன்பத்தையும் (குறள் 946), மேற்கூறிப்பிட்ட இன்பங்களோடு காமத்திற்கு இன்பமான ஊடுதல் இன்பத்தினையும் கூடிமுயங்கும் இன்பத்தினையும் (1330) ஒவ்வொரு



வரும் பெறவேண்டும் என்பது வள்ளுவரின் உயரிய கருத்தாகும். பல்வேறு வகைப்பட்ட இன்பங்களுள் பரிமேலழகர் இறுதியில் வைத்த குறட்பாவில் கூறப்பட்ட இன்பங்களும் ஒன்றாகும் என்ற உண்மை இச்சான்று களால் புலப்படுகின்றது. மேலும், அறம் பொருள் இன்பம் என்ற மூன்றைப் பற்றி கூறியபின் வீடு பற்றிய உணர்வை ஊட்டுவதற்கு ஏற்ற குறள் "புலத்தலின் புத்தேணாடுண்டோ.." என்று தொடங்கும் குறட்பாவே யாகும்.

இதுவரை கூறியவைகளிலிருந்து, இறுதிக் குறள் "ஊடுதல் காமத்திற்கு..." என்று மனதில் கொண்டு, எது என்று கேட்போர் கூற்று சரியானது அன்று, அதற்குப் பதில் அளிப்போர் கூற்றும் சரியானது அன்று. முதல் உரை யாசிரியர் மணக்குடவர் ஆனதினால் அவர்தம் வைப்புமுறைப்படி,

"புலத்தலிற் புத்தேணா டுண்டோ
நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து"

என்ற குறளே திருக்குறளின் இறுதிக்குறள் என்பது இவ்வாராய்வுக் கட்டுரையின் முடிவாகும்.

துணைபுரிந்த நூற்கள்

1. திருக்குள் உரைக்கொத்து - காமத்துப்பால், காசி மடத்து வெளியீடு
2. தமிழ்ப்புலவர் வரலாறு - அடியார்க்கு நல்லார், தொகுதி - 4, மு.அருணசலம்
3. திருக்குறள் 1122, 1323, 50, 58, 213, 234, 299, 966, 39, 65, 98, 228, 357, 946, 1330
4. தொல்காப்பியம்- பொருள திகாரம் 185
5. அரசி அகத்தியனாரின் உயர் ஆராய்ச்சிக் குருத்துக் களஞ்சியம்
6. குறுந்தொகை - 101, 288
7. திருக்குறள் மூலமும் பரிபெருமான் உரையும் - வித்துவான் கா.ம.வேங்கடராமையா


✸✸

'குறள் காட்டும் உலகு' என்ற ப.முருகனின் கட்டுரைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது. முதற் பதிப்பு 1994.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரும் இயல்பினை அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும் - முப்பாற்குப்
பாரதஞ் சீராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



கலைஞரின் பார்வையில் குறள் நான்கு

(1)

"என் வாழ்க்கைத் துணைவி வார்த் தெடுத்த தங்கப்பதுமை. இல்லறத்து முல்லைக்கொடி. தாமரை மலர்மீது இரு வண்டு அமர்ந்தாற்போல் அவள் விழிகள். கோத்து வைத்த முத்து மாலை அவள் சிரிப்பு. இத்தனை உயிர் வுடையாளர் யாழெடுத்து மீட்டிவிட்டால் இத்தரை மீதினிலே யாருமில்லை என்பேன்.

தெங்கின் இளம்பாளை சுவைத்து வரும் தென்றல் உடலில் மோதும். அதை அந்த யாழ் வெல்லும் என் துணைவி மீட்டுகின்ற யாழ் வெல்ல, இவ்வுலகில் யாருண்டு? எங்கு மில்லை?"

"குயிலோசை கேட்டதுண்டு. கோதை நான் மீட்டுகின்ற யாழோசை எனக்கே தெவிட்டியதுண்டு. என் கொழுநன் வழங்குகின்ற அந்தக் குழலோசை சேர்த்த இன்பம் பேரின்பம் என்பேன்! கூதிர் காலம் கொட்டுகின்ற பனிக்காற்றில் குளிரில்லை, என் கோமான் ஊதுகின்ற குழலோசை குளிர் வெள்ளம்!

சத்துள்ள முத்தமிடக் குவிகின்ற இதழ் பொருத்திக் குழலூதும் அவரை வெல்லக் கத்து கடல் சூழ்கின்ற இப்புவியில் யாருமில்லை - எங்குமில்லை!"

யாழ் மீட்டும் துணைவி - குழலூதும் துணைவன் - ஒருவரை யொருவர் புகழ்ந்தனர். வாழ்த்தினர். குழலையும், யாழையும் வெல்லக் குவலயத்தில் எதுவுமில்லையென்ற நினைப்போடு இருவரும் தழுவினர். பின் தம்மை மறந்தனர்.

குழல் இனிதா? யாழ் இனிதா? இரண்டையும்விட இனியது ஒன்றிருக் கிறது எனக் கண்டனர். அப்போதே அல்ல ஓரிரு ஆண்டுகள் ஓடியபின்!

இரு மலர் - ஒரு மொட்டு என்று ஆகிவிட்டது குடும்பம் - அன்புச் சின்னம் - அழகின் பெட்டகம் - அழித்தெழுதாச் சித்திரம் - அவர்கள் வீட்டில் நடமாடுகிறது.

தன் சிறு கையால் கூழை அளாவி அமிழ்தினும் இனிதாக்குகிறது. தன் மெய் தீண்டிய பெற்றோர்க்கு உடற்கின்பம் அளிக்கிறது.

"இதோ எங்களிருவரின் குழலை யும் யாழையும் வெல்லுகின்ற மழலை மொழி" என அறைகூவல் விடுகிறது.

முற்றாத இதழ்களிலேயிருந்து முதிராத சொற்கள் உதிரும்போது யாழெங்கே - குழலெங்கே - அனைத் தும் இந்த மழலைக்குப் பிறகுதான்



என்று முடிவு கட்டுகின்றனர், துணைவனும் துணைவியும்.

இந்த இன்பத்தைத்தான் வள்ளுவர் இரு வரிகளில் எழுதிக் காட்டுகிறார்.

குழலினிதி யாழினி தென்பதம்
மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.
அதிகாரம் 7 மக்கட்பேறு பாடல் 66

(2)

வைத்தியர் ஊசி குத்துகிறார் உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால் அந்த ஊசி வழியே உடலுக்குள் செல்கிற மருந்து, நோய் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. வைத்தியரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது. நோயர் வேதனையை நீக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது!

இங்கே திருவள்ளுவர் ஒரு வைத்தியரைக் குறள் மூலம் அறிமுகப் படுத்துகிறர் பாருங்கள். அழகி அழகனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையை அவன் வர்ணிக்கிறான். இந்த அணங்கு இரு பார்வையுடை யவள். ஒரு பார்வையால் அவனுக்கு வேதனையைப் போக்கினாள். இந்த விசித்திரமான மருத்துவப் பெண்மணி யின் பார்வைச் சிறப்பை வள்ளுவர் வாய்மொழியாகவே கேளுங்கள்:

இருநோக் கிவளுண்க ணுள்ள -
தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய்
மருந்து.

அப்படி அவள் பார்க்கிறாளே என்பதற்காகப் பருவ இளைஞன் வாளாயிருந்து விட்டானா? அவனோ ஒரு வம்புக்கார வாலிபன் போலும். காதல் மயக்கத்தில் என்னென்ன சொல்கிறான் பாருங்கள்:

"நான் அவளைப் பார்க்கும்போது அவள் என்னைப் பார்க்காமல் நிலத்தை நோக்குகிறாள். நான் அவளைப் பாரா திருக்கும்போது அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்" என்று கூறு கிறான். இது எவ்வளவு பெரிய பொய் தெரியுமா?

"நான் அவளைப் பாராதிருக்கும் போது அவள் என்னைப் பார்த்து மகிழ் கிறாள்" என்கிறானே - இவன்தானே அவளைப் பார்ப்பதில்லையே அப்படி இருக்கும்போது அவள் இவனைப் பார்ப்பது மட்டும் இவனுக்கு எப்படித் தெரிந்தது? அதேபோல் அவன் அவளைப் பார்க்கும்போது அவள் நிலத்தை நோக்குகிறாளாமே அது எப்படி? இவனைப் பார்த்துவிட்டுத் தானே அவள் தனது பார்வையை வேறு பக்கம் திருப்ப வேண்டும்?

இந்தப் பார்வைக்குத்தான் "பார்க்கா மல் பார்க்கும் பார்வை" என்று பெயர் போலும்! இத்தகைய நிகழ்ச்சியால் வள்ளுவர் எதை விளக்குகிறார் தெரியுமா? காதலன் கூறும் பொய்யை மட்டுமல்ல, அவர்கள்கண்களை வேறு பக்கம் திருப்ப அவர்களே முயன்றாலும் அது முடியாமல் ஒருவரையொருவர்



பார்த்துக் கொள்கிறார்கள் என்பதைத் தான் சொல்லாமல் சொல்கிறார் செந்நாப் போதர். இதோ அந்தக் குறளோவியம்:

யானோக்குங் காலை
நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.

(அதிகாரம் 110 குறிப்பறிதல் பாடல்கள் 1091, 1094)

(3)

தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

இந்தக் குறளுக்கு உரை யெழுதிய பலரும் தவறான உரையே எழுதி யிருக்கிறார்கள்.

"தன் கணவனுக்கு மேலான தெய்வம் ஒன்றில்லை என்ற எண்ணத்துடன் கணவனைக் தொழுது வணங்குகிறவள் பெய் யென்று கூறினால் மழை பெய்யும்."

இத்தகைய உரைகளும், இதனிலும் பிற்போக்கான கருத்தை விளைக்கும் உரைகளும் இந்தக் குறளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இந்தக் குறளுக்குத் தந்துள்ள உரை தான் பொருத்தமுடையது என அறிவுலகம் ஏற்க முடியும்.

"பெய்யெனப் பெய்யும் மழை" என்பதற்குப் பெய்ய வேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் பெய்யக் கூடிய மழை என்றுதான் பொருள் கூறிட முடியும். கணவனே தன் தெய்வ மெனக் கொண்டவள் மழையைப் போன்றவள். யாருக்கு? அவளது கணவனுக்கு அவள் மழை போன்றவள். அதுவும் எத்தகைய மழை? பெய்ய வேண்டுமென்று கூறிய மாத்திரத்தில் பெய்யக்கூடிய மழையைப் போன்றவள்.

கழனி, காய்ந்து கிடக்கிறது - கதிர், நீர் தேடி வாடுகிறது - அந்த நேரத்தில் உழவன் வான் நோக்கி நிற்கிறான். - மழை பொழியவில்லை - உழவன் வாடுகிறான் - வேதனை கீதம் பாடுகிறான்.

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

எல்லாம் வல்லதல்லவா மழை! அத்தகைய மழையின்றி வாழ முடியுமா? உலகத்தை உய்விக்கும் மழையை மகளிரோடு ஒப்பிடும் அழகே அழகு! அந்த அழகை - வள்ளுவர் தந்த மிக உயர்ந்த இடத்தை - உரை எழுதியோர் கெடுத்தனர்.

கழனிக்கு மழை தேவை என்று உழவன் நினைத்தபோது உடனே மழை பொழிந்துவிட்டால் - அந்த மழை எத்தனை குடும்பங்களின் நல் வாழ்த்தைப் பெறுகிறது! பெய்யெனப்



பெய்யும் மழை பெறுகிற புகழ் மாலைகள் எண்ணிலடங்கா!

அதுபோன்றவளாம், கணவனையே தெய்வமாகக் கருதும் பெண்! அந்தக் கருத்தைத்தான் வள்ளுவர் வண்ணத் தமிழிலே குழைத்துத் தருகிறார்- மீண்டும் ஒருமுறை படியுங்கள்.

தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.
(அதிகாரம் 2 வான்சிறப்பு பாடல் 15
அதிகாரம் 6 வாழ்க்கைத் துணை
நலம் பாடல் 55)

(4)

சற்றுக் கண்ணொளி மங்கிய முதியவர் ஒருவருக்குக் காதுகளும் ஓரளவு மந்தம். வழியில் அவருக்குத் துணையாக அவரது பேரப்பிள்ளை வந்து கொண்டிருந்தான். அறவே அவரது விழிகளின் ஒளி பழுதாகி விடாத காரணத்தால், அவரைக் கரம் பிடித்து அழைத்துச் செல்லவேண்டிய அவசிய மில்லை. எனினும் பேரப்பிள்ளை, தன் பாட்டனுக்குத் துணையாக அவர் அருகாமையிலேயே நடந்து கொண்டி ருந்தான்.

சிறிது தொலைவில் நூற்றுக்கணக் கில் மக்கள் கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு மேடை. அந்த மேடைமீது ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். முதியவரின் கண்களுக்குத் தெளிவாகத் தெரியா விட்டாலும், மேடையில் மனிதன் ஒருவன் இருப்பதும் அவனைச் சுற்றிக் கூட்டம் இருப்பதும் நிழலாட்டம் போலத் தென்பட்டன. ஒளியுமிழும் விழிகள் படைத்த அந்த இளைஞனை நோக்கி முதியவர், "அங்கே என்னப்பா கூட்டம்?" என்று வினவினார். இளைஞன், கண்களுக்கு மட்டும் வேலை தராமல், காதுகளுக்கும் வேலை கொடுத்துக் கூர்மையாகக் கவனித்து விட்டு. சிறிது நேரங்கழித்துத் தன் பாட்டனாருக்குப் பதில் சொன்னான்.

"தாத்தா! அங்கே ஒருவன் தோப்பிலே நின்று கொண்டு பழங் களைப் பறிக்காமல் காய்களைப் பறித்துத் தின்று கொண்டிருக்கிறான். அந்தக் காட்சியை மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."

பேரனின் பதிலைக் கேட்டு முதியவர் வியப்படைந்தார். தன் கையை நெற்றிக்கருகே கொண்டுபோய், கண் களை கூர்மையாக்கிக் கொண்டு ஆழமாகப் பார்த்தார்.

"என்னப்பா! என்னைக் கேலி செய்கிறாய்? அங்கு தோப்பு எதுவுமே தெரியவில்லை. மக்கள் கூட்டம்தான் இருக்கிறது. யாரோ ஒருவன் கைகளை மேலும் கீழும் வேகமாக அசைத்தக் கொண்டிருக்கிறான். மரங்களும் இல்லை. காய்களும் இல்லை, கனிகளும் இல்லை நீ என்னை முழுக் குருடனாகவே ஆக்கி விட்டாயே!"

பாட்டனின் பதிலைக் கேட்டுப் பேரன் சிரித்துக் கொண்டான் இன்னும் அருகாமையில் சென்றால், அவருக்கு தான் அளித்த விடைக்கான விளக்கம் கிடைக்குமென்று கருதி, அவரை அந்தக் கூட்டத்தின் பக்கம் அழைத்துச் சென்றான். மேடையில் இருப்பவன் உரக்கப் பேசியது முதியவர் காதிலும் விழுந்தது.

"பொது மக்களே! ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். நம்மை எதிர்ப்பவர்கள் அறிவற்றவர்கள். அவர்களின் பிறவியிலேயே எனக்குச் சந்தேகம் அவர்களை நாட்டில் நடமாட விடுவதே பெருங்குற்றம். கருத்துக்குக் கருத்து மோதவிடு என்றெல்லாம் அவர்கள் பேசுவார்கள். தேவை யில்லை. கத்திக்குக் கத்திதான் மோத வேண்டும். அந்த நாய் மனிதர்களின் தலையை வெட்டிக் கடலில் எறிய வேண்டும். என்னை எதிர்த்துப் பேசு வோர் யாராயினும் அவர்களை நான் பூச்சி, புழுக்களாகக் கருதுகிறேன்."

இந்தச் சொற்பொழிவைப் பாட்டனும் பேரனும் கேட்டார்கள். சற்று மந்தமான செவிகளாக இருந்த போதிலும் முதியவர், அவைகளைக் கைகளால் பொத்திக்கொண்டு, "சே! சே! என்ன இழிவான சொற்கள். கருத்தரங்குகள் இப்படியா கெட்டுப் போய்விட்டன" என்று முணுமுணுத்தார்.

"தாத்தா! மரமெங்கே? காய் எங்கே? என்று கேட்டீர்களே, இப்போது நன்றாகத் தெரிகிறதா?"

பேரன், புன்னகை சிந்தியவாறு கேட்டான். முதியவர் வேண்டுமென்றே பேரனைப் பார்த்து, எதுவும் விளங்கா தவர்போல, "என்னடா விளையாடு கிறாய்? யாரோ ஒருவர் பேசுகிறார். அவ்வளவுதானே! அவர் எங்கே பழங்களை விடுத்துக் காய்களைக் சாப்பிடுகிறார்" என்று கேட்டார்.


"தாத்தா! இனிய வார்த்தைகள் நிறைய இருக்கும்போது, அவைகளை ஒதுக்கி விட்டு, இழிவும் கடுமையும் நிறைந்த வார்த்தைகளைக் கூறுவது கனியிருக்கும் போது அதனை உண் ணாமல் காய்களைப் பறித்து தின் பதைப் போன்றதாகுமென இன்று காலையில் எங்கள் ஆசிரியர் குறளுக்கு விளக்கம் அளித்தார். அதற்குச் சரியான எடுத்துக்காட்டு இந்தக் கூட்டம்" என்று பேரப்பிள்ளை கூறியதும், முதியவர் அந்த இளந்தளிருக்கு முத்த மழை பொழிந்தார். அவன் வருங்காலம் வள்ளுவர் வகுத்த வழியில் அமையும் என எண்ணி மகிழ்ந்தார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(அதிகாரம் 10 இனியவைகூறல் பாடல் 100)

நன்றி : குறள் ஓவியம்





அமைச்சினால் உயர்ந்த அரசன்

தண்டகாரண்யம் என்பது மிகப் பெரியகாடு. வானுயர்ந்த மலைகளும் கானுயர்ந்த வனங்களும் புனல் நிறைந்த தடாகங்களும் நெருங்கி விளங்குவது. அவ்வனத்து மரங் களின் உச்சியை மந்திகளும் கண்டறிந்ததில்லை. பகலவனின் நுண்கதிர்களும் கானகத்தூடு புகுந்து விளையாடியதில்லை. அக் கானகத்தே ஓங்கி உயர்ந்திருந்த ஒரு மலைமுழை யில் கூகைகள் வெகுநாட்களாக வாழ்ந்து வந்தன. கூகைகளுக்குப் பகலில் கண் தெரியாது. இரவில் வெளிப்போந்து வேட்டையாடும்.

ஒரு சமயம் கானகத்துப் பறவை எல்லாம் ஒன்று கூடி ஆலோசனை நடத்தின. அப்போது ஒரு பறவை "பறவைக் குலத்துக்குப் பார்த்திபன் கருடன்" என்று புகழப் படுகிறான். ஆனால் கருடனுக்குக் குடிகளை எவ்வாறு வாழ்விக்க வேண்டும் என்னும் முறை தெரிய வில்லை. அடவியிற்புக்குக் கொடிய வேடர் செய்யும் அநியாயங்களை அவன் ஒரு போதும் தடுப்பதில்லை. அவர்களோ அம்பெய்தும் வலைகளை வீசியும் நம் குலத்தவரைப் பிடித்துச் சென்று கொடுமைகள் பல செய்தும் அடைக் கின்றார்கள். மேலும், நமக்குள் உண் டாகும் பிணக்குகளையும் கருடன், தான் முன்னின்று தீர்த்து வைக்காமல் ஒருவருக்கொருவர் பகையைப் பெருக்கக் காரணமாய் இருக்கின்றான். நம் குறைகளை அவனிடத்தே எடுத்துச் சொல்வோமென்றாலும் அவனிடம் சென்று சொல்ல அச்சமாயிருக்கிறது. ஆகையால் காட்சிக்கு எளியனாயும் கடுஞ்சொல் அற்றவனாகவும் முறை செய்து காப்பாற்றும் பண்பு மிக்க வனாகவும் வலிவும் துணிவும் பொருந்தியவனாகவும் உள்ள வேறொருவனை அரசனாக்கிக் கொள்வதே சால்பு" எனக் கூறியது.

இதனைக் கேட்ட மற்றொரு பறவை, "உண்மை! உண்மை!! கருடன் நமக்கு எவ்வித உதவியும் புரிவதில்லை. வீணே வலியற்ற வனைத் தலைவன் எனக் கொள்வ தால் பயன் என்ன? தலைமையை மாற்ற வேண்டும். கருடனுக்கு நிகரான வலிமையும் பெருமையும் உடைய கூகையே அரச பதவி ஏற்கத் தகுதி யுடையது. கூகை விழித்துப் பார்த் தாலும் போதும், கொடிய பகைவரும் அஞ்சிப் பின்னிடுவர். அதன் குரலைக் கேட்டால் படையும் நடுங்கும், எளிய வேடர் என்னாவார். நம் குறைகளை அமைதியுடன் கேட்டு ஆழ்ந்து சிந்தித்துப் பாசம் அகற்றிச் செயலாற்றும் பண்பு கொண்ட கூகையை நாம் மன்னனாகக் கொள்வோம்." என்று கூறியது. இதனைக் கேட்ட பறவைக் கூட்டம்



பேராரவாரம் புரிந்து ஓங்கிக் குரலெடுத்துக் கூகையை வாழ்த்தின: தலைமையேற்குமாறு வேண்டின: கூகையும் ஒப்புக் கொண்டது.

அப்போது அங்கொரு காகம் வந்து வயிறும் முடியும் குலுங்கச் சிரித்தது. பறவைகள் அக்காகத்தைப் பார்த்து, "ஏன் இவ்வாறு சிரிக்கின்றாய்?" எனறு வினவ, காகம் அவற்றைப் பார்த்து, "இதோ ஆயிரம் கண்ணும் பல்லாயிரம் மொழிபேச, அருமையான அழகு நடனமிடும் மயிலைப் பாருங்கள், அதோ இன்குரலெடுத்து ஏழிசை அமுது ஒழுகப்பாடும் குயிலைப் பாருங்கள், இனிய பிள்ளை மொழி போலும் கிளந்து மொழியும் கிள்ளையைப் பாருங்கள், கண்கவர் வண்ண ஓவியம் போல் விளங்கும் பஞ்சவண்ணக் கிளியின் எழிலைப் பாருங்கள். இவையெல்லாம் இருக்க அருவருக்கத் தக்கதும் பகற்குருடுமான கூகையை அரசனாக்குவதோ? கோட்டான் கருடனுக்கு ஈடாகுமோ? கருடனுடைய அருட்பார்வையும் பெருந்தன்மையும் கூகைக்கு ஒருபோதும் இல்லை; உயிர்வர்க்கத்தில் உயர்ந்தவர் மனிதர்; அவர்களும் கூட கருடனை நன்கு மதித்துப் போற்று கின்றனர். ஆகையால் நான் இதற்கு ஒருபோதும் உடன் படேன்" என்றது.

இச்சொற்களைக் கேட்ட பறவைக் கூட்டம் மனம் மாறின. வேறொரு சமயம் மீண்டும் ஆலோசிப்போம் எனத் தீர்மானம் செய்து கொண்டு தத்தம் இடத்திற்குச் சென்று விட்டன. இவற்றைக் கண்ட கூகை மிகவும் சினந்து காகத்தை நோக்கி, "துட்டனே, கிட்டி வரவிருந்த பெரும் பதவியைத் தட்டிக் கெடுத்தாய். இன்று முதல் உன் குலமும் என் குலமும் விரோதிகள் என்று அறி. உன்குலத்தை வேரறுக்கிறேன் பார்!" எனச் சூளுரை கூறித் தன் இருப்பிடம் சென்றது.

அன்று முதல் இரவு நேரங்களில் காகங்கள் தங்கியிருக்கும் மரங் களைக் கூகைகள் சூழ்ந்து கொண்டு அகப்பட்ட காக்கைகளைக் கொல்லத் தெடங்கின. அது கண்ட காகவரசு தன் அமைச்சர்களை வருவித்து, "கூகை களின் கோபத்திற் காளாகிக் குலைந்து உயிர்விட்ட காகங்கள் மிகப்பல. இவ்வாறு தொடர்ந்து நிகழுமாயின் காக்கை எனப் பெயர் சொல்லவும் இல்லாது நம் இனம் அழியும். கூகைகள் வாசம் செய்யும் இடமோ கொடுமுடியில் இருளடைந்த குகை. நாம் அங்கு சென்று அவற்றைத் தாக்கி அழிப்பது இயலாத காரியம். ஆகையால் வேறோர் உபாயம் செய்து நம் குலத்தைக் காக்க வேண்டும். குடி மக்களைக் காவாத அரசன் இருந்தும் ஒன்றுதான், இறந்தும் ஒன்றுதான்" என வருந்தி மொழிந்தது.

அப்போது காக அமைச்சர்களில் ஒன்று, "கூகைகள் நம்மைக் காட்டிலும் வலிமை மிக்கவை. வலியவர் களுடனே பகை கொண்டால் நமக்கே கேடாகும். ஆகையால் இப்போது அவர்களுடன் வெளிப்படையாகப் பகை கொள்ளல் ஆகாது. வெள்ளம் வரும் போது தலைசாய்த்து நிற்கும் நாணல்போல இப்போது பகைவருடன் சமாதானம் செய்துகொள்வதே மேல்" என்றது.



உடனே மற்றொன்று, "புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. வீர னொருவன் தன் பகைவன் வலியவன் என்பதற்காக அவனுடன் சமாதானம் செய்துகொள்ள உடன்படமாட்டான். எலிக் கூட்டம் கடலெனப் பேரொலி செய்து உருத்தெழுந்தாலும் நாகத்தின் நெட்டுயிர்ப்பால் அழிந்துவிடும் அல்லவா? எனவே, இப்போதே நம் படைகளைத் திரட்டிக்கொண்டு கூகைகளின் இருப் பிடத்தையடைந்து பெரும்போர் செய்து வெற்றிவாகை சூட வேண்டும். அதுவே சிறந்தது" என்றது.

மற்றோர் அமைச்சர் அப்போது எழுந்து, "ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன் செயலை முடிக்கத் தக்க முயற்சியின் அளவு, நடுவில் உண்டாகக் கூடிய இடையூறுகள், செயல் முடிவில் தான் அடையக் கூடிய பயன் ஆகிய வற்றை நன்கு ஆராயவேண்டும். இப்போது நமக்கேற் பட்டுள்ள பகைவன் நம்மைக் காட்டிலும் மிகவும் வலியவன் மேலும் மூர்க்கன். ஆகையால் போரிட்டு வெல்லுதலும் அரிது, சமா தானம் செய்து கொண்டால் மேலும் நம்மைச் சிறுமை செய்வன். எனவே, இப்போது நம் இடத்தைவிட்டு வெளி யேறிப் பிறகு காலம் பார்த்துப் பகைவனை அழிக்கவேண்டும்" என்றது.

இவ்வாறு பலரும் கூற, மிகவும் புத்திக் கூர்மை வாய்ந்ததும் வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ந்ததுமாகிய முதலமைச்சர், "அரசனே, அரசியல் நூலை அறக் கற்ற அமைச்சர்கள் கூறியன யாவும் போற்றத் தக்கனவே. அவை ஆன்ற நூல்களின் வழி அமைந்தவையே. ஆயினும் இந்நிலை யில் போரிட்டுத் தீர்த்தல் என்பது இயலாது. வெற்றிமேல் வெற்றி பெறும் கூகைகள் சமாதானத்திற்கு இணங்கி வாரா. நாம் வலியச் சென்று சமாதானம் செய்துகொள்வதால் துன்பமே நேரும். நம் இடத்தை விட்டுச் செல்லுதல் சிறந்ததாயினும் ஒரு வரையறையின்றி நீண்டநாள் காத்திருக்க நேரும். ஒருக்கால் நம் இடத்தை மீண்டும் அடையமுடியாமல் போனாலும் போகலாம். ஆகையால் நான் சொல்கிறபடி செய்யுங்கள். என்னைப் பகைவன் சார்புள்ளவன் என்றும் குலத்துரோகி என்றும் நிந்தனை புரிந்து பொய்யாகக் குத்தி வேறொரு பிராணியின் குருதியை என்மீது தடவி இங்கேயே எறிந்து விடுங்கள். நீங்கள் யாவரும் இவ்வனத் தின் தெற்கெல்லையில் உள்ள ஆல மரத்திற் சென்று வாழுங்கள். பிறகு நான் கூகைகளைச் சேர்ந்து அவற்றின் இருப்பிடம் முதலியவற்றை உளவறிந்து அவைகளை அழிக்கிறேன்" என்றது.

அவ்வாறே காகங்கள் தங்களுக்குள் பெருங்கலகம் மூண்டதுபோல ஆரவாரம் செய்து முதன் மந்திரியைப் பலவாறாகச் சிறுமை செய்து வேறொன் றின் உதிரத்தை அதன்மீது பூசிப் பொய் யாகக் குத்தி அங்கேயே போட்டுவிட்டு தெற்கெல்லையில் சென்று தங்கி யிருந்தன.

அன்றைப் பொழுது சாய்ந்த பின் வழக்கப் படியே கூகைக் கூட்டங்கள் காகங்களின் இருப்பிடத்தைச் சூழ்ந்து கொண்டன. மூலை முடுக்கு



களிலெல்லாம் தேடியும் ஒரு காக்கையையும் காணாமல் அவை திரும்பத் தொடங்கியபோது கீழே விழுந்து கிடந்த காக்கை மென்குரலில் கத்தியது. அதன் குரல் கேட்ட கூகைக் குழாம் அதனைச் சூழ்ந்துகொண்டு கொல்லத் தொடங்கின. நுண் ணுணர்வு மிக்க அக்காகம் அப்போது அவைகளைத் தஞ்சமடைந்து, "என்னைக் கொல்ல வேண்டா, நான் உங்களுக்குப் பல விதத்திலும் உதவி யாய் இருப்பேன்" என்றது.

கூகைகள் அக்காகத்தைப் பிடித்துக் கொண்டு போயத் தங்கள் தலைவன் எதிரில் விட்டன. கூகை யரசன் அதனை நோக்கி, "நீ யார்? எங்களுக்கு எவ்வாறு உதவுவாய்?" என்று கேட்டது. சொல் வன்மை மிக்க காகம், "தலைவ, நான் காகவரசின் முதன் மந்திரி. நம் இரு இனங்களுக்கும் இடையே ஏற்பட்ட பகையைக் குறித்து ஆலோசனை நடத்திய பொழுது மற்ற காகங்கள் பெரும்படை கொண்டு கூகைகளைப் பகலில் கொல்ல வேண்டும் என்று கூறின, நான் முதல் மந்திரியானபடியால் அவற்றைத் தடுத்துக் கூகைகளின் வலிமை யையும் திறனையும் பெருமை யையும் எடுத்துக் கூறினேன். ஆனால் மூர்க்கனான காகவரசனும் அதைச் சார்ந்தவர்களும் என் கருத்தை ஒப்புக் கொள்ளாமல் என்னையும் "துரோகி" என நிந்தனை செய்து இவ்வாறு கொடுமைப்படுத்தி எறிந்து விட்டுப் போய்விட்டார்கள். என் சொல்லைத் தட்டிய பயனை அவர்கள் விரைவில் அனுபவிப்பார்கள்" என்றது.

"இப்போது காகக் கூட்டம் எங்கே இருக்கிறது?" எனக் கேட்டது கூகையரசு.

"எவ்விடத்துச் சென்றனவோ? யானறியேன் என் உடல் சிறிதே நலமடையட்டும். அவற்றின் இருப் பிடத்தை நானே தேடிக் கண்டறிந்து வந்து சொல்கிறேன். காகங்களின் இயல்பை நான் நன்கு அறிவேனா கையால் அவற்றை எளிதில் அழிக்கும் உபாயத்தையும் சொல்கிறேன். என் உடல் வலியால் துடிக்கிறது; மிகவும் களைத்துவிட்டேன் இப்போதைக்கு இளைப்பாற அனுமதிக்க வேண்டும்" என்று அக்காகம் கூறியது. கூகை யரசும் அக்காகத்தைத் தன் இருப் பிடத்திற்கு அழைத்துச் சென்று தாம் வாழும் குகையைச் சுற்றிக் காட்டியது. குகையின் தன்மைகளையெல்லாம் நன்கு புரிந்து கொண்ட காகம் கூகையரசை நோக்கி, "நான் கீழான காக சாதியைச் சேர்ந்தவன். குகையின் உள்ளே கூகைகளுக்குச் சமமாக வசிக்கும் தகுதி அற்றவன். குகைக்கு வெளியே தனிப் பாறையில் நான் தங்கிக்கொள்கிறேன்" என நயமாகக் கூறி வெளியே தங்கிவிட்டது.

காகம் அன்று முழுவதும் கூகைகளை எவ்வாறு அழிப்பது என்று தன் மனத்துள் ஆராய்ந்து கொண்டே இருந்தது. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தது. தினமும் தான் உணவு தேட வெளியே சென்று திரும்பும்போது ஒரு விறகைக் கொண்டு வந்து குகைக்கு அருகில் போட்டுக்கொண்டே வந்தது. இடையிடையே கூகையரசைக் கண்டு



தான் மற்ற காகங்களைத் தேடிய இடங் களைப்பற்றியும் அவற்றின் இயல்புபற்றி யும் கூறிவந்தது. இதனால் கூகை யரசுக்கு அக்காகத்தின்மீது அளவற்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன. முது வேனில் தொடங்கியது. காகம் சேர்த்த கட்டைகள்யாவும் காய்ந்து பசையற்றிருந்தன. அப்போது ஒரு நாள் நண்பகலில் அக்காகம் அக்கட்டை களை எல்லாம் குகை வாயிலில் கும்பலாகச் சேர்த்தது. பிறகு விரைந்து தன் இனம் பதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தை அடைந்து காகவரசை நோக்கி, "தலைவ, நம் பகைவரைக் குலத்தோடு நாசம் செய்யும் உபாயம் ஒன்று செய்தி ருக்கிறேன், இப்போது அதிகநேரம் பேசுவதற்கில்லை. விரைந்து செயலாற்ற வேண்டும். நீங்கள் எல்லோரும் உடனே ஆளுக்கொரு கொள்ளி கொணர்ந்து நான் காட்டும் இடத்தில் போட்டால் கூகைகள் எல்லாம் அழிந்தொழி யும். நாமும் பகைவென்று நம் பழைய இடத்தில் நலமுடன் வாழலாம்" என்றது.

இதனைக் கேட்டதும் மற்ற காகங்கள் ஒலியுண்டாக்காமல் ஆளுக் கொரு கொள்ளி கொணர்ந்து முதன் மந்திரி காட்டிய இடத்தில் போட்டன. நண்பகலாகையால் கோட்டான்களுக் குக் கண் தெரியவில்லை. விரைவில் கட்டைகள் எல்லாம் தீப்பற்றிக் கொண்டன. கூகைகள் முழையை விட்டு வெளியேறமுடி யாமல் எரியாலும் புகையாலும் அழன்று இறந்தொழிந் தன. காகங்கள் மகிழ்ச்சி அடைந்தன.

மந்திரியின் மதியூகத்தாலேயே காகங்களுக்கு நன்மை உண்டாயிற்று. மந்திரியின் தன்மை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இக்கதை நன்கு விளக்குகிறது. ஒரு செயலைச் செய்யும் போது அதற்கு வேண்டிய துணைக் கருவிகள், அதற்கேற்ற காலம். செய்யவேண்டிய வழிமுறைகள், முடிவாகச் செய்ய வேண்டிய செயல் திறன் ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதனை முப்பால் நூல்


"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு"

என்று அறுதியிட்டுக் கூறுகின்றது.

✹✹

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்
பரந்த பாவால் என்பயன் வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை



பூமி இன்னும் வாழ்வதெல்லாம்...

செல்வி. ஸ்ரீ. பெருமாள்
ஓணுகலை

முதிரா அறிவுவாய்த்த மூடமகள் தான்நான்
அதிராம லேஅகவு கின்றேன் - எதிர்ப்பம்பை
எய்தாதே வள்ளுவரே என்சொல்லில் எள்ளளவும்
பொய்யில்லை இஃதைப் பொறு.


நெங்சம் முழுவதுமே நீகுறித்த சொப்பனங்கள்
அஞ்சனக் கண்களில் அன்றாடம் - துஞ்சுதே
கொஞ்சமும் இன்றியெனைக் கொள்ளையிட்டு போனதேஉன்
அஞ்சுக சொல்லினாலே ஆம்!

தேன்குடத்தில் வீழ்ந்துவந்த தீங்கனி ஒப்பவே
தீஞ்சொல் திரட்டியே தீட்டினாய் - வான்புகழ்
கொண்டவள்ளு வன்நீஎன் கோலத் தமிழ்குழைத்து
அண்டமிது உய்யவே ஆம்!

பொன்னிப்போல் பொங்கி பெருக்கெடுத்து நின்றவென்
பெண்மை பெருதமிழ் பெண்ணாளை - பின்னமின்றி
சீர்ஏழ் கமண்டலத்துள் சிக்கென வைத்தீரே
தேர்போல் திகழ்மொழியா லே!

உருவை குறுக்கி உறுபொருள்உள் வைத்து
திருவில் திகழும் புலவ - பெருந்தகையே
பூமி இன்னும் பொய்யாமல் நின்றுஉயிர் வாழ்வதற்கு
சாமிஉன்றன் வார்த்தைகளே சான்று.





திருக்குறள் மாநாடு 2011 - வாழ்த்து

"மெய்ப் பொருள் காண்பதறிவு"

கலா பூஷணம் – பன் மொழிப் புலவர் – த. கனகரத்தினம்

(கட்டளைக் கவித்துறை)

சங்க இலச்சினை தாங்கிநின் றோதிடும் பொன்மொழியும்
தங்கக் கருத்தும் தமிழெனப் போற்றும் திருக்குறளே
எங்கும் விளங்க எடுத்தோதி நாமெலாம் ஏத்திடுவோம்
பொங்கும் தமிழைப் புவியெலாம் போற்றிட வாழ்த்துவமே.

மூத்த தலைவராய் முன்னாள் **முனைவர் இரத்தினமே**
ஏத்து குறள்தனை எங்கும் பரப்பிட ஏதுவானார்
காத்த பெருமை கடப்பா டெலாமும் கருதிடினே
பூத்த மலர்கொண்டு பூசித்து நாமெலாம் போற்றுவமே

ஆற்றல் செறிந்த அறிவோர் பலரதும் **ஒன்றுகூடல்**
நோற்ற தவமாய் நுழைந்த திருக்குறள் நுட்பமெல்லாம்
ஏற்ற விதமாய் எடுத்தியம்ப வைத்தனர் பேரறிஞர்
வீற்றிருந்தே **வள்ளுவர் வீரச் சிலையும்** வியந்ததுவே

தெள்ளு தமிழோங்கத் தேர்ந்த அறிவும் தெளிவுபெற
வள்ளுவர் தந்த குறளும் வளம்பாச்சி வாழ்வளிக்க
விள்ளும் திருக்குறள் மாநாடு வேண்டும் விழுமியங்கள்
உள்ளும் வகையாய் உவந்திடச் சங்கம் எடுத்ததுவே

தேர்ந்த தலைவர்கள் தோய்ந்த திருக்குறள் தேனமுதம்
ஓர்ந்தே திருக்குறள் மாநாடும் கூட்டி உவந்திடவே
ஆர்ந்த தலைவர் கதிர்காம நாதன் அருகினிலே
சேர்ந்த செயலர் குழுவினர் ஆட்சிச் செயற்றிறமே



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
திருக்குறள் அறிவுப் போட்டி 2011
முடிவுகள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்திய திருக்குறள் அறிவுப் போட்டி 2011 பரிசு பெற்றவர்கள் விபரம்

1. மனனம்

பாலர் பிரிவு

1ஆம் இடம்	- சுவர்ணா நந்தகுமார்	யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டி
2ஆம் இடம்	- அபியுகா கேதீவரன்	கிளி/திருவையாறு ம.வி.கிளிநொச்சி
3ஆம் இடம்	- சரஸ்வதி குப்புச்சாமி	கொ/சைவமங்கையர் வித்தியாலயம்

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்	- சிறீஸ்கந்தராசா ஜெயவைஷாலி	யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
2ஆம் இடம்	- நிதர்சினி பாலசிங்கம்	யா/யாழ் இந்துக் மகளிர் கல்லூரி
3ஆம் இடம்	- கஜப்பிரியா புவிராஜசிங்கம்	யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி

மத்தியபிரிவு

1ஆம் இடம்	- அமிர்தலிங்கம் வனஜா	நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி
2ஆம் இடம்	- அபூர்வசிங்கம் தர்சிகரூபன்	யா/இணுவில் மத்திய கல்லூரி
3ஆம் இடம்	- குமுதாஜினி வேனியன்	கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்

2. கட்டுரைப் போட்டி

பாலர் பிரிவு

1ஆம் இடம்	- வீரசரவணன் கவீஷ்கன்	கொ/றோயல் கல்லூரி
2ஆம் இடம்	- அஸ்பா தஹானி உமர் பாரூக்	கொ/முஸ்லீம் மகளிர் கல்லூரி
3ஆம் இடம்	- அருஷினா கணபதிப்பிள்ளை	கொ/சைவமங்கையர் வித்தியாலயம்



கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்	- சசிந்திரன் ருக்ஸாந்	கொ/றோயல் கல்லூரி
2ஆம் இடம்	- சுபாங்கி சிவகுமாரன்	யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
3ஆம் இடம்	- அஞ்சனா இராஜகுமாரன்	யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

மத்தியபிரிவு

1ஆம் இடம்	- விஸ்வநாதன் சிவரூபிணி	கொ/விவேகானந்தா கல்லூரி
2ஆம் இடம்	- கௌசிகா ஜெயரட்ணம்	கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
3ஆம் இடம்	- உ.சுதர்சனா	நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி

மேற்பிரிவு

1ஆம் இடம்	- கஜிதா பத்மகாந்தன்	யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
2ஆம் இடம்	- இராஜரட்ணம் சுமித்திரா	மத்துகம சாந்த மரியாளர் மகா வித்தியாலயம்
3ஆம் இடம்	- லக்சியா சின்னத்தம்பி	யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

3. வினாவிடை போட்டி

பாலர் பிரிவு

1ஆம் இடம்	- தாரணி சேகர்	கொ/சைவமங்கையர் வித்தியாலயம்
2ஆம் இடம்	- ரகுராம் மாணிக்கவாசக கணேஸ்குமார்	கொ/றோயல் கல்லூரி
3ஆம் இடம்	- இந்திரபாலன் யோரித்	கொ/றோயல் கல்லூரி

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்	- நவீந்தன் லிருப்தா	மத்துகம சாந்தமரியாள் மகா வித்தியாலயம்
2ஆம் இடம்	- பாலகிருஸ்ணன் ஹரீஷ்	கொ/றோயல் கல்லூரி
3ஆம் இடம்	- லோ.சந்தியா	நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி



மத்தியபிரிவு

1ஆம் இடம்	- ஹிந்துஜா பாலசுப்பிரமணியம்	கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
2ஆம் இடம்	- சகாதேவன் புவிலோஜன்	கொ/றோயல் கல்லூரி
3ஆம் இடம்	- ஜெகநாதன் நிவேதா	பதுளை/தொட்டுலாகலை தமிழ் கனிஸ்ட வித்தியாலயம்

மேற்பிரிவு

1ஆம் இடம்	- மாதுமை பரந்தாமன்	யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
2ஆம் இடம்	- துன்யா டயனிகா	நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி
3ஆம் இடம்	- ஜெ.யார்த்திகா	நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி

4. பேச்சுப் போட்டி

பாலர்பிரிவு

1ஆம் இடம்	- ராஜமாணிக்கம் தனுசா	பதுளை/தொட்டுலாகலை தமிழ் கனிஸ்ட வித்
2ஆம் இடம்	- பர்ஹத் இமாதா இர்ஷாத்	கொ/முஸ்லிம் மகளிர் கல்லூரி
3ஆம் இடம்	- ஜனார்த்தனி குகநாதன்	யா/இணுவில் மத்திய கல்லூரி

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்	- நகுலகுமார் அபிராமி	கிளி/திருவையாறு மகா.வித்தியாலயம்
2ஆம் இடம்	- தவேந்திரா மயூரன்	கொ/றோயல் கல்லூரி
3ஆம் இடம்	- சனாதினி குகறாஜன்	கொ/வைசமங்கையர் வித்தியாலயம்

மத்தியபிரிவு

1ஆம் இடம்	- சாமந்தி நகுலகுமார்	கிளி/திருவையாறு மகா.வித்தியாலயம்
2ஆம் இடம்	- கதர்தர்சினி பரமேஸ்வரன்	யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
3ஆம் இடம்	- பாலகுமாரன் கஜீவ்	கொ/றோயல் கல்லூரி

மேற்பிரிவு

1ஆம் இடம்	- பாலகுமாரன் அஜன்	கொ/றோயல் கல்லூரி
2ஆம் இடம்	- செ.விராஜ் செர்வின்	நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி
3ஆம் இடம்	- நிரோஷனி வடிவேல்	மத்துகம சாந்தமரியாள் மகா வித்தியாலயம்



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
ஆட்சிக்குழு உறுப்பினர் 2010 - 2011



இருப்பவர்கள் - (இ - வ) - திரு. சி. பாஸ்க்கரா (துணை நிதிச் செயலாளர்), திரு. டபிள்யு. எஸ். செந்தில்நாதன் (ஆ.கு. உறுப்பினர்), திரு.ந.கணேசலிங்கம் (துணைத் தலைவர்), திரு.ச.இலகுப்பிள்ளை (துணைத் தலைவர்), திரு.செ.திருச்செல்வன் (நிதிச் செயலாளர்). திரு.மு.கதிர்காமநாதன் (தலைவர்), திரு.ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் (பொதுச் செயலாளர்), பேராசிரியர் சபா ஜெயராசா (துணைத் தலைவர்), செல்வி சற்சொரூபவதி நாதன் (துணைத் தலைவர்), வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (துணைத் தலைவர்), திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (துணைச் செயலாளர்)

நிற்பவர்கள் - (இ - வ) - திரு.க.இரகுபரன் (பதிப்புத்துறைச் செயலாளர்), திரு.மா.கணபதிப்பிள்ளை (கல்விக்குழுச் செயலாளர்), திரு.க.மகாதேவா (ஆ.கு.உறுப்பினர்), திருமதி பத்மா சோமகாந்தன் (ஆ.கு.உறுப்பினர்), வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன் (சமூகமேம்பாட்டுக்குழுச் செயலாளர்), திரு.க.ஞானசேகரம் (ஆ.கு.உறுப்பினர்), திரு.ஆ. குகமூர்த்தி (பரிசில் நிதியச் செயலாளர்), திரு.எஸ்.எழில்வேந்தன் (இலக்கியக்குழுச் செயலாளர்), திரு.ப.க.மகாதேவா (உறுப்புரிமைச் செயலாளர்), திருமதி.அ.புவனேஸ்வரி (ஆ.கு.உறுப்பினர்), திரு.உடப்பூர் வீரசொக்கன் (ஆ.கு.உறுப்பினர்)

வருகைதராதோர் விபரம் - கலாநிதி வ. மகேஸ்வரன் (துணைத்தலைவர்), திருமதி சந்திரபவானி பரமசாமி (ஆ.கு.உறுப்பினர்), திரு.பொ.சந்திரலிங்கம் (ஆ.கு.உறுப்பினர்), திருமதி ரஜனி சந்திரலிங்கம் (ஆ.கு.உறுப்பினர்), திரு.க.சுந்தரமூர்த்தி (ஆ.கு.உறுப்பினர்), திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா (ஆ.கு.உறுப்பினர்), திரு.அ.பற்குணன் (ஆ.கு.உறுப்பினர்) திரு.க.நீலகண்டன் (ஆ.கு.உறுப்பினர்), திரு.வி.கந்தசாமி (ஆ.கு.உறுப்பினர்), சைவப்புலவர் சு. செல்லத்துரை (ஆ.கு.உறுப்பினர்), திருமதி வசந்தி தயாபரன் (ஆ.கு.உறுப்பினர்), திரு.இ.சிறில்சுந்தராசா (ஆ.கு.உறுப்பினர்), திரு.சி.கந்தசாமி (ஆ.கு.உறுப்பினர்), திரு.மா.சடாட்சரன் (நிலையமைப்புக்குழுச் செயலாளர்), திரு.சி.சிவலோகநாதன் (ஆ.கு.உறுப்பினர்), திரு.க.க.உதயகுமார் (ஆ.கு.உறுப்பினர்) வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன் (நூலகக்குழுச் செயலாளர்)

2000ஆம் ஆண்டு நடைபெற்ற திருக்குறள் விழா நிகழ்வுகள்




கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் அவர்கள் பரிசில் வழங்குகின்றார். படத்தில் வலப்புறம் கல்விக் குழுச் செயலாளர் மா. கணபதிப்பிள்ளையும் இடப்புறம் செயலாளர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களும்



முதல் பரிசில் பெற்ற மாணவ மாணவியருடன் தலைவர் மு. கதிர்காமநாதன், செயலாளர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், கல்விக்குழுச் செயலாளர் மா. கணபதிப்பிள்ளை ஆகியோர்

2000ஆம் ஆண்டு நடைபெற்ற திருக்குறள் விழா நிகழ்வுகள்





கொழும்புத் தமிழ்ச் சங்கம்
திருக்குறள் அறிவுப் போட்டி முடிவுகள் - 2011



பதுளை/தொட்டுலாகலை தமிழ் கனிஸ்ட வித்தியாலயம் மாணவி ராஜமாணிக்கம் தனுசா பேச்சுப் போட்டியில் பாலர் பிரிவில் முதலாம் இடம்.



யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டி மாணவி நந்தகுமார் சுவர்ணா மனனப் போட்டியில் பாலர் பிரிவில் முதலாம் இடம்.



கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் மாணவி நகுலகுமார் அபிராமி பேச்சுப் போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலாம் இடம்.



யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி சிறீஸ்கந்தராசா ஜெயவைஷாலி மனனப் போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலாம் இடம்.



கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் மாணவி நகுலகுமார் சாமந்தி பேச்சுப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாம் இடம்.



நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி மாணவி அமிர்தலிங்கம் வனஜா மனனப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாம் இடம்.



கொ/றோயல் கல்லூரி மாணவன் அஜன் பாலகுமாரன் பேச்சுப் போட்டியில் மேற் பிரிவில் முதலாம் இடம்.

ISBN : 978-955-8564-17-2



Rs.500.00

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: +94 11 2330195